
வரு.73 இல. 12 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி

32 பக்கங்கள் 40/-

2021 மார்ச் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
March 21 Sunday, 2021




தமிழகத்தில் பரபரக்கும் தேர்தல் பிரசாரங்கள் 02


சீனாவுக்கு எதிரான குவாட் நாடுகளது உரையாடல் 13


கேரளா பக்கம் சென்ற காயத்ரி 18


சபான், சபியாவுக்கு மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டியில் வெற்றி 24

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்

# ஜெனீவாவில் நாளை வாக்கெடுப்புக்கு திட்டம்



## தோற்கடிக்க முயற்சிப்போம் என்கிறார் அமைச்சர் தினேஷ்

அரசியல் நோக்கம் கொண்ட குற்றச்சாட்டுகள் எனவும் தெரிவிப்பு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கம் கொண்டவையாகுமென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக பல நாடுகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நடைபெற்றுவரும்

04





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷெயிக் ஹசீனாவுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று டாக்கா, தேஜ்கானிலுள்ள பிரதமரின் அலுவலகமான (பழைய) சங்கத் பாபன், இல்லத்தில் நடைபெற்றபோது..

சுமார் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து அனர்த்தம்

# பசறையில் பாரிய பஸ் விபத்து





சாரதி உட்பட 15 பேர் பலி

## 32 பேர் படுகாயம்; 07 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில்

**பசறை, பதுளை விசேட, மொனராகலை, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

பதுளை செங்கலடி வீதியில் பசறை, 13ஆவது மைல்கல் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கோர விபத்தில் 15 பேர் பலியாகியுள்ளதுடன் சுமார் 32க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

லுணுகலையிலிருந்து பதுளை வீதியூடாக கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பயணிகள் பஸ்சொன்றே

04

பிரதமர் மஹிந்தவின் பங்களாதேஷ் விஜயம்

# தனக்கும், தனது நாட்டு மக்களுக்கும் கிடைத்த கௌரவம் என பாராட்டு

## இலங்கை வருமாறு பிரதமர் ஹசீனாவுக்கு அழைப்பு

பி ரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பங்களாதேஷ் நாட்டுக்கான விஜயம் தனிப்பட்ட முறையில் தனக்கும், பங்களாதேஷ் நாட்டு மக்களுக்கும் கௌரவமானது என்று பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனா பிரதமரிடம் தெரிவித்துள்ளார். பங்களாதேஷுக்கான இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு, பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனாவுக்குமிடையிலான

04



புதிய அரசியலமைப்பு உருவாக்கம்

# நிபுணர் குழுவிடமிருந்து எந்தவொரு பதிலும் இல்லை

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு, ஒத்துழைப்பதாக தெரிவித்திருந்தமைக்கு, புதிய அரசியலமைப்பை வரைவதற்கான நிபுணர் குழுவிடமிருந்து இதுவரை எதுவித பதிலும் கிடைக்கப்பெறவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள், ஜனாதிபதி கோட்டாபய

04

காணி ஆவணங்கள் குறித்த அதிரடி நடவடிக்கை

# அமைச்சர் டக்ளஸ், மஹிந்தானந்தவுக்கு மனோகணேசன் எம்.பி பாராட்டு



யாழ். கச்சேரியிலிருந்து இரவோடிரவாக அனுராதபுரம் கச்சேரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட வடபகுதி காணி ஆவணங்கள் மீண்டும் யாழ். கச்சேரிக்கு கொண்டுவரப்பட்டமைக்கு அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் மஹிந்தானந்த அலுத்கமகே மேற்கொண்ட அதிரடியான நடவடிக்கைகளுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற

04

புர்கா, மத்ரஸா பாடசாலைகள் தடை விவகாரம்:

# அமைச்சரவையில் கலந்துரையாடிய பின்னரே இறுதித் தீர்மானம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேக்கர

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புர்கா மற்றும் மத்ரஸா பாடசாலைகளை தடை செய்வது தொடர்பில் எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவையில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேக்கர தெரிவித்துள்ளார்.

புர்கா மற்றும் மத்ரஸா பாடசாலைகளை தடை செய்வது தொடர்பில் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் அது தொடர்பில் எதிர்வரும்

04



# கொழும்பில் மாயமான பாடசாலை மாணவன்

## தேடும் பணியில் 4 பொலிஸ் குழுக்கள்



கொழும்பில் காணாமல் போன பாடசாலை மாணவனை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள பிரபல பாடசாலையில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவரே இவ்வாறு காணாமல் போயுள்ளாரென தெரியவருகிறது. நேற்று முன்தினம் காலை முதல் இந்த மாணவனை காணவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

04

மலையக மக்கள் முன்னணியிலிருந்து

# அரவிந்தகுமார் எம்.பி அதிரடியாக நீக்கம்



**நுவரெலியா தினகரன் நிருபர்**

பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் மலையக மக்கள் முன்னணி, மலையக தொழிலாளர் முன்னணி ஆகியவற்றில் வகித்த பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக மத்திய குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் உறுப்புரிமையிலிருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளதாக (19) மத்திய குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் சங்கரன் விஜயசந்திரன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழு கூட்டம் (19) மலையக மக்கள் முன்னணியின் ஹற்றன் பிரதான அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது. மலையக மக்கள் முன்னணியின் தலைவரும்,

04

# சீன உற்பத்தி சினோபாம் தடுப்பூசிக்கு அரசு அனுமதி

## முதற்கட்டமாக 3 இலட்சம் மருந்துகள் இறக்குமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சீனாவின் உற்பத்தியான சினோபாம் கொரோனா வைரஸ் தடுப்பூசியை உபயோகிப்பதற்கான அனுமதியை சுகாதார அமைச்சின் தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபை வழங்கியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையில் அவசர தேவைகளுக்காக மேற்படி

04

# குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரியங்கர

## பிரித்தானிய மேல் நீதிமன்றம் தீர்ப்பு



பிரிட்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மேஜர் ஜெனரல் பிரியங்கர பெர்னாண்டோ, குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டன் மேல் நீதிமன்றம், அவரை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்துள்ளதாக பிரிட்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தன்று லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரத்துக்கு முன்னால் புலம்பெயர்

04

# காணாமல் ஆக்கப்பட்டோர்களது பிரச்சினைக்கு ஒரு மாதத்துள் தீர்வு

## உறவினர்களுடனான சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ்

காணாமல் போனோரின் உறவினர்கள் சார்பில் குழு ஒன்றை அமைத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஒரு மாதத்தினுள் இந்த விவகாரத்திற்கு தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

காணாமல் போனோரின் உறவினர்களுடன் நேற்று (20) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களினால் காணாமல் போனோரின் உறவினர்கள்

04



விக்கல் வீராச்சாமி



மனோ ஐயா முதல் முதலா அரசாங்க அமைச்சர்கள மனம் திறந்து பாராட்டி இருக்கிறார்.....

நல்ல விஷயம் தானே, சும்மா பழசுகள கிளறி கைய கால உதறித் தள்ளுறத விட அரசுடன் இணைந்து நல்லதுகள தட்டிக் கொடுத்தா நாடு எங்கேயோ போய்விடும்....!!!!

கைவசமுள்ள காணாமலாக்கப்பட்டோரை விடுவிக்கவும்

# அரசுடன் பேச்சு நடத்துவதாயின் அனந்தி விடுக்கும் கோரிக்கை



அரசாங்கம், தங்கள் வசமுள்ள காணாமலாக்கப்பட்டவர்களை விடுவித்துவிட்டு மக்களுடன் பேசுவதற்கு வரவேண்டுமென தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்தமை தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

04

## பரபரக்கும் தமிழக தேர்தல் பிரசாரங்கள்

# சீமானின் பசுமை மேவிய தேர்தல் பிரசாரங்கள்

அருள் சத்தியநாதன்



தமிழகத்தில் கட்சிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டு பிரசார வேலைகளையும் உடனடியாகவே ஆரம்பித்துவிட்டன. தமிழகத்தில் ஏகப்பட்ட ஊடகச் செனல்களும், பத்திரிகைகளும் கூடவே அலை அலையாக இணைய தளங்களும் இயங்குவால் அரசியல்வாதிகள் மற்றும் அவரது பிரசாரங்கள், பயன்படுத்தும் உத்திகள், விடும் தவறுகள் அனைத்தையும் முகர்ந்து பிடித்து அம்பலத்தில் ஏற்றிவிடுகிறார்கள். அலசி ஆராயப்பட்டு விடுகின்றன. எனவே எவர் கண்களையும் மூடிவிட்டு தேர்தல் பிரசாரங்களிலும் உறுதிமொழிகளிலும் போலித்தனங்களை செய்து விட்டு தப்பி விட முடியாது. சமீபத்தில் ஊடகவியலாளர்களுடன் பேசிக்கொண்டிருந்த நடிகையும் சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியின் வேட்பாளருமான குஷ்பு, "எவ்வளவுக்கு' என்று சொல்வதற்கு பதிலாக 'எழவு'க்கு என்று வாய்தவறி சொல்லிவிட்டார் இதைக் கவனித்துப் பிடித்து தொலைக்காட்சியில் ஒளிபரப்பி விட்டார்கள்.

தமிழகத்தில் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் ஆறாம் திகதி நடைபெறவுள்ளது. இடைவெளி இரண்டு வார காலம்தான், அதற்குள் தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்து மக்களைத் தம் வயப்படுத்துவது என்பது சாதாரண வேலை அல்ல. இம்முறை விருதாசலத்தில் தே.மு.திக. வேட்பாளராக முதல் தடவையாக களமிறங்கியிருக்கிறார் பிரேமலதா விஜயகாந்த். விருதாசலத்தில் மும்முரமாக தேர்தல் பணி செய்ய வேண்டியிருப்பதால் தான் ஏனைய தொகுதிகளுக்குச் சென்று பிரசாரம் செய்யப்போவதில்லை என்று கூறியிருக்கிறார்.

தே.மு.தி.க, அ.தி.மு.கவுடன் இருந்திருக்க வேண்டிய கட்சி. ஆனால் பாட்டாளி மக்கள் கட்சிக்கு அ.தி.மு.க 23 தொகுதிகளை ஒதுக்கியதுபோல தனக்கும் ஒதுக்கித்தர வேண்டும் என பிடிவாதம் பிடித்ததால் தகராறு முற்றி அ.தி.மு.க கூட்டணியில் இருந்து தே.மு.தி.க விலகிக் கொண்டது. விலகியதுமே மக்கள் நீதிமய்யம் அக்கட்சிக்கு அழைப்பு விடுத்தது. இதைக் கவனித்த அரசியல் அவதானி ஒருவர், "தே.மு.தி.க. கமலின் அழைப்பை ஏற்கும் எனத் தான் கருதவில்லை. ஏனெனில் கமல் தே.மு.தி.க கேட்கும் பணத்தை தர மாட்டார். தே.மு.தி.க நிச்சயமாக அ.ம.மு.க வுடன்தான் கூட்டு சேரும். ஏனெனில் பிரேமலதா எதை எதிர்பார்க்கிறாரோ அதை தினகரனால் மட்டுமே தர முடியும்" என்று கருத்து வெளியிட்டிருந்தார். அது அப்படியே உண்மையாயிற்று. 23 ஆசனங்களுக்காக போராடிக்கொண்டிருந்த கட்சிக்கு டி.டி.வி தினகரன், அறுபது ஆசனங்களில் போட்டியிடும் வாய்ப்பை அள்ளியும் தந்தார். அத்தொகுதிகளுக்கு யார் யாரை வேட்பாளர்களாகத் தெரிவு செய்யலாம் என்பதிலேயே திணறிப் போனார் பிரேமலதா. பிரேமலதாவிடம் தற்போது 2.5சதவீத வாக்கு வங்கியே உள்ளது என்பது கூட பழைய கணக்கு தான். இந்தத்தேர்தல் முடிவடைந்த பின்னர்தான் தே.மு.தி.கவின் உண்மையான வாக்காளர் பலம் பல்லிளிக்கும். தே.மு.தி.க வின் தலைவர் கெப்டன் விஜயகாந்த் கட்சியை நடத்தியபோது இருந்த மக்கள் ஆதரவு அவர் சுகவீனமுற்று ஓரமாக ஒதுங்கிய பின்னர் குறைந்து விட்டது. பிரேமலதாவும் அவரது தம்பி சுதீப்பும் கட்சியை அதன் செல்வாக்கும் சடுதியாக வீழ்ச்சி அடைந்தது. விஜயகாந்த் இன்று செயலற்றும் போனார். இம்முறை அவர் போட்டியிடவும் இல்லை; பிரசாரம் செய்யப் போவதும் இல்லை. பிரேமலதாவும் தான் மட்டுமாவது விருதாசலத்தில் வெற்றிபெற முடியுமா என்பதில் தீவிரமாக இருக்கிறார். மிகுதி 59 தொகுதிகள் பற்றி அவருக்குக் கவலை இல்லை. மொத்தத்தில் தே.மு.தி.கவின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது. அக் கட்சியின் அறுபது வேட்பாளர்களின் எத்தனை பேர் கட்டுப்பணத்தைக் காப்பாற்றிக் கொள்வார்களோ தெரியவில்லை!

தே.மு.தி.கவின் நிலை இப்படி என்றால், அ.ம.மு.கவின் நிலையும் பரிதாபம்தான். தினகரன் மலையென நம்பியிருந்தது. சின்னம்மா சசிகலாவை மலையென நம்பியிருந்தார். அவர் அ.தி.மு.கவுக்கு சவால்விட்டு ஒரு பரபரப்பை ஏற்படுத்துவார் என்றும் அந்த பரபரப்பில் தனது கட்சிக்கு செல்வாக்கு தளம் ஒன்றை உருவாக்கிக் கொள்ளலாம் என்றும் டி.டி.வி தினகரன் எண்ணியிருந்தார். சின்னம்மா திடீரென எழுந்த பாஜக.வின் அழுத்தத்தால் அரசியலை விட்டு ஒதுங்கி இருப்பதால் தினகரனுக்கு வாய்த்திருக்கக்கூடிய ஒரு பெரிய ஆதரவு தளம் கைவிட்டுப் போயிருக்கிறது. கடந்த முறை சென்னை ஆர்.கே.நகரில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தினகரன் இம்முறை கோவில்பட்டி தொகுதியில் போட்டி போடுகிறார். பிரேமலதாவைப்போலவே கோவில் பட்டியில் வெற்றி பெற்று தான் ஒருவராவது சட்டசபைக்கு செல்ல முடியுமா என்பதே தினகரனின் இன்றைய ஒரே இலட்சியம். விருதாசலம் தொகுதியில் பெருமளவில் பணம் செலவழிக்கக் கூடிய நிலையில் பிரேமலதா விஜயகாந்த் இருக்கிறாரா என்பதில் தெளிவில்லை ஆனால் பணத்தை கோவில்பட்டி தொகுதியில் அள்ளி இறைக்கக்கூடிய நிலையில் தினகரன் உள்ளார். பணம் பலம் எவ்வளவு தூரம் கோவில்பட்டியில் வேலை செய்யும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

சீமானின் நாம் தமிழர் கட்சி இம்முறையும் களம் காண்கிறது. எந்தக் கட்சியுடனும் அணி சேராமல் வழமைபோலவே தனித்துவமான சிந்தனைகளுடன் தனியாகவே நாம் தமிழர் கட்சி களத்தில் இறங்கியுள்ளது. சீமான் இம்முறை திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிடுகிறார். அ.தி.மு.கவில் இவரை எதிர்த்து மு.குப்பன் என்பவரும் தி.மு.க சார்பாக கே.பி. சங்கர் என்பவரும் களத்தில் உள்ளனர். சீமான் இதுவரை தொகுதியில் வெற்றிபெற்று சட்டசபை சென்றதில்லை. இம்முறை தி.மு.க. அலை அடிப்பதாக சொல்ல முடியாவிட்டாலும் அதற்கான வெற்றி வாய்ப்புகள் பிரகாசமாகவே காணப்படுகின்றன. அ.தி.மு.க தொண்டர் பலம் அ.தி.மு.க –அ.ம.மு.க என இரண்டாகப் பிரிந்திருந்தாலும் அது எடப்பாடி அணியின் மக்கள் செல்வாக்கில் குறிப்பிடத்தக்க சரிவை ஏற்படுத்தி இருக்கலாம் எனக் கருத முடியாது. எடப்பாடியும் பன்னீர்செல்வமும் தலைமை ஒருங்கிணைப்பாளர்களாகக் கட்சியை வழிநடத்துவதாலும் கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழக அரசை நடத்தி வருவதாலும் அ.தி.மு.கவின் வாக்கு வங்கியில் டி.டி.வி தினகரனால் குறிப்பிடத்தக்க அளவில் சேதத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது என்றே கருதத் தோன்றுகிறது. இவ்வகையில், தி.மு.க.வும் அதிமுகவும் தத்தமது செல்வாக்கு மற்றும் தொண்டர் பலத்துடனேயே இத் தேர்தலில் பொருதுகின்றன.

தி.மு.கவும் அதிமுகவுமே அடுத்த ஆட்சியை தமிழகத்தில் நிறுவதற்கான போட்டியில் ஈடுபட்டிருந்தாலும் ஜெயலலிதா, தனக்கு பின்னர் இவர்தான் என் வாரிசு என எவரையுமே உருவாக்கி வைக்காததால் அ.தி.மு.க.வுக்கு பொருத்தமும் தகுதியும் கொண்ட தலைவர் எடபாடியா அல்லது சின்னம்மா சசிகலாவா என்ற கேள்வி தொடர்ந்தும் அ.தி.மு.கவில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த சிந்தனை தொடர்ந்தும் அக் கட்சியின் மக்கள் செல்வாக்கில் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கும். ஆனால் தி.மு.க.வில் இந்தப் பிரச்சினை இல்லை.

ஒரு கட்சியின் தொண்டர் பலம் என்பது வேறு. அக்கட்சியின் மக்கள் ஆதரவு என்பது வேறு. இம்முறை தி.மு.கவுக்கு மக்கள் ஆதரவு சாதகமாக இருப்பதாகவே தெரிவதால் அதிக தொகுதிகளைக் கைப்பற்றும் வாய்ப்பு தி.மு.க.வுக்கே இருக்கிறது என்பது ஒரு பொதுவான அபிப்பிராயம் எனினும் அ.தி.மு.கவின் தேர்தல் நகர்வுகளும் பலம் பொருந்தியதாகவே உள்ளது என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இங்கே நாம் குறிப்பிட வேண்டிய ஒரு விஷயம், சீமானின் தேர்தல் மேடை பேச்சுகள் அவர் மேடையேறி பேசும்போது ஏனைய கட்சிகளைத் திட்டுவதில்லை. குறைகூறுவதில்லை. நல்லதொரு மேடை நாசுரிகத்தைப் பின்பற்றுகிறார். தான் எதைச் சொல்லவேண்டுமோ அதை விளக்கமாகச் சொல்கிறார். கொள்கை பிடிப்புடன் பேசுகிறார். இயற்கை பாதுகாப்பு, இயற்கை விவசாயம், மரம் நடுதல், மாடு வளர்ப்பு, தண்ணீர் மேலாண்மை, தமிழகத்தை வளமான நாடாக பாதுகாக்கும் முறைகள் என்பன பற்றி ஆற்றோட்டமாகப் பேசுகிறார். இயற்கை வளம், பழந்தமிழர் பெருமை, தமிழன் ஏன் தன் மொழியைக் காக்க வேண்டும், ஏன் மொழி, இன, உணர்வு அவசியம் என்பனவற்றை மிகத் தெளிவாக மேடைக்கு மேடை பேசுகிறார். இப்படி ஒருவர் தேர்தல் மேடையில் பேசுவது அபூர்வமானது. ஒருவர் அவரது கட்சிக்கு வாக்களிக்கிறாரா இல்லையா என்பதல்ல முக்கியம்; அவரது பேச்சைக் கேட்டு பயன்பெற்றாலேயே போதும். இவ்வாறான ஒரு புதிய மேடை அரசியல் நாகரிகத்தை உருவாக்கி இருப்பதற்காக அவரை நிச்சயம் பாராட்ட வேண்டும்.

அடுத்தவர் கமல் ஹாசன். யாரையும் கீழ்த்தரமாகத் திட்டாமல் மேடை நாகரிகத்தோடு பேசக் கூடியவராகத் தெரிகிறார். தன் போட்டியிடும் சேலம் தெற்கு தொகுதியில் அவர் சில சமயம் வெற்றி பெறலாம். அவர் தோற்றுப் போவாரானால் அவரது அரசியல் வாழ்வு, சிவாஜியின் அரசியல் போல அஸ்தமித்துவிடலாம்.

இம்முறையும் பா.ஜ.க அ.தி.மு.கவாக்கு பலத்தை நம்பி தமிழகத்தில் 20 இடங்களில் களம் காண்கிறது. அக் கட்சிக்கு வழக்கம் போலவே தமிழகத்தில் ஒரு தொகுதியிலேனும் வெற்றி கிட்டப் போவதில்லை என்பது பொதுவான கருத்து. அக் கட்சி கன்னியாகுமரி தொகுதியில் தனக்கு வாய்ப்பு இருப்பதாகக் கருதினாலும் அத் தொகுதி பா.ஜ.க.வுக்கு ஒதுக்கப்படவில்லை. அக்கட்சியின் நட்சத்திர வேட்பாளரான நடிகை குஷ்பு ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிடுகிறார்.

தி.மு.க தலைவர் ஸ்டாலின் தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னரேயே தமிழகத் தொகுதிகளுக்கு விரிவான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுவிட்டார். தற்போது முக்கியமான ஊர்களில் மட்டும் பிரசாரம் செய்துவரும் அவர் தன் பிரசாரத்தில் முக்கிய பொருளாக எடுத்துக் கொள்வது எடப்பாடியாரின் ஆட்சியையும் ஊழலையும் தான். போகும் இடமெல்லாம் திரும்பத்திரும்ப அவர் சொல்வது எடப்பாடியும் பன்னீர் செல்வமும் ஊழலில் திளைத்தவர்கள் என்றும் அவர்களது ஆட்சி பணம் சேர்ப்பதற்காகவே நடத்தப்படுகிறது என்பதைத்தான். அந்தப் பாணியே மக்களிடம் எடுப்படும் என தி.மு.க. நம்புகிறது. தமிழ் மக்களுக்கு பா.ஜ.க. மீது இருக்கும் வெறுப்பைத் தூண்டி விடுவதன் மூலம் அ.தி.மு.க.வுக்கு எதிராக வாக்காளர்களைத் திருப்புவது மற்றொரு உத்தியாகும். அ.தி.மு.கவுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் பா.ஜ.க.வுக்கு அளிக்கும் வாக்காகவே இருக்கும் என்பது தி.மு.க.வின் இன்னொரு பிரசார பாணியாகும். ஆனால் தி.மு.க. ஜெயலலிதாவை விமர்சிப்பதைத் தவிர்த்து விடுவதைக் காண முடிகிறது. ஜெயலலிதாவை மட்டுமல்ல, டி.டி.வி தினகரனையும், சசிகலாவையும் ஸ்டாலின் விமர்சிப்பதைத் தவிர்த்து விடுகிறார். இதனால், ஸ்டாலினின் கைக்கூலியாக தினகரன் செற்படுவதாக அ.தி.மு.க விமர்சனம் செய்கிறது.

அ.தி.மு.க கூடாரம், தி.முக.வின் பழைய ஊழல்களையும் கருணாநிதி குடும்பத்தையும் கடுமையாக விமர்சிக்கிறது. எடப்பாடியார் ஸ்டாலினை கடுமையாக விமர்சித்துப் பேசுகிறார். ஆனால் ஆளுங்கட்சி என்ற வகையில், அதுவும் இரண்டு முறை தொடர்ச்சியாக ஆண்டகட்சி என்ற வகையில் அக் கட்சியிடம் மக்களை ஈர்ப்பதற்கான விஷயங்கள் அல்லது தி.மு.க. ஏன் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதை எடுத்துச் சொல்வதில் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஏனெனில் எதிர்ப்பதற்கும், குறை சொல்வதற்கும் எதிர்க்கட்சிகளுக்கே வாய்ப்பு அதிகம். எனினும் இத்தேர்தலில் எடப்பாடியார் எவ்வாறேனும் வெற்றி பெற்றாக வேண்டும். அ.தி.மு.க தோல்வி அடைந்தால் எடப்பாடியாரின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

தி.மு.க தரப்பில் அக் கட்சி தோல்வியடையுமானால் ஸ்டாலினின் முதல்வர் கனவு நிரந்தரமாகவே வெறுங்கனவாகி விடலாம். தி.மு.க.வின் பலம் அது அமைத்திருக்கும் பலமான கூட்டணி. அ.தி.மு.கவின் பலவீனம், தனது கூட்டணியில் பா.ஜ.க.வை சேர்த்திருப்பது!







**பிரேமலதாவும் தான் மட்டுமாவது விருதாசலத்தில் வெற்றிபெற முடியுமா என்பதில் தீவிரமாக இருக்கிறார். மிகுதி 59 தொகுதிகள் பற்றி அவருக்குக் கவலை இல்லை. மொத்தத்தில் தே.மு.தி.கவின் எதிர்காலம் கேள்விக்–குறியாகவே உள்ளது. அக் கட்சியின் அறுபது வேட்பாளர்களின் எத்தனை பேர் கட்டுப்பணத்தைக் காப்பாற்றிக் கொள்வார்களோ தெரியவில்லை!**

## யாழ். பல்கலைக்கழக 35ஆவது பட்டமளிப்பு விழாவில் மூன்று உயர் விருதுகளை பெற்ற இர்ஷாத் சிறீன்தாஜ்



அனுராதபுரம் மாவட்டம் நாச்சாதுவ கிராமத்தைச் சேர்ந்த செல்வி இர்ஷாத் சிறீன்தாஜ் மாசி மாதம் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக 35வது பட்டமளிப்பு விழாவில் ஒரு தங்கப் பதக்கத்தினையும் இரண்டு ஞாபகார்த்த பரிசில்களையும் பெற்றுக்கொண்டார். இவர் அனுராதபுரம் நாச்சாதுவ முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் மாவனல்லை ஜாமிஆ அயிஷா சித்தீக்கா கல்லூரிகளின் பழைய மாணவியும் ஆவார். இவரது தரப்புள்ளிச் சராசரியானது கலைப்பீடத்திலிருந்து 2020 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற அனைத்து மாணவர்களிடையேயும் அதி உயர்வானது.

செல்வி இர்ஷாத் சிறீன்தாஜ் பெற்றுக்கொண்ட விருதுகளாவன:

1. 2017 ஆம் ஆண்டு கலைப்பீட சிறப்புப் பட்டப் பரீட்சையில் பொருளியலில் அதி சிறந்த மாணவருக்கான கலாநிதி நாகலிங்கம் பாலகிருஸ்ணன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்.
2. 2017 ஆம் ஆண்டு கலைப்பீட சிறப்புப் பட்டப் பரீட்சையில் பொருளியலில் அதி சிறந்த மாணவருக்கான சேர் அருணாசலம் மகாதேவா ஞாபகார்த்த பரிசு.
3. 2017 ஆம் ஆண்டு கலைப்பீட சிறப்புப் பட்டப் பரீட்சையில் அதிஉயர் முதல் வகுப்பில் சித்திபெற்ற மாணவருக்கான மயிலிட்டி சுவாமிநாதன் ஞாபகார்த்த பரிசு.

செல்வி இர்ஷாத் சிறீன்தாஜ் இலங்கையின் வளர்ந்து வரும் இளம் பொருளியலாளராவார்



புத்தசாசன மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்சவின் இந்து மத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திரகுருக்கள் பாபு சர்மா யாழ் நகருக்கான இந்திய துணை தூதுவர் ஸ்ரீ சங்கர் பாலச்சந்தரை வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக மேடை நாடகத் துறையைச் சேர்ந்த கலைஞர்களுக்கு "ப்ரேக்ஷா" காப்புறுதி வழங்கும் திட்டம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் அலரி மாளிகையில் கடந்த புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அச்சமயம் நாடக கீர்த்தி, வாழ்நாள் சாதனையாளர், தேசத்தின் கண் மானா மக்கீன் பிரதமரிடமிருந்து பத்திரங்களைப் பெற்றுக் கொள்கின்றார்.



அகில இலங்கை ஸ்ரீ சாந்தஸ்வரூபன் யாத்திரை குழுவின் தலைவரும் குரு சுவாமியுமாகிய ஜெயமுருகன் வீரமூர்த்தி ஏற்பாடு செய்த மகா சிவராத்திரி சிறப்பு பூஜை வழிபாடுகள் கொழும்பு 02ல் அமைந்துள்ள கங்காராம விகாரையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் ஜெயமுருகன் வீரமூர்த்தி, கெ. ராமேஷ், இராஜ எல். செக்கலிங்கம் மற்றும் கங்கராம விகாரை தேரர் ஆகியோரால் பூஜை வாழிபாடுகள் நடைபெறுவதை படத்தில் காணலாம்.

## பரத நாட்டிய அரங்கேற்றம்



*பிரபாகரன் மற்றும் திருமதி அபர்ணா பிரபாகரன் தம்பதிகளின் புதல்வியும், கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியுமான செல்வி யஷ்மிதா பிரபாகரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி, மாலை 6 மணிக்கு 'Light of Asia Centre ' (இல.634 சாமா மாவத்தை, பத்தரமுல்ல) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

*கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நடன நெறியாள்கையில், அணிசேர் கலைஞர்களாக, குரலிசை ஸ்ரீ. ஆரூரன், மிருதங்கம் ஸ்ரீ. கண்ணதாசன், வயலின் ஸ்ரீ. திபாகரன் மற்றும் தாள தரங்கம் ஸ்ரீ. ரட்ணதுரை ஆகியோரின் பங்களிப்புடன் அரங்கேற்றம் நடைபெறவுள்ளது. சிதம்பரம்பிள்ளை செல்லதுரை (ஸ்தாபக இயக்குனர் ஏமார் பார்மா (பிரைவேட்) லிமிடெட்) பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.*



# அம்பிகையின் உண்ணாவிரத போராட்டம்

# சாதித்தது என்ன? உண்மையில் வெற்றியீட்டியவர்கள் யார்?



**இலங்கை தமிழர்களுக்கு ஐ.நா. தீர்வை தரும் என நம்புபவர்கள், தனிமனித போராட்டத்தினூடாக தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்ற பிரசாரத்துடன் செய்யப்படும் குருட்டு அரசியல் போராட்டங்கள் தமிழர்களை தொடர்ந்தும் அரசியல் முட்டுச்சந்தில் அனாதைகளாக நிறுத்தி வருகின்றது.**

முள்ளி வாய்க்காலில் புலிகள் அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் மீதான அவலங்கள் அரங்கேறிய 2009 ஆண்டுக்கு முன்னராக 15 வருடங்களுக்கு முன்னரே புலம்பெயர் நாடுகளில் வலுவாக இருந்த விடுதலைப்புலிகளையும், புலம்பெயர் அமைப்புக்களையும் சிறுகச் சிறுக அழிப்பதற்கு உலக வல்லாதிக்க நாடுகள் நடவடிக்கை எடுத்திருந்தன.

புலிகளின் செயற்பாட்டாளர்கள், ஈழத்தமிழரின் செயற்பாட்டாளர்கள் புலம் பெயர் தேசங்களில் கைது செய்யப்பட்டு ஐரோப்பிய அமெரிக்க சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். பேச்சுவார்த்தை மூலம் குறைந்த பட்ச தீர்வுக்கு புலிகள் சம்மதிக்க வேண்டும் அத்துடன் புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதில் ஐ.நாவில் அங்கம் வகிக்கும் உலக நாடுகள் உறுதியாக இருந்தன.

உலக நாடுகளின் இந்த இராசதந்திரத்தை புலிகள் உணர்ந்துகொள்ளவில்லையா? அல்லது தெரிந்தும் பிடிவாதத்துடன் போரிட்டு மடிந்தார்களா? என்பதை வெளியுலகுக்கு சொல்ல இப்பொது யாரும் உயிருடன் இல்லை. முள்ளிவாய்க்கால் முடிவுடன் புலம்பெயர் அமைப்புக்கள் பலவற்றின் முடிவுகளும் எழுதப்பட்டது.

புலிகள் விட்டுச் சென்ற அரசியல் வெற்றிடத்தை ஈழத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றிக் கொண்டது. ஆனால் சுயநல அரசியல் காரணமாகவும் இலங்கை அரசாங்கத்துடன் பின்கதவால் தேன்நிலவு கொண்டாடிய விளைவும், தொடர்ச்சியாக மக்களை முட்டாளாக்க முடியாத கூட்டமைப்பால் அதை தக்கவைக்க முடியாமல் போய் விட்டது. இப்பொழுது பிரித்தானியாவில் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவந்த அம்பிகை செல்வக்குமாரின் போராட்டத்திற்கு முண்டு கொடுத்து புலிகளின் அரசியல் வெற்றிடத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணி நிரப்ப முயற்சி செய்கிறதா? என்ற கேள்வி எழுந்து நிற்கின்றது. புலிகளின் அரசியல் வெற்றிடத்தை நிரப்ப வேண்டுமானால் அவர்கள் புலிகளாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த அரசியல் வெற்றிடத்தை நிரப்ப முடியாது. வேண்டுமானால் புலிகள் அமைப்பின் வீரமும், தியாகமும், பயங்கரமும், அழிவும் நிறைந்த கடந்தகால அழியாத வரலாறை எதிர்காலத்தில் பேசி அரசியல் செய்யலாம். அமெரிக்க கப்பல் தமிழ் மக்களை காப்பாற்ற வரும் எனத் தெரிவித்து முள்ளிவாய்க்கால் முட்டுச்சந்தில் மக்களையும், போராளிகளையும் கைவிட்டதையும் புலிகளின் அரசியல் என முலாம் பூசலாம்.

சமகாலத்தில் தமிழ் மக்களின் பூகோள அரசியல் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் காலத்திற்கு காலம் தமிழ் மக்களை காப்பாற்ற வல்லாதிக்க சக்திகளால் மீட்பர்கள் உருவாக்கப்படுகிறார்கள். அல்லது தமிழ் மக்கள் சார்பாக எழும் அரசியல் அழுத்தங்களை குறைப்பதற்காக புதிய கதாநாயகர்கள் அறிமுகஞ்செய்யப்படுகிறார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை தோற்றுவித்த தருணத்தில் தமிழ் மக்களின் புதிய கதாநாயகனாக உருவாக்கப்பட்டவர்தான் சி.வி.விக்கினேஸ்வரன். இவர் தமிழ் மக்களுக்கு அறிமுகமில்லாதவர், தமிழ் மக்களின் வலி நிறைந்த உரிமைப் போராட்டங்களில் பங்கு கொள்ளாதவர், ஏன் போராட்டம் என்றால் என்ன என்றுகூட தெரியாதவர் மேட்டுக்குடி வர்க்கத்தை சேர்ந்தவர். இன்று இலங்கையின் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தாலும் பிற்போக்குத்தனம் மிக்க மிதவாத கொள்கைகளை அடிப்படையாக கொண்ட ஒரு நபராக செயற்படுபவர். தமிழ் மக்கள் இலங்கையின் மூத்தகுடிகள் என பேசி இனங்களுக்கிடையில் குழப்பங்களையும் அச்ச நிலைமையையும், சர்ச்சைகளையும் ஏற்படுத்தும் வெற்று உசுப்பேத்தும் அரசியல் செய்யும் ஒருவர். இவ்வாறானவர்களே வல்லாதிக்க சக்திகளின் தெரிவாகவும் தமிழர்களின் கதாநாயகர்களுமாக அறிமகமாவர்கள் பின்னர் தமிழர்கள் இலகுவாக ஏமாற்றப்படுவார்;கள்.

ஐ.நா.வின் மார்ச் மாதம் நடைபெறும் மனித உரிமைகள் அமைப்பின் கூட்டத்தொடரில் உலக குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்த வேண்டும் என இந்திய தமிழ் நாட்டில் குரல்கள் எழுந்த போதும், இலங்கையில் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம், பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை நடைபயணம் என போராட்டங்கள் நடைபெற தொடங்கிய வேளையில் ஈழத் தமிழருக்கான புதிய போராட்ட நாயகியாக வல்லாதிக்க சக்கதிகளால் 2021 அறிமுகம் செய்யப்பட்டவர்தான் அம்பிகை செல்வக்குமார்.

இலங்கையை உலக குற்றவியல் நீதிமன்றத்தில் பாராப்படுத்த வேண்டும் என்ற முதன்மை கோரிக்கையுடன் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை(27.02.2021) அன்று பிரத்தானியாவில் ஆரம்பித்து 16 நாட்கள் தொடர்ச்சியான போராட்டத்தின் பின்னர் ஐ.நா.தனது கோரிக்கைகளில் ஒன்றை ஏற்றுக்கொண்டுள்ளதாக கூறி தனது உண்ணாவிரதத்தை நிறைவு செய்துள்ளர் அம்பிகை செல்வக்குமார்.

இலங்கை அரசின் மீது சர்வதேச நீதிமன்றத்தில் போர்க் குற்ற விசாரணையை ஏற்படுத்தலாம் என்ற நோக்கம் ஒரு பொதும் நிறைவேறப் போவதில்லை என்பதை ஐ.நாவினதும், சர்வதேச நாடுகளினதும் செயற்பாடுகள் எமக்கு உணர்த்துகின்றன. அத்துடன் இவ்வாறான போராட்டங்களில் ஈடுபடுகின்ற தனி நபர்கள் உள்நாட்டு அரசியல் அறிவோ அல்லது சர்வதேச அரசியல் நிலவரங்களோ புரியாத திறனற்ற நபர்களாக இருப்பதுடன் வெற்று உணர்ச்சி அரசியலே இவர்களை இயக்கிச் செல்கிறது.

பிரித்தானியாவில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அம்பிகை செல்வக்குமார் என்பவர் யார்? இவருக்கும் ஈழத்தமிழர் போராட்டத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதற்கு அப்பால் இவரின் போராட்டத்தால் யார்? யார்? இலாபம் அடைந்துள்ளனர்? அல்லது வெற்றியீட்டியுள்ளனர்? ஐ.நா. மனித உரிமை அமைப்பின் ஈழத்தமிழர் மீதான பார்வை திசை திருப்பப்பட்டதா? ஏன்பதுதான் மிகப்பெரும் கேள்வியாக இருக்கின்றது.

அம்பிகை செல்வக்குமாரின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் 16 வது நாள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அதாவது அம்பிகை செல்வக்குமாரின் கோரிக்கையில் ஒன்று ஐ.நா.வால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அதனால் தமிழ் மக்கள் ஒரு மாபெரும் வெற்றியை ஈட்டிவிட்டார்கள் என்றும் அம்பிகை செல்வக்குமாரின் போராட்டம் மூலம் மகத்தான வெற்றி கிடைத்துள்ளது எனவும் தெரிவித்து போராட்டம் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

அம்பிகை செல்வக்குமாரினால் நான்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கோரிக்கைகளில் ஒன்று நிறைவேற்றப்பட்டாலும் தனது போராட்டத்தை கைவிடுவதாக அவர் அறிவித்திருந்தார். அதில் ஐ.நா. மனிதஉரிமை சாசனத்திலே இருக்கின்ற விசாரணை பொறிமுறையை இலங்கை மீது கொண்டு வருவதற்கான சரத்து இப்போதுள்ள தீர்மானத்தில் 2021 உள்ளடக்கப்பட்டு விட்டதாகவும் அதனால் போராட்டத்தினை கைவிடுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஐ.நா.வின் விசாரணை பொறிமுறையினுள் உள்ளடக்கப்படுகின்ற ஒரு சரத்தில் சாட்சியங்களை, ஆதாரங்களை சேகரிப்பது என்ற சொல் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இந்த சொல்தான் தமிழ் மக்களின் விடுதலையின் பாதையை திறக்கப்போகின்றது. என ஒரு வியாக்கியானம் கொடுக்கபப்பட்டு, இப் போராட்டத்தின் மூலம் மாபெரும் வெற்றி ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவித்து அம்பிகை அம்மணியின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

உண்மையிலேயே அம்பிகை செல்வக்குமாரின் போராட்டத்தின் காரணமாக தமிழ் மக்களின் அரசியலில் ஏற்படக்கூடிய அல்லது ஏற்பட்ட விளைவு என்ன? என்பது ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை என்பதும் அதனோடு ஏற்படுத்தப்பட்ட பொறிமுறையான சாட்சியங்கள், ஆதாரங்களை சேகரிப்பது என்ற தீர்மானமும் பிரித்தானிய தலைமையிலான உறுப்பு நாடுகளின் தலைமையில் 05.03.2021ஆம் திகதி தீர்மானமாக எடுக்கப்பட்டிருந்தது. அத்தீர்மானம் இறுதி செய்யப்பட்டு 08.03.2021 அன்று தமிழ் தரப்புக்களின் கைகளுக்கு அதிகாரபூர்வமாக வந்து சேர்ந்து விட்டது.

அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அம்பிகை செல்வக்குமாரின் போராட்டத்தின் காரணமாகவே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக காட்டுவதன் அரசியல் நோக்கம் என்ன? அல்லது அவரின் போராட்டம் தமிழ் மக்களுக்கு தந்துள்ள அரசியல் விளைவு என்ன? இப்பிரச்சினையை முன்று வகையாக பார்க்கலாம் ஒன்று இலங்கை தரப்பு, மற்றது இந்திய அரசு, மூன்றாவது இப்பிரச்சனையை கையாளுகின்ற ஐக்கிய நாடுகள் தரப்பு இந்த மூன்று தரப்பினருக்கும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் எவ்வாறான அரசியல் விளைவை ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ் மக்களுக்கு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றால், தெளிவான அரசியல் நோக்கற்ற போராட்டங்கள் தமிழ் மக்களை தொடர்ந்தும் பயணிக்க முடியாதவகையில் அரசியல் முட்டுச்சந்தில் நிறுத்தியுள்ளன என்றே சொல்லத் தோன்றுகின்றது.

அரசியல் நோக்கமல்லாமல் சுயலாபங்களுக்காக வல்லாதிக்க சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டதன் காரணமாகவே எப்பொதோ ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை காரணம் காட்டி போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமை சபையின் முழமையான கூட்டத்தொடர் முடிவுக்கு கொண்டு வரப்படுவதற்கு முன்னர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் யாருக்கு அரசியல் சேவை செய்துள்ளது?

முதலாவது ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் காரணமாக ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்திய அரசனை நோக்கி தமிழ் நாட்டு மக்கள், அரசியல் தலைவர்கள் ஒரு கோரிக்கை வைக்கக் கூடிய சுழல் நிலவியது. காரணம் இந்தியாவில் இப்பொது தேர்தல் காலம், தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தமிழ் சார்ந்து, இனம் சார்ந்து குரல் கொடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை அங்கு காணப்பட்டது. தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகள் ஈழத்தமிழருக்கு ஆதரவாக போராட்டம் ஒன்றை செய்யக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. இந்தியா இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்க கூடாது என்றும் அதற்கான சூழல் தமிழ் நாட்டில் முழுதாக இருந்த நிலையில் அம்பிகை செல்வக்குமாரின் போராட்டம் காரணமாக இந்திய மத்திய அரசுக்கு கொடுக்கப்பட வேண்டிய அழுத்தம் திசை மாறி பிரித்தானிய அரசு அம்பிகை செல்வக்குமாரின் கோரிக்கைக்கு செவிசாய்க்க வேண்டும் என்ற குரலை தமிழ் நாட்டிலிருந்து எழுப்ப வைத்து விட்டது.

தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நேரடியாக பிரித்தானியா அரசாங்கத்திடம் அம்பிகை அம்மையாரின் கோரிக்கைக்கு செவிசாய்க்குமாறு குரல் எழுப்பினரே தவிர இந்திய அரசாங்கத்தை நோக்கி தமிழ் நாட்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய அவர்களின் குரல் அம்பிகை அம்மாவின் குருட்டு அரசியல் காரணமாக தடுக்கப்பட்டது.

தார்மீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஈழத்தமிழருக்காக ஐ.நாவில் அழுத்தம் கொடுக்க வேண்டிய இந்திய அரசிற்கு தமிழ் நாட்டிலிருந்து வரக்கூடிய எழுச்சிக் குரல்களை மறுவளமாக திருப்பி இப்போராட்டத்தின் மூலம் இந்திய அரசு தன் மீதான அழுத்தத்தை குறைத்து கையாண்டுள்ளது.

இரண்டாவது ஐ.நா மனித உரிமை அமைப்பால் 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுடன் ஒப்பிடும் பொது 2021 இல் கொண்டுவரப்பட்ட தீர்மானம் காரம் குறைந்ததாக கீழ் நிலையில் இருக்கின்றது. ஐ.நாவின் அறிக்கைகளில் தமிழ் மக்கள் என்ற பதம் பாவிக்கப்படவில்லை அவ்வாறான நிலையில் இலங்கை அரசுக்கு மேலும் கால நீடிப்பை ஐ.நா. வழங்கியுள்ளது.

ஆகவே ஐ.நா தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது என்ற புரிதலை தமிழ் மக்கள் உணரத் தொடங்கிய வேளையில் இது எதிர்மாறாக அதாவது தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஐ.நா. செவிசாய்கின்றது என்ற மாயையை அம்பிகை அம்மணியின் போராட்டத்தை வைத்து உருவாக்கி, எம்மவர்களை வைத்தே எங்களை நம்பப் பண்ணியுள்ளனர். மற்றையது பிரித்தானியாவின் தலைமையின் கீழ் உள்ள உறுப்பு நாடுகளில் வசிக்கின்ற தமிழ் மக்கள் அந்த நாடுகளின் அரசியல் செயற்பாட்டில் அதிருப்தி கொள்ளாதிருக்க இப்போராட்டத்தின் மூலம் மாபெரும் வெற்றி தமிழருக்கு கிடைத்துள்ளதாக ஏமாற்றப்பட்டுள்ளனர்.

ஈழத்தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற மேற்கு நாடுகளில் உருவாகக் கூடிய எதிர்ப்பு அரசியலை மிகவும் சாணக்கியமாக தமக்கு சார்பாக கையாண்டு எம்மவர்களை வைத்தே எமது கண்ணை குத்தியுள்ளனர்.

மூன்றாவது அம்பிகை அம்மணியின் போராட்டத்தினூடாக தமிழர்கள் மேற்குலகத்துடன் ஒன்று சேர்ந்து இலங்கைகயை தாக்க வருகின்றார்கள் என்ற மாயையை இலங்கை அரசு சிங்கள மக்களுக்கு சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பை இந்த முட்டுச்சந்து குருட்டு அரசியல் உருவாக்கியுள்ளது. அத்துடன் இலங்கைக்கு எதிரான ஐ.நா.வில் கொண்டுவரப்படும் தீர்மானத்தை இலங்கை தனக்கு சார்பாக மாற்றுவதற்கான அனைத்து நியாயங்களையும் இப்போராட்டம் அமைத்துக் கொடுத்துள்ளது.

தமிழர் தரப்பிலிருந்து இலங்கைக்கு வரக்கூடிய அழுத்தங்களை இந்தியா, சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதரவுடன் ஐ.நா.வில் வெற்றி கொள்வதற்கான வாய்ப்பை அம்பிகை அம்மணியின் குருட்டுத்தனமான அரசியல் ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

அம்பிகை அம்மணியின் போராட்டத்தினால் இலங்கை அரசாங்கம் வெற்றியீட்டியுள்ளது, இந்திய அரசாங்கம் வெற்றியீட்டியுள்ளது, ஐ.நா. வெற்றியீட்டியிருக்கின்றது, பிரித்தானியா அரசின் கீழ் உள்ள உறுப்பு நாடுகள் வெற்றியீட்டியிருக்கின்றன, மனித உரிமைகள் சபை வெற்றியீட்டியிருக்கின்றது, இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட விசாரணை பொறிமுறை என்ற ஏமாற்று பொறிமுறை தோற்கடிக்கப்பட்டுள்ளது, தமிழ் தேசிய கூட்டமைப்பு தான் செய்யும் அரசியல் சரியானது என இப்போராட்டத்தின் மூலம் நிருபித்துள்ளது.

அம்பிகை அம்மணியின் குருட்டு அரசியல் போராட்டத்தின் மூலம் தமிழர்கள் ஐ.நா.வின் அரசியல் முட்டுச்சந்தில் நிறுத்தப்பட்டு தோற்கடிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறானவர்களின் போராட்டத்தினூடாக இலங்கை அரசாங்கத்திற்கு ஐ.நா.தொடர்ச்சியாக கால அவகாசத்தை வழங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

எதிர்காலத்தில் இவ்வாறான தொடர்ச்சியான அனாதை போராட்டங்கள் உருவாகும். அதை மேற்கூறிய வல்லாதிக்க சக்திகள் தங்கள் அரசியல் தேவைகளுக்காகக் கையாளும், அம்பிகை அம்மணி போன்றவர்களை அடையாளம் கண்டு தமிழர்கள் இவ்வாறான தனிமனித போராட்டங்களை புறக்கணிப்பதுடன் தமிழர்கள் ஒன்று சேர்ந்து ஐ.நா.நோக்கி ஒரு அரசியல் அழுத்தத்தை பிராந்திய அரசியல் ஊடாக செலுத்தாத வரையில் இவ்வாறான அழிவு அரசியல் தமிழருக்கு சாபக்கேடாக தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**எம்.ஜி.ரெட்ன காந்தன்...**




# நாட்டை உருவாக்கத் தேவை அமைதியான மனது

**வயிற்றை நிரப்புவதற்காகத்தான் என ஒரு கிராமிய பேச்சுவழக்கொன்றுள்ளது. நாம் அனைத்தையும் செய்வது வயிற்றை நிரப்புவதற்காகத்தான். மனிதர்களுக்கு மாத்திரமல்ல எல்லா உயிர்களுக்கும் பசிபொதுவான தர்மமாகும். ஒரு வேளை அல்லது இருவேளை பசியை பொறுக்கலாம். அதன் பின்னர் எங்கேயாவது எதையாவது தேடத் தோன்றும். அது இயற்கையாகும். சமூக ஒழுக்கம் வீழ்ச்சியடைதல், வன்முறை, ஆயுதப் போராட்டத்தில் வறுமை என்பது முக்கிய காரணியாகும். இன்று இந்நாட்டிலுள்ள சமூக கட்டமைப் பின்படி வருமானத்துக்கு ஏற்ப போதுமானளவு உணவை பெற்றுக்கொள்ள முடியாமை வறுமையால் வாடும் மக்கள் பிரிவினர் முகம் கொடுத்துள்ள ஒரு பிரச்சினையாகும்.**

**பசியைப்பற்றி ஆமீகத்தலைவரகள் பல உபதேசங்களை செய்துள்ளார்கள். முக்தி பெற்ற சீவலிக்கு தான் செய்த புண்ணியத்தால் எல்லா வேளையும் உணவு கிடைத்ததாக புத்த தர்மத்தில் கூறப்பட்டுள்ளது. தர்ம உபதேசத்தை செய்வதற்கு முன்னர் கேட்பவர்கள் உணவு அருந்தியுள்ளார்களா என்பது கூறித்து புத்தர் கவனம் செலுத்தியுள்ளார். அதிகளவு உணவு அருந்தியதால் சிரமப்பட்ட கோசல அரசரை கண்ட புத்தர் ஒவ்வொரு கவளமாக அதனை குறைக்குமாறு உபதேசித்தார். தனது மாடொன்றை தேடியலைந்து இறுதியில் புத்தரை சந்தித்த விவசாயிக்கு முதலில் உணவு வழங்கப்பட்டதாக பௌத்த இலக்கியங்களில் காணப்படுகின்றது.**

**ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பயணிக்கும் வேளையில் மக்களின் பசி பற்றி கவனம் செலுத்த வேண்டியது நல்லது. இலங்கை தீர்க்கமான கட்டத்திலுள்ளது. நடுத்தர வருமானம் உள்ள நாடாக உள்ள போதும் அநேகமானோர் சிரமப்படுகிறார்கள் என்பது ரகசியமான விடயமல்ல. வழமையான வருமானத்துக்கான பாதைகள் மூடப்பட்டுள்ளன. பலரின் வேலைவாய்ப்புகள் பறிபோயுள்ளன. அன்றாட செலவு இரண்டு மூன்று மடங்காக அதிகரித்துள்ளதுடன் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. பல உணவுப் பொருட்களின் இறக்குமதி கட்டுபடுத்தப்பட்டுள்ளது. தட்டுப்பாடு மற்றும் சாதாரண பாவனையாளர்களால் தாங்க முடியாதளவு விலைவாசி உயர்வின் பலனே அதுவாகும். பொறுப்பு வாய்ந்த அரசாங்கமாக இச்சந்தர்ப்பத்தில் சிரமம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். அரிசி, பருப்பு, தேங்காயின் விலை அதிகரிக்கும்போது அன்றாட வாழ்க்கைச் செலவு பிரச்சினையாகும். பால்மா, காஸ் விலை அதிகரிக்கும்போது நிம்மதி தொலைந்து போகிறது. நீர் மற்றும் மின்சார கட்டணங்களை கூட செலுத்த முடியாதளவுக்க ஒரு சிலரின் நிலைமையுள்ளது. பிரச்சினைகளுக்கு மத்தியில் மக்கள் அமைதியிழப்பதை தடுக்க முடியாது. பொருளாதார பற்றாகுறையுடைய தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் நிவாரணம் பெற வேண்டியவர்கள் யார் என்பதை மீளாய்வு செய்ய வேண்டியது மிக முக்கியமாகும்.**

**குழப்பமான மனதை தூண்டிவிடுவது இலகு. எதிர் க்கட்சி அரசியல்வாதிகள் பலவிதமான கருத்துக்களை பரப்பி வருகிறார்கள். சமூக ஊடகங்கள் அவற்றை மேலும் தூண்டிவிடுகின்றன. ஏனைய தரப்பாரிடமிருந்து தாக்குதல் வருவதற்கு முன்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு சரியான சந்தர்ப்பத்தில் எடுக்க வேண்டும்.**

**உணவு தொடர்பாக போராட்டத்திலுள்ள மக்களுக்கு தொற்றை ஒழித்து அதன் பின்னர் முதலீடுகளை பெற்று பொருளாதாரத்தை வேகமாக அபிவிருத்தி செய்வதாக கூறுவது வீணாகும். பயங்கரவாதம் இருந்தபோதும் இவ்வாறே கூறப்பட்டது.**

**ஆனாலும் அது வெற்றிகரமான பதிலில்லை. “அரசாங்கம் உபதேசம் செய்கிறது எமக்கு வாழ வழியில்லை.” என சிலர் குறை கூறுகிறார்கள்.**

**வருமானம் குறைவடைந்துள்ளதுடன் செலவு அதிகரித்துள்ள நிலைமையில் இலங்கை காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இங்கு கொவிட் தெற்று பெரும் தடையாகும். வளர்ச்சியடைதுள்ள நாடுகள் பெருமளவு பணத்தை செலவிட்டுள்ளன. இலங்கைக்கு அந்தளவு வசதியில்லை. தடுப்பூசி செலுத்தல் புதிய பொருளாதார நிலைமையை மாற்றி வருகிறது. மாறி வரும் உலகில் ஏற்றுமதி சந்தர்ப்பங்கள் மற்றும் உலக போட்டிக்கிடையே இடமொன்றை பெறுவது நாட்டுக்கு அவசியமாகும். சரியான கொள்கைகளின்படி சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு முடிவெடுத்து,புனரமைப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். நாட்டை பிரிப்பது, நாட்டை காப்பாற்றுவது என்ற கோஷங்கள் வீணானவை. சமூகத்துக்காக போராடும், சிறந்த தலைமையே மக்களின் எதிர்பார்ப்பாகும்.**

**சரியான பாதை தெளிவாக தெரிவதுடன் சிறு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு மக்கள் கொள்கை மாறிய கடந்த காலத்திலிருந்து பாடங்களை கற்க வேண்டும். சிறு குழுவினரின் ஏமாற்றம் முக்கியமான சந்தர்ப்பங்களில் அழுத்தமாகும். அதனை கவனத்தில் கொள்ள வேண்டியது நல்லது.**

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**



## தவக்கால சிந்தனை

# தமக்கென்றே வாழ்வோர்

பாவ உலகில் பரிதவித்த மனித இனத்தை மீட்கும் பொருட்டு மனு உருவெடுத்த இறைமகனின் கருணைக் கரங்கள் நம்மை கட்டியணைக்க, கதிரவன் கண்பட்டதும் கரைந்தோடும் பனித்துளி போல, கறை எனும் இருள் நீக்கி, மனமாற்றம் எனும் ஒளி ஏற்றப்பட்டதும் காணாமற்போகும் நம் கொடுஞ்செயல்கள்.

நம் தீச்செயல்களைக் கண்டு கொள்ளாமல் நமது மனமாற்றத்தை மட்டுமே இறைவன் விரும்புகிறார். பிள்ளைகளின் தவறுகள் பெற்றோரால் கண்டிக்கப்பட்டாலும், அவை தண்டிக்கப்படுவதில்லை; முழு மனதோடு மன்னிக்கப்படுகின்றன. நாமே இவ்வாறு இருக்கும் போது நமது இறைவனின் இணையற்ற அன்பு நம் பாவங்களை மன்னித்து மனமாற்றத்திற்கு அழைத்துச் செல்கிறது. "ஆண்டவரின் இரக்கம் எத்துணை பெரியது; அவரிடம் மனந்திரும்புவோருக்கு அவர் அளிக்கும் மன்னிப்பு எத்துணை மேலானது" என்கிறது சீராக்கின் ஞான நூல். எனவே மனக்கறைகளை அகற்றி, மனமாற்றத்தை நிகழ்த்தி, இறையன்பை இணைத்து, அனைவருக்கும் இனியவராகவே வாழ்வோம்.

கடவுள் இஸ்ரயேல், யூதா வீட்டாரோடும் செய்த அன்பின் உடன்படிக்கையில் "நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன்; அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள்" என்கிறார் ஆண்டவர். "அவர்களின் தீச்செயலை மன்னித்து விடுவேன்; அவர்களுடைய பாவங்களை நினைவு கூரமாட்டேன் என்று மன்னிப்பையும் இறைமாண்பையும் வெளிப்படுத்துகிறார். அத்தகைய இறைப் பாதையில் பயணிக்க விரும்புவோமா?

உதாசீனப்படுத்திய உறவுகளை மன்னிப்போம்; நமது தாழ்நிலையில் தள்ளி நின்ற நண்பர்களை மன்னிப்போம்; பொருளை மட்டுமே பெரிதாய் நினைத்த பிள்ளைகளை மன்னிப்போம்; தவறான பாதையில் பயணித்த பெற்றோர்களை பொறுத்துக் கொள்வோம்.

தவறு செய்யாத மனிதனும் இல்லை; திருத்திக் கொள்ள இயலாத தவறும் இல்லை. தவறுகள் பிறரில் இருந்தால் பொறுத்துக் கொள்வோம்; நம்மில் இருந்தால் திருத்திக் கொள்வோம்..

நம் கரங்களில் கிடைக்கப் பெற்றது ஒரே ஒரு வாழ்க்கையே; அதை அர்த்தமுள்ள வாழ்க்கையாக வாழ்ந்து மண்ணில் புதைக்கப்படும் முன் நம் வாழ்வின் விழுமியங்களை விதைத்துச் செல்வோம்.

அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

அருட்பணி பேர்னாட் ஜீவா ...

# கொழும்பு நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் eChannelling ஊடாக கொரோனா தடுப்பூசி

கொழும்பு மாநகர சபையின் (CMC) தகவல் தொழில்நுட்ப பிரிவுடன் SLTMOBITEL இணைந்து, eChannelling சேவையூடாக கொவிட்19 தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கு நபர்களை பதிவு செய்து கொள்ளும் நடவடிக்கையை சௌகரியமாக மேற்கொள்ளக்கூடிய வசதியை அறிமுகம் செய்துள்ளது. முதற்கட்டமாக, கொழும்பு நகர எல்லையினுள் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் இந்த வசதியை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த தேசிய ஒன்றிணைவு தொடர்பாக மொபிடெல் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரன கருத்துத் தெரிவிக்கையில், 'நவீன இணைப்பு தீர்வுகளினூடாக தேசத்தையும், குடிமக்களையும் மேம்படுத்துவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ள நிறுவனம் எனும் வகையில், கொழும்பு மாநகர சபையுடன் கைகோர்த்து இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் தேசிய பணிக்கு எமது சேவைகளை இந்த வழிமுறையினூடாக வழங்குவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இதனூடாக பொது மக்கள் அனைவரையும் பாதுகாப்பாக திகழச் செய்வதற்கு பங்களிப்பு வழங்க முடிந்துள்ளது. முதற் கட்டமாக இந்த வசதி கொழும்பு நகர எல்லையினுள் மாத்திரம் கிடைப்பதுடன், நாடு முழுவதிலும் தடுப்பூசி வழங்கும் பணிகள் விஸ்தரிக்கப்படும் போது, இந்தச் சேவைகளையும் விஸ்தரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம் என்றார்.

60 வயதுக்கு மேற்பட்ட குடிமக்களுக்கு கொழும்பு மாநகர சபை இணையத்தளமான www.colombo.mc.gov.lk ஊடாக அல்லது eChannelling Mobile App பயன்படுத்தி ''COVID Vaccination' எனும் தெரிவை அழுத்தி, தமது வசிப்பிடத்துக்கு பொருத்தமான தடுப்பூசி வழங்கும் நிலையத்தை தெரிவு செய்து தம்மை பதிவு செய்து கொள்ளலாம்.

இதன்போது வாடிக்கையாளர்கள் தமக்கு பொருத்தமான நேரத்தையும் தெரிவு செய்துகொள்ள முடியும். தமது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் மொபைல் இலக்கம் போன்ற தரவுகளை பதிவு செய்ய வேண்டும். குறித்த நபரின் தொலைபேசி இலக்கத்துக்கு SMS Clhf OTP அனுப்பி வைக்கப்படும்.

அதனை உறுதிசெய்த பின்னர், SMS ஊடாக பதிவு உறுதி செய்யப்பட்ட அறிவுறுத்தல் அனுப்பி வைக்கப்படும்.

## அமைச்சரவையில் கலந்துரையாடிய...

வாரங்களில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் புர்காவை தடை செய்தல் மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மத்ரஸா பாடசாலைகளை மூடுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் கடந்த வாரம் தெரிவித்திருந்த நிலையில் அது தொடர்பில் பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. மேற்படி கூற்று சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சு அது தொடர்பில் தெரிவிக்கையில், உடனடியாக அது தொடர்பில் எந்த வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இன்னும் கூட அது பேச்சுவார்த்தை மட்டத்திலேயே உள்ளதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

# இம்ரான் கானுக்கு கொரோனா தொற்று

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கொரோனா தொற்று உறுதியானதையடுத்து அவர் தன்னை தனிமைப்படுத்திக்கொண்டுள்ளதாக பிரதமரின் சிறப்பு உதவியாளர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார். இம்ரான் கான் நேற்றுமுன்தினம் சீனாவின் சினோபாம் கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்திக்கொண்ட நிலையிலேயே அவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## கொழும்பில் மாயமான...

கறுப்பு நிற ஆடை அணிந்து பை ஒன்றுடன் இந்த மாணவன் காலை 6.20 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அல்டன் டெவோன் கென்னி என்ற 16 வயது மாணவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். மாணவரை காணவில்லையென கல்கிஸ்சை பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாணவனின் நடமாட்டம் தொடர்பில் சி.சி.டிவி காணொளிகள் மூலமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மாணவன் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 0773 779850 (தீபிகா மாணவனின் தாய்) என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியுமெனவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீன உற்பத்தி சினேபாம்...

தடுப்பூசியை உபயோகப்படுத்த முடியும் என மேற்படி அதிகார சபை தெரிவித்துள்ள நிலையில், முதற்கட்டமாக 3 இலட்சம் தடுப்பூசி இலங்கைக்கு கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து மேலும் 3 இலட்சம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படும் என தெரிவித்துள்ள அவர் அவற்றில் ஒரு தொகை தடுப்பூசிகள் அன்பளிப்பாக கிடைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் மக்கள் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்து வரும் நிலையில் தடுப்பு நடவடிக்கைகளில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் மக்கள் சுகாதார வழிமுறைகள் முறையாக கடைபிடிக்காமல் அலட்சியமாக செயல்பட்டால் மீண்டும் கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்த நேரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## குற்றச்சாட்டுக்களிலிருந்து ...

தமிழர்களினால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நோக்கி கழுத்தை அறுக்கப்போவதாக, சைகை ஊடாக பிரியங்க பெர்னாண்டோ அச்சுறுத்தல் விடுத்ததாக அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இத்தகைய நிலையிலேயே தற்போது பிரிட்டன் மேல் நீதிமன்றம், அவர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிப்பதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜெனீவாவில் நாளை...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் நாளை 22ஆம் திகதி வாக்களிப்பொன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெள்ளிக்கிழமை வெளிவிவகார அமைச்சில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அரசியல் நோக்கத்திற்காக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எமது நாட்டின் உள்ளக விடயங்கள் தொடர்பில் குற்றம் சாட்டுவது அல்லது வாக்களிப்பது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் பேரவையின் பொறுப்பான செயற்பாடல்ல.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பல ஆண்டுகளாக இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன.

இது குறித்து நாங்கள் கவனமாக இருந்தோம்.

எமது அரசாங்கம் தேர்தலுக்குப் பின்னர் மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளது.

காணாமல் போனோர் அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் இது போன்ற பல சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகையில், எமக்கு எதிராக பல்வேறு வழிகளில் குற்றங்களை சுமத்தி, மனித உரிமைகள் பேரவையில் புறக்கணிப்பது நியாயமில்லை என்றார்.

## பசறையில் பாரிய பஸ் விபத்து...

நேற்றுக் காலை 6.55 மணியளவில் இவ்வாறு விபத்துக்குள்ளானது.

முன்னால் வந்த டிப்பர் லொறியொன்றுக்கு வழிகொடுக்க முற்பட்ட போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து 200 அடி பள்ளத்தில் பாய்ந்து பஸ் விபத்துக்குள்ளானது.

விபத்து இடம்பெற்ற ஸ்தலத்திலேயே பஸ்சின் சாரதி உட்பட 07 பேர் பலியானதுடன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி மேலும் 08 பேர் உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்துள்ள 30 இற்கும் அதிகமானோர் பதுளை மற்றும் பசறை அரசாங்க வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்தில் 09 ஆண்களும், 06 பெண்களும் உயிரிழந்துள்ளனர். பதுளை மாகாண வைத்தியசாலையில் 16 ஆண்களும், 14 பெண்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனையவர்கள் பசறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காயமடைந்துள்ளவர்களில் 09 பேருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 02 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 03 பேர் 11 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் என்றும் 07 பேர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக விசேட வைத்திய குழுக்களும், சுகாதார குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, விபத்தில் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக 08 அம்பியூலன்ஸ் வண்டிகள் பயன்படுத்தப்பட்டன.

சீ.சி .டிவி காட்சிகளின் படி எதிர்த் திசையில் வந்த டிப்பர் ரக வாகனத்துக்கு வழிகொடுத்து தாண்டி செல்ல முற்பட்ட வேளையிலே பஸ் வண்டி வீதியை விட்டு விலகி 200அடி பள்ளத்தில் விழுந்துள்ளது. பசறை பொலிஸார் விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன், விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் ஆராய ஊவா மாகாண ஆளுனரின் ஊடாக நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்கட்ட உதவித்தொகைகளை வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

## அரவிந்தகுமார் எம்.பி...

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழுவில் மொத்தமாக 82 உறுப்பினர்கள் அங்கம் வகித்த போதிலும் 64 உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

01. பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் கட்சியின் கொள்கையை மீறி 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை கட்சியின் கொள்கையை மீறும் செயல்.

02. அ.அரவிந்தகுமாரிடம் விளக்கம் கோரப்பட்டது. அவ்விளக்கம் திருப்தியளிக்கவில்லை என்ற கவுன்சில் தீர்மானத்தை மத்தியகுழு ஏற்றுக்கொண்டது.

03. அ.அரவிந்தகுமார் மலையக மக்கள் முன்னணி, மலையக தொழிலாளர் முன்னணியில் வகித்த பதவிகள் மற்றும் அங்கத்துவ உறுப்புரிமை என்பன இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் அவர் தலைமை அலுவலகத்துக்கு அத்துமீறி அலுவலக பணியில் ஈடுபட்டமை மத்தியகுழு மற்றும் கவுன்சிலின் தீர்மானத்தை மீறியதாக மத்தியகுழு தீர்மானித்தது.

இதனடிப்படையில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் மலையக மக்கள் முன்னணி உறுப்புரிமையிலிருந்தும் மற்றும் மலையக மக்கள் முன்னணி, மலையக தொழிலாளர் முன்னணியில் வகித்த பதவிகள் உடன் நடைமுறைப்படுத்தும் வகையில் நீக்கப்பட்டதாக மத்திய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானங்கள மேற்கொள்ளப்பட்ட போது பதுளையை பிரதிநிதித்துவம் செய்கின்ற 09 உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறிய நிலையில் ஏனைய அனைவருடைய ஏகோபித்த ஆதரவுடன் மேற்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் ஊடக அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனக்கும்,தனது நாட்டு மக்களுக்கும்...

பேச்சுவார்த்தை நேற்றுக் (20) காலை தலைநகர் டாக்காவில் நடைபெற்றது.

இந்த சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு சந்திப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் நடைபெற்றது. பங்களாதேஷ் பிரதமர் அலுவலகத்துக்கு சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அந்நாட்டு பிரதமர் சிறந்த முறையில் வரவேற்றார்.

இச்சந்திப்பின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் வருமாறு,

எம்மை சிறந்த முறையில் வரவேற்றமைக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.பங்களாதேஷின் சுதந்திர தின பொன்விழாவிலும், பங்களாதேஷின் தேசப்பிதாவாக கருதப்படும் பங்கபந்து செய்க் முஜ்பூர் ரஹ்மானின் 100 ஆவது ஜனன தின விழாவில் கலந்து கொள்வதற்கு நீங்கள் விடுத்த அழைப்புக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கிறேன்.

எம்மை வரவேற்பதற்கு நீங்கள் விமான நிலையத்துக்கு வருகை தந்தமை எமது நாடு மற்றும் இலங்கை மக்கள் மீது தாங்கள் கொண்டுள்ள பற்றை வெளிப்படுத்தியது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இலங்கை மக்களின் மனமார்ந்த வாழ்த்தை பங்களாதேஷ் மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜனாதிபதியாக பதவி வகித்த வேளை பங்களாதேஷுக்கு உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்ட போது என்னையும், எனது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவையும் சிறந்த முறையில் வரவேற்றமை இன்றும் நினைவிலுள்ளது.

1998 ஆம் ஆண்டு வலய ஒத்துழைப்பு தொடர்பிலான தெற்காசிய (சார்க்) மாநாட்டிலும், 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற பொது நலவாய அரச தலைவர்கள் மாநாட்டிலும் நீங்கள் கலந்துக் கொண்டமை நினைவில் உள்ளது.

எமது இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவு 2022 ஆம் ஆண்டு 50 ஆவது வருடத்தை நோக்கி செல்கிறது என்பதை தாங்கள் அறிவீர்கள்.

இதனை கொண்டாடும் வகையில் எனது இராஜதந்திர அதிதியாக நீங்கள் இலங்கைக்கு வருகை தர வேண்டுமென்று பெருமிதத்துடன் அழைப்பு விடுக்கிறேன்.

இந்த விசேட நிகழ்விற்கு பங்களாதேஷுக்கு வருகை தந்துள்ளமைக்கும், உங்களை தனிப்பட்ட முறையில் சந்தித்தமைக்கும் பெரு மகிழ்ச்சியடைகிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்களாதேஷ் பிரதமரிடம் தெரிவித்தார்.

## நிபுணர் குழுவிடமிருந்து...

ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அண்டோனியோ குட்டேரஸ், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் மிச்சல் பெச்சலட் ஆகியோருக்கும், மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கும் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஒரு புதிய அரசியலமைப்புக்கான தங்களது, கடந்த டிசம்பர் 28 ஆம் திகதிய ஆலோசனைகள், கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சந்திப்பு மற்றும் பெப்ரவரி 24ஆம் திகதியிடப்பட்ட தங்களது கடிதம் ஆகியன தொடர்பாக தாம் இதனை எழுதுவதாக இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கான புதியதோர் அரசியலமைப்பில், தீர்த்துவைக்கப்பட வேண்டிய மிக முக்கியமான விடயம், தமிழ்த் தேசியப் பிரச்சினையேயாகும் என்றபோதிலும், ஜனாதிபதி, நிபுணர் குழுவை நியமித்தபோது தங்களோடு கலந்தாலோசிக்கவில்லையென்பது கவனிக்கத் தக்கதாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நிபுணர்குழு, பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோரியபோது, தாம் அந்த நடைமுறையில் மிக ஆக்கபூர்வமாக ஈடுபட்டு தமது ஆலோசனைகளை அனுப்பி வைத்தாக தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், நிபுணர் குழுவின் அழைப்பின் பேரில் சந்தித்து, தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும், கடந்த 33 ஆண்டுகளில் எட்டப்பட்ட கருத்தொருமைப்பாட்டு விடயங்களை இனங்காண்பதில் குழுவோடு இணைந்து செயற்படுவதற்கான தமது விருப்பம் தொடர்பாகவும் மேலும் விரிவாக எடுத்துரைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே, வாய்மூலமாகவும், எழுத்துமூலமாகவும் நிபுணர் குழுவுக்கு அறிவிக்கப்பட்டவாறு, ஓர் ஐக்கிய, பிரிபடாத மற்றும் பிரிக்கமுடியாத நாடு என்ற வரையறைக்குள் தீர்வொன்றைக் காண்பதற்கு தாம் விரும்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எனினும், அது இயன்றவரை அதிகூடிய அதிகாரப் பரவலாக்கத்திற்கு இட்டுச்செல்லும் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையிலானதாக அமைந்திருக்கவேணடும்.

இது, இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதோர் அரசியலமைப்பை வகுக்கும் உன்னதப்பணியில், நிபுணர் குழுவுடன் ஒத்துழைப்பதற்கான தமது விருப்பை வெளிப்படுத்தலின் ஒருநினைவூட்டலாகும் என்று அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் டக்ளஸ், மஹிந்தானந்தவுக்கு...

உறுப்பினருமான மனோ கணேசன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் வடபகுதி மக்களது மனங்களை பெரிதும் புண்படுத்துவதாக இருந்து வந்த நிலையில் இந்த இரு அமைச்சர்களும் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளுக்காகவே மனோகணேசன் பாராட்டுக்களை தனது முகநூலில் தெரிவித்திருக்கிறார். அவரது முகநூல் பதிவு பின்வருமாறு:

வட மாகாண மாவட்டங்களின் காணி ஆவணங்கள் அநுராதபுர காணி சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. இதை இடைநிறுத்தி, மீண்டும் அவற்றை யாழ். பிராந்திய அலுவலகத்துக்கே கொண்டு வர அமைச்சர்கள் மஹிந்தானந்த, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்ற செய்தி வந்துள்ளது.

இது உண்மையானால் மகிழ்ச்சியே. அவ்வாறாயின் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு எனது பாராட்டுகள் என்று பதிவிட்டுள்ளார்.

## அரசுடன் பேச்சு நடத்துவதாயின்...

யுத்தம் முடிந்து 11 வருடங்கள் கடந்துள்ளது. தமிழ் மக்கள் சர்வதேச நீதியை நாடி நிற்கின்றனர். அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றநேரத்தில்அதுவும் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்படுகின்ற நிலையில் தற்போது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளைச் அரசாங்கம் சந்தித்துள்ளது.

அப்படியானால், சர்வதேச ரீதியில் நாம் நீதியைத் தேடாமல் உள்நாட்டிலே தீர்க்கக் கூடியதாக காணாமல் போனோரின் உறவுகளைச் சந்தித்துப் பேசுகின்றோமென்ற ஒரு மாயையை உலகுக்கு காட்டுவதற்கு இவர்கள் எத்தணிப்பதாக நாங்கள் பார்க்கின்றோம்.

உண்மையில், இறுதிப் போரில் சரணடைந்தவர்களுடைய வெளியிடப்படாத பட்டியலை வெளியிடுவதாக இதே ஆட்சியாளர்கள் கடந்த ஆட்சிக்காலத்தில் தெரிவித்திருந்ததும், பின்னர் ஒன்றுமே இல்லாத நிலையைக் கொண்டு வந்ததையும் நாங்கள் அறிவோம்.

ஆனால், உள்நாட்டுப் பொறிமுறைகள் அத்தனைக்கும் தோற்றியவர்களாக நாங்கள் இருக்கின்ற போது, தற்போது திடீர் கரிசனையை அரசாங்கம் எங்கள் மீது கொள்வதன் நோக்கம் என்ன?

ஐக்கிய நாடுகள் சபையில் தங்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு எங்களுடைய மக்களை ஒரு போலியாகச் சந்திக்கின்ற நிலைப்பாட்டை எடுக்கின்றார்கள். அப்படிச் சந்தித்தாலும்கூட இவர்கள் இறந்தவர்களுக்கான நட்ட ஈடு என்ற வழியில்தான் பேசப்போகின்றனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்திலேயே காணாமல் போனோரின் அலுவலகம் கொண்டுவந்து காணாமல்போனா ஒருவரைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனாலும் ஒன்றைக் கூறுகின்றோம், இதே ஆட்சியாளர்களின் காலத்தில்தான் பெருமளவான மக்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். சரணடையக் கொடுத்தவர்களில் நானும் ஒருத்தியாக இருக்கின்றேன்.

இந்நிலையில், இவர்கள் உடனடியாக இந்தப் பேச்சுவார்த்தைகளைக் கைவிட்டு தங்களுடைய கைவசம் இருக்கின்ற, காணாமலாக்கப்பட்டவர்கள் என்று கூறப்பட்ட அத்தனை பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

அதன்பின்னர் மக்களுடன் பேச கூடிய வரட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## காணாமல் ஆக்கப்பட்டோர்களது...

தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி வருவதுடன், பல்வேறு வாழ்வாதார பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் இவ் விவகாரம் தொடர்பாக ஏற்கனவே கலந்துரையாடியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நேற்று காணாமல் போனோரின் உறவினர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த காணாமல் போனோரின் உறவினர்கள், தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியப்படுத்த வேண்டுமெனவும் உறவுகளை இழந்தமையினால் எதிர்கொண்டு வருகின்ற வாழ்வாதார பாதிப்புக்களுக்கு பரிகாரம் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

காணாமல் போனோரின் உறவினர்களின் வலிகளை அனுபவ ரீதியாக புரிந்து கொள்வதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரத்தை வழங்கி இவ் விவகாரத்தை தீர்த்து வைக்க விரும்புவதாகவும் எந்தவிதமான அரசியல் நோக்கங்களும் தனக்கு இல்லையெனவும் தெரிவித்தார். இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடி ஒரு மாத காலத்தினுள் இவ் விவகாரத்தை தீர்த்து வைப்பதாகவும் தெரிவித்தார்.

கருணாகரன்...

# இலங்கைக்கான நெருக்கடி என்பது எல்லோர் முதுகிலும் விழும் அடியே!



இலங்கைக்கான நெருக்கடியை ஐ.நா மனித உரிமைத்தீர்மானம் ஏற்படுத்துமா இல்லையா என்பது ஒரு புறம் இருக்கட்டும். அப்படி ஒரு நெருக்கடி இலங்கைக்கு வருமாக இருந்தால் அந்த நெருக்கடியில் தமிழ் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாதா? அல்லது அது தமிழர்களுக்கு பிரத்தியேகமாக எந்தவிதமான நன்மைகளைக் கொடுக்கும்? இது எண்பதுகளில் இந்தியா மேற்கொண்ட உதவி மற்றும் தலையீடுகளைப் போன்றது என்ற உள்ளுணர்வு பலருக்கிருக்கும். குறிப்பாக இந்திய அமைதிப்படை கூட வடக்குக் கிழக்கில் மட்டுமே (தமிழ்மக்கள் செறிவாக வாழும் மாகாணங்களில்) நிலைகொண்டது. ஆனால், இப்போதிருக்கும் இலங்கைக்கான நெருக்கடி என்பது ஒட்டுமொத்த நாட்டுக்குமான நெருக்கடிய அமையுமா அல்லது தனித்தனிச் சமூகங்களுக்கான நெருக்கடியாக அமையுமா?

இதைக் குறித்து எந்தத் தெளிவான கருத்துரைப்புகளையும் – விளக்கங்களையும் பார்க்க முடியவில்லை. இதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள் என்று கேட்டால் ஏதோவெல்லாம் சொல்கிறார்களே தவிர, உரிய பதிலைச் சொல்வோராக எவரையும் காணவில்லை. ஆனால், பாதிக்கப்பட்டவர்களின் உளவியல் அப்படித்தானிருக்கும்.

இதனால், தமிழ்ப் பத்திரிகைகள், இணையத் தளங்கள், அரசியல் உரைப்பாளர்கள் உட்பட தமிழ் ஊடகப் பரப்பிலும் தமிழ் அரசியல் வெளியிலும் இலங்கைக்கு நெருக்கடி வரப்போகிறது என்ற மகிழ்ச்சி நிலையே காணப்படுகிறது. அப்படியென்றால், இலங்கைக்கான அந்த நெருக்கடி என்பது எப்படி அமையும்? அதில் தமிழ் மக்கள் எந்த வகையில் இந்த நெருக்கடிக்குள் சிக்காமல் விடுவிக்கப்படுவர்? அந்த நெருக்கடியானது தமிழ் மக்களைத் தவிர்த்து ஏனைய இலங்கைச் சமூகத்தினரை – முஸ்லிம்கள், மலையக மக்கள், சிங்கள மக்களுக்குத்தான் ஏற்படுமா? அது எப்படிச் சாத்தியமாகும்?

அல்லது இப்போதுள்ள ஆட்சியாளர்களுக்கும் அரசாங்கத்துக்குமான நெருக்கடியாக இதை நாம் மொழிபெயர்த்துக் கொள்ள வேண்டுமா?

அப்படியென்றால், இது இந்த அரசாங்கத்தை மேற்குலகம் அதிகம் விரும்பவில்லை என்று அர்த்தமாகுமா? அந்த அடிப்படையில்தான் இந்த நெருக்கடி இந்தத் தடவை – யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கொள்ளப்படுகிறதா? அந்த அடிப்படையில்தான் இந்த வியூகம் வகுக்கப்படுகிறதா? இந்த வியூகம் – இந்த நோக்கம் வெற்றியளிக்குமா?

அப்படியென்றால் ஆட்சி மாற்றத்தை வெளிச்சக்திகள் அதிகம் விரும்புகின்றனவா? அல்லது வேறு ஏதேனும் காரணமா?

அப்படியென்றால் அதற்குப் பின்? இன்னொரு ஆட்சி மாற்றமா? அது சாத்தியமா? சரி, சாத்தியப்பட்டாலும் அதற்குப் பிறகு தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டுவிடுமா?

அப்படியென்றால், நடந்த தேர்தல்கள், அதில் மக்கள் அளித்த தீர்ப்பு, நாட்டின் இறைமை, ஜனநாயக நெறிகள், இவற்றின் நிலையெல்லாவற்றின் கதி என்ன?

இதைத் தமிழரல்லாத இலங்கையின் பிற சமூகங்கள் எப்படிக் கொள்ளப் போகின்றன? குறிப்பாகச் சிங்கள மக்கள் இதை எப்படி எடுத்துக் கொள்ளுவர்? ஏற்கனவே இந்த விடயத்தில் சிங்கள மக்களின் பார்வையும் கருத்தும் வேறாகவே உள்ளது. அவர்கள் இதை இரண்டு விதமாக நோக்குகிறார்கள். ஒன்று நாட்டுக்கு எதிரான வெளிச்சக்திகளோடு தமிழர்கள் சேர்ந்து இயங்குகிறார்கள் என. முன்பு இந்தியாவுடன். இப்பொழுது மேற்குலகத்துடன் என்று. இரண்டாவது, தேவையற்ற விதத்தில் அந்நியத் தலையீடுகள் என்று. சிங்கள மக்களின் இந்த நோக்கானது எப்போதும் பகைமையையும் முரண்களையுமே தோற்றுவிக்கும். இடைவெளிகளை அதிகரிக்கும். இலங்கையின் எதிர்காலத்துக்கும் தமிழர்களின் எதிர்காலத்துக்கும் இது பொருத்தமானதும் அல்ல. நல்லதும் அல்ல.

ஏற்கனவே அவர்களுடைய மனதில் உள்ள ஐயப்பாடுகளே ஒருமைப்பாட்டுக்குத் தடையாக இருக்கிறது. இதே நிலைதான் தமிழ்த் தரப்பிடத்திலும் காணப்படுகிறது.

தமிழர்களுக்கும் இது ஒரு நெருக்கடியான பிரச்சினையே. அவர்கள் சிங்கள மக்களுடன் உறவைக் கொள்வதை விரும்புவது குறைவு. அப்படி விரும்புவோரையும் அவர்கள் எதிர்நிலையில் பார்க்கும் வழக்கமே உண்டு. இதில் ஒரு தீராக் குழப்பம் உண்டு. சிங்கள மக்களுடன் பேசுவதற்கு எந்தத்தமிழ்த் தலைமையும் இல்லை. அதில் அவர்களுக்கு ஆர்வமும் இல்லை. அதற்கான உறவு நிலைகளை உருவாக்குவதையிட்டு அவர்களுக்கு அக்கறையும் நம்பிக்கையும் இல்லை.

பதிலாக ஆட்சியாளர்களுடனும் (அது யார் ஆட்சியிலிருந்தாலும் அவர்களுடன்) அரசாங்கத்துடனும் அல்லது எதிர்க்கட்சியுடனும் பேசுவது மட்டுமே தமது அரசியல் என்று கருகிறார்கள். இந்த அணுகுமுறைக்கு வயது அறுபது. இது தோற்றுப்போன அணுகுமுறையும் கூட. அதிகாரத்திலிருப்போர் சிங்கள மக்களைச் சாட்டாக வைத்துக் கொண்டு ஆட்சித்தரப்பு எல்லாக் கோரிக்கைகளையும் தவிர்த்து விடுகிறார்கள். எந்த அதிகாரத் தரப்பும் இப்படித்தான் செயற்படும். தனக்கு வாய்ப்பான முறையில் பிரச்சினைகளைக் கையாளும். இதைத்தான் தமிழ்த்தரப்பும் விரும்புகிறது. அப்படிக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதை அரசின் கடும்போக்கு எனவும் சிங்களத் தரப்பிடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது என்றும் தமிழ் மக்களுக்குக் காட்டிக் கொள்ள முற்படுகிறது. ஆகவே பகைமையை தமக்கான அரசியல் முதலீடாக்குகின்றன இந்தத் தலைமைகள்.

இதையே இனவாதத்துக்குப் பலியாகும் அரசியல் என்கிறோம். இதுவும் பலருக்கும் தெரியும். புரியும்.

தமிழ் – சிங்கள அதிகாரத் தரப்புகளின் இத்தகைய அரசியல் அணுகுமுறை வெளிச்சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்குப் பெரும் வாய்ப்பைக் கொடுக்கிறது. பிரித்தாளும் தந்திரோபாயத்தைக் கையாளும் அந்தச் சக்திகளுக்கு இந்தப் பிளவுகள் அதிக உற்சாகத்தைக் கொடுக்கின்றன. தமது தலையீடுகளுக்கும் நெருக்கீடுகளுக்குமான சூழலை இந்தப் பிரிவினை தாராளமாக ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதுவும் பலருக்கும் தெரிந்தது. புரிந்ததே. ஆனால், இதற்கு மாற்றான நிலைமைகளை அவர்கள் உருவாக்க விரும்பவில்லை. அல்லது அதில் நாட்டக் குறைவாக உள்ளனர்.

இதனால் நாடு ஒட்டுமொத்தமாகவே பொருளாதாரத்திலும் அபிவிருத்தியிலும் அரசியல் நிலையிலும் கடுமையான நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகளான பிறகும் ஒருமைப்பாடு ஏற்படவில்லை. அபிவிருத்தியில் முன்னேற்றத்தைக் காணவில்லை. பொருளாதாரத்தில் நிறைவை எட்ட முடியவில்லை. அமைதிச் சூழல் உருவாகவில்லை. வெளிச்சக்திகளின் அழுத்தமும் நெருக்கடிகளும் குறையவில்லை. சுயாதீனத்தன்மை வளர்ச்சியடையவில்லை. இப்படிப் பல பிரச்சினைகளும் போதாமைகளுமே நாட்டில் நிறைந்துள்ளன.

அப்படியென்றால், பிரச்சினைகளை நாம் தீர்க்க முயற்சிக்காமல் அவற்றை வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்றுதானே அர்த்தம்.

உண்மையில் யுத்தம் முடிந்த பின்னர் பொறுப்புக்கூறலை மேற்கொண்டிருக்க வேண்டும். அது நாட்டுக்கு மிகத் தேவையான அடிப்படைகளில் ஒன்று. அதைச் செய்ய முற்பட்டிருந்தால் இலங்கைச் சமூகங்களின் உளவியலே வேறுவிதமாக உருவாகியிருக்கும். இன்றுள்ள நெருக்கடிகளில் பலவும் இல்லாது போயிருக்கும். வளர்ச்சி அபரிதமான வேகத்தில் எட்டப்பட்டிருக்கும். அல்லது நிகழ்ந்து கொண்டிருக்கும். பிளவு நிலை தணிந்து சேர்ந்தியங்கும் – சேர்ந்து நெருக்கடிகளை எதிர்கொள்ளும் மனநிலையும் சமூக உறவும் ஏற்பட்டிருக்கும். ஆனால், இதொன்றும் நடக்கவில்லை. இப்பொழுது கூடக் காலம் பிந்தவில்லை. பிறர் தயவிற்கு அவர்களுடைய காலடியில் கிடப்பதை விடவும் பிறரையிட்டு அச்சமடைந்து கொண்டிருப்பதை விடவும் நமக்கிடையில் கைகளைக் குலுக்குவதிலும் மனங்களைக் கோர்ப்பதிலும் என்ன குறைந்து விடப்போகிறது? எதற்காகத் தயக்கம் கொள்ள வேண்டும்? நாம் ஒருவரிடம் ஒருவர் தோற்கிறோம் என்றோ ஒருவரை ஒருவர் வெற்றி கொண்டதாக ஆகி விடும் என்றோ தேவையற்ற அச்சத்துக்கும் குழப்பத்திற்குள்ளும் உள்ளாக வேண்டியதில்லையே.

இலங்கை இப்பொழுது இந்தியா – சீனா – மேற்குலகம் என்ற மூன்று பெரும் சக்திகளின் இழுவிசையில் சிக்குண்டுள்ளது. இதுவும் அனைவரும் அறிந்ததே. இந்த இழுவிசை பேரரசுகளுடைய நலனின் பாற்பட்டதே. இதுவும் நாமறிந்ததே. இந்த விசைக்கு ஏற்ப இசைந்து கொடுக்கவில்லை என்றால், அந்த அதிருப்தியை இவை தமக்கு வாய்ப்பான முறையில் வெளிப்படுத்திக் காட்டும், அப்படிக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

சீனா கடன் பொறியை வைத்து இதைக் கையாள முற்படுகிறது. மேற்குலகமோ, நடந்த யுத்தத்தை – அதில் நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை வைத்து மனித உரிமை மீறல் மற்றும் ஜனநாயக நெருக்கடி என்ற பொறியின் வழியாக இலங்கையை மடக்கப் பார்க்கிறது. இந்தியா பொருளாதார உதவி, பிராந்திய சக்தி, அயல்நாடு, பாரம்பரிய கலாச்சார உறவு என்பவற்றின் வழியாக இலங்கையைத் தன் வசப்படுத்துவதற்கு முயற்சிக்கிறது. ஆக மொத்தத்தில் இந்த வல்லரசுகள் தமக்கு வாய்ப்பான வழிகளில் பொறிகளை உருவாக்கி வைத்திருக்கின்றன.

இலங்கையோ இந்த மூன்று இழுவிசைக்குள்ளும் அல்லது பொறிக்குள் சிக்கிவிடாமலிருக்கவே பார்க்கிறது. அதற்கேற்ற விதமாகவே ஆயிரம் சுழிப்புகளை தந்திரோபாய ரீதியில் அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. ஆனாலும் இதற்கு ஒரு எல்லை உண்டு. ஏனென்றால், உள்நாட்டு நெருக்கடிகளுக்கும் சமூகப் பிளவுகளுக்கும் தீர்வு காணப்பட்டு, பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படாமல் மேற்படி நெருக்கடியைத் தணிக்கவும் முடியாது. இந்த நெருக்கடிகளுக்குத் தப்பவும் முடியாது. அதோடு ஜனநாயகத்தை வலுவூட்டம் செய்யவும் முடியாது. கதவுகளைச் சாத்திக் கொண்டு உள்ளே தொடர்ந்து சௌகரியமாக இருந்து விடவே இயலாது.

உள் நாட்டு நெருக்கடிகளைத் தீர்த்தால் இதில் பாதி நெருக்கடி குறைந்து விடும். குறிப்பாக இலங்கைச் சமூகங்களை யதார்த்தமாக ஒருங்கிணைப்பதற்கான நேர்மையான வேலைத்திட்டத்தை நாம் விசுவாசமாக முன்னெடுத்தால் வெளிச்சக்திகளின் பிரித்தாளும் தந்திரம் தோற்றுப் போய் விடும். அல்லது அந்தத் தந்திரத்துக்கு நெருக்கடி உண்டாகும். கூடவே வருகின்ற நெருக்கடியை அனைவரும் ஒன்றாக நின்று எதிர்கொள்ளக் கூடிய சூழலும் உருவாகி விடும். அத்துடன் பொருளதாரத் துறையில் ஒருங்கிணைந்த பங்களிப்பும் நிகழும். பிறர் மூக்கை நுளைக்கும் எல்லைகள் மட்டுப்படுத்தப்படும். இப்படிப் பல நன்மைகள் கிட்டும்.

இதனால்தான் ஊர் இரண்டு படக் கூடாது என்பார்கள். ஆனால், இலங்கையோ பத்துப் பன்னிரண்டாக அல்லவா பிளவுண்டு கிடக்கிறது. இது இந்தச் சின்னஞ்சிறிய தீவுக்கு – நாட்டுக்கு – மிக ஆபத்தானதன்றி வேறெப்படி இருக்கும்?

இதைக்குறித்து தெளிவாக எச்சரிப்போர் உண்டு. உண்மையில் அவர்களே தீர்க்கதரிசிகள். நாட்டை மெய்யாகவே நேசிப்பவர்கள். பிரச்சினைகளை அவற்றின் ஆன்மாவில் புரிந்து கொண்டவர்கள். ஆனால், அவர்களுடைய குரல் கவனிக்கப்படுவதில்லை. அது தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகிறது. அந்த புறக்கணிப்பின் விளைவே இன்று வரையான இழப்புகள், அழிவுகள், நெருக்கடிகள், பின்னடைவுகள், வெளி அழுத்தங்கள், தலையீடுகள் போன்றன எல்லாம்.

பலரும் நினைத்த விசயம் ஒன்றுண்டு. யுத்தம் முடிந்தால் நாடு இயல்பாக வளர்ச்சியடைந்து விடும் என்று. யுத்தத்துக்குச் செலவழிக்கின்ற பெருமளவு நிதி பொது மக்களின் வாழ்க்கைக்கும் நாட்டின் அபிவிருத்தி மற்றும் உள்ளகக் கட்டமைப்பு விருத்திக்குமாகப் பயன்படும் என. அதாவது பாதுகாப்புச் செலவீனம் குறைக்கப்பட்டு அபிவிருத்திக்கு அந்த நிதி பயன்படுத்தப்படும் என. நிதியோடு பிற வளங்களும்தான். மனித வளம் உட்பட.

ஆனால், நாம் ஒன்று நினைக்க யாரோ வேறு எதையோ நினைத்தார்கள் என்பதைப்போல எதிர்பார்ப்புகளுக்கு மறுவளமாகவே பிரச்சினைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. பிரச்சினைகளை மடியிலும் மண்டைக்குள்ளும் வைத்துக் கொண்டு எந்த நாடும் உருப்பட முடியாது. எந்த மக்களும் வாழவியலாது.

இலங்கைக்கான நெருக்கடி என்பது பிட்டுக்கு மண்சுமந்த சிவனின் முதுகில் விழுந்த அடியைப்போன்றதே. அது எல்லோரின் முதுகிலும் விழும் அடியே.

பொறுப்புக் கூறத் தயங்கியதன் விளைவு கூட்டுத் தண்டனையாகிறது. சர்வதேச நீதி என்பது சர்வதேசப் பொறியாகுமோ?

# இருத்தலுக்கான இறுதி விளிம்பில் ஜெனீவா களம்!

"தர்மம் உலகிலே நிலைக்கும் வரையிலே நாளை நமதே" சினிமாப் பாடலோடுதான் எமது நாட்டின் இன்றைய நிலைமைகளை நோக்க நேரிடுகிறது. யுத்தம் முடிந்த பத்து வருடங்களாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளை அதிக அக்கறையுடன் பார்க்கும் நாடாகத் தான் இலங்கையும் மாறியிருக்கிறது. அதிகாரப் பகிர்வை வேண்டிநின்ற ஒரு சமூகத்துக்கு அநீதியிழைக்கப்பட்டதாகக் கருதப்படுவதும், ஆதிக்க ஒடுக்குமுறைகள் சிறுபான்மையினரின் குடியுரிமையைக் குறிவைக்கும் என்ற அச்சமும்தான் இலங்கை அரசியலை சர்வதேசத்தில் இழுபறிக்கு உள்ளாக்கி உள்ளது. உடன்பட்டிருந்தால் பிரச்சினையை உள்நாட்டில் தீர்த்திருக்கலாம், ஊர்தாண்டிச் சென்றுவிட்டதே!. இந்தக் கவலை, ஆட்சியாளர்களுக்கும் இருக்கவே செய்கிறது. இல்லாவிட்டால், இத்தனை ஏற்பாடுகளையும் செய்யுமா இந்த அரசு?

ஒரு வகையில், இப்போது இந்தப் பிரச்சினை வேறு வடிவில் செல்வதையே காணத் தோன்றுகிறது. போர்க் குற்றங்களுக்காக அரசைத் தண்டித்தால் போதுமென்ற பாணியில்தான் ஜெனீவாக் களமும் நகர்கிறது. இருதரப்பும் இதற்காக முன்வைக்கும் சாட்சியங்கள், விவாதங்கள் மற்றும் தர்க்கிப்புக்களால், ஜெனீவாக் களம் களைப்படைந்து காணப்படுகிறது. இதில், சர்வதேச ஆதரவைத் தக்க வைத்துக்கொள்ள முடிந்தாலும் அல்லது முடியுமென அரசு நம்பினாலும், ஐரோப்பாவில் இலங்கை அரசுக்குள்ள பலம், பலவீனமாகவே உள்ளது. இத்தனைக்கும் மனித உரிமைப் பேரவையிலுள்ள 47 உறுப்பு நாடுகளில், வெறும் 13 தான் மேலைத்தேய நாடுகள். இவற்றை, வைத்துக் கொண்டுதானா சிறுபான்மைத் தரப்பு போரியல் அழிவுக்கான நீதியை எதிர்பார்ப்பது என்றும் சிலர் சிந்திக்கின்றனர்.

இதுவல்ல விடயம், இங்குள்ள ஏனைய ஆசிய, பசுபிக், ஆபிரிக்க மற்றும் தென்னமெரிக்க நாடுகளில் சில, ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கிற்கு உட்படலாமென்ற எதிர்பார்ப்புக்களே, தமிழர் தரப்புக்குள்ள நம்பிக்கை. ஆனால், வாக்களிப்பில் நிச்சயம் தத்தமது தேவைகள் செல்வாக்குச் செலுத்தாமல் விடப்போவதில்லை. "அயல் நாடுகளின் உறவுகளுக்கே முன்னுரிமையளித்து இந்தியா செயற்படும்" என அறிவிக்கப்பட்டதிலிருந்து இதைப் புரிந்துகொள்ளலாம்.

இலங்கைக்கு எதிரான பிரேரணைகளை கொண்டு வருவதில் பிரித்தானியா, கனடா, ஜேர்மன், மொண்டிநிக்ரோ, மாலாவி மற்றும் மசிடோனியா ஆகியன செலுத்தும் அக்கறைக்கு இன்னுமொரு அர்த்தமும் உள்ளதாகத்தான் தோன்றுகிறது. மியன்மாரில் ஆட்சியைக் கவிழ்த்து அராஜகம் செய்யும் இராணுவ ஜூண்டாக்களை, எதிர்காலத்தில் தண்டிப்பதற்கான முன்னுதாரணத்தையே இந்நாடுகள் காட்டுகின்றன. இந்த வாக்கெடுப்பில் ஒரு நாட்டைத் தண்டித்து ஏனையோரை எச்சரிக்கும் பாணியும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஜனநாயக நாடுகள் மட்டுமல்ல, மக்களின் குடியுரிமைக் கோட்பாடுகளை மதிக்கும் சகல நாடுகளும் வாக்கெடுப்பில் (22) இலங்கையைத் தோற்கடிக்க வேண்டுமென்கின்றன இந்த இணையனுசரணை நாடுகள். இதில், தோற்பது பற்றி இலங்கை அரசுக்குப் பொருட்டில்லை. போரின் மௌனத்துக்குப் பின்னர் 2012, 2013, 2014ஆம் ஆண்டுகளிலும் அரசாங்கம் இதில் தோற்றதுதானே. ஐ.நா பாதுகாப்புச் சபைக்குப் பிரேரணை வந்தால் சீனா காப்பாற்றும், "ரோம்" உடன்படிக்கையில் கைச்சாத்திடாத எம்மை, சர்வதேச



குற்றவியல் நீதிமன்றத்தில் (ஹேக்) நிறுத்த முடியாது என்ற போக்கில் பயணிக்கிறது இலங்கை அரசு.

எனினும், ஒன்று மட்டும் உண்மை. மனித உரிமைகள் அமர்வில் இலங்கை தோற்பது, தமிழர்களின் அரசியல் போக்கில் வேறு தடத்தைப் பதித்து, எதிர்கால அணுகுமுறைகளுக்கு வலுச் சேர்க்கும். மாறாக இலங்கையின் வெற்றி, ஒற்றையாட்சிக் குறிக்கோளுக்கு பலம் சேர்த்து, தமிழ் பேசுவோரின் தாயகம் என்ற பூர்வீகத்தையும் பதம் பார்க்கலாம். விரைவில் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலில், கிழக்கில் இது ஊர்ஜிதப்படுத்தப்பட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை. இதற்காகத்தான், தமிழர் தரப்பு நியாயங்கள் வெல்வதற்கு ஐரோப்பா கடுமையாக உழைக்கிறது. இப்படி உழைக்க ஐரோப்பாவுக்கு என்ன தேவை? தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள்தான் உழைக்க வைக்கின்றன என்கிறது அரசாங்கம்.

நாடில்லாவிட்டாலும் தமிழர்கள், நாதியற்றுப் போகவில்லை என்பதைக் காட்டும் களப்பணிகள் இதுவரைக்கும் தமிழர்களுக்கு கைகொடுத்துத்தான் வருகின்றன. இதற்காகத்தான் "ஷீரோ ட்ராப்ற்" சாட்சியங்களைப் பதிவதற்கான குழுவும் நியமிக்கப்படவுள்ளது. பத்துப் பேருடைய இந்தக் குழு, இலங்கையில் இடம்பெற்றதாக நம்பப்படும் போர்க் குற்றங்களுக்கான சாட்சியங்கள், ஆதாரங்களைத் தேடி, திரட்டி ஆவணப்படுத்தவுள்ளது. இந்தக் குழுவின் பணிக்கென இரண்டு மில்லியன் அமெரிக்க டொலரை அவுஸ்திரேலியா வழங்கவுமுள்ளது.

சரணடைந்தோரைக் கொலை செய்தல், பழிவாங்கல் கொலை மற்றும் பாலியல் கொலைகள் உள்ளிட்ட போர்க் களத்தில் நடந்தவை திரட்டப்பட்டு நீதிக்கு முன், பழிவாங்கல் கொலைகளும் பாலியல் கொலைகளும் போர்க் குற்றங்களிலும் கடின குற்றங்களாகவே மனித உரிமைப் பேரவையால் நோக்கப்படுகிறது. இன அழிப்புச் சான்றுக்காக தேடப்படுபவை இவைதான். எனினும் மனிதாபிமானத்துக்கான இறுதி யுத்தத்தில், இவை எதுவும் நடக்கவில்லை என்கிறது இலங்கை.

இந்நிலையில், இவற்றை எப்போது திரட்டி, எந்த அமர்வில் வழங்குவதென்ற கால எல்லை குறிப்பிடப்படாததால், தமிழ் தரப்பில் சிலர், இதை பொருட்டாகவே கொள்ளாது காலங்கடத்தி திசை திருப்பும் செயல் என்கின்றனர்.

அதேநேரம், ஒருதரப்பை மாத்திரமே கண் வைத்து கற்பனைக் காரணங்கள் புனையப்படுவதாகக் கூறும் இலங்கை அரசும், குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிராகரித்துள்ளது.

எனவே பொறுத்திருப்பதே பொருத்தமானது. "நடக்குமென்பார் நடக்காது, நடக்காதென்பார் நடந்து விடும்"

சுஐப் எம்.காசிம்...

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

சார்வரி வருடம் பங்குனி மாதம் 08ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 07

# மத அரசியலை கடந்து சென்றாலே சுபீட்சம்

மதம் அபினுக்கு ஒப்பானது என்று அறிஞர் கார்ல் மாக்ஸ் கூறியது குறித்து பல்வேறு வியாக்கியானங்கள் இருப்பினும் அக் கூற்றின் அடிப்படையான அம்சத்தில் மாற்றம் இல்லை. போதையைப் போலவே அளவுக்கு அதிகமானால் அது பேதலிப்பைத் தரும்; சிந்தனைத் தடுமாற்றத்தையும் ஆத்திரத்தையும் உருவாக்கும் என்ற கருத்து அவரது கூற்றுக்குப் பின்னர் பல தடவைகள் மெய்பிக்கப்பட்டிருப்பதால்தான் இன்றளவும் மாக்ஸின் மேற்கோள் சாகாவரம் பெற்றதாக விளங்குகிறது. மதத்தை முன்னிலைப்படுத்திய நாடுகள் பின்னர் பாரிய பிரச்சினைகளையும், பொருளாதார சீர்கேடுகளையும் சந்தித்திருப்பதையும் நாம் காணலாம். எனினும் அரசியலில் மதம் பயன்படுத்தப்படும் போது அதைப் பயன்படுத்தும் நபர், கட்சி, குழுவினர் அல்லது அரசுக்கு உடனடியாக எதிர்பார்க்கப்பட்ட பலன்களைத் தருகிறது. நீண்டகால பாவனை எதிர்மறையான பலன்களையும் விபரீதங்களையும் விளைவிக்கும் என்பது தெரிந்து தெரிந்தே உலகின் சில நாடுகளில் மத அரசியல் எதிர்ப்புகளை ஒடுக்கும் ஒரு வழிமுறையாகவும், சிலசமயம் வெறித்தனமாகவும், பெரும்பாலான மக்களைத் தமது செல்வாக்கின் கீழ் வைத்துக் கொள்ளவும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இலங்கை தற்போது பெரும் பொருளாதார பின்னடைவை சந்தித்துக் கொண்டிருக்கிறது. கொவிட19 இப் பின்னடைவுக்கு ஒரு சமீபத்திய காரணமாக இருந்தாலும் கூட, கடந்த எழுபது ஆண்டுகளாக இந்நாடு பின் நோக்கி நகர்த்தப்பட்டு வந்திருப்பதே இன்றைய பொருளாதார பிரச்சினைகளுக்கான மூலகாரணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எம்மை ஆண்ட அரசுகள் நீண்ட கால திட்டமிடல்கள் ஊடாக இந்நாட்டை முன்நோக்கி நகர்த்துவதற்கு பதிலாக, பொருளாதார வளர்ச்சிக்கு எவை எவை குந்தகமாக அமையக் கூடுமோ அவற்றை எல்லாம் தூக்கிப் பிடித்து முன்னுரிமை அளித்து வந்திருப்பதால் தொடர்ச்சியாக எமது வளர்ச்சிபாதிக்கப்பட்டு வந்திருக்கிறது.

ஒரு மாற்றுப் பொருளாதாரக் கொள்கையை முன்வைத்து இந்நாட்டை சிங்கப்பூராக்குவதாக கூறிய முன்னாள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஜே.ஆர். ஜயவர்தன, துரித மகாவலி திட்டத்தை கொண்டு வந்ததோடு, தீர்வையற்ற பொருளாதார வலையம், திறந்தபொருளாதாரக் கொள்கை என்பனவற்றையும் ஏற்படுத்தியதோடு புதிய அரசியலமைப்பு சட்டத்தையும் உருவாக்கினார். பொருளாதார விடுதலைக்கான வழி கிடைத்து விட்டதாக மக்கள் நம்பவும் செய்தனர். இவற்றுக்கு மத்தியில் அவர் வழமையான மூன்றாந்தர அரசியலையும் பயன்படுத்தினார். அவர் பதவியேற்ற சில மாதங்களிலேயே இனக்கலவரம் அடுத்தடுத்து மூண்டது. தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் வட்டமேசை மாநாட்டை நடத்துவேன் என அவர் அளித்திருந்த தேர்தல் வாக்குறுதி காற்றில் விடப்பட்டது.

அவர் ஆட்சி காலத்தில் சிறு பொறியாக மட்டுமே விளங்கிய வடக்கு – கிழக்கு ஆயுத தீவிரவாதம், 83 கலவரத்தின் பின்னர், அசுர வளர்ச்சி பெற்றமை வாசகர்கள் அறிந்ததே. அரசியல் சாணக்கியம் மிக்கவராக இன்றளவும் கருதப்படும் ஜே.ஆர். ஜயவர்தன, தனது அரசியல் வெற்றிகளுக்காகவும் பௌத்த சிங்கள மக்களை தனது பிடியில் வைத்துக் கொள்ளவும் இனவாத அரசியலில் தஞ்சமடைந்தார். இதன் காரணமாக அவரது சிங்கப்பூர் கனவு சிதைந்தது. முன்நோக்கிய பொருளாதாரப் பயணம் நிச்சயம் எனக் கருதப்பட்ட சமயத்தில் அவரது இனவாத மற்றும் மதவாத அரசியலால் நாடு பின்நோக்கி நகரத் தொடங்கியது. இந்தியா எமது மறைமுக பகை நாடானது. ஆயுத குழுக்களின் படிமுறை வளர்ச்சி இறுதியில் உள்நாட்டு யுத்தமாக உருவெடுத்தது. ஜே.ஆரின் மற்றொரு தவறான காய் நகர்த்தல், ஜனநாயக வழிமுறைக்கு வந்திருந்த ஜே.வி.யினரை ஆயுத கலாசாரத்துக்கு இட்டுச் சென்றது.

ஜே.ஆர். ஜயவர்தன உண்மையாகவே சிங்கப்பூரின் லீ க்வாள் யூவை பின்பற்றுபவராக இருந்திருப்பின், இலங்கையின் முக்கிய பிரச்சினைகளாக விளங்கிய நாடற்றோர் பிரச்சினைக்கு சுமுக தீர்வொன்றை கண்டிருக்கவேண்டும். இந்திய அரசு இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு நாடற்றோர் விவகாரம் காரணமாக இருந்தது.

எனினும் இந்திய வம்சாவளித் தமிழர் பிரச்சினையானது ஜே.ஆர். ஆட்சியின் இறுதிப் பருவத்திலேயே முடிவுக்கு வந்தது. 77, 81, 83 இனக் கலவரங்கள் நடைபெறாமல் செய்து முளையிலேயே கிள்ளப்பட்டிருக்குமானால், உள்நாட்டு யுத்தமொன்று மூண்டிருக்காது.

ஜே.ஆர். ஜயவர்தனவை மட்டும் இங்கே குறை சொல்லமுடியாது. 1948 முதல் இந்நாட்டை தொடர்ச்சியாக ஆண்டு வந்திருக்கக் கூடிய சகல அரசுகளும் தமது அரசியல் இலாபங்களுக்காக மக்களை தவறாக வழி நடத்தியே வந்திருக்கின்றன. இன வாதத்தோடு மதவாதம் இணக்கமாகப் பயணிக்கக்கூடிய கூட்டாளி என்ற வகையில் இரண்டுமே சிங்கள – தமிழ்த் தலைவர்களினால் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதால் அவை உருவாக்கிய நீண்ட கால பின்விளைவுகளை நாமும் எமது இளைய சந்ததியினரும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

யுத்தம் முடியும் வரை தமிழர்மீதிருந்த வெறுப்புணர்வும், வெறுப்பூட்டும் பேச்சுகளும் சமீப காலமாக முஸ்லிம் சமூகத்தின்பால் திருப்பப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. ஏப்ரல் 21 கத்தோலிக்க, கிறிஸ்தவர்களின் மீதான தாக்குதல்கள் முஸ்லிம் சமூகம் தொடுத்த தாக்குதல் அல்ல. இதை அறிந்த தமிழ் கிறிஸ்தவர்கள் இஸ்லாமிய சமூகத்தின் மீது வெறுப்பை உமிழவில்லை. கிறிஸ்தவர்கள் முன்மாதிரியாக நடந்து கொண்டதை நாம் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். இந்த சகிப்புத்தன்மையை அரசுகள் முன்னர் இருந்தே இலங்கை சமூகத்தின் மத்தியில் பாடசாலைக் கல்வியூடாக வளர்த்திருக்க வேண்டும்.

தற்போது இஸ்லாமியருக்கு எதிரான மனப்பான்மை மேலும் வளர விடாது முறையிலேயே கிள்ளி எறியப்படாது விட்டால் அது மற்றொரு வெறுப்புணர்வையும் இனக் குரோதத்தையும் வளர்க்க மட்டுமே உதவும், சிங்கள சமூகத்தை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக தமிழர்களுக்கு எதிரான மனப்பான்மைகளை வளர்த்ததால் நாட்டுக்கோ அல்லது சிங்கள சமூகத்துக்கோ எந்த நன்மையும் கிட்டியதாக இல்லை. நாடு பின்னடைந்ததும் பொருளாதாரம் வளர்ச்சி குன்றியதும் மட்டுமின்றி சர்வதேச ரீதியான சிக்கல்களுக்கும் முகம் கொடுக்க தள்ளப்பட்டிருப்பதுமே கிட்டிய பலன்கள். தற்போது முஸ்லிம் சமூகத்தின் மீது வெறுப்புணர்வை விதைத்து, ஒரு மூலையை நோக்கி அவர் கண் தள்ளப்படுவதும் நிச்சயம் நாட்டின் எதிர்கால நன்மைகளுக்கும் வளர்ச்சிக்கும் உதவப்போவதில்லை.

வளர்ச்சி கண்டுவரும் நாடான இலங்கை இனவாத மற்றும் மதவாத அரசியலில் இருந்து மீண்டுவருவது மிகவும் முக்கியம். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் காணப்படும் இலங்கைக்கு எதிரான நிலைப்பாடாகட்டும் அல்லது பொருளாதார பின்னடைவாகட்டும், நாம் ஒரு நாடாக இணைந்து நிற்காவிட்டால் சவால்களை எதிர்கொண்டு வெற்றியீட்ட முடியாது. சிங்கள சமூகத்துக்கு முஸ்லிம் சமூகத்தின் மீது சந்தேகமும் ஐயப்பாடும் இருக்குமானால் அவற்றை நான்கு சுவர்களுக்குள் பொத்தி வைக்காமல் பகிரங்கமாக பேசப்படும் விஷயமாக முன் நிறுத்துவதே முக்கியமானது. சிங்கள, தமிழ் முஸ்லிம் எனவும் இந்து, பௌத்தம், இஸ்லாம், கத்தோலிக்க – கிறிஸ்தவம் எனவும் இந்த நாடு இன மத வாதங்களாக பிளந்து கிடந்தால் எந்தவொரு கொம்பனாலும் இந்நாட்டை கட்டியெழுப்புவது சாத்தியமாகாது. எந்தவொரு நாட்டிலும் இவ்வாறு சாத்தியப்பட்டதும் இல்லை.

இது, இந்துவாகவோ பௌத்தனாகவோ அல்லது தமிழனாகவோ, சிங்களவராகவோ உயர்ந்து நிற்பதற்கான காலம் அல்ல. மனிதனாக மட்டும் உயர்ந்து நிற்க வேண்டிய காலம். அது நிகழ்ந்தால் மட்டுமே நாடும் நிமிர்ந்து நிற்கும். இன, மத வாதத்தை கடந்து நின்றால் மட்டுமே சுபீட்சம் வசப்படும்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# ஜெனீவா விடயத்தில் முட்டி மோதும் தமிழ்க் கட்சிகள்!



**இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக இலங்கை மீது குற்றஞ் சுமத்தி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் மற்றுமொரு பிரேரணையை நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், இலங்கை இவ்விடயத்தில் இப்போது பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது.**





## இலங்கை தொடர்பான பிரேரணை மீது நாளை இறுதி வாக்கெடுப்பு

இலங்கை குறித்த பிரேரணை வரைபு முன்வைக்கப்பட்டிருப்பதுடன், இது குறித்த இறுதி வாக்கெடுப்பு நாளை அதாவது மார்ச் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளது. கொவிட்19 உலகப் பெருந்தொற்று காரணமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத் தொடர் நிகழ்நிலையில் இடம்பெற்று வருகிறது.

இக்கூட்டத் தொடர் ஆரம்பத்தின் போது இலங்கை மீது பாரிய குற்றச்சாட்டுக்களை சுமத்தி ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் தனது அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். இந்த அறிக்கையில் பொறுப்புக் கூற வேண்டியவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதுடன், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்றளவுக்கு அவருடைய அறிக்கை கடுமையானதாக அமைந்திருந்தது.

இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்றைக் கொண்டு வருவதற்கு பிரித்தானியா, கனடா, ஜேர்மன், வட மக்கடோனியா, மலாவி மற்றும் மொன்டோனீகுரோ ஆகிய நாடுகள் நடவடிக்கை எடுத்திருந்தன. இந்நாடுகளின் முயற்சியுடன் பிரேரணை தொடர்பான பூச்சிய வரைபு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் குறித்த யோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நாளையதினம் பிரேரணை மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவிருக்கும் பிரேரணைக்கு 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவை வழங்கும் என்றும், பத்திலும் குறைவான நாடுகளே இலங்கைக்கு ஆதரவாக அதாவது பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் எனவும் கூறப்படுகிறது. இலங்கை அரசாங்கம் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன முற்றாக மறுத்துள்ளார்.

நிகழ்நிலையாகக் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த அவர், 'இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படும் பரிந்துரைகள் மற்றும் முடிவுகள் தொடர்பாக வெளிவந்த பாதையானது, இலங்கைக்கு எதிராக இடைவிடாமல் தொடர்ந்த முன்கூட்டிய, அரசியல்மயப்படுத்தப்பட்ட மற்றும் பாரபட்சமற்ற சில கூறுகளின் நிகழ்ச்சி நிரலைப் பிரதிபலிக்கின்றது. இந்தப் பரிந்துரைகள் தவறான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அமைந்தவை. உயர் ஸ்தானிகரின் அறிக்கையில் உள்ள முடிவுகளையும் பரிந்துரைகளையும் இலங்கை திட்டவட்டமாக நிராகரிக்கின்றது' எனக் குறிப்பிட்டிருந்தார்.

“முப்பது ஆண்டுகளாக வெளியிடப்படாத மற்றும் அவற்றுள் சில உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் தக்கவைக்கப்பட்டு, அணுகுவதற்கு மறுக்கப்பட்டிருந்த ஆதாரங்களின் அடிப்படையில், குறிப்பாக ஐ.நா மற்றும் அதன் பொறிமுறைகளுடன் தொடர்ச்சியாகவும் ஆக்கபூர்வமாகவும் ஈடுபட்டு வரும் இலங்கை போன்ற ஒரு நாடு தொடர்பாக, சொத்து முடக்கம், பயணத் தடைகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைப் பற்றிய குறிப்புக்கள் மற்றும் தனிப்பட்ட அரசுகள் உலகளாவிய அதிகார வரம்பைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கான அழைப்பானது, சர்வதேச சமூகம் ஒட்டுமொத்தமாகக் கவனிக்க வேண்டிய ஒரு தனித்துவமான மற்றும் சிறந்த ஆபத்தை சுட்டிக் காட்டுகின்றது.



சில நாடுகளின் இத்தகைய ஒருதலைப்பட்ச நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ள முடியாதவையும் மற்றும் இயற்கை நீதியின் கொள்கைகளை மீறுவதுமாகும். அரசியல் உந்துதல்களால் உந்தப்பட்டு, இந்த சபையால் இலங்கை மீது செலுத்தப்பட்டுள்ள கவனத்திற்காக நாங்கள் வருந்துகின்றோம். இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு தீர்மானமும் சபையால் நிராகரிக்கப்பட்டு மூடப்பட வேண்டும் என இலங்கை இந்த சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது” எனவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்படக் கூடிய பிரேரணையை முறியடிப்பதற்கு நாடுகளின் ஒத்துழைப்புகளைக் கோரிய சந்திப்புக்கள் கடந்த சில வாரங்களாக கொழும்பிலும், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர்களின் ஊடாகவும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கிடையில் இலங்கை தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள பிரேரணை வரைபு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் கடுமையானதாக அமையவில்லை. எதிர்பார்ப்புக்களை நீர்த்துப் போகச் செய்யும் விதத்தில் அமைந்துள்ளது என புலம்பெயர்ந்துவாழ் தமிழ் அமைப்புக்களும், தமிழர் தரப்பிலுள்ள சில அரசியல் பிரதிநிதிகளும் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தக் கூடியளவுக்கு பிரேரணையொன்று நிறைவேற்றப்படும் என சில புலம்பெயர் அமைப்புக்கள் எதிர்பார்த்திருந்த போதும், தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை வரைபு அவர்கள் அனைவரையும் ஏமாற்றத்துக்குள் தள்ளியுள்ளது.

இந்தப் பிரேரணையினால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் முற்றுமுழுதாகத் தீர்க்கப்பட்டு விடாது என அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் உள்ளிட்ட அரசியல்வாதிகள் சிலர் விமர்சித்துள்ளனர். இந்த நிலைமைக்கு அவர்கள் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டத் தொடங்கியும் உள்ளனர்.

மக்கள் சர்வதேசத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் சூழ்நிலையில், அதனை சீர்குலைக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துகளை முன்வைத்து வருவதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டு அவருடைய வழமையான தனிப்பட்ட எதிர்ப்பு அரசியலின் வெளிப்பாடு என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதமும், செப்டெம்பர் மாதமும் சர்வதேசத்தின் பக்கம் மக்களை திசைதிருப்பி தமது அரசியல் இருப்புகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் சில அரசியல் தலைவர்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு யதார்த்தமான தீர்வுகளைக் காண்பதை விடுத்து வெறுமனே அவர்களை உருவேற்றும் அரசியல் செய்து வருகின்றனர்.

இது போலவே புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புக்கள் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் முதலீடு செய்வதை விடுத்து சர்வதேச நாடுகளின் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக தமது பணத்தை செலவு செய்து கொண்டிருக்கின்றன. அவர்கள் எவ்வாறான அழுத்தங்களைக் கொடுத்தாலும் ஒவ்வொரு நாடும் தமது சொந்த நலத்தை அடிப்படையாகக் கொண்டே இலங்கை விடயத்தை கையாளும் என்பது உண்மை. ஒருசில தரப்பினருக்காக இலங்கையை இராஜதந்திர ரீதியாகப் பகைத்துக் கொள்வதற்கு எந்த நாடும் விரும்பப் போவதில்லை.

அதேநேரம், இலங்கையின் பூகோள அமைவிடத்தினால் காணப்படும் அரசியல் முக்கியத்துவம் காரணமாக சில மேலைத்தேய நாடுகள் எமது நாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றன. இலங்கை மீதும் இங்குள்ள பாதிக்கப்பட்ட மக்கள் மீதும் அக்கறை இருப்பதாக அந்நாடுகள் நீலிக்கண்ணீர் வடிக்கின்றன. உண்மையில் இலங்கையில் உள்ள மக்கள் மீது அக்கறை இருந்திருந்தால் உரிய அழுத்தத்தை அரசுக்குக் கொடுத்து பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்க முடியும்.

குறிப்பாக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அரசுக்கு காலஅவகாசத்தை வழங்காது நெருக்குதல் ஒன்றைக் கொடுத்து பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையை பரிசீலித்திருக்க முடியும். எனினும், அவ்வாறு செய்யால் விட்டு விட்டு தற்பொழுது தமக்கு சாதகமில்லாத அரசாங்கமொன்று இலங்கையில் வந்திருப்பதால், 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் எடுத்த நிலைப்பாட்டை மீண்டும் எடுக்கத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை வரைபானது உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களின் விமோசனத்துக்காக கொண்டு வரப்படும் பிரேரணை இல்லை. மாறாக இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் முயற்சி என்பது தெளிவாகப் புலனாகிறது.

எனவே ஜெனீவா விவகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு மக்களை சாத்தியப்பாடற்ற இலக்குகளை நோக்கி திசைதிருப்புவதை விடுத்து சாத்தியப்பாடான விடயங்கள் மீது கவனம் செலுத்துவதில் தமிழ் தரப்புக்கள் முயற்சிக்க வேண்டும் என்பதுதான் பொதுவான கருத்தாகும்.

**பி.ஹர்ஷன்...**

## பரபரப்பான இறுதிக் கட்டத்தில் மனித உரிமைகள் விவகாரம்!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

# இலங்கை மீது இந்தியாவின் புதிய கரிசனை!



**இந்து சமுத்திர பிராந்தியத்தில் பலம், செல்வாக்கு மிக்க நாடாக எமது அயல் நாடான இந்தியா காணப்படுகிறது. பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் உட்கட்டுமானம் உள்ளிட்ட பல துறைகளில் இந்தியாவின் பலம் இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் சக்தி மிக்கதாகவே விளங்குகிறது.**

பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் எல்லைப் பிரச்சினை காணப்பட்டாலும், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சிறப்பு வாய்ந்தது. எல்லைப் பிரச்சினைகள் அவ்வப்போது தீவிரமடைந்தாலும், யுத்தத்தை தவிர்த்து தனது இராஜதந்திர ரீதியான அணுகுமுறைகளின் ஊடாக அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இந்தியா எப்பொழுதும் சாதுரியமாகவே நடந்து கொள்கிறது.

குறிப்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்தே நிலவி வருகின்றன. மதம், கலாசாரம், பண்பாடுகள் என பல்வேறு விடயங்களில் இரு நாட்டுக்கும் இடையிலான சமமான தன்மையானது இரு நாட்டு உறவுகளுக்குப் பாலமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

இலங்கையின் 'பிக் பிரதர்' என அழைக்கப்படும் இந்தியாவானது இலங்கை மீது எல்லா சந்தர்ப்பங்களிலும் கரிசனை கொண்ட நாடாகவே நடந்து கொண்டுள்ளது.

எமது நாட்டில் 1983 ஜூலையில் இனவன்செயல் இடம்பெற்ற காலம் வரை இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவு மிகவும் நெருக்கமானதாகவே இருந்து வந்தது. இந்தியாவின் அரவணைப்பை பல்வேறு வழிகளிலும் இலங்கை நாடியிருந்தது. அதேசமயம், இலங்கையை தாமாகவே அரவணைத்துச் செல்கின்றதொரு போக்கை இந்தியா அன்றைய காலத்தில் கடைப்பிடித்து வந்தது. இருந்த போதும் இலங்கையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டங்கள் வலுப்பெற்று, பின்னர் பயங்கரவாத செயற்பாடுகளாக மாறிய பின்னர் இந்தியாவின் அணுகுமுறையில் சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியிருந்தன. இருந்த போதும் இறுதிக் கட்ட யுத்த காலத்திலும் சரி, அதன் பின்னரான அபிவிருத்திக் கட்டத்திலும் சரி இந்தியா எப்பொழுதும் இலங்கையின் நண்பராகவே செயற்பட்டு வந்துள்ளது.

இருந்த போதும், காலப்போக்கில் இலங்கையில் சீனாவின் தலையீடுகள் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியமை இந்தியாவுக்கு நெருடலைக் கொடுக்கத் தொடங்கியது என்பதே உண்மை. ஆனால் இலங்கை சீன உறவு எவ்வாறானதாக இருந்தாலும், இலங்கை இந்திய உறவில் என்றும் குறிப்பிடத்தக்களவு விரிசல் வந்ததில்லை.

இவ்வாறிருக்கையில், இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் போட்டித்தன்மை திரைமறைவில் உள்ளதை தொடர்ச்சியான சில சம்பவங்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தன. குறிப்பாக இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னரான காலப் பகுதியில் இப்போட்டித் தன்மை அதிகரித்திருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது.

## திடீரென உருவெடுக்கும் அதீத அக்கறையின் புரியாத உள்ளடக்கம்!

அண்மைய மாதங்களில் இடம்பெற்ற சில சம்பவங்கள் இலங்கை இந்திய உறவில் தோன்றியிருக்கும் சிறு மாற்றங்களை கோடிட்டுக் காட்டும் வகையில் அமைந்தன. குறிப்பாக கொழும்பு துறைமுகத்தின்



கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க கடந்த நல்லாட்சி அரசாங்கம் ஒப்பந்தம் செய்திருந்ததுடன், இதனை நடைமுறைப்படுத்த புதிய அரசு எடுத்த முயற்சிகள் தொழிற்சங்கம் உள்ளிட்ட தரப்புக்களின் எதிர்ப்பினால் கைவிடப்படும் நிலைக்குச் சென்றன.

இந்த எதிர்ப்புகளின் பின்னணியில் சீனா இருப்பதாக இந்தியா குற்றஞ் சாட்டியிருந்த நிலையில், எதிர்ப்புகள் வலுத்தமையால் முன்வைத்த காலை பின்வைக்க வேண்டிய நிலைக்கு இலங்கை சென்றது. இருந்த போதும், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் தற்பொழுது இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதேநேரம், யாழ் குடாநாட்டில் உள்ள மூன்று தீவுகளில் புதுப்பிக்கத்தக்க சக்தியில் அதாவது காற்றாலைகளை அமைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டமொன்றை சீனாவுக்கு வழங்க இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. எனினும், தமிழகத்திலிருந்து குறுகிய தூரத்திலேயே இருக்கும் குடாநாட்டு தீவுகளில் சீனாவின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை இந்தியா தனது நாட்டின் பாதுகாப்புக்கான அச்சுறுத்தலாகப் பார்த்தது. இதனால் தானே அத்திட்டத்தை இலவசமாக முன்னெடுப்பதாக உறுதியளித்தது இந்தியா.

இது போன்ற அபிவிருத்திச் செயற்பாடுகளில் இந்தியா தனது பிரசன்னத்தை அதிகரித்திருந்த நிலையில், இரு நாட்டுக்கும் இடையிலான கலாசார ரீதியான உறவுகளை பலப்படுத்தும் வகையில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே சமீபத்தில் வடக்கு, கிழக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டார். அவருடைய வடக்கு, கிழக்கு விஜயம் கடந்த சிவராத்திரி தினத்தில் மன்னார் திருக்கேதீஸ்வர் ஆலய தரிசனத்துடன் ஆரம்பமாகியிருந்தது.

இதனைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் பாலமான ராம்சேது (ஆதாம் பாலம்) பகுதியில் அவர் பிரார்த்தனைகளில் ஈடுபட்டார். இலங்கையில் யுத்த சூழல் உருவெடுத்த பின்னர் அங்கு சென்ற இலங்கைக்கான முதலாவது இந்திய உயர்ஸ்தானிகராகவும் இவர் விளங்குகின்றார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கே.காதர் மஸ்தான், குலசிங்கம் திலீபன் ஆகியோரின் பிரசன்னத்திற்கு மத்தியில் மன்னார் புனித மடுமாதா ஆலயத்தில் யாத்திரிகர்களுக்கான 144 இடைத்தங்கல் வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லை, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் இணைந்து உயர் ஸ்தானிகர் நட்டு வைத்தார். இந்த வீட்டு அலகுகள் இந்தியாவினால் வழங்கப்படும் 300 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளன.



மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் சென்றிருந்த உயர் ஸ்தானிகர் அங்கு பலமட்ட சந்திப்புகளை நடத்தியிருந்தார். அரசியல், பொருளாதாரம், கல்வி, சமூகம் மற்றும் கலாசாரம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த முன்னணி பிரமுகர்களுடன் கலந்துரையாடல்கள் இடம் பெற்றிருந்தன.

இந்தியாவினால் வழங்கப்படும் உதவிகள் மற்றும் அதிகளவான முதலீடுகள் போன்றவற்றினூடாக வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு தொடர்பாக இச்சந்திப்புகளில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. வாழ்வாதாரம், சுகாதாரம், கல்வி, கைத்தொழில் அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை இந்தியா முன்னெடுத்துள்ளது. இவற்றின் முன்னேற்றங்கள் குறித்து இக்கலந்துரையாடல்களில் ஆராயப்பட்டுள்ளது.

இவற்றுக்கும் அப்பால், இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லே வடக்கில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் தனித்தனியாகச் சந்தித்திருந்தார். இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரைச் சந்தித்து அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடியிருந்தார்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் உள்ளிட்ட 8 கட்சிகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்தார்.

இவை தவிரவும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் உள்ளிட்ட அக்கட்சியின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் பிந்திய அரசியல் நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. கௌரவம், சமாதானம், நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றுக்கான தமிழ் சமூகத்தின் நியாயபூர்வமான அபிலாசைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாடு தொடர்பில் நினைவூட்டியிருந்த அவர், ஓர் ஐக்கிய இலங்கைக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஒன்றின் ஊடாக அவற்றினை உறுதிப்படுத்துவது நாட்டின் சமாதானம், நல்லிணக்கம், வினைத்திறன் மிக்க முன்னேற்றம் மற்றும் ஐக்கியம் ஆகியவற்றிற்கு பங்களிப்பு வழங்குமெனவும் குறிப்பிட்டார்.

வடக்கின் விஜயத்தை முடித்துக் கொண்டு கிழக்கு மாகாணத்துக்குச் சென்று இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உள்ளிட்ட அரசியல்வாதிகளை சந்தித்து தற்போதைய நிலைவரங்கள் குறித்துக் கலந்துரையாடியிருந்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிலையமொன்றை அமைப்பதற்கும் இந்தியா முன்வந்துள்ளது. இது தொடர்பான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

- உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே வடக்கு, கிழக்குக்கு மேற்கொண்ட விஜயம்...
- தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்புகள்...
- இந்திய உயர்ஸ்தானிகராலய பாதுகாப்பு அதிகாரி வன்னி கட்டளை தளபதியுடன் நடத்திய சந்திப்பு...
- புதுடில்லி வடக்கு, கிழக்குக்கு வழங்கும் புதிய உதவித் திட்டங்கள்...



இந்திய உயர்ஸ்தானிகரின் இந்த வடக்கு, கிழக்கு விஜயம் வழமையான சந்திப்புகளுக்கும் அப்பால், இலங்கை மீதான இந்தியாவின் புதிதான அதீத கரிசனையின் வெளிப்பாட்டை காண்பித்துள்ளது என்றே கூற வேண்டும். சீனாவின் தலையீடுகளால் இந்தியா ஒரு பக்கம் அதிருப்தியடைந்திருந்தாலும், உயர் ஸ்தானிகரின் வடக்கு, கிழக்கு விஜயத்தில் அனைத்து தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் தனித்தனியே சந்தித்து கலந்துரையாடியுள்ளமை இங்கு அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

குறிப்பாக ஜெனீவா நகரில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்றை கொண்டு வருவதற்கு பிரித்தானியா உள்ளிட்ட இணை நாடுகள் முயற்சிக்கும் தருணத்தில், இந்தியாவின் ஒத்துழைப்பு இரு தரப்பிலும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்திலேயே உயர்ஸ்தானிகரின் விஜயம் இடம்பெற்றுள்ளது.

பொருளாதார, கலாசார ஒத்துழைப்புக்கு அப்பால், பாதுகாப்பு ஒத்துழைப்பிலும் இந்தியா அக்கறை காண்பித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இலங்கை விமானப் படையின் 70வது ஆண்டு நிறைவையொட்டி கூட்டுப் பயிற்சிகளில் இரு நாட்டு விமானப் படையினர் ஈடுபட்டிருந்ததுடன், விமானப் படையினரின் பங்களிப்புடன் விமான சாகசக் கண்காட்சியொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இது மாத்திரமன்றி, உயர் ஸ்தானிகரின் வடக்கு விஜயத்துக்கு சமாந்தரமாக உயர் ஸ்தானிராலயத்தில் உள்ள இந்தியப் பாதுகாப்பு அதிகாரி சமீபத்தில் வன்னி கட்டளைத் தளபதி உள்ளிட்ட இராணுவத் தளபதிகளை நேரடியாகச் சந்தித்திருந்தார்.

அண்மைக் கால முன்னேற்றங்களின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது இலங்கை மீது இந்தியாவின் கரிசனை அதிகரித்திருப்பதாக தெரிகிறது. அதுவும் வடக்கு, கிழக்கு மீதான கரிசனை புதிதாக உருவாகியுள்ளதையே நிகழ்வுப் போக்குகள் புலப்படுத்துகின்றன.

பூகோள அமைவிடம் காரணமாக இலங்கை மீது பல்வேறு உலக நாடுகள் அக்கறை கொண்டிருக்கும் நிலையில், அயல் நாடானா இந்தியாவின் அக்கறை இரு நாட்டுக்கும் இராஜதந்திர ரீதியிலான நன்மைகளை வழங்கும் வகையில் அமைய வேண்டும் என்பதே இணக்கப்பாட்டை விரும்புவோரின் எதிர்பார்ப்பாகும்.

# நீதிமன்றத்தை நாடியுள்ள தோட்டக் கம்பனிகள்

## சவாலுக்கு உள்ளாகப் போகிறதா 1000 ரூபா சம்பள விவகாரம்?

1000 ரூபா சம்பள மீண்டும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சம்பள நிர்ணயசபை தொழில் அமைச்சுக்கூடாக 1000 ரூபா சம்பளம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்து வர்த்தமானி அறிவித்தலொன்றை அண்மையில் அரசு விடுத்திருந்தது.

இம்மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பெறுபேறாகவே இது சாத்தியமானது. இதனை மாபெரும் சாதனை என்று மார்தட்டிக் கொண்டது இ.தொ.கா. ஒருவகையில் அது சரிதான் என அனைவராலும் பார்க்கப்பட்டது. இ.தொ.கா காவைப் பொறுத்தவரை இது அரசியலில் அதற்குக் கிடைத்த வெற்றி; அரசாங்கத்திடம் அதற்கிருக்கும் செல்வாக்கை உறுதி செய்து கொள்ள கிடைத்த வாய்ப்பு.

அரசாங்க மட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் திருப்தி. எல்லாமே நல்லபடியாகத்தான் நடப்பதாக பட்டது. ஆனால் சம்பள நிர்ணய சபையின் தீர்மான அறிவிப்பினால் இப்பொழுது திடீர் திருப்பமொன்று தோன்றியுள்ளது.

ஆம்! திடுதிப்பென 20 பெருந்தோட்டக் கம்பனிகள் கடந்த 15ஆம் திகதி நீதிமன்றத்தை நாடியுள்ளது. 1000 ரூபா வர்த்தமானி அறிவித்தலை தடைசெய்யக் கோரி மனு தாக்கல் செய்துள்ளது. இதனையடுத்து இவ்வாரம் இ.தொ.கா. எதிர் மனுவொன்றை தாக்கல் செய்யப் போகின்றது. கம்பனி தரப்பின் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானிக்கும் பட்சத்தில் 1000 ரூபா விவகாரத்தில் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்படவும் இடமண்டு. தவிர வழக்கு உடனடியாக தீர்ப்புக்குள்ளாகும் என்று எதிர்பார்க்க முடியாது.

எப்படி பார்த்தாலும் ஒரு பக்கம் சிக்கல், இன்னொரு பக்கம் சவால். மறுபக்கம் இழுபறி. இடையே சட்டப்பிரச்சினை தடங்கல். தடங்கலே தான். 1000 ரூபா வழங்கப்படும் என்ற அறிவிப்பு வந்ததும் பட்டாசு வெடித்து பரவசப்பட்ட தோட்ட மக்கள் இப்போது என்னய்யா நடக்குது என்று ஏமாற்றத்துடன் பார்க்கின்றார்கள். உண்மையில் 1000 ரூபா விடயத்தில் என்னதான் நடக்குது?

1992 இல் பெருந்தோட்டங்கள் தனியார் வசம் கையளிக்கப்பட்டது. இதனை 22 பிராந்திய கம்பனிகள் பொறுப்பேற்றன. சிலவற்றை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை, அரச பெருந்தோட்ட யாக்கம், எல்கடுவ பிளான்டேஷன் ஆகிய அரசு துறைசார் நிறுவனங்கள் தம்வசம் வைத்துக் கொண்டன. அந்தநேரம் பெருந்தோட்டத் தொழிலாளருக்கான சம்பள விவகாரத்தை சம்பள நிர்ணயசபைதான் கையாண்டது. தவிர தோட்டத்துறை சம்பந்தப்பட்ட சகல நிர்வாக ரீதியிலான பிரச்சினைகள் அனைத்தும் பொதுவான தொழிற்சட்டங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கான சிறப்புச் சட்ட ஏற்பாடுகள் மூலமே தீர்க்கப்பட்டன. ஆனால் கம்பனிகள் பெருந்தோட்டங்களை பொறுப்பேற்ற பிறகு முன்னைய முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. சம்பள நிர்ணயம் சம்பந்தமான கூட்டு ஒப்பந்தமே முதலில் கையெழுத்தானது. நாளடைவில் தொழிலாளர்களது நலன் சார்ந்த அம்சங்களை உள்ளடக்கிய கூட்டு ஒப்பந்தமும் நடைமுறைக்கு வந்தது. கூட்டு ஒப்பந்தத்தின் சூத்திரதாரியாக அமரர் சௌமியமுர்த்தி தொண்டமானே இருந்தார். சம்பள நிர்ணய சபைக்கூடாக தொழிலாளர்களுக்கான சம்பளம் தீர்மானிக்கப்படும்போது தொழிலாளர்களுக்குச் சாதகமான தன்மை நிலவுவதில்லையென அவர் உணர்ந்திருந்தார். தவிர சம்பள விடயத்தைச் சுமுகமான தீர்த்துக்கொள்ள வழி பிறக்கும் என்று அவர் நம்பினார்.

கூட்டு ஒப்பந்தத்தில் தோட்டத் துரைமார் சம்மேளனமும் மலையகத்தின் மூன்று தொழிற்சங்க அமைப்புகளும் கைச்சாத்திட்டுள்ளன. இ.தொ.கா., இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டமைப்பு (10 தொழிற்சங்கங்களை உள்ளடக்கியது) ஆகியன இத் தொழிற்சங்கங்கள். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை தெழிலாளர்களது சம்பளத்தைத் தீர்மானிப்பதற்கான கூட்டு ஒப்பந்தம் இடம்பெற வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஷரத்து. எனினும் விதிகளுக்கமைய உரிய கால இடைவெளிக்குள் ஒப்பந்தங்கள் மெற்கொள்ளப்படாமை ஒப்பந்தம் பற்றிய நம்பகத் தன்மையைக் கேள்விக்குறியாக்கி வந்துள்ளமையை மறுக்க முடியாது. தவிர பல சந்தர்ப்பங்களில் ஒப்பந்தத்துக்குள் அடக்கப்படும் விடயங்கள் கம்பனி தரப்பு கணக்கில் எடுக்காமையால் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறலாயின.

சுமார் 29 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் ஒப்பந்த ஷரத்துக்கள் பற்றி தொழிலாளர்களுக்கு எதுவுமே தெரிய வாய்ப்பில்லை. தவிர ஒப்பந்தம் வெறும் ஏட்டளவு சமாச்சாரமாக இருந்து வருவதால் எமாற்றம் மட்டுமே எஞ்சியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று ஆறு வருடங்களுக்கு முன்பு இதொ.கா கோரியிருந்தது. ஆனால் கம்பனி தரப்பு கோரிக்கையை எதிர்த்தே செயலாற்றி வந்துள்ளது. எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் இரண்டிலும் தொழிலாளருக்கு 1000 ரூபா சம்பளம் பெற்றுத் தரப்படும் என்று ஜனாதிபதியும் பிரதமரும் உறுதி வழங்கி இருந்தார்கள். அதற்கமைய முயற்சிகளிலும் அவர்கள் இறங்கினார்கள். பல தடவைகள் பெந்தோட்டத் துரைமார் சங்கத்தை தொழில் அமைச்சுக்கு அழைப்பித்து பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

அரசாங்கமே மத்தியஸ்தம் வகித்தமையினால் இ.தொ.காவுக்கு நம்பிக்கை அதிகரித்து அது மேலும் சுறுசுறுப்பாக இயங்கியது. இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆளுமையை வெளிப்படுத்திக்காட்ட இதுவொரு நல்ல வாய்ப்பாக இ.தொ.கா கருதி இருக்கலாம்.

எனினும் கம்பனி தரப்பு இறங்கு முகத்தைக் காட்டவே இல்லை. இதனால் அரசாங்கத்துக்கு தர்மசங்கட நிலை. அரசாங்கம் பெருந்தொட்டங்களைச் சுவீகரித்து இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான அதானி நிறுவனத்துக்குக் கையளிக்கப் போகின்றது என்று தகவல் கசிந்தது. அப்போதும் கம்பனிகள் மசியவில்லை. வேறு வழியின்றி பழையபடி (1992) இற்கு மன்பு வரை) சம்பள நிர்ணய சபையிடம் தோட்டத் தொழிலாளர்களின சம்பள பிரச்சினையை கையளிக்க அரசாங்கம் தீர்மானித்தது. அதன்படியே நடந்தது.

சம்பள நிர்ணயசபை, தொழில் தருநர், தொழிற்சங்க உறுப்பினர்கள், அரசு பிரதிநிதிகள் என அங்கம் வகிக்கும் சபையாகும். தொழில் அமைச்சின் கீழ்வரும் சம்பள நிர்ணயசபைக்கு தொழில் ஆணையாளரே தலைமை வகிப்பார். தீர்மானங்கள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டே அங்கீகரிக்கப்படும். அப்படி பிரேரிக்கப்பட்டு வாகெடுப்புக்கு விடப்பட்டு பெருவாரியான சபை உறுப்பினர்களின் ஆதரவினைப் பெற்று நிறைவேற்றப்பட்டதுதான் 1000 ரூபா சம்பளம்.

தீர்மானத்தை ஆட்சேபிக்க 14 நாட்கள் கால அவகாசமும் வழங்கப்பட்டது. கால அவகாசம் முடிந்தது.

மீண்டும் பேச்சுவார்த்தைக்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் தொழில் ஆணையாளரால் அழைக்கப்பட்டனர். தொழிற்சங்கங்கள் சார்பில் 8 பேரும் கம்பனி சார்பில் ஒருவரும். (இறப்பர் தொழில் சம்பந்தமாக எவருமே பங்கு கொள்ளவில்லை) கலந்து கொண்டிருந்தனர். உரிய எண்ணிக்கையானவர்கள் கலந்து கொள்ளாத காரணத்தாலேயே இம்மாதம் முதலாம் திகதி மீண்டும் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

**பன். பாலா ...**

அன்று எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படியே 1000 ரூபா வழங்கப்பட வேண்டுமென சம்பள நிர்ணய சபை கேட்டுக்கொண்டது. இதன்படி 900 ரூபா அடிப்படைச் சம்பளமாகவும் 100 ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாகவும் கம்பனிகளால் வழங்கப்பட வேண்டும்.

இதனை பின்னர் சம்பள நிர்ணய சபை தொழில் அமைச்சுக்கூடாக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டது. இப்பொழுது 1000 ரூபா சம்பள சட்டரீதியாக அரச அங்கீகாரம் பெற்றுள்ளது.

ஆனால் அதற்கு எதிராகத்தான் 20 கம்பனிகள் நீதிமன்றம் போயிருக்கின்றன. சம்பள நிர்ணயம் சம்பந்தமான கூட்டு ஒப்பந்தம் இன்னும் நடைமுறையில் இருக்கின்றது. ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் தரப்பினரைத்தவிர வேறு எந்தத் தரப்பும் அதற்குள் தலையை நுழைக்க அனுமதி இல்லையென்று உயர்நீதிமன்றமே உத்தரவாதம் தந்துள்ளது. இந்நிலையில் சம்பள நிர்ணய சபையின் கட்டளையை கேள்விக்குறியாக்கி சவாலுக்கு உட்படுத்தியிருக்கிறது கம்பனித் தரப்பு.

1000 ரூபா சம்பளத்தை வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் கூட கம்பனி தரப்புக்குச் சாதகமான சில விடயங்களும் வழங்கப்பட்டே உள்ளது. குறிப்பாக மாதத்தில் எத்தனை நாள் வேலை தரவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை கம்பனி தரப்புக்கே இருக்கிறது. இதன் மூலம் மாதாந்தம் கிடைக்க வேண்டிய சம்பளத் தொகையைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பு தோட்ட நிர்வாகங்களுக்கே உரித்தாவதால் தொழிலாளர்களது வேலைநாட்கள் குறைக்கப்படலாம் எனும் அச்சம் ஏற்படவே செய்கின்றது.

இவ்வாறான பின்புலத்தில் கம்பனித்தரப்பு நீதிமன்றத்தை நாடியிருப்பது வியப்பையும் தருகின்றது. கூட்டு ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளும் முடிவுக்கு வரப்போகின்றதா என்னும் கேள்வி எழவே செய்கின்றது.

அப்படி நடக்குமானால் அதனை மலையகத் தொழிற்சங்கங்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? கூட்டு ஒப்பந்தம் இ.தொ.கா.வைப் பொறுத்தவரை தொழிலாளரைப் பிடிக்குள் வைத்திருக்கும் ஒரு பொறி. இதேசமயம் கூட்டு ஒப்பந்த ஷரத்துக்கள் முறைப்படி கடைப்பிக்கப்பட்டால் தொழிலாளர்கள் நன்மையடையக் கூடிய விடயங்களும் இருக்கவே செய்கின்றன.

கம்பனிகள் நீதிமன்றம் சென்றிருப்பதால் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு மீண்டும் இழுபறி நிலைக்குத் தள்ளப்பட இடமுண்டு. இதே சமயம் கம்பனிகள் முயற்சியை தாம் முறியடிக்கப் போவதாக அமைச்சர்கள் குரலெழுப்பி இருக்கின்றார்கள். எவ்வித சவாலையும் சந்திக்க தமது சட்டத்தரணிகள் தயாராகவே இருப்பதாக இ.தொ.கா. அறிவித்திருக்கிறது.

பழையபடி சம்பளச் சங்கதியை சந்தேகத்துடனேயே பார்க்க வேண்டிய பரிதாப நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காத்திருக்கப் போகிறார்கள். என்னதான் நடக்கப் போகின்றது என்பதை நாமும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

---

மலைநாட்டு எழுத்தாளர் மன்ற
**ஆளுமைகள்**

## மலையக மக்களை சிந்திக்கத் தூண்டிய படைப்பாளர்

# டி.எம். பீர்முகம்மது

வீரகேசரியின் ஆரம்பகால ஆசிரியர் எச். நெல்லையாவின் தந்தை ஹரிஹர பாரதியிடம் தமிழ் கற்ற டி.எம். பீர்முகம்மது 1915 பெப்ரவரி 25 ஆம் திகதி தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில் கல்லிடைக் குறிச்சியில் பிறந்து, வளர்ந்து, ஆரம்பப் படிப்பையும் முடித்து, பிறகு அருகிலுள்ள அம்பா சமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில் ஆங்கிலமும் தமிழும் கற்றுத்தேர்ந்து, தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு இயக்கம், முஸ்லிம் சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு அவற்றின் மூலம் அறிமுகமான இவர் 1948 கடைசியில் இலங்கைக்கு வந்தார்.

உத்தம மக்கள் தொண்டனாய் மலையகத்தைச் சீர்திருத்திய "டியெம்பி" என அழைக்கப்பட்ட டி.எம். பீர்முகம்மது என்றென்றும் மலையக மக்களால் மறக்கப்பட முடியாதவர். மலையக மக்களிடையே மண்டிக்கிடந்த அறியாமையை, மூட நம்பிக்கைகளைத் தன் புரட்சிகரப் பேச்சினாலும், எழுத்தினாலும் கண்டித்து, அம்மக்களிடையே புதிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் ஊட்டியவர். இவையுமன்றி, மொழி, இனம், பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றைக் கடக்கவேண்டிய வழிவகைகளையும் எழுதி, விளக்கி, அவர்களை மறுமலர்ச்சிப்பாதைக்கு இட்டுச் சென்றவர்.

எப்பொருளிலும், எத்தனை மணிநேரமும் பாங்காகச் சொற்பொழிவாற்றும் திறன் இவருக்குரியது. தமது பேச்சுத்திறத்தாலே பிரச்சார பீரங்கி என அழைக்கப்பட்டார். தரமறிந்து, இடையிடையே நகைச்சுவையோடும், அடுக்குத் தொடரோடும் பேசி, கேட்போர் உள்ளத்தை ஈர்த்துவிடும் பண்பும் அவரிடம் இருந்தது. பீர்முகம்மதுவின் இத்தகையதோர் தனித்திறமை காரணமாக சபைகள், மன்றங்கள் மற்றும் தொழிலாளர் இயக்கங்களில் மட்டுமன்றி பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ச் சங்கக் கூட்டத்திற்கும் அழைக்கப்பட்டு அங்கு வளரும் இலக்கியம் எனும் பொருளில் உரையாற்றினார்.

அத்துடன் பாடசாலைகள் பலவற்றில் பேசி கல்விச் சமூகத்தையும் கவர்ந்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பல மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், விழாக்களில் உரையாற்றி எல்லாத் தமிழ்பேசும் மக்களையும் கவர்ந்தார்.

1949 இல் கொழும்பு மாநகரில் இ.தி.மு.க.வை ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் வெளிவந்த நவஜீவன் வார இதழுக்கு ஆசிரியராகப் பணியாற்றியதன் தொடர்பால், இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைவர்களான எ. அஸீஸ், எஸ். தொண்டமான், கே. இராசலிங்கம் போன்றோரின் தொடர்பு கிட்டியது. வாரந்தோறும் தேயிலை, இறப்பர் தோட்டங்களுக்குச் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தும் வாய்ப்பும் கிட்டியதாக தமது மணிவிழா மலரில் நினைவு கூர்ந்திருக்கிறார்.

'1952இல் கொழும்பில் நடைபெற்ற இலங்கை, இந்திய குடியுரிமைச் சட்டத்திற்கெதிரான போராட்டத்திற்கு பெரும் ஆதரவு கொடுத்து நவஜீவன் இதழை வாரம் இருமுறையாக மாற்றி எழுதியும், பேசியும் வந்தேன். குதிரைப்பட்டாளத்தைக் கொண்டு வந்து எதிர்ப்பாளர்களை அடித்து விரட்டிப் பயமுறுத்தினர். அந்தக் கூட்டத்தில் யாரெல்லாமோ அடிபட்டனர். எனக்கு அடிபடவில்லை. அதனால் என்னால் தியாக முத்திரை பெறமுடியவில்லை' என்று அதில் மேலும் எழுதியிருக்கிறார்.

இலங்கை தி.மு.க. ஆற்றி வந்த பகுத்தறிவுப் பணியில் இவர் ஆற்றிய தொடர்பு, காலப்போக்கில் இவரை மலைநாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியது.

இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்ட எதிர்ப்புக்குப் (1948) பக்கமாக நின்ற நவஜீவன் வாரப் பதிப்பின் ஆசிரிய பொறுப்பை 1952 இல் ஏற்று திறம்பட நடத்தினார்.

'1956 இல் இலங்கை, இந்திய காங்கிரஸ் இரு பிரிவுகளாக பிரிந்தது. ஜனாப் ஏ. அஸீஸ் தலைமையிலான ஜணநாயக தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து பணியாற்றியதோடு, அந்த இயக்க வாரப்பத்திரிகையான 'நண்பன்' இதழுக்கும் ஆசிரியராகப் பணியாற்றினேன்.

1957இல் பதுளையில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் வருடாந்த மாநாடு ஜனாப் ஏ. அஸீஸ் தலைமையில் நடைபெற்றபோது, தலைவர் அவர்களாலேயே பொதுச் செயலாளர் பதவிக்கு எனது பெயர் முன்மொழியப்பட்டபோது அதனை மறுத்துவிட்டேன்' என அவர் குறிப்பிட்டதில் இருந்து அவரின் பதவிமோகமற்ற பண்பை உணரலாம்.

இலங்கைக்கு வந்த ஆரம்ப காலத்தில் தரமான தெருநாடக நடிகராகவும் இவர் விளங்கியிருக்கிறார். இவர் நடித்த நாடகத்தில் அதிகமாக சீர்திருத்தக் கருத்தையே பார்க்கலாம். சி.பி. சிற்றரசு தலைமையில் கொழும்பில் நடந்த அறிஞர் அண்ணாவின் நீதி தேவன் மயக்கம் நாடகத்தில் தேவனாக மிக அற்புதமாக நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்விதமே 19511952 இல் அவர் நடித்தும் முன்னின்று நடத்தியும் வெற்றிபெற்ற தூக்கு மேடை நாடகமும் மற்றும் நாடகங்களும் குறிப்பிடத்தக்க முறையில் இந்திய வசம்சாவழி மக்களை விழிப்படைய வைத்தன.



டி.எம்.பி தாயகம் திரும்புவதற்கு முன்னர் 1.1.1963 அன்று கொழும்பில் கவிஞர் ஈழவாணன், டி.எம்.பி, செல்லையா ஆகியோருடன்...



இ.தி.மு.க. கழக தோழர்களுடன் நவ ஜீவன் ஆசிரியர் டி.எம்.பி



இ.தி.மு.க. குழுவினர்



அமர்ந்திருப்போர்: இரா. அதிமணி, எ.வி.பி. ஆசைத்தம்பி, தாளைதாசன், டி.எம். பீர்முகம்மது நிற்பவர்கள்: கே.எஸ். செல்வத்தம்பி, பி. தம்பித்துரை, ஏ.எம். ஜார்ஜ், எம். முக்தார்.



எ. அஸுஸ் அவர்களின் இடதுபக்கம் தோழில் துண்டுடன் பீரங்கிப்பேச்சாளர் டி.எம்.பி 1958 நமுனுகுல.

செழுமையான தமிழ் அறிவு கொண்ட பீர்முகம்மது அருமையான நூல்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறார். 1954 இல் அவர் எழுதி வெளியிட்ட கங்காணி மகன் என்னும் குறுநாவல், மலையகத்தில் பெரும் வரவேற்பை பெற்றது.

சீறும் சிங்களத்திற்கு அபாய அறிவிப்பு, மேதின முழக்கம், சிந்தனைக்கதிர், குடிகெடுக்கும் குடி, உலகிற்கு ஒரு புதுமைக்கவி போன்ற நூல்களில் மலையக மக்களுக்குத் தேவையானதும் அவசியமானதுமான கருத்துக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

சதியில் சிக்கிய சலீமா, தீந்தமிழ் மேதை வி.க, முதற்காட்சி முழக்கம், இலங்கையின் அரசியல் நிலை, எழுச்சிமுரசு, அண்ணாவின் அடிச்சுவட்டிலே, மொழியும் முஸ்லிம்களும் முதலிய நூல்களும் பல நல்ல கருத்துக்களைச் சுமந்து வெளிவந்துள்ளன. மேலும் சிறுகதைகள் 6 என்னும் சிறுகதைத் தொகுப்பினையும் வெளியிட்டிருக்கிறார். மலையக மண்வாசனை கொண்ட தரமான கதைகளாக இவை விளங்குகின்றன.

தமிழ்மணி மானா. மக்கின், டி.எம். பீர்முகம்மதுவின் சாதனைகளால் ஈர்க்கப்பட்டு 32 பக்கங்களில் அவர் பற்றிய ஆய்வு நூலொன்றை 2019ஜனவரியில் வெளியிட்டிருந்தார்.

ஈழத்து இளங்கவி, வத்துகாமம் ரஹ்மான் அவா்கள் வாழ்த்துப்பா பாட 1963 பொங்கல் தினத்தன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து எஸ்.எம். கார்மேகம், என்.எஸ்.எம். இராமையா, ஈழவாணன், கலைஞர் மலைத்தம்பி உட்பட பலர் இவரை தமிழகம் அனுப்பி வைத்தனர்.

**எச்.எச்.விக்கிரமசிங்க ...**

**ஜெனீவா கூட்டத்தொடரில் உரையாற்றிய ஜெனீவாவுக்கான இந்திய வதிவிடப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே, இலங்கையின் ஒருமைப்பாடு, தமிழ் மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து ஒற்றுமையை உறுதிப்படுத்தல், 13 வது அரசியல் திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தல் போன்றவற்றை இலங்கை அரசு ஆழமாக கவனித்துச் செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதனை வெறும் கோரிக்கையாக மட்டும் நாம் நினைத்துவிடக் கூடாதென்கிறார். மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன். தினகரன் வாரமஞ்சரிக்கான நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவரது நேர்காணல் வருமாறு....**



# உரத்த குரலில் உரையாற்றுவதால் மட்டும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டிவிடாது

## பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்

**கேள்வி:–** தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் துணிச்சலான பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள் மும்மொழிகளிலும் பாராளுமன்றத்தில் கனல் தெறிக்க உரையாற்றுகிறீர்கள். இப்படி எத்தனையோ உங்களைப்பற்றி சொல்லலாம். இப்போது ஜெனீவா சமர் தொடங்கிவிட்டது இதுபற்றி சொல்லுங்கள்

**பதில்:–** ஜெனிவாவில் உண்மையில் நடைபெறுவது ஒரு சமர்தான். நம் நாட்டை முதன்மைப்படுத்தி நம் நாட்டுக்கு எதிராகவும், சார்பாகவும் உலக நாடுகள் அணிதிரண்டு நிற்கின்றன. இச்சமர் இன்றோ நேற்றோ தொடங்கியதல்ல கடந்த 12 வருடகாலமாக நடைபெற்று வருகிறது. இதன் பரிமாணத்தை தமிழ் மக்கள் நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோரினதும், காணாமல் போனோரினதும் பிரச்சினைகள் பற்றி ஆளும் அரசின் தலைமைத்துவங்கள் கடந்த காலங்களில் எம்மோடு பேசுவதற்கு முயற்சிக்கவில்லை. இப்போது மட்டும் அவர்களுக்கு அவசரம் வந்திருக்கிறது.

அண்மையில் அரசு காணாமல் ஆக்கப்பட்டோரினது குடும்ப உறுப்பினர்களோடும் சம்பந்தப்பட்ட அமைப்புக்களோடும் பேச முனைப்புக்காட்டியிருக்கிறது. அவ்வமைப்புக்கள் பேச்சு வார்த்தைக்கு நிபந்தனைகளை விதித்திருக்கின்றன. அவ் அமைப்புக்களுடைய அகிம்சைவழிப் போராட்டம் வருடக்கணக்காக இடைவிடாது நடந்து கொண்டிருக்கிறது.

மாகாண சபை காலாவதியாகி எவ்வளவோ காலம் கடந்துவிட்டது. இவ்வளவு காலம் அதுபற்றி பேசாதிருந்த அரசு இப்போது மாகாணசபைத் தேர்தலை நடத்தப் போவதாக கூறுகிறது.

உரத்த குரலில் உரையாற்றினால் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டிவிடாது. புலிகளைத் தோற்கடித்ததாக மார்தட்டிக் கொள்ளும் அரசு போர் தோற்றுவித்த விளைவுகளுக்கு மருந்து போடத் தவறிவிட்டது. அது இப்போது "ஜெனீவா சமராக" உருவெடுத்துள்ளது. இதனை வெளிவிவகார அமைச்சர் புரிந்து கொள்ளத் தவறியிருக்கிறார்.

உள் நாட்டில் பிரச்சினைகளை கையாளும் விதத்தைப் போன்று உலக அரங்கில் கையாள முற்படக் கூடாது. அது நாட்டுக்கு அபகீர்த்தியை தோற்றுவிக்கும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இவ்விடயத்தில் எடுத்துவைத்து வருகின்ற ஒவ்வொரு காலடியும் பெறுமதியானது. இனிமேலும் அது சரியாகவே செயற்படும்.

இன்னொரு விடயத்தை நான் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். ஜெனீவா கூட்டத்தொடரில் உரையாற்றிய ஜெனீவாவுக்கான இந்திய வதிவிடப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே இலங்கையின் ஒருமைப்பாடு, தமிழ் மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து ஒற்றுமையை உறுதிப்படுத்தல், 13 வது அரசியல் திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தல் போன்றவற்றை இலங்கை அரசு ஆழமாக கவனித்துச் செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதனை வெறும் கோரிக்கையாக மட்டும் நாம் நினைத்துவிடக் கூடாது. அது இந்தியாவின் கருத்து.

**கேள்வி:–**

இந்த நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் சக்திகளை ஒன்றிணைத்து ஒரு பாரிய தமிழ்க் கூட்டமைப்பு உருவாக்கப்போவதாக கூறப்படுகிறது. இதுபற்றி கூறுவீர்களா? பிள்ளையானையும், ராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனையும் இணைப்பீர்களா?

**பதில்:–** ஒரு மேலெழுந்தமான போக்கில் பார்த்தால் தமிழ்க்கட்சிகள் யாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவைதான். சில கட்சிகள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்த நிலையில் இருக்கின்றன. சில ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தோடு நிற்கின்றன.

சில சந்தர்ப்பங்களில், பாராளுமன்ற உறுப்புரிமையைப்பெறாத கட்சியின் தலைவர்கள் தனிநபராக எமது போராட்டங்களில் பங்கேற்றிருந்தனர். உதாரணத்திற்கு அனந்தி, சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோரை எடுத்துக்காட்டலாம்.

பிள்ளையானையும், ராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனை இணைப்பதா இல்லையா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். அதற்கு முதல் அவர்கள் இருவரும் அவர்களுடைய கடந்தகாலச் செயற்பாடுகள் பற்றி மக்களுக்கு ஊடகங்கள் வாயிலாக விளக்கமளிக்க வேண்டும். அவர்களில் பிள்ளையான் சில குற்றச்சாட்டுக்களுக்காக நீதிமன்றத்திற்கு முகம் கொடுத்தவர். குறிப்பாக ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கை குறிப்பிடலாம். இது பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இதனை "தன்னிலை விளக்கம்" என கூறுவார்கள். அதன் பின்பு அதுபற்றி மக்கள் தீர்மானிப்பார்கள். மக்களின் தீர்ப்பே பிரதானம்.

**கேள்வி:–** மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயதொழிலை வழங்கி அதனூடாக வறுமையை ஒழிப்பதற்கான ஒரு செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த நீங்கள் எடுத்த முயற்சிகள் பற்றியும். இதற்காக மில்லியன் கனேடிய டொலரை கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை எடுத்ததாகவும் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். இதுபற்றி கூறுங்கள்?

**பதில்:–** ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் வறுமை ஒழிப்புக்கும் தொழில் வழங்கலும், அதனூடான உற்பத்தியும் பிரதான காரணிகளாகும். இதற்காகவே கனடாவிலிருந்து ஒரு நல்லெண்ண அடிப்படையில் நிதியைப் பெற முயற்சி செய்தேன். இது ஒரு பாற்பண்ணை அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பாடுபடுகிறோம் என்று கூறுபவர்கள் இவ்வாறான செயற்பாடுகளுக்கு சாதகமாக இருக்க வேண்டும். நல்ல விடயங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செய்தால் அதற்கு தடைபோடக் கூடாது. நல்லதை யார் செய்தாலும் நன்மையை அனுபவிப்பது நமது மக்கள் தான் என்பதை மனதில் எடுக்க வேண்டும். அரசியல் ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்மைப்புக்கு நன்மை விளைந்துவிடும் என்று பார்கக் கூடாது. சில அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு கிடைக்கும் நல்ல வாய்ப்புகளுக்கு தடையாக இருப்பது மக்களுக்குத் தெரியும். அப்படியானவர்கள் தமிழ் மக்களின் அபிவிருத்திக்கு பாடுபடுகிறோம் என்று மக்கள் மத்தியில் கூறக் கூடாது.

**கேள்வி:–** மயிலத்தமடு, மாதவனை ஆகிய பிரதேசங்களிலுள்ள கால் நடைப் பண்ணையாளர்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு பல இடைஞ்சல்கள் அரசினால் தோற்றுவிக்கப்பட்டிருந்தன. இது பற்றிய தற்போதைய நிலைபற்றி கூறுங்கள்

**பதில்:–** மயிலத்தமடு, மாதவணை ஆகிய பிரதேசங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசம். இதில் அதிகமான தமிழர்களும், சில சிங்களவர்களும் ஓரிரு முஸ்லிம்களும் கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டு வந்தார்கள். இவர்களிடையே ஒற்றுமை, நல்லுறவு என்பன நிலவி வந்தது.

சில அரச அதிகாரிகளது நடவடிக்கைகளால் அவர்களிடையே பகைமை தோற்றுவிக்கப்பட்டது. அரச அதிகாரிகள் திடுதிப்பென்று சிங்கள மக்களை கொண்டு வந்து குவித்து அவர்களை குடியேற்ற முயற்சித்தனர். தமிழர்களுக்கு எதிராக வழக்குப் போட்டனர். தமிழர்களை துன்புறுத்தினர். தமிழர்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்பதில் அக்கறையாயிருந்தனர்.

இறுதியாக நம்மவர்கள் நீதிமன்றத்தை நாடினர். நீதிமன்றம் புதிதாக குடியேறிய அனைவரையும் பெப்ரவரி 2ம் திகதிக்குமுன்னதாக வெளியேறிவிட வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது.

இவ்வாறான பிரச்சினைகள் துளிர் விடும்போது மக்கள் பிரதிநிதிகள் நிர்வாக ரீதியாக, நீதித்துறை மூலமாக பாராளுமன்றம் மூலமாக இதனை கையாள வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் நான் இந்த மூன்று முறைகளையும் கையாண்டிருந்தேன். கிராம சேவகர் மட்டத்திலிருந்து இந்த நாட்டின் ஜனாதிபதிவரைக்கும் இப்பிரச்சினையை எடுத்துப் பேசியிருக்கிறேன். அது தவிர நான் பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையை சமர்ப்பித்தும் பேசியிருந்தேன்.

மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இப்பிரச்சினைக்கு தீர்வைக்காண முயன்றேன். இறுதியாக நீதிமன்றத்தை நாடினேன்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நான் பிரச்சினையை கொண்டுவந்து நீண்டகாலமாக கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் தமிழர்கள் வெளியேற்றப் படக் கூடாது.

அதே நேரத்தில் புதியவர்கள் அந்தப் பிரதேசத்தில் குடியேற்றப்படவும் கூடாது என தீர்மானம் எடுக்க வேண்டும் என்ற பிரேரணையை கொண்டுவந்தேன்.

அதனை நிறைவேற்றுவதற்கு அபிவிருத்திக் குழுவின் தலைவராகவிருந்த பாராளுமன்ற உறப்பினர் பிள்ளையான் சம்மதம் தெரிவிக்கவில்லை.

தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது. தமிழர்களின் பக்கமே சார்ந்து நின்று நீதியைப் பேசவேண்டும் அதனை பிள்ளையான் செய்யவில்லை. இதனை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**எஸ்.எஸ்.தவபாலன்**

**ஜனாதிபதியின் 'கம சமக பிலிசந்தர' என்ற கிராமத்துடனான கலந்துரையாடல் வேலைத்திட்டத்தினை பெருந்தோட்டப் பகுதிகளுக்கும் ' வத்து சமக பிலிசந்தர' என்ற வகையில் கொண்டு செல்லப்படல் வேண்டுமென்ற, தனது கோரிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருப்பதாக, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் தினகரன் வாரமஞ்சரிக்கு தெரிவித்தார்.**

# கைவிடப்பட்ட 25 தேயிலைத் தொழிற்சாலைகள் விரைவில் கைத்தொழில் பேட்டைகளாக மாறும்

## ஜனாதிபதி உறுதியளித்ததாகக் கூறுகிறார் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார்



அவரது நேர்காணலில் தொடர்ந்து கூறுகையில், ' ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச, நாட்டின் பின் தங்கிய கிராமங்களுக்கு சென்று, அக்கிராம மக்களுடன் நேரடியாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார். மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து, ஜனாதிபதி அம்மக்கள் ஊடாகவே அறிந்து கொள்கின்றார். அத்துடன், அதிமுக்கிய பிரச்சினைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்தும் வருகின்றார். இச் செயல்திட்டத்தினை, கிராம மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். இதனால் பெரும் நன்மைகள் கிராமங்களுக்கு கிடைக்கின்றன.

ஆனால், இது போன்றதோர் செயற்றிட்டம் பெருந்தோட்டப்பகுதிகளுக்கு கிடைப்பதில்லை. நாட்டின் பின்தங்கிய கிராமங்களை விட, பெருந்தோட்டப்பகுதிகள் அனைத்து துறைகளிலும், பெரும் பின்னடைவுகளை எதிர்நோக்கியிருக்கின்றன. மேலும், பெருந்தோட்டத்துறை மக்கள் நாளாந்தம் பெரும் அவலங்களையும், பாதிப்புக்களையும் எதிர்கொண்ட நிலையிலேயே, இருந்து வருகின்றனர்.

ஜனாதிபதி பெருந்தோட்டப்பகுதிகளுக்கு சென்று அம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை, அம்மக்கள் ஊடாகவே அறிந்து, அதற்குரிய தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முடியும். அத்துடன், பெருந்தோட்ட மக்களின் உண்மை நிலையினையும், ஜனாதிபதியினால் நேரடியாக கண்டு கொள்ளக்கூடிய வாய்ப்புக்களும் கிட்டும்.

ஆகவே ' வத்து சமக பிலிசந்தர' என்ற வகையில் தோட்டங்களுடான கலந்துரையாடல் வேலைத்திட்டத்தினை பெருந்தோட்ட பகுதிகளிலும் கிராம புறங்களைப் போன்று முன்னெடுக்கப்படல் வேண்டும். ஜனாதிபதி நேரடியாக எம்மக்களைச் சந்தித்து எம் மக்களின் குறைகளை தேவைகளை விருப்புக்களை அறிய வேண்டும்.

இது போன்ற நிலை ஏற்படும் பட்சத்தில், பெருந்தோட்ட நிறுவனத்தினரும், அரச அதிகாரிகளும் தோட்ட மக்கள் குறித்தும் கூடிய கவனம் செலுத்தி, அம்மக்களின் தேவைகள், குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முன்வருவர். நாட்டின் தலைவர் தம்மை நாடி வந்து தேவைகள், குறைபாடுகளை கேட்டறியும் போது, அம்மக்களுக்கும் பெருமிதமும் ஜனாதிபதி மீது பற்றும் ஏற்படும்.

எனது இக்கோரிக்கையை ஜனாதிபதி ஏற்று, அதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பதுளை மாவட்டத்தின் பெருந்தோட்டப்பகுதிகளில் சுமார் 25 தேயிலைத் தொழிற்சாலைகள் கைவிடப்பட்டு மூடப்பட்டுள்ளன. இத் தொழிற்சாலைகளை கைத்தொழில் பேட்டைகளாக மாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இத் தொழில் பேட்டைகளில், அப் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளை வேலைக்கமர்த்தினால் அதி சிறந்த பயன்களைப் பெறக் கூடியதாக இருக்கும். இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதுடன், நாட்டின் வறுமானமும் அதிகரிக்கவே செய்யும். தோட்டப்பகுதிகளில் தொழில் வாய்ப்பில்லாதலால், அங்குள்ள இளைஞர், யுவதிகள் கொழும்பு போன்ற நகரங்களை நாடிச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படாது. தோட்டங்களிலுள்ள தொழில் பேட்டைகளிலேயே அவர்களால் கௌரவமான முறையில் தொழில் செய்யக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும்.

இது விடயத்தை ஜனாதிபதியிடம் தெரிவித்ததும், அதற்கான வரைபுகளை தன்னிடம் சமர்ப்பிக்கும்படியும், அது குறித்து கூடிய கவனம் செலுத்துவதாகவும் கூறினார்.

தற்போதைய நிலையில், தோட்டங்களில் தோட்ட உத்தியோகத்தர்கள் போதியளவில் இன்மையால் அவர்களுடைய வாசஸ்தலங்கள், கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இவ்வாசஸ்தலங்கள் கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதால், காலப்போக்கில் இவ் வாசஸ்தலங்களின் கதவுகள், யன்னல்கள், கூரைகள் போன்றவை காணாமல் போய்விடுகின்றன.

தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு குடியிருப்புக்கள் இல்லாது, பல குடும்பங்கள் ஒரே குடியிருப்பில் வாழக்கூடிய அவலங்கள் நீடிக்கின்ற நிலையில், மேற்குறிப்பிட்ட வாசஸ்தலங்கள் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றன. இவற்றினை தொழிலாளர்களுக்கு வழங்கும் வேலைத்திட்டமொன்றும் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஜனாதிபதி இவ்விடயம் குறித்து கவனம் எடுக்குமாறு, தமது அதிகாரிகளைப் பணித்தார்.

பெருந்தோட்டங்களில் 150 , 200 வருடங்கள் பழமை வாய்ந்த லயக் குடியிருப்புக்களும் இருந்து வருகின்றன. இக்குடியிருப்புக்களை சீரமைப்பு செய்தல் வேண்டும். புதிய வீடமைப்புத்திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கூறினேன். ஜனாதிபதி, பெருந்தோட்டப்பகுதிகளுக்கு இந்திய வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்றார்.

அதற்கு நான், இந்திய அரசினால் முதல்கட்டமாக நாலாயிரம் வீடுகளும், 2ம் கட்டமாக பத்தாயிரம் வீடுகளுமாக 14 ஆயிரம் வீடுகளே உள்ளன. ஆனால், பெருந்தோட்டப்பகுதிகளுக்கு இரண்டரை இலட்சம் பேருக்கு தனி வீடுகள் தேவைப்படுகின்ற நிலையில், 14 ஆயிரம் வீடுகளே, இந்திய அரசு வழங்குகின்றது. இவ்வீடமைப்புத்திட்டத்தின் மூலம், எமது மக்களின் வீட்டுத் தேவைகள் நிறைவடையாது. ஆகையினால், எமது அரசு மூலம் வீடமைப்புத்திட்டங்களை துரிதப்படுத்த வேண்டும் என்றேன். இதனை ஜனாதிபதி செவிமடுத்ததுடன், இது குறித்தும் கவனம் செலுத்துவதாகக் கூறினார்.

பெருந்தோட்டங்களிலுள்ள மரங்கள் தோட்ட முகாமைத்துவங்களினால், வெட்டி விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அதன் மூலம் கிடைக்கும் பலகோடி ரூபா கொண்ட பெரும் வறுமானம் குறித்து, வெளியிடப்படுவதில்லை. அவ் வருமானம் தோட்ட முகாமைத்துவங்களினால் சுரண்டப்படுகின்றன. அது போன்று, தோட்ட சொத்துக்களும் சூறையாடப்படுகின்றன.

பல கோடி ரூபா பெறுமதியான இம் மரங்களை தற்போதைய கம்பனிக்காரர்களோ, முகாமைத்துவத்தினரோ நாட்டியதில்லை. இவர்களுக்கு இம் மரங்களுக்கு உரிமைகோரவோ அம்மரங்களை வெட்டி விற்பனை செய்யவோ எவ்வகையிலும் அருகதையில்லை.

பல தசாப்தங்களுக்கு முன் இம் மரங்கள் நாட்டப்பட்டன.. இம் மரங்களுக்கு உரிமை கோருவதற்கு தொழிலாளர்களுக்கு மட்டுமே முடியும். ஆனாலும் பெருந்தோட்ட காணிகள் அதிலுள்ள வளங்கள் அரசுக்கே சொந்தமாகும். தற்போதைய கம்பனிகாரர்கள் தோட்டங்களை பராமரிக்கின்ற குத்தகைகாரர்கள் மட்டுமேயாகும். தோட்டங்களில் எந்தவொரு சொத்தையும் தோட்ட நிருவாகத்தினாலும் சூறையாட முடியாது. அத்துடன் அக் குத்தகை உரிமையை வைத்து தோட்ட முகாமைத்துவத்தினர் தோட்ட மரங்களை வெட்டி விற்பனை செய்து பெரும் வறுமானம் பெறுகின்றன.

இவ்வகையில், கிடைக்கும் வருமானத்தில் குறைந்த பட்சம் 50% வீத வருமானமாவது, தோட்டத் தொழிலாளர்களின் சேம நலன்களுக்கு பயன்படுத்தும் வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படல் வேண்டும். இது குறித்தும், ஜனாதிபதி கூடிய கவனம செழூத்துவதாகக் கூறினார்.

மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் 7500 மலசலகூடங்கள் தேவையென்று ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. கடந்த அரசின் காலத்தில் 500 மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆகவே, இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி, தேசிய வேலைத்திட்டமொன்றின் கீழ் தேவைப்படும் மலசலகூடங்களை நிருமாணிக்கும் செயற்பாடுகளை ஆரம்பிக்கப்படல் வேண்டும். இது விடயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

பெருந்தோட்டங்களில் தோட்ட முகாமைத்துவங்களுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்டு வரும் பிணக்குகள், முரண்பாடுகள் குறித்து பொலிஸ் நிலையங்களில் செய்யப்படும் முறைப்பாடுகள் விசாரணைகள் செய்யப்படும் போது, தொழிலாளர்களுக்கு திருப்தியின்மை ஏற்படுகின்ற நிலையினைக் காணமுடிகின்றது.

அத்துடன், தொழிலாளர்கள் தோட்ட நிருவாகங்களுக்கெதிராக கொண்டு செல்லப்படும் முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. தோட்ட நிருவாகங்கள், தொழிலாளர்களுக்கெதிராக செய்யப்படும் முறைப்பாடுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தொழிலாளர்கள் பாதிப்பு அடையும் வகையில், நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அப்படியே இரு தரப்பு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்திலும், தொழிலாளர்கள் பாதிப்படையும் வகையிலேயே, நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் என்றதும் பாகுபாடுகள், பாரபட்சங்கள் காட்டப்பட்டு வருவதும் வழமையாகியுள்ளது. இதனை ஜனாதிபதி செவிமடுத்ததுடன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பாதைகள் அமைப்பு தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பதிலாக 'மகநெகும' அமைப்பினை சக்திமயப்படுத்தினால், பாதை அபிவிருத்திகள் துரிதமாக மேற்கொள்ளப்படுமென்பது பலரது கருத்தாகும். ஆகவே, 'மகநெகும' அமைப்பின் ஊடாகவே, பாதை அபிவிருத்திகள் இடம்பெறுவது உசிதம் என்று கருத வேண்டியுள்ளது. இதனையும் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.


ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவுடன், ஜனாதிபதியின் மாளிகையில் 17.03.2021 இச்சந்திப்பு இடம்பெற்றது. இவ்வேளையிலேயே, மேற்கண்ட எனது கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்தேன். தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தோட்ட இளைஞர், யுவதிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், தோட்ட இளைஞர் யுவதிகளுக்கு அரச தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல் குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினேன்.

எனது கோரிக்கைகளை ஜனாதிபதி உன்னிப்பாக செவிமடுத்ததுடன், அவற்றினை நிறைவேற்ற அவரது உரிய செயலாளர்களிடம் வலியுறுத்திக் கூறினார். அவ்வேளையில் ஜனாதிபதியுடன், அவரது செயலாளர் பி.பி. ஜயசுந்தர, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சுகிஸ்வர பண்டார, ஜனாதிபதியின் இணைப்புச்செயலாளர் இசுறு ஹேரத் மற்றும் அமைச்சுகளின் செயலாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

**– எம். செல்வராஜா**

# ஆயிரம் ரூபா சம்பள உயர்வு:

## குறைந்தபட்ச நாள் சம்பளம் 1000 என பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றலாம்



### சிரேஷ்ட சட்டத்தரணி இ. தம்பையா

**மக்கள் தொழிலாளர் சங்கத்தினதும் இலங்கை கொம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரத்தினதும் பொதுச் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி இ. தம்பையாவுடன் ஓர் உரையாடல்**

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை 1000 ரூபா என பிரகடனம் செய்த அரசாங்க வர்த்தமானி அறிவிப்பை இரத்து செய்யும்படி கேட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பெருந்தோட்டக் கம்பனிகள் தொடுத்திருக்கும் வழக்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி இந் நாட்டின் அனைத்து தொழிலாளர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள பாரிய சவால் என்றே கருத வேண்டும். அண்மைக்காலமாக தோட்ட நிர்வாகங்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டு தொழிலாளர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

தனியொரு தொழிற்சங்கமோ, சில தொழிற்சங்கங்களோ இப்பிரச்சினையை கையாள முடியாது. அதனால் அனைத்து தொழிற்சங்கங்களும் பொதுவாக கலந்துரையாடி பொறுப்புகளை கூட்டாக சுமந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் சம்பள உயர்வுப் பிரச்சினைக்கு திடமான தீர்வுகாணப்பட வேண்டுமெனின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆகக்குறைந்த அல்லது குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் ரூபா 1000வாக இருக்க வேண்டுமென பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட வேண்டும். இதற்கென தனியான சட்டத்தை கொண்டு வரலாம் அல்லது தற்போது நடைமுறையில் இருக்கும் தேசிய குறைந்தபட்ச சம்பளச் சட்டத்திற்கு அல்லது இந்திய தொழிலாளர்கள் குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தில் திருத்தத்தை கொண்டுவரலாம். இதற்கு பாராளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவைப்படாது. சாதாரண பெரும்பான்மை போதுமானது. அவ்வாறு சட்டமியற்றப்படுவதை நீதிமன்றங்களும் கேள்விக்குட்படுத்த முடியாது.

எப்போதுமே செய்ய வேண்டிய விடயங்களை உரிய காலத்தில் செய்யாது விடப்படும் போதெல்லாம் பிரச்சினைகள் வரலாற்று பிரச்சினைகளாகி விடுகின்றன.

**கே: சம்பளத்தை உறுதி செய்துள்ள அரசாங்க வர்த்தமானி அறிவித்தலை நீதிமன்றத்தால் கேள்விக்குட்படுத்த முடியுமா?**

வர்த்தமானி அறிவிப்பை செய்வதற்கு முன்னர் கடைப்பிடிக்க வேண்டிய, நிறைவேற்றப்பட வேண்டிய நடமுறைகள் சரியாக, முறையாக, கடைப்பிடிக்கப்படாமலும், நிறைவேற்றப்படாமலும் இருந்தாலும் அவ்வறிப்பு இருக்கின்ற சட்டங்களும், அரசியல் யாப்பிற்கும், இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கும் முரணாக இருந்தாலோ, தவறான நோக்கங்களை கொண்டிருந்தாலோ அதனை கேள்விக்குட்படுத்தலாம். இலங்கையில் வழக்கிடும் உரிமை நேரடியாக பாதிக்கப்படுபவர்களுக்கும், பொது நலனில் அக்கறை கொண்டோருக்குமே இருக்கிறது. அதனால் இவ்வறிவிப்பை தோட்டக் கம்பனிகள், இலங்கை முதலாளிமார் சம்மேளனம் கேள்விக்குட்படுத்தலாம்.

**நேர்கண்டவர்: பி.வீரசிங்கம்...**

இந்த வர்த்தமானி அறிவிப்பு தவறான நோக்கிலோ, இயற்கை நீதி கோட்பாடுகளுக்கோ, அரசியல் யாப்பிற்கோ, சட்டங்களுக்கு முரணாகவோ வெளியிடப்பட்டது என்று கூறமுடியாது. ஆனால் கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்படாமல் சம்பள நிர்ணய சபைக்கு இவ்விடயத்தை பாரப்படுத்தியமை, சம்பள நிர்ணய சபை உறுப்பினர்களின் நியமனம், ஆட்சேபனைகளை விசாரிக்காமை, பெரும்பான்மை வாக்குகளால் சம்பள நிர்ணய சபை தீர்மானம் எடுத்தமை போன்ற விடயங்களில் சரியான நடமுறைகள் பின்பற்றப்படாமை குறைபாடுகளாக இருந்திருக்கலாம். இவற்றால் கம்பனிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென நிரூபிக்கப்படுமானால் அவ்வறிவிப்பு இரத்து செய்யப்படலாம்.

ஆனால் ஆரம்பத்திலேயே சம்பள நிர்ணய சபை அமைக்கப்பட்டதை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்காமல் அதன் அமர்வுகளில் கலந்துகொண்டு இறுதி தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் கம்பனிகள் சம்பள நிர்ணய சபையின் முடிவை கேள்விக்குட்படுத்துவதற்கு சட்ட அடிப்படை இருப்பதாகத் தெரியவில்லை. இவ்விடயங்களை கம்பனிகளின் எழுத்தாணை வழக்கில் பிரதிவாதிகளாக குறிக்கப்பட்டுள்ள சம்பள நிர்ணயசபையும் அமர்வுகளில் கலந்து கொண்டிருந்த தொழிற்சங்கங்களும் தொழில் ஆணையாளரும் தொழில் அமைச்சரும் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். இவ்வழக்கில் பொதுநலனில் அக்கறை கொண்டவர்களுக்கு இடையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை.

**கே: கம்பனிகள் தொடுத்துள்ள வழக்கின் காரணமாக தொழிலாளர்களுக்கு ரூபா 1000 தற்போதைக்கு கிடைக்காதா?**

நீதிமன்ற வழக்கில் வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்தாமல் இடைநிறுத்தி வைக்க இடைக்கால தடையுத்தரவு வழங்கப்படுமானால் வழக்கு முடிவடையும் வரை ரூபா 1000 கிடைக்காது. வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும் வரை இழுத்தடிக்கப்படும். அதேசமயம், சம்பள நிர்ணய சபையின் தீர்மானித்தின் படி ஆயிரம் ரூபா எப்படி முழுமையாக கிடைக்கும் என்பதும் தெளிவாக இல்லை. கம்பனிகள் 900 ரூபாவை வழங்கும்போது 100 ரூபாவை எவ்வாறு, எப்படி வரவு செலவுத்திட்ட கொடுப்பனவாக அரசாங்கம் வழங்கும் என்பது பற்றியும் தெளிவில்லை.

**கே: ரூபா ஆயிரம் கிடைப்பதை உறுதிசெய்ய வேறென்ன வழிமுறைகள் இருக்கின்றன?**

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக நிர்ணயித்து பாராளுமன்றத்தில் சட்டமியற்றலாம். இருக்கின்ற குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரலாம். அல்லது புதிய சட்டத்தை கொண்டுவரலாம். இவ்வாறான சட்டத்தை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம். மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவைப்படாது. இவ்வாறான சட்டத்தை கொண்டு வருவதை தடுக்கும் வகையில் நீதிமன்றம் தலையீடு செய்யாது.

**கே: கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டால் தொழிலாளர்களுக்கு தொழிற்சட்ட உரிமைகள் இல்லாமல் போய்விடுமா?**

கைத்தொழில் பிணக்குகள் சட்ட ஏற்பாட்டின்படியே கூட்டு ஒப்பந்தம் ஏற்படு'த்தப்படலாம். அதன் ஏற்பாடுகள் ஏற்கனவே சட்டங்களில் இருக்கும் உரிமைகளை பறிப்பதாக இருக்க முடியாது. அச்சட்ட உரிமைகளை விட மேலானதாக கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகள் இருக்க வேண்டும். கூட்டு ஒப்பந்த தரப்பொன்று (தொழிற்சங்கத் தரப்பு, கம்பனிகள் தரப்பு) கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக ஒரு மாத அறிவிப்பை செய்து அதனை முடிவுறுத்தலாம். அவ்வாறு முடிவுறுத்தினால் கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகள் செல்லுபடியாகாது. அவ்வாறான சூழ்நிலையில் தொழிலாளர்கள் உரிமையற்ற அடிமைகளாக்கப்பட மாட்டார்கள். அவர்களுக்கு தொழிற்சட்டங்களின் பாதுகாப்பு தொடர்ந்து இருக்கும். கைத்தொழில் நீதிமன்ற, தொழில் நியாய சபை பாதுகாப்பு என்பன தொடர்ந்து இருக்கும்.

தற்போது கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறும் அறிவிப்பை கம்பனிகள் செய்துள்ளதாக கூறப்படுகிறது. அவ்வாறெனின் அவர்கள் பதிவு செய்துள்ளதாக சொல்லப்படும் எழுத்தானை வழக்கை தொடர்ந்து கொண்டு நடத்து முடியுமா என்பதும் சட்டரீதியான விவாதத்திற்குரியதாகும்.

> **'கூட்டு ஒப்பந்தம் முடிவுக்கு வந்தாலும் அதன் காரணமாக தொழிலாளர்கள் உரிமையற்ற அடிமைகளாகிவிட மாட்டார்கள். அவர்களுக்கு தொழில் சட்டங்களின் பாதுகாப்பு தொடர்ந்து இருக்கும். ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறிய பின்னர் இந்த வழக்கை நடத்துவதற்கான தகுதியை கம்பனி தரப்பு இழந்து விடுமோ என்ற கேள்வியும் உள்ளது'**

## நீதிமன்றத்தில் எமக்கு எதிராகவும் தீர்ப்பு வரலாம்!



### எச்சரிக்கிறார் வி. புத்திரசிகாமணி

**முன்னாள் நீதி சட்ட மறுசீரமைப்பு பிரதி அமைச்சரும் முன்னாள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி பொறுப்பு நிதியத்தின் தலைவருமான வடிவேல் புத்திரசிகாமணியுடன் ஓர் நேர்காணல்**

**நேர்கண்டவர்: நூரளை சுப்பிரமணியம்...**

**கே: கடைசியாக நீங்கள் எமக்கு அளித்திருந்த செவ்வியில் சம்பள நிர்ணய சபையின் முடிவு. தமக்கு சாதகமாக இல்லாவிட்டால் கம்பனி தரப்பு நீதிமன்றம் செல்லும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அது நடந்து விட்டது. இவ்வழக்கு இழுபட்டுச் செல்லுமா? தீர்ப்பு எவ்வாறு அமைய வாய்ப்புள்ளது? தொழிலாளர் தரப்புக்கு பாதகமாக அமைந்தால் அடுத்ததாக என்ன?**

சம்பள நிர்ணய சபையில் கம்பனிகளுக்கு சார்பான தீர்மானம் எடுக்கப்படாத நிலையில் அதற்கு எதிராக கம்பனிகள் நீதிமன்றம் செல்வார்கள் என நான் ஏற்கனவே கூறியிருந்தேன். ஏனெனில் நான் கடந்த 1992 ஆம் ஆண்டிற்கு முன் சம்பள நிர்ணய சபை உறுப்பினராக செயற்பட்டதோடு கூட்டு ஒப்பந்தத்தின் ஆரம்பகாலத்திலிருந்தே அதன் செயல்பாடுகளில் பங்கு பற்றியவன். தொழிலாளர்களுக்கு எது நன்மை பயக்கும் என்பதை நன்கு அறிந்தவன். தேவையான தொழிற் சட்டங்களையும் நன்கு அறிந்தவன். எனவே சம்பள நிர்ணய சபை முடிவுகளை எதிர்த்து வழக்காட முடியும் என்பதை உங்கள் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் அரசாங்க வர்த்தமானி என்பது ஒரு சட்டப் புத்தகமல்ல, அரசாங்க தீர்மானங்களை அறிவிக்கும் ஓர் அறிவித்தல் ஊடகமே. வர்த்தமானி அறிவித்தலுக்கு குறிப்பிட்ட காலத்தில் எவரும் எதிர்ப்பு கூறாவிட்டால் மக்கள் அதனை ஏற்றுக் கொண்டதாக கருதலாம். அப்போது அதை அரசாங்கம் நடைமுறைப் படுத்தலாம். ஆனால் கம்பனிகள் மற்றும் சிறுதோட்ட உரிமையாளர்கள் நீதிமன்றத்தை நாடியிருப்பதால் எமக்கு எதிராக தீர்ப்பு வரவும் வாய்ப்புள்ளது. அவர்கள் கூறுகின்ற (COP) உற்பத்தி செலவில் சம்பளம் 65 சத வீதத்துக்கும் அதிகமாக இருப்பதாகவும் அதற்கு மேலதிகமாக பல்வேறு சலுகைகள் வழங்கப்படுவதாகவும் தேயிலை விலையில் (NSA) சராசரி விற்பனை விலை குறைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். அதற்கான ஆதரங்களையும் சமர்பித்துள்ளனர்.

அதேவேளை நாம், மக்களுடைய கஷ்டங்களையும் பொருட்களின் விலை ஏற்றத்தையும் வாழ்க்கைச் செலவையும் அடிப்படையாக கொண்டே சம்பள உயர்வு கோருகின்றோம். தோட்டக் கம்பனிகள் கூறுகின்ற விடயங்களுக்கு எதிராக பேசுவதற்கான தகவல்களை திரட்டி எவரும் பேசுவதில்லை. மாறாக இதை ஒரு அரசியல் பிரச்சினையாக நாம் முன்னெடுப்பதால் அது எந்தளவிற்கு நீதிமன்றத்திற்கு ஏற்புடையதாக இருக்கும் என்று தெரியவில்லை. எவற்றை வைத்து தீர்ப்பு கிடைக்கும் என்பதை உணர்ந்து எமக்கு எவையெல்லாம் சாதகமற்றவை என்பதை உணர்ந்து எமது சட்டத்தரணிகள் வாதாட வேண்டும்.

**கே: அரசாங்கம் சட்டம் இயற்றி ஆயிரம் ரூபா வேதனத்தை வழங்கச் செய்தால் தனியார் தொழில் துறை முதலீட்டாளர்களுக்கு அது தவறான சமிக்ஞையாக அமைந்துவிடக் கூடுமல்லவா?**

அரசாங்கம் சட்டம் இயற்றி ஆயிரம் ரூபா வழங்க வேண்டுமென்றால் இப்பிரச்சினை நீதிமன்றத்திற்கு செல்லும் முன்னரே அரசாங்கம் சட்டம் இயற்றியிருக்க வேண்டும். சட்டம் இயற்று முன் நீதிமன்றத் தீர்ப்பு வந்துவிட்டால் இப்பிரச்சினை மேலும் சிக்கல்களை உருவாக்கும். அதேநேரம் தனியார்துறையினர் அல்லது முதலீட்டாளர்களுக்கு இது ஓர் தவறான சமிக்ஞையை கொடுக்கவும் முடியும். அது எதிர்காலத்திற்கு நல்லதல்ல இதனால் தான் ஆரம்ப காலத்திலிருந்து கூட்டு ஒப்பந்தத்தை ஆதரித்து வந்திருக்கிறேன்.

**கே: சம்பள சபை என்றால் சம்பள சபை, கூட்டு ஒப்பந்தம் என்றால் கூட்டு ஒப்பந்தம் என்ற நிலைப்பாட்டில் கம்பனிகள் உள்ளன. அரசனை நம்பி புருஷனை கைவிட்ட மாதிரியாகி விடுமா?**

தோட்ட முதலாளிகள் எம்மைப் போலவே அவர்களுடைய இலாப நட்டத்தை கருத்தில் கொண்டே செயல்படுவார்கள். அவ்வகையில் அவர்கள் தற்பொழுது சம்பள நிர்ணய சபை ஏற்றுக் கொண்டு கூட்டு ஒப்பந்தத்திலிருந்து விலகி கொள்ள முடிவு செய்துள்ளார்கள். இதை செய்வதற்கான வாய்ப்பு அதிகம்.

**கே: தேயிலைத் தோட்ட ஆரம்ப காலத்தில் இருந்து சில நடைமுறைகள், சலுகைகள், வசதிகள் என்பன தொடர்ச்சியாக தோட்டங்களில் எழுதப்படாத சட்டங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. தொழிற்சங்கங்களுக்கு சந்தா பிடிப்பது தொடர்பாகவும் ஒப்பந்தம் உள்ளது. இவற்றை இல்லாமல் செய்துவிட்டு ஆயிரம் ரூபாய் மட்டும்தான் என்று கம்பனிகளால் முடிவெடுத்துவிட முடியுமா?**

நிச்சயமாக முடியாது. ஏனெனில் தொழிலாளர்கள் அனுபவித்து வந்த எந்த உரிமைகளையும் யாராலும் தட்டிப்பறிக்க முடியாது. ஆனால்

இவ்வாறு அனுபவித்த பல்வேறு சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அதை நிறுத்துகின்ற பொழுது எந்த தொழிற்சங்கமும் அதற்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை. அவ்வாறு நாம் இழந்த சலுகைகள் பல உண்டு. அவற்றை என்னால் விபரிக்க முடியும். ஆனால் இன்றைய தொழிற்சங்கவாதிகளுக்கு தெரியாது. சுக்குத் தண்ணி வழங்குவதிலிருந்து லயன் வாசலை கூட்டும் வரையும் அத்துடன் இன்னும் பல எத்தனையோ சலுகைகள் இருந்தன. சந்தா பிடிப்பது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் (CEEF) கடந்த 1960 ஆம் ஆண்டின் இறுதியில் 7 அம்சம், 11 அம்ச ஒப்பந்தத்தை செய்து கொண்டன. அந்த ஒப்பபந்தத்தின்படியே சந்தா அறவிடப்பட்டு வருகிறது. இப்போதுள்ள இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அன்று இல்லை. அன்றைய தோட்டக் கம்னிகளும் இல்லை. ஆனால் அரசாங்க தோட்டங்களை சுவீகரித்த பின்னரும் அன்றைய சலுகைகள் பல தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தன. இதை இன்றைய இலங்கை முதலாளிமார் சம்மேளனம் ( EFC) தடைசெய்ய முடியாது.

**கே: கம்பனி தரப்பு கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து சட்டப்படி விலகினாலோ அல்லது தொழிலாளர் தரப்பு ஒப்பந்தத்தில் இருந்து விலகினாலோ மறுபடியும் மற்றொரு கூட்டு ஒப்பந்தத்துக்கு செல்ல முடியும் தானே?**

நிச்சயமாக முடியும். மீண்டும் இரு தரப்பினரும் பேசி ஒரு முடிவிற்கு வரலாம். இருதரப்பினரும் முடிவுக்கு வந்தாலும் இறுதியில் அரசாங்கம் அதை வர்த்தமானியில் வெளியிட்டே நடைமுறைக்கு கொண்டு வரமுடியும். அப்பொழுது எதிர்ப்பில்லாத முத்தரப்பு ஒப்பந்தமாகும். இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

**கே: ஆயிரம் ரூபா விவகாரம் தவறாகக் கையாளப்பட்டு விட்டதா? தொழிற்சங்க அனுபவமற்றவர்கள் சங்கங்களில் இருப்பதாலும், தொழிலாளர் உரிமைகள் அரசியல் மயப்படுத்தப்பட்டதாலும் விவகாரம் குழம்பிப்போய் விட்டதாகக் கருதுகிறீர்களா?**

ஆயிரம் ரூபா சம்பளம் என்ற யோசனை எவ்வாறு வந்ததென்று பார்ப்போம். அப்பொழுது இ.தொ.கா நிதிச் செயலாளராகவும் பிரதியமைச்சராகவும் விளங்கிய முத்து சிவலிங்கம் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது அப்பொழுது 300 ரூபாவாக இருந்த சம்பளம் போதாது என்றும் ஆயிரம் ரூபா கொடுத்தாலும் போதாதென்றும் குறிப்பிட்டார். ஊடகங்கள் அந்த விடயத்தை பெரிதுப்படுத்தி அதை ஒரு அரசியல் பிரச்சினையாக மாற்றின. இன்றும் கூட வாழ்க்கைச் செலவிற்கு ஆயிரம் ரூபா போதாதுதான். எனவே இந்த விடயத்தை நாம் சரியான முறையில் கையாளவில்லை. என்பதே எனது கருத்தாகும். கம்பனிகளோடு மீண்டும் பேசி தொழிலாளர்களுடைய வருமானத்தை அதிகரிக்கக் கூடிய வேறு விடயங்களையும் கவனிக்க வேண்டும்.

> **'ஆயிரம் ரூபா சம்பள உயர்வு பற்றி முதலில் பிரஸ்தாபித்தவர் முத்து சிவலிங்கம். ஒரு கூட்டத்தில் பேசும்போது 300 ரூபாவல்ல, ஆயிரம் ரூபாவும் போதாது எனக் குறிப்பிட, ஊடகங்கள் அதை பெரிதாக்கி விட்டன. அப்படித்தான் ஆயிரம் ரூபா வந்தது. இன்றைய நிலையில் ஆயிரமும் போதாதுதான். இவ்விடயத்தை நாம் முறையாகக் கையாளவில்லை என்பதே என் கருத்து'**

**கே: சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்பற்றி அனுபவமிக்க தொழிற்சங்க அரசியல்வாதியாகிய நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

சம்பள நிர்ணய சபையில் இரண்டு விடயங்களுக்கான தீர்மானங்களை எடுத்திருக்க முடியும். ஆனால் அனுபவமில்லாத காரணத்தால் தொழிற்சங்கவாதிகள் அவ்விடயத்தில் கோட்டை விட்டனர். அந்த இரண்டு விடயங்களில் ஒன்று ஆகக்குறைந்த சம்பளம் அல்லது அடிப்படை சம்பளம். இரண்டாவது வாக்கை செலவு புள்ளிக்கேற்ப கொடுப்பனவு (COLA). இதைதான் கடந்த 1992 ஆம் ஆண்டு நான் செய்தேன். அன்று தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்ட வாழ்க்கை செலவு புள்ளி 4 ஆக இருந்ததை 6 ஆக உயர்த்துவதற்கு செயல்பட்டேன். அதை நடைமுறைப்படுத்துவதற்கு அன்றைய அரசாங்க பிரதிநிதிகள் சம்பள நிர்ணய சபையில் எமக்கு ஆதரவு தந்ததோடு முதலாளிமார் பிரதிநிதிகள் அதற்கு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

அன்றைய சம்பள நிர்ணய சபை உறுப்பினர்களாக இருந்த மறைந்த தலைவர்களான ஏ. அஸீஸ், எஸ். நடேசன், வீ. எஸ். ராஜா, எம். சுப்பையா உட்பட பலரும் என்னை பாராட்டினார்கள். அதன் பின்னர் அதை பிரபல தொழிற்சங்கவாதியாக இருந்த அமைச்சர் (FREEZE) உறைநிலையில் அதை வைத்துவிட்டார். அது ஒரு பெரிய கதை. இல்லாவிட்டால் எங்களுக்கு எப்போதோ ஆயிரம் ரூபா கிடைத்திருக்கும்!



கொழும்பு தேசிய நற்பணி மன்றம், படைப்பாளரும் விமர்சகருமான கே.எஸ். சிவகுமாரனின் நீண்ட இலக்கியபணியை கௌரவிக்குமுகமாக அவருக்கு கடந்த மார்ச் மூன்றாம் திகதி பாராட்டு விழாவை நடத்தி பொற்கிழி வழங்கி பொன்னாடை போர்த்தியது. படத்தில் தேசமாண்ய சிவாஜி மௌலானா கே.எஸ் க்கு பொன்னாடை போர்த்துவதையும் அருகில் சுபைத்தீன் மற்றும் நற்பணிமன்றத் தலைவர் எம். ஜி. நவாஸ்டீன் ஆகியோரையும் காணலாம்.

# ஐவன் ரொயிஸ்டனுக்கு கௌரவம்

தேசபந்து விருதுநீர்கொழும்பு கொச்சிக் கடை, தோப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஐவன் ரொயிஸ்டன் குரூஸ் புள்ளேக்கு ஆயுர்வேத மருத்துவத் துறையில் அவர் ஆற்றியுள்ள மகத்தான சேவையை கௌரவிக்கும் வகையில் எம்பிலிபிட்டி தர்ம சக்தி மன்றம் 'தேசபந்து' பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது. ஆயுர்வேத மருத்துவத்தில் பல்வேறு மாற்றங்களை அறிமுகப்படுத்தி ஐவன் ரொயிஸ்டன் இலங்கையின் ஆயுர்வேத மருத்துவத்தை இத்தாலி போன்ற நாடுகளிலும் பிர சித்தப்படுத்தி அத்துறைக்கு அளப்பரிய சேவை செய்துள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஸ)





புத்தளம் மாநகர பிதா (மேயர்) பாயிஸை இலங்கை இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் புத்தளத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

# விருது பெறும் மருத்துவர் ச. முருகானந்தன்



நாடறிந்த எழுத்தாளரும் மருத்துவருமான டாக்டர் ச. முருகானந்தனுக்கு மனிதநேய சமூகம் பணிகளுக்கான உயர் விருது ஆபிரிக்க சுதந்திரபோராட்ட வீரர் நெல்சன் மண்டேலாவின் பெயரில் வழங்கப்பட்டது. அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப ஒக்கிட் அரங்கில் இடம்பெற்ற சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் வைபவத்தில் இவ்விருதினை பேராசிரியர் டாக்டர் டெக்ஸ்ரா பெர்னாண்டோ வழங்கி கௌரவித்தார்.

நெருக்கடியான காலகட்டத்தில் வன்னியில் 25 வருடங்கள் அரச மருத்துவராக பணியாற்றியபோது இடம்பெயர்ந்த வந்த மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளுக்காகவும், பத்திரிகை, தொலைக்காட்சி என்பவற்றில் மேற்கொண்ட மருத்துவ விழிப்புணர்வுகளுக்காகவும், போதைப் பொருள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வுகளை தேசிய ரீதியில் மேற்கொண்டு வருகின்றமைக்காகவும் இவ்விருது வழங்கப்பட்டது.


# இலங்கை வங்கி

**உலகளாவிய அதி சிறந்த 1000 வங்கிகளுள் ஒன்று என தரப்படுத்தப்பட்ட அரச வர்த்தக வங்கியும் இலங்கையின் 1ம் தர வங்கியுமாகிய இலங்கை வங்கியின் சட்டப்பிரிவில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையும் ஆற்றலும் ஊக்கமும் அனுபவமும் கொண்ட இளம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## உதவி சட்ட உத்தியோகத்தர் பயிலுநர்

### தகைமைகளும் அனுபவமும்

➢ **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்**

➢ **தகைமைகள்**

சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு

➢ **அனுபவம்**

நீதிமன்றத்தில் குடியியல் வழக்குகள், நீதிமன்ற நடவடிக்கைகள், காணி சம்பந்தப்பட்ட உறுதி உரிமைகளை பரீட்சித்தல், நொத்தாரிசு வேலை, தொழிலாளர் மற்றும் தொழில் நீதிமன்ற வேலைகள் தொடர்பில் 3 வருட அனுபவம்.

➢ **ஏனைய தகைமைகள்**

கணனி அறிவு மற்றும் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது அத்தியாவசியமாகும்.

➢ **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 வருடங்கள் அல்லது அதற்கு குறைவாக இருத்தல்.

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

◆ பயிற்சிக் காலம் இரண்டு வருடங்களாகும். பயிற்சிக்காலத்தினுள் மாதாந்த கொடுப்பனவாக ரூபா.75,000/= வழங்கப்படும்.

◆ இப்பதவி வங்கிச் சேவையின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும். எனினும் சாதாரண வங்கியியல் துறைக்குப் புறம்பானதாகும் (மூடிய சேவை).

◆ பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையும் பட்சத்தில் உதவி சட்ட உத்தியோகத்தர் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்.

◆ தேவைப்படும்போது வார இறுதி/விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

◆ வங்கியின் தேவைப்பாட்டிற்கு அமைவாக நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருக்க வேண்டும்.

### தெரிவு முறை

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுகள் நடைபெறும்.

### விண்ணப்பிக்கும் முறை

உங்களது விண்ணப்பத்தை www.boc.lk என்ற எமது இணையத்தள முகவரியின் ஊடாக (Careers என்ற பகுதியின் கீழ்) **2021 ஏப்ரல் 03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் அனுப்புவதோடு எதிர்கால தேவைகளுக்காக தங்களது விண்ணப்பத்தின் **“இணையத் தொடர்பு எண்ணை”** பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும்.

**மேலே கூறப்பட்ட முறையில்லாது வேறு ஏதேனும் முறைகளில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**மேற்குறிப்பிட்ட தகைமைகள் இல்லாத அல்லது பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு விண்ணப்பமும் மேலதிக அறிவித்தலின்றி ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.**

**மனித வளப் பிரிவு**
**இலங்கை வங்கி**
**தலைமை அலுவலகம்**
**கொழும்பு 01.**

தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை (MEPA)

நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாயத் தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

MEPA

## தேசிய நீல விருதுகளுக்காக விண்ணப்பங்களை கோரல் - 2021




கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்கும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு தீவிர நடவடிக்கையை செயற்படுத்தும் ஹோட்டல்கள், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் கடற்கரை பூங்காக்கள் ஆகியவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் நீல விருது நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வள பாவனை வினைத்திறனை அதிகரிப்பதன் மூலம், இந்த சுற்றுச்சூழல் நடைமுறையை சிநேகபூர்வமான சுற்றாடல் மற்றும் முழுமையான அமைப்பில் நிலைபெறுதகு செயற்பாட்டு முறைமையூடாக கற்றுக் கொடுத்தலே இதன் நோக்கமாகும். கைத்தொழில்கள், சுற்றுலாத்துறை, கடற்கரை, பூங்காக்கள் மற்றும் மீன்பிடித்தொழில் போன்றவை நீடித்து நிலைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் நல்லொழுக்க மாற்றத்தை உருவாக்குவதற்காகவும் தேசிய நீல விருதுகள் வழங்கப்படுகின்றன.



கீழே குறிப்பிட்டுள்ள மூன்று துறைகளில் தகவுத்திறனை பெற்றுக் கொண்டவர்களுக்கு இந்த தேசிய நீல விருது வழங்கப்படும்.

- கடலோர ஹோட்டல்களுக்கான தேசிய நீல விருது
- மீன்பிடித் துறைமுகங்களுக்கான தேசிய நீல விருது
- கடற்கரை பூங்காக்களுக்கான தேசிய நீல விருது

### பொதுவான நிபந்தனைகள்:

- இந்த தேசிய நீல விருதுகள் விழாவானது கொழும்பில் 2021 அக்டோபரில் நடைபெறும்.
- விண்ணப்பமானது மூன்று மொழிகளில் (சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ்) ஏதாவதொன்றில் ஏற்றுக் கொள்ளப்படும்.
- உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமானது உரிய ஆவணங்களுடன் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, **இல. 177, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு - 05** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு போட்டியும் விடய - நிபுணத்துவ நீதிபதிகள் குழாமினால் மதிப்பீடு செய்யப்படும். நீதிபதிகள் குழாமின் தீர்ப்பே இறுதியானதாகும்.

இப்போட்டி தொடர்பான மேலதிக தகவலை,
www.mepa.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பெற்றுக்
கொள்ளலாம் அல்லது 011-2554908, 0703331589 ஆகிய தொலைபேசி
இலக்கங்களினூடாக செயற்பாடுகளுக்கான
உதவி முகாமையாளர்
திரு. பிரபாத் அமரநாயக்கவுடன் தொடர்பு கொள்ளவும்.

**மேலேயுள்ள இணையத்தளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்ய முடியும்.**

**கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை,**
**நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாயத் தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**
இல.: 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட, கொழும்பு - 05.

# அஸ்ட்ராசெனகா தடுப்பூசிக்கும் இரத்தம் உறைதலுக்கும் தொடர்புள்ளதா?

மர்லின் மரிக்கார்

இன்றைய நவீன உலகில் மனித குலத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கிக் கொண்டிருக்கும் கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நான்கைந்து தடுப்பு மருந்துகள் தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ளன. அவற்றில் பைசர்பயோ என் டெக், அஸட்ராசெனகா, மொடர்னா, ஸ்புட்னிக் வி, சினோபாம் என்பன முன்னணியில் திகழ்ந்து கொண்டிருக்கும் தடுப்பு மருந்துகளாகும். இவற்றில் ஏதாவதொன்றை அவசர தேவையின் நிமித்தம் தத்தம் பிரஜைகளுக்கு வழங்கவென ஒவ்வொரு நாடும் அங்கீகாரம் அளித்திருக்கின்றது. அதற்கேற்ப குறிக்கப்பட்ட கால இடைவெளியில் இரண்டு சொட்டுக்கள் வீதம் ஊசி மூலம் முன்னுரிமை அடிப்படையில் இத்தடுப்பு மருந்து மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தொற்றின் இச்சவாலை கட்டுப்படுத்துவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ள தடுப்பு மருந்துகளில் ஒன்றான பைசர்பயோ என் டெக் தடுப்பு மருந்தைப் பிரித்தானியா 2020 டிசம்பர் 8 ஆம் திகதி முதல் தம் மக்களுக்கு வழங்க ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளும் கொவிட் 19 கட்டுப்பாட்டுக்கான தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்துகின்றன.

அந்த வகையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், அஸ்ட்ரா செனகா ( AstraZeneca) நிறுவனத்துடன் இணைந்து கண்டுபிடித்து தயாரித்துள்ள தடுப்பு மருந்தும் உலகின் பல நாடுகளில் பயன்பாட்டில் உள்ளன. அந்தடிப்படையில் தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள இந்திய நாட்டின் சீரம் நிறுவனத்தில் கொவிசீல்ட் என்ற பெயரில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்ற இத்தடுப்பு மருந்து, இந்தியா உட்பட இப்பிராந்தியத்திலுள்ள பல நாடுகளிலும் மக்களுக்கு வழங்கப்படவும் செய்கின்றது. அவற்றில் இலங்கையும் அடங்கும். இலங்கையானது இத்தடுப்பு மருந்துக்கே முதலில் அனுமதி வழங்கியது.

இதற்கேற்ப, இலங்கையானது, 2021 ஜனவரி 29 முதல் தம் மக்களுக்கு இத்தடுப்பு மருந்தை வழங்க ஆரம்பித்தது. அன்று தொடக்கம் மார்ச் 17 ஆம் திகதி வரையும் 08 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு இந்நாட்டில் இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டிருப்பதோடு தொடர்ந்தும் வழங்கப்பட்டும் வருகின்றன.

என்றாலும் இந்த அஸ்ட்ரா செனகா தடுப்பு மருந்தைப் பயன்படுத்தும் ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான டென்மார்க் நாட்டைச் சேர்ந்த ஒருவர் இத்தடுப்பு மருந்தைப் பெற்றிருந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் நரம்பில் இரத்தம் உறைதல் பாதிப்புக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். அத்தோடு இத்தடுப்பு மருந்தை ஐரோப்பிய கண்ட நாடுகளில் பெற்றுக்கொண்ட வேறு சில நாடுகளைச் சேர்ந்த சிலரும் இரத்தம் உறைதலால் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஏற்பட்ட அச்ச நிலையைத் தொடர்ந்து நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி உட்பட 14 நாடுகள் இந்த அஸ்ட்ரா செனகா தடுப்பு மருந்தைப் பயன்படுத்துவதைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளன.

இவ்வாறான நிலையில் இத்தடுப்பு மருந்து தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளதும் மக்கள் மத்தியிலும் அச்சமும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அஸ்ட்ரா செனகா நிறுவனம், இரத்தம் உறைதல் பாதிப்புக்கும் தடுப்பூசிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை' என்று அறிவித்துள்ளது. அத்தோடு ஐரோப்பிய கண்ட நாடுகளில் மாத்திரம் 17 மில்லியன் மக்களுக்கு இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்பில் நாம் மிக உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகின்றோம். இத்தடுப்பு மருந்து பெற்றவர்களில் 15 பேர் இரத்தம் உறைதல் பாதிப்புக்கும் 22 பேர் நுரையீரல் தொடர்பான உபாதைகளுக்கும் உள்ளாகினர். இது நாம் எதிர்பார்த்ததை விடவும் குறைவான எண்ணிக்கைப் பக்க விளைவுப் பாதிப்புக்களே' என்றும் அந்நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

ஆனால் இந்த அஸ்ட்ரா செனா தடுப்பூசியைப் பிரித்தானியா, அவுஸ்திரேலியா உட்பட 65 நாடுகள் தம் பிரஜைகளுக்கு வழங்கி வருகின்றன. அவற்றில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் இத்தடுப்பு மருந்தைப் பயன்படுத்தும் நாடுகளும் அடங்கும். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் இத்தடுப்பு மருந்தைப் பயன்படுத்தும் நாடுகளில் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்பட்டதற்கான பதிவுகள் இற்றைவரையும் இல்லை.

இவ்வாறான சூழலில் உலக சுகாதார ஸ்தாபனம், 'கொவிட் 19 கட்டுப்பாட்டுக்கு வழங்கப் பொருத்தமான தடுப்பு




மருந்து என்று அஸ்ட்ரா செனகா' வைக் குறிப்பிட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம், இத்தடுப்பு மருந்தை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு உறுப்பு நாடுகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

என்றாலும் இந்த அஸ்டரா செனகா தடுப்பு மருந்தின் இந்திய உற்பத்தி இலங்கையில் பயன்படுத்தப்பட்டாலும் இத்தடுப்பு மருந்து தொடர்பில் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள அச்சம் இங்கும் பிரதிபலப்பதை அவதானிக்க முடிகின்றது.

அதனால் தான் ஆரம்ப சுகாதார சேவைகள் மற்றும் கொவிட் 19 கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் டொக்டர் சுதர்ஷிணி பெர்னாண்டோ புள்ளே, 'தற்போது இந்நாட்டில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இத்தடுப்பு மருந்தினால் சில ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ளது போன்ற பாதிப்புக்கள் இற்றை வரையும் இங்கு பதிவாகவில்லை. அதனால் நாம் இத்தடுப்பு மருந்தைத் தொடர்ந்தும் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்' என்றார்.

இதேவேளை அரசாங்கம், 'நாட்டுக்கு மக்களுக்கு இத்தடுப்பு மருந்து தொடர்ந்தும் பெற்றுக்கொடுக்கப்படும்' என்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றது.

இவ்வாறான பின்புலத்தில் கொவிட் 19 கட்டுப்பாட்டுக்கான இந்த அஸ்ட்ரா செனகா தடுப்பூசி தொடர்பில் இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் இந்நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவும் தவறவில்லை.

கொவிட் 19 கட்டுப்பாட்டுக்கான இத்தடுப்பூசி மூலம் கொவிட் 19 வைரஸ் உடலினுள் உட்செலுத்தப்படுவதில்லை. மாறாக இவ்வைரஸ் தொற்று ஏற்படுமாயின் அதனை எளிதில் அடையாளங் கண்டறிந்து அழிக்கும் நோயெதிர்ப்புக் கட்டமைப்பின் திறனை மேம்படுத்தும் நடவடிக்கையே இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கென இவ்வைரஸை கண்டறிவதற்கான மிகச் சிறந்த வழியாக இவ்வைரஸின் மேற்பரப்பிலுள்ள அதற்கே உரித்தான புரதத்தின் பகுதி (spike protein) பயன்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில் இத்தடுப்பூசியில் ChAdOx1 எனப்படும் வைரஸ் மூலக்கூறு உள்ளடக்கப்பட்டுள்ளது. இது மனிதனில் எவ்வித நோய்த் தன்மையையும் ஏற்படுத்தக்கூடியதல்ல. இதில் அடங்கியுள்ள மரபணுவின் குறித்த பகுதி மூலம் வழங்கப்படும் சமிக்ஞைக்கு அமைய இவ்வைரஸை அடையாளம் காணக்கூடிய குறித்த புரதத்தின் ஒரு பகுதி உடலினுள் உருவாகிறது. அத்தோடு அதேநேரத்தில் மனிதனின் நோயெதிர்ப்புக் கட்டமைப்பு இந்த ஸ்பைக் புரதக் (spike protein) கூறுகளை அடையாளம் காணவும் அவற்றை அழிக்கவும் தொடங்குகிறது. இப்புரதக் கூறுகளின் இத்தடுப்பு நடவடிக்கையானது,



ஸ்பைக் புரத்திற்கு எதிராக மனிதனின் நோயெதிர்ப்புக் கட்டமைப்பினால் புதிதாக உருவாக்கப்பட்ட விசேட பிறபொருளெதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

இச்செயற்பாடு முறையாக இடம்பெற 02, 03 வாரங்களாவது செல்லும். அதனால் இத்தடுப்பூசியினை இரண்டாவது தடவையாகவும் பெற்றுக்கொண்ட பின்னர், இச்செயன்முறை மீளவும் செயல்படுத்தப்பட்டு உடலில் அதிகளவில் பிறபொருளெதிரிகள் உருவாக்கப்படும். இது கொரோனா வைரஸிற்கு எதிராக உடலில் ஆயுதக் களஞ்சியத்தை அமைப்பது போன்ற ஒரு செயற்பாடாகும். அதாவது நோயெதிர்ப்புக் கட்டமைப்புக்கும் வைரசிற்கு சமமான பிறபொருள் ஒன்றிற்கும் இடையிலான ஒரு சிறிய போரின் வடிவத்தை ஒத்த செயற்பாடே இங்கு இடம்பெறுகிறது.

இதன் விளைவாகவே தடுப்பூசி பெற்ற பின்னர் காய்ச்சல், உடல் வலி, தடுப்பூசி வழங்கிய இடத்தில் வலி போன்றவாறான சிறிய பக்க விளைவுகள் ஏற்படுகின்றது. ஏனெனில் உடலினுள் செலுத்தப்படும் எந்தவொன்றையும் நோயெதிப்பு கட்டமைப்பு முதலில் எதிரியாகவே நோக்கும். அதன் வெளிப்பாடாகவே இப்பக்கவிளைவுகள் வெளிப்படுகின்றன. அவ்வளவு தான். அதன் பின்னரான சொற்ப நேர காலத்திற்குள் அது சீராகிவிடும். சிறு குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னரும் இவ்வாறான செயற்பாடு இடம்பெறுவதன் விளைவாகவே அவர்களுக்கும் சில சிறிய பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. இத்தடுப்பூசியை வளர்ந்தவர்களுக்கு வழங்கும் போது இடம்பெறும் செயற்பாடே குழந்தைகளின் உடலிலும் இடம்பெறுகின்றது. அதனால் உடலில் பிறபொருளெதிரியை உருவாக்கும் இச்செயல்முறையை ஒரு பிழையான தவறான நடவடிக்கையாகக் கருதலாகாது.

கொவிட் 19 தொற்றுக் கட்டுப்பாட்டுக்கான தடுப்பூசி பெற்றுக் கொண்டவரின் உடலுக்குள் எதிர்காலத்தில் இவ்வைரஸ் செல்லுமாயின், அதற்கு எதிரான பிறபொருளெதிரி உடலில் காணப்படுவதனால், இப்பிறபொருளெதிரிகளினால் இவ்வைரசின் வெளிப் புறமாகக் காணப்படும் ஸ்பைக் புரதத்தை மிக விரைவாக இனங்கண்டு முழு வைரஸையும் விரைவாகவும் இலகுவாகவும் அழித்துவிடும்.

இவ்வாறு தெளிவுபடுத்தி இருக்கின்றது இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம்.

அதேநேரம் இந்த அஸ்ட்ரா செனகா தடுப்பு மருந்து, இரத்தம் உறைதல் பாதிப்பை ஏற்படுத்தாது என்பது தான் விஞ்ஞானிகளின் கருத்தாக உள்ளது.

ஆகவே கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பு மருந்து தொடர்பில் மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயங்கள் ஆலோசனைகளுக்கு ஏற்ப செயற்படுவதே பொருத்தமானதாகும். ஏனெனில் உலகிற்கே பெரும் சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் விளங்கிக் கொண்டிருக்கும் கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்த இப்போதைக்கு உள்ள சிறந்த வழி அதற்கெதிரான தடுப்பு மருந்துப் பயன்பாடேயாகும்.

அதன் காரணத்தினால் கொவிட் 19 தடுப்பு மருந்துகள் தொடர்பிலான வீணான ஐயங்கள் அத்தொற்று நன்மைகள் பெறவே வழிவகுக்கும். அதனால் இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுவது அவரவர் பொறுப்பாகும்.

# பாணமை கிராமத்தில் சுற்றுலாத்துறை மேம்பாடு



எஸ்.எஸ்.தவபாலன்
புளியந்தீவு குறூப் நிருபர்

உலக அரங்கில் வளர்ச்சியடைந்த அல்லது வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் சுற்றுலாத்துறையை மேம்படுத்தி வருகின்றன.

இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல, சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதனால். வெளிநாட்டுச் செலவாணியை நம் நாட்டுக்குள் கொண்டு வருவது மிக இலகுவானது

அத்தோடு இந்த திட்டம் தேசிய மற்றும் உள்ளூர் பொருளாதார மேம்பாட்டு முயற்சிகளுக்கு பங்களிக்கும் மற்றும் அப்பகுதியில் உள்ள வேலையற்றவர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை வழங்கும்.

இதனை கவனத்தில் எடுத்த கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி. அனுராதா ஜகம்பத் இத்திட்டத்தை செயற்படுத்துமாறு தமது அதிகாரிகளை பணித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அவர் தனது கருத்தை அதிகாரிகளுக்கு விளக்குகையில்,

சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படும்போது அங்குள்ள மக்களின் பாரம்பரியங்கள், கலாசாரங்கள், இயல்பு வாழ்க்கைகள், சுற்றுச் சூழல் என்பன பாதிக்கப்படாதிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவார்

இத்திட்டம் சுருக்கமாக பாணமை நிலையான சுற்றுலா இலக்கு திட்டம் என்று அழைக்கப்படலாம் இது சுற்றுச்சூழல் ஆராய்ச்சி, நிலையான விவசாயம் மற்றும் வேளாண்மை ஆகிய கொள்கைகளுடன் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பை ஒருங்கிணைப்பதற்கான ஒரு நடைமுறை முயற்சியாகும்.

பாணமைக்கிராமம் இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் லவுகவை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளது, இது குமணை பறவைகள் சரணாலயத்தின் நுழைவாயிலாகும், இங்கு வாழும் மக்கள் வறுமைக் கோட்டின் 7.1 புள்ளிக்குக் கீழ் வாழ்ந்து வருகிறார்கள். தொழில் வாய்ப்பின்மை, உற்பத்திகளின்மை. இருக்கின்ற உற்பத்திப் பொருள்களுக்கு போதிய சந்தை வாய்ப்பில்லை என்பனவே இதற்கான காரணங்களாகும்

அனைத்து பங்குதாரர்களின் பரஸ்பர நலனுக்காக சமூக மட்ட அமைப்புகளுடனும் மற்றும் உள்ளூர் சமூகங்களின் ஒத்துழைப்புடனும் மற்ற சுற்றுலா மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் இதே போன்ற பொது மற்றும் தனியார் துறை முயற்சிகளுடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் சிறந்த நடைமுறைகளுக்கு இந்த திட்டம் பெரிதும் உதவும். அதற்கேற்ற வகையிலேதான் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சுற்றுலா உட்கட்டமைப்பை நிறுவுவதோடு, இப்பகுதியில் கிடைக்கும் சில தனித்துவமான பாரம்பரியம் மற்றும் இயற்கை ஈர்ப்புகளை ஒரு நிலையான முறையில் பயன்படுத்துவதற்கான நடைமுறைகளையும் இது ஊக்குவிக்க இருக்கி





றது, இது வேலையின்மை மற்றும் வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு சிறந்த கருவியாக சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக ஒரு சாளரத்தை வழங்கும்.

இந்த முயற்சி பல்வேறு காட்டு விலங்குகள் பறவைகள் மற்றும் அவற்றின் நடத்தைகளைக் கவனிப்பதற்கான வசதிகளையும் வழங்குவதோடு, சுற்றுலாப் பயணிகள் மற்றும் பார்வையாளர்களுக்கு இதுபோன்ற வசதிகளை வடிவமைத்து வழங்குவதன் மூலம் “நெருக்கமான மற்றும் தனிப்பட்ட” அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகளையும் வழங்கும். அத்தோடு அவர்களை மென்மேலும் இப்பகுதிக்கு ஈர்தெடுக்கும் இந்த திட்டம் 1980 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி கொள்கைகளுக்கு இசைவான சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக தாக்கக் கூடிய திட்டங்களை நிறுவும் “சுற்றுச்சூழலை நிர்வகித்தல் மற்றும் மேம்படுத்துதல்”. போன்றவற்றை மேம்படுத்தும்

பாணமையில் சுமார் 2000 குடும்பங்கள் உள்ளன. புத்த மதத்தையும் இந்து மதத்தையும் பின்பற்றும் சிங்கள மற்றும் தமிழர்கள்தான் பெரும்பான்மையாக இங்கு வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களின் முக்கிய வாழ்வாதாரம் விவசாயம், சேனைச் சாகுபடி, நெல் சாகுபடி மற்றும் மீன்பிடித்தல் என்பனவாகும். பாணமை இலங்கையின் கிழக்கு கடற்கரையான பொத்துவில் நகரிலிருந்து 17 கிலோமீட்டர் தொலைவிலும், இலங்கையின் புகழ் பெற்ற சுற்றுலா தலங்களில் ஒன்றான அறுகம்பை விரிகுடாவிலிருந்து 14 கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளது.

பாணமை கிராமம் பனாகல, உகந்தை, வேர்க்கடலை பண்ணை, யானைப் பாறை போன்ற பல்வேறு உலாவல் புள்ளிகளுடன் நெருக்கமாக உள்ளது,

இது ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. அழகான குளம், பாணமை கிராமத்திற்கு அருகில் இருக்கும் கடற்கரைக்கு அருகில் உள்ளது. பாணமையின் உச்சநிலை சுற்றுலாப் பருவகாலம் ஏப்ரல் முதல் அக்டோபர் வரை ஆகும், மேலும் ஆண்டு முழுவதும் உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் குமண தேசியப் பூங்காவில் வனவிலங்குகளைப் பார்த்து ரசிக்கவும், உண்மையான இலங்கை கிராம அனுபவத்திற்காக பானமவில் தங்கவும் வருகை தருகின்றனர். குமணையில் பறவைகள் சரணாலயம் மற்றும் பாரம்பரிய பூங்கா பாணமை கிராமத்திலிருந்து தெற்கே தொடங்குகிறது. பாணம கிராமத்தில் தமிழில் எழுதப்பட்டுள்ள "கண்ணகி அம்மாள்" தேவாலயம் பத்தினித் தெய்வ வழிபாட்டுக்கு இன்னும் பிரபலமாக இருக்கிறது. இந்த பழங்கால கிராமத்தை போர்த்துக்கேய மற்றும் டச்சு வரலாற்று வரைபடங்களில் பனாவோ, பனோவா, எனக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்

பாணமை கிராமத்தை நிலையான சுற்றுலாத் தலமாக உறுதிசெய்ய. ஒரு பயனுள்ள பொறிமுறையின் மூலம் தொடர்புடைய துறைகள் மற்றும் செயல்படுத்தும் அமைப்புகளின் ஆதரவுடன் திட்டத்தை கண்காணித்து மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. உள்ளூராட்சி மற்றும் சுற்றுலா அமைச்சும் மற்றும் தொடர்புடைய துறைகளின் வசதியுடன் பங்குதாரர்களுடன் வலைப்பின்னல் மற்றும் சேனலை உருவாக்குதல் மற்றும் நிறுவனங்களை செயல்படுத்துதல். பங்குதாரர் ஆலோசனை மற்றும் ஈடுபாட்டின் அடிப்படையில் மாகாண கவுன்சில் ஒரு செயல் திட்டத்தை தயாரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது ஒரு இலக்கில் நிலையான சுற்றுலாவுக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட பார்வை, குறிக்கோள்கள் மற்றும் திசையை அமைக்கிறது மற்றும் இலக்கு மேலாண்மை நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்கான அடிப்படையாக பயன்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

## இலங்கையில் வர்த்தக நிறுவனங்களின் படிமுறை வளர்ச்சி : 6

# கிராமங்களை வலுப்படுத்தல்: அது நுகர்வு கலாசாரத்தை பின்பற்றியதாக இருக்கக்கூடாது!

**மி**கநீண்ட காலத்திற்குப் பின்னர் கொழும்பை விட்டுவெளியேறி பிறந்த கிராமத்தில் ஒருசில நாட்கள் தங்கும் வாய்ப்புக் கிட்டியது. பிறந்து வளர்ந்து திரிந்த கிராமமே அடையாளம் காணமுடியாத அளவுக்கு எல்லாமே மாறிப் போயிருந்தது. ஆனால் அந்த புகையிரத நிலையம் மாத்திரம் அதே பாழடைந்த தோற்றத்துடன் மாறவே மாட்டேன் என்று அடம் பிடிப்பது போல் காட்சியளித்தது. கூடவே பாடசாலைக்கு ரயிலேறித் திரிந்த நான்கு தசாப்தங்களுக்கு முந்திய நினைவுகளையும் கொண்டு வந்து சேர்த்தது.

கடந்த நான்கு தசாப்தங்களில் இலங்கையின் குக்கிராமங்களில் கூட பாதைக் கட்டமைப்புகளும் கட்டடங்களும் பெருமளவில் அமைக்கப்பட்டு போக்குவரத்து ஓரளவு சீராக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. பாதைகளில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கையும் பெருமளவில் அதிகரித்துள்ளது. கோவிட் 19 நோய் காரணமாக உள்ளூர் விவசாயத்தை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக தற்போது உள்ளூர் மரக்கறி உற்பத்தி அதிகரித்துள்ளது. வாகனம் பயணித்த நெடுஞ்சாலையின் இருபுறமும் மரக்கறி மற்றும் உள்ளூர் பழவகைகள் விற்கப்படும் தற்காலிக கொட்டில்களையும் சில இடங்களில் பெரிய விவசாய விளைபொருள் விற்பனை நிலையங்களையும் காணமுடிகிறது.

அது மட்டுமன்றி உள்ளூர் நீர் நிலைகளிலிருந்து பெறப்படும் குளத்து மீன்களும் பாதையின் இருமருங்கிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. கோவிட் காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய துறைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும் உள்ளூர் விவசாயத்துறையும் உள்ளூர் மீன்பிடியும் இக்காலப்பகுதியில் விருத்தி கண்டன என்பது மத்தியவங்கி புள்ளிவிபரங்களிலிருந்து ஏற்கெனவே நமக்குத் தெரிந்தது தான்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அந்நாட்டின் விவசாயத்துறை நவீனமயப் படுத்தப்பட்டிருப்பது அவசியமாகும். முக்கியமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உணவுப் பாதுகாப்பு முக்கியமான ஒரு அடிப்படைத் தேவைப்பாடாகும். வறுமை, பசி, பட்டினி போன்றவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் விவசாயம் தவிர்ந்த கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் ஈடுபட்டுள்ளோரின் உணவுத் தேவைகளைக் குறைந்த செலவில் பூர்த்தி செய்யவும் விவசாய உற்பத்தித்துறை நவீனமயப்படுத்தப்பட வேண்டியது மிகமுக்கியமாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பணவீக்கம் ஏற்பட உணவுப் பொருள் விலையேற்றமே முக்கிய காரணியாக உள்ளது. உள்ளூர் விவசாயத்துறை நவீனமயமாக்கம் செய்யப்பட்டால் விவசாய உற்பத்திகள் அதிகரிக்கும். இதனால் உணவு விலை அதிகரிப்பதைத் தடுக்கலாம். சாதாரண மக்களின் வாழ்க்கைச் கணிசமான பகுதி உணவுக்காகவே செலவிடப்படுவதால் உணவுப் பொருள் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த முடியுமானால் சம்பள உயர்வு கோரிய போராட்டங்கள் எழுவதைத் தடுக்கலாம். உற்பத்திச் செலவின் மிகப்பெரிய பகுதி சம்பளங்களாக இருப்பதால் அதன் மூலம் உற்பத்திச் செலவு அதிகரிப்பைக் கட்டுப்படுத்தலாம். பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது பொருளாதாரக் கட்டமைப்பில் விவசாயத்துறையின் பங்களிப்பு குறைவடைந்து கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளின் பங்களிப்பு அதிகரித்துச் செல்வது பொதுவாக அவதானிக்கப்படும் ஒரு விடயமாகும். இலங்கையில் அத்தகைய ஒரு கட்டமைப்பு மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளமையை காணமுடிகிறது.

2011 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு 8.83 சதவீதத்திலிருந்து 2019 ஆண்டில் 7.42 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதேவேளை இதே காலப்பகுதியில் கைத்தொழிற்றுறையின் பங்களிப்பு 27சதவீதத்திற்கும் 28 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருந்ததுடன் சேவைகள் துறை 55.1 சதவீதத்திலிருந்து 58.2 வீதமாக அதிகரித்துள்ளது.

எனவே பொருளாதாரத்திற்கு வழங்கப்படும் பங்களிப்பு என்ற வகையில் விவசாயத் துறையின் முக்கியத்துவம் வீழ்ச்சியடைந்து



**'பொருளாதார நடவடிக்கைகள் ஏற்றுமதி வணிகத்திற்கு உகந்த உற்பத்திகளை ஊக்குவிப்பதாகவும் நீடித்து நிலைக்கக்—கூடிய நுகர்வை மையப்படுத்தியதாகவும் அமைதல் வேண்டும். பூட்டான் போன்ற நாடுகள் பாரிய நகரமயமாக்கலுக்கும் நுகர்வுக் கலாசாரத்திற்கும் உட்பட்டிராத போதிலும் சூழலை மாசுபடுத்தாத பேண்தகு வளர்ச்சியையும் மகிழ்ச்சியான மக்கள் வாழ்க்கையையும் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளன'**

சென்றுள்ளது. ஆனால் இன்னமும் நாட்டின் கணிசமான எண்ணிக்கையினர் விவசாயத்துறையிலேயே தொழில் வாய்ப்பில் ஈடுபட்டுள்ளனர். 2011 ஆண்டில் நாட்டின் தொழில் புரிவோரில் மூன்றில் ஒரு பங்கினர் அதாவது 33.1 சதவீதத்தினர் விவசாயத்துறையிலேயே வேலைவாய்ப்பில் ஈடுபட்டிருந்தனர். 2019 ஆண்டில் இச்சதவீதம் 25.3 ஆக வீழ்ச்சியடைந்த போதிலும் இன்னமும் தொழில் புரிவோரில் காற்பங்கினர் விவசாயத்துறையிலேயே உள்ளனர். சுருக்கமாகக் கூறினால் இலங்கையில் தொழில் புரிவோரில் நான்கில் ஒரு பங்கினர் நாட்டின் மொத்த உற்பத்திக்கு வெறும் 7.42 சதவீதப் பங்களிப்பை மாத்திரமே செய்கின்றனர். ஒரு வகையில் இது நாட்டின் முக்கிய வளமாகிய உழைப்பினை வீணடிக்கும் ஒரு செயலாகவே கருதவேண்டும். விவசாயத்துறையில் ஊழியத்தின் உற்பத்தித் திறன் மிகக்குறைந்த மட்டத்தில் உள்ளமைக்கு இதுவே காரணமாகும். விவசாயத்துறையை நவீன மயப்படுத்துவதும் அத்துறையில் தங்கியுள்ள மிகை ஊழியத்தை அகற்றுவதன் மூலம் விவசாயத்துறையின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதும் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

அத்தகைய ஒரு மாற்றம் கிராமிய மட்டத்தில் மிக மெதுவாக ஏற்பட்டு வருவதைக் காண முடிகிறது. கிராமிய விவசாயிகளாக இருந்தவர்களின் சந்ததியினர் இலவசக் கல்வி என்னும் ஏணியைப்பற்றி சமூகத்தின் மேல்மட்டத்திற்கு சென்றிருப்பதையும் அடுத்துவரும் சந்ததி அதில் முன்னரைவிட முனைப்பாக இருப்பதையும் உணரமுடிகிறது. இன்றும் கூட கொழும்பில் அரச துறை நிறுவனங்களில் மிகஉயர்ந்த பதவிகளில் இருப்பவர்களில் பெரும்பாலானோர் கிராமிய விவசாயத்துறையில் இருந்த வந்தவர்களாக இருப்பதைக் காணலாம்.

ஏப்ரல் மாதத்தில் புதுவருட விடுமுறை காலப்பகுதியில் கொழும்பு வெறிச்சோடிப் போவதற்கு மக்கள் தங்கள் சொந்தக் கிராமங்களை நோக்கிச் செல்வதே காரணமாகும். நாம் ஆரம்பத்தில் சொன்ன கிராமத்தில் விவசாயத்துறையின் நவீன மயமாக்கம் பல்வேறு வடிவங்களில் இடம் பெற்று வருவதைக் காணமுடிந்தது. விவசாயத் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் நாற்றுமேடைகளில் வளர்க்கப்படும் சிறந்த விதைநாற்றுகள் தொடக்கம் கட்டுப்படுத்தப்பட்ட வளமாக்கி மற்றும் கிருமிநாசினிப் பிரயோகம் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் போன்ற மேன்மைப் படுத்தப்பட்ட நீர்முகாமைத்துவ முறைமைகளும் பின்பற்றப்பட்டு வருவதையும் நோக்க முடிகிறது. எவ்வாறாயினும் அறுவடையின் பின்னரான பயிரழிவைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் போதியனவாக இல்லை. அத்துடன் போதிய களஞ்சியப்படுத்தல் மற்றும் முறையான சந்தைப்படுத்தல் வசதிகள் இன்னமும் எல்லா விவசாயிகளுக்கும் கிட்டுவதாகத் தெரியவில்லை.

(15ஆம் பக்கம் பார்க்க)



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# சீனாவுக்கு எதிரான குவாட் நாடுகளது உரையாடல் இந்தோ–பசுபிக் உபாயத்தை வலுப்படுத்துமா?

**அ**மெரிக்க ஜனாதிபதியாக பைடன் ஆட்சிக்கு வந்த பின்பு ரஷ்யா, சீனா, வடகொரியா, ஈரான், சிரியாவுக்கு எதிராக செயல்பாடு அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. அதில் அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா, தென் கொரியா ஆகிய நாடுகளுடன் பிரிட்டனும் இணைந்துள்ளது. குறிப்பாக ரஷ்யா மீதான எதிர்ப்பு அரசியலை முதன்மைப்படுத்திக் கொள்ளும் அமெரிக்கா சீனாவுடன் இராஜதந்திர ரீதியாக செயல்பட ஆரம்பித்துள்ளது.

அலாஸ்காவில் சீனாவுடனான வர்த்தக உறவை மீளமைப்பது தொடர்பில் பேச்சுக்களை நிகழ்த்தும் அமெரிக்கா குவாட் என அழைக்கப்படும் நாடுகளுடனான உரையாடல் சீனாவுக்கு எதிரான திசையில் திரும்பியுள்ளது. அது மட்டுமன்றி பிரிட்டன் பிரதமர் இந்தியாவுக்கும் அமெரிக்க பாதுகாப்பு மற்றும் வெளியுறவுச் செயலாளர் ஜப்பான் மற்றும் தென்கொரியாவுக்கும் அடுத்து வரும் வாரங்களில் விஜயம் செய்யவுள்ளமை கவனத்திற்குரியதாகும். இக்கட்டுரையும் அமெரிக்கா தலைமையிலான இந்தோ-பசுபிக் தந்திரோபாயத்திற்கான நகர்வுகளையும் அதன் விளைவுகளையும் தேடுவதாக உள்ளது.

ஆசியாவின் நேட்டோ என அழைக்கப்படும் குவாட் நாடுகளது காணொலி உரையாடல் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையில் கடந்த 12.03.2021 இல் நிகழ்ந்துள்ளது. அத்தகைய சந்திப்பினை *Quadrilateral Secretary Dialogic* எனும் வரைபின் கீழ் நிகழ்த்தியுள்ளன. ஜோ பைடன் பதிவியேற்ற பின்பு நிகழும் முதல் குவாட் நாடுகளது சந்திப்பு என்ற வகையில் அதிக முக்கியத்துவம் கொண்டதாக அமைந்துள்ளது. அதாவது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பதில் ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஜப்பான் பிரதமர் ஜோசிகைட் சூகா அவுஸ்ரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிஸன் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் கலந்து கொண்டு உரையாடியுள்ளனர். இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் சீனாவுக்கு எதிரானதாகவே உள்ளது. அதனை விரிவாக நோக்குவோம்.


ஒன்று, சீனாவினது பொருளாதார வளர்ச்சியை தடுத்து நிறுத்துவது. அதாவது கொவிட்19 இன் பின்பான காலப்பகுதியில் சீனாவின் பொருளாதாரம் பாரிய வளர்ச்சியை அடைந்து வருகிறது. அதன் உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு ஏற்றுமதியை முதன்மைப்படுத்தியுள்ளது. அதனால் அதன் தேசிய உற்பத்தியின் பெருக்கம் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. அதனை தடுத்து நிறுத்துவது அவசியமானது என்பதுடன் அதற்கான உத்திகள் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ந்துள்ளது.

இரண்டு, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் அரியவகை தாதுப் பொருட்களை மட்டுப்படுத்துவது பற்றியும் அந்த காணொலி ஊடான சந்திப்பில் உரையாடப்பட்டுள்ளது. அதாவது இறக்குமதியின் அளவு மட்டுப்படுத்துவதுடன் அதன் முக்கிய இறக்குமதிகளை மட்டுப்படுத்தாது விட்டால் உலகம் முழுவதும் சீனாவின் சந்தையாக வாய்ப்புள்ளது என்ற விடயமும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மூன்று, இந்தியாவினது தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் துறையை அதிகரிப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக, சீனாவின் பொருட்களுக்கு நிகரான சந்தையை கைப்பற்றும் வலு இந்தியா சார்ந்தே உள்ளது எனவும் அதற்குதரிய தொழில்நுட்பத்தினை உருவாக்குவதன் வாயிலாக சீனாவின் சந்தைகளை கைப்பற்ற முடியும் எனவும் விவாதிக்கப்பட்டுள்ளது.

நான்கு, இந்தோபசுபிக் பிராந்திய நாடுகளிடையே பலதரப்பு உறவினை வளர்க்க வேண்டும் எனவும் இந்த நாடுகளுக்கிடையே மிக நெருக்கமான உறவை ஏற்படுத்த வேண்டும் எனவும் ஜோ பைடன் வலியுறுத்தியதுடன் அதற்கான நட்பு நாடுகளுக்கிடையிலான உறவினை பலப்படுத்தும் பொருளாதார வர்த்தக இராணுவ விடயங்களை அடையாளம் காண வேண்டும் எனவும் அத்தகைய சந்திப்பில் விவாதிக்கப்பட்டது.

ஐந்து, கொவிட் 19 இன் பின்பாக உலகம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி, காலநிலை நெருக்கடி என்பன பற்றிய உரையாடல் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து விடுபடுவதற்கான விடயங்களையும் கலந்துரையாடியுள்ளனர்









ஆறாவது, சீனாவின் பாதுகாப்பு வளர்ச்சியை தடுப்பதுடன் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள அச்சுறுத்தலை கையாள்வது தொடர்பிலும் குவாட் நாடுகள் கலந்துரையாடியுள்ளன. குறிப்பாக இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் கடலாதிக்கமும் இராணுவ பிரசன்னமும் அதிகரித்துள்ளதை கருத்தில் கொண்ட குவாட் நாடுகள் அதனை கூட்டாக எதிர் கொள்வதற்கான முயற்சிகளை அமெரிக்கா தலைமையில் எதிர் கொள்ள திட்டமிட்டுள்ளன. தென்சீனக்கடல் மற்றும் இந்திய எல்லைப்பகுதி என்பன முக்கியமான விடயங்களாக அமைந்ததுடன் தைவான் ஹொங்கொங் போன்ற பிராந்தியங்களது சீனாவின் நடவடிக்கைகளும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது..

இவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விவாதிக்கப்பட்டபோது குவாட் நாட்டுத் தலைவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களையும் நோக்குவது அவசியமானது. குறிப்பாக அவுஸ்ரேலியப் பிரதமர் இது ஒரு வரலாற்று நிகழ்வு என்றும் இந்தோ-பசுபிக் பிராந்திய நாடுகளின் இறைமை மற்றும் சுதந்திரம் பற்றிய பலமான செய்தியையும் ஒத்துழைப்பினையும் தந்துள்ளது என்கிறார். அவ்வாறே ஜப்பானியப் பிரதமர் குறிப்பிடும் போது தென் மற்றும் கிழக்கு சீனக்கடலின் தனியாதிக்கத்தை ஏற்படுத்த விளையும் சீனாவுக்கு எச்சரிக்கையாக அமைந்துள்ளது என்கிறார். அதே போன்று இந்தியப் பிரதமர் தெரிவிக்கும் போது சுதந்திரமானதும் திறந்ததுமான இந்தோபசுபிக் பிராந்தியத்தின் ஒத்துழைப்பினை ஏற்படுத்துவதற்கான பரிமாற்றங்களை நோக்கி முகாமை செய்வதனை இம்மகாநாடு சாத்தியப்படுத்தியுள்ளது என்றார்.

இது மட்டுமன்றி இந்தியா சீனாவுக்கு மாற்றீடான பொறிமுறையொன்றினை உருவாக்கி கொவிட் தொற்றுக்கான நடவடிக்கைகளை தடுக்கும் விதத்தில் பிராந்திய நாடுகளிடையே தடுப்பூசியை வழங்கி அவற்றுடனான உறவை பலப்படுத்திவருகிறது. இதனால் பிராந்திய நாடுகளுடன் நெருக்கமான உறவையும் நட்பினையும் ஏற்படுத்தி வருகிறது. அண்மையில் பாகிஸ்தானுக்கு தடுப்பூசியை இலவசமாக வழங்க முன்வந்துள்ளதாக தெரியவருகிறது. இதனால் பிராந்திய நாடுகளுக்கிடையே தடுப்பூசி இராஜதந்திரத்தை பிரயோகிப்பதில் வெற்றி கண்டுள்ளதாக தெரியவருகிறது. தனித்து பிராந்திய நாடுகள் மட்டுமல்ல தென்பூகோள நாடுகள் மத்தியிலும் உலகளாவிய ரீதியிலும் இந்தியாவினது மனிதாபிமான நடவடிக்கைகளை நாடுகளும் ஐ.நா. சபையும் கௌரவித்து வருகிறது. இந்தியாவின் அணுகுமுறையை குவாட் நாடுகள் அங்கீகரித்துள்ளதையும் குறிப்பிடுதல் அவசியமானது. அந்த வகையில் குவாட் நாடுகளது நகர்வுகள் வெளிப்படுத்தும் விடயங்களாக பல காணப்படுகின்றன.

முதலாவது, சீனாவிற்கு எதிரான அணி திரட்டலை மையப்படுத்தியே குவாட் நாடுகளது உரையாடல் அமைந்துள்ளது. சீனாவின் பொருளாதார எழுச்சியையும் இராணுவ வளர்ச்சியையும் பிராந்திய அடிப்படையிலும் சர்வதேச தளத்திலும் எதிர் கொள்ளும் உபாயமாகவே குவாட் சந்திப்பு அமைந்துள்ளது. அதனால் நாடுகளது பொருளாதார திட்டமிடல்களும் அதற்கான அணிகளும் அமைக்கப்பட்டதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு இந்தோபசுபிக் நாடுகளது பாதுகாப்பினையும் பொருளாதாரத்தையும் உருவாக்க முனைகிறதைக் காணமுடிகிறது. அத்தகைய உருவாக்கம் என்பது சீனாவுடனான இந்தோபசுபிக் நாடுகளது நெருக்கத்தினை தகர்ப்பதாகவே தெரிகிறது

இரண்டாவது, தடுப்பூசி இராஜதந்திரத்தை இந்தியா மேற்கொண்டது போல் பொருளாதார மற்றும் இராணுவ விடயங்களில் குவாட் நாடுகளது நகர்வுகளை சீனாவுக்கு எதிரான கூட்டு இராஜதந்திர ரீதியில் செயல்படுத்த அமெரிக்கா திட்டமிடுகின்றது. அதற்கு அமைவாக இப்பிராந்திய நாடுகளது பொருளாதாரத்திலும் இராணுவத்திலும் கரிசனை கொள்ள ஆரம்பித்துள்ளது. கடந்த வாரங்களில் தென் சீனக் கடலிலும் ஈரான் வான்பரப்பிலும் இத்தகைய கூட்டுரோந்து நகர்வுகளை அமெரிக்கா தனது தலைமையில் மேற்கொண்டிருந்தமை கவனிக்கத் தக்கதாகும்.

மூன்றாவது, அமெரிக்கா ஒரே நேரத்தில் சீனாவுடனான பேச்சுவார்த்தையை நிகழ்த்திக் கொண்டு மறுபக்கத்தில் சீனாவுக்கு எதிரான அணியை பலப்படுத்திவருகின்றது. வர்த்தக ரீதியான உறவை மீளமைக்கக் போவதாக கூறிக்கொள்ளும் அமெரிக்கா சீனாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசியல் ரீதியில் பதிவு செய்துவருகிறது. குறிப்பாக தைவான் ஹொங்கொங் மற்றும் எக்ஸ் சின்ஜாங் மாகாண முஸ்லிம் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்து பேச்சுக்களை நடாத்திவருகிறது. பதிலுக்கு சீனாவும் அமெரிக்க கறுப்பர்களது உரிமை பற்றிய விடங்களை அமெரிக்காவுக்கு எதிராக பேச்சுக்களில் முதன்மைப்படுத்தி வருகிறது.

(21ஆம் பக்கம் பார்க்க)




# பரஸ்பரம்!

கல்லொளுவை பாரிஸ்

நாங்கள்
ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்த போது
கட்டடம் வீடாகியது!
நாங்கள்
ஒருவருக்கொருவர் அன்பு செய்தபோது
தின் பண்டம் உணவாகியது!
நாங்கள்
ஒருவருக்கொருவர் மதித்த போது
சாலைகள் பாதைகளாயின!
நாங்கள்
ஒருவருக்கொருவர் உண்மையாய் இருந்தபோது
தீ வெளிச்சமாகியது!



# திருப்பம் தரும் தேடல்கள்

சேனையூர் கவிக்குயிலன் மூதூர் கிழக்கு

மும்மொழிப் பரவலாக்கம்
முக்கியம்:
அம்மாவும் அப்பாவும்
தெய்வம்:
நால்வகை மதமும்
மகத்துவம்:
அவ்வழிப் போதனைகள்
தத்துவம்:
ஆன்மிக நெறிமுறை
அற்புதம்:
அமைதி வாழ்க்கைக்கு
ஔடதம்:
திருக்குறள் நல்வாழ்வுக்கு
திருப்பம்:
தேடலில் வாசிப்பே
திரவியம்:
ஐம்பெரும் காப்பியம்
பொக்கிஷம்:
நம்பிக்கை ஒளிதரும்
நட்சத்திரம்:
சாதனை படைத்தால்
சரித்திரம்:
சோம்பலை வளர்த்தால்
தரித்திரம்:
உழைத்துண்டுவாழ்ந்தால்
இன்பம்:
பிறருழைப்பில் வாழ்ந்தால்
துன்பம்:

# அன்பை உணர் நன்றே!

நீ பி அருளானந்தம்

ஒன்றோடு ஒன்றாய்,
இருவரும் அன்பில்
உணர்வதே உண்மையில்
நிலைத்திடும் காதல்!
தேன் போன்ற தீஞ்சுவை
இன்பமதை இருவர்
பண்புடன் ஒன்றி
பழகிடும் போதினில்
உண்மை செய் அன்பே,
பெரிதாகும் அன்றி
வேறே ஒன்றை
காண்கிட விரும்புமோ !
குறைதனை
சுட்டி ஆளுகிறதான பேச்சு
விரும்பும் மகளிர்
மென்மை இதயம்
சுக்கு நூறாய் சிதைக்குமே!
மணக்கோலம் பூண்டும்
விழா ஆண்டுகளும் கண்டு
பல்லாண்டு காலமதாய்
மகிழும் நற் தம்பதியர்
முகம் கண்டு இன்புறும்
பயன் சொல்வீர் என கேட்பின்
முன்னம் அவர் அக களிப்பு
கண்களால் வெளிச்சமாகும்
ஒன்றாய்இணைந்த அன்பே,
வாழ்வதிலே பிரிவகற்றும்
என்றே மகிழ்வுடனே
அவர் பதிலும் நிறைவு தரும்
திருமண நாளதிலே
மலர்மாரிதனை பொழிந்தே
வாழ்த்திடுவீர் இனிதே
என சொல்லலதிலும் முன்மொழிந்து
வாழ்த்தியும் பயன் ஏது
வாழ்விலே இடையூறு
வந்திட்டாலும் அன்பு செய்து
கையொரு கை கோர்த்து
இணைபிரியாதிருத்தல் ஒன்றே
நல் வாழ்வுக்கு நிலையாகும்
இல்லறமது சிறந்தே !
இனிதிலாய் இலங்கிடவே
ஒரு சொல்லில் ஓதியதாம்
ஒன்றது நன்றுளது
அன்பு செய்வீர்என்பதுவே
அதுவேயாம் ,
இனிய பயன்





# திருப்பி அனுப்புகிறேன்

பாத்திமா சில்மியா புத்தளம்

உச்சியில் நின்று
உன்னைத் தேடுகிறேன்...
பட்சியிடம் உனக்காய்
தூது அனுப்புகிறேன்...
அடிக்கும் பனியின்
குளிரையும் தாண்டி...
எரிக்கும் வெயிலின்
வெப்பம் கடந்து..
உன்னிடம் வேகமாய் வருகிறது
பட்சி...
அதனிடம்...
தூதாய்
என் இதயத்தை அனுப்புகிறேன்...
அதற்குள் பத்திரமாய்
என்றும் நீயிருப்பாய்...
நானிருக்கும்
உன் இதயத்தை...
பதிலுக்கு கொடுத்து விடு...
அதனை பார்த்துவிட்டு
அனுப்புகிறேன்...
உன்னையே தினமும்
பார்த்துக் கொண்டிருப்பதால்...
என்னை எனக்கே
மறந்து விட்டது...
அதனால்தான் கேட்கிறேன்...
நானிருக்கும்
உன் இதயத்தை
கொஞ்சம் அனுப்பிவிடு...
பார்த்துவிட்டு
திருப்பி அனுப்புகிறேன்...



# யோசிப்போம்

கலாபூஷணம் நிந்தவூர் மக்கீன் ஹாஜி

உழைத்து, உழைத்து
மாடி
வீட்டைக்கட்டு
அதைத்தான்
விரும்புவாள்
உன் பட்டு
வீட்டை முடிக்க
நீயும்,
கடன்பட்டு
நீயும் ஒரு நாள்
கஷ்டத்தில்
மாட்டுப்பட்டு,
அதை
அடைக்கமுடியாமல்
கேவலப்பட்டு,
மகளின்
திருமணத்தையும்
முடித்திட்டு
கடனோடு
கிடக்கவரும்
கவலைப்பட்டு
மருமகனும்
துரத்தி விடுவான்
உன்னை வீட்டைவிட்டு,
மகளும் அவள்
கணவனின் சொல்லுக்கு
கட்டுப்பட்டு
மௌனமாகிவிடுவான்
உன்னை
விட்டுப்போட்டு
எனவே கடன் படாமல்
அளவாக
வீட்டைக்கட்டு
படைத்தவனின்
சொல்லுக்கு
கட்டுப்பட்டு,

# இறையோனே!!!

எம்.எஸ்.எப். சுமையா,பலாகல.

இறையானே...
அழைத்தேன் நீ வரவில்லை
அழுதேன் நீ வரவில்லை
தொழுதும் நீ தரிசனம் தரவில்லை
சோகம் ஆர்த்திட உன்னைக்
கேட்டேன் நீ ஆறுதல் தரவில்லை...
ஆதலால் களைத்தேன் நானே...
இறையோனே...
கண்ணீரைச் சொரிந்திடவோ
கண்களைத் தந்தாய்
கஷ்டங்களைத் தாங்கிடவோ
கல்லென இதயம் தந்தாய்
நீலத் திரையாம் வானெனும் கதவை
நீ திறவாமல் பூட்டிக் கொண்டதால் தானோ
என் குமுறல் உன் காதில்
கேட்பதில்லை...
உன் கருணை என்னைச்
சேர்வதில்லை...
இத்தனையும் தாண்டி உனக்கென
என் உயிரினைத் தரத் துணிகையில்
அப்போதும் என்னைக் காத்திட
நீ வரவில்லை
உன் தரிசனம் எனக்கு
தரிவில்லை
அதனால் தான் நானே
உன்னை நாடி வந்தேன்
இறையோனே!!!



# ஊமையாய்...

அஷ்ரபா அலிறிஷாப், அக்குறணை

ஒவ்வொரு நொடியும்
உன்
புரிந்துணர்வுக்காக
காத்திருக்கிறேன்....
கால்
கடுக்கிறதே தவிர
கண்டு கொள்வதாய்
இல்லை
நீ என்னை...
நீளமான
வார்த்தைகளைப் பேசி
ஏனோ
என்னை விளங்கப்படுத்த
என்னால்
முடியவில்லை...
என் புன்னகைக்கும்
அர்த்தம் சொன்ன
உன் இதழ்களா
இன்று
ஊமையாய்
என்னையும்
ஊமையாக்கிக் கொண்டு...
நீடிக்கும்
இந்த
மௌன முட்களின்
வேதனையை
தாங்க முடியவில்லை....



# காலக்கணித நோக்கில் சித்திரைப்புத்தாண்டு

இன்று தமிழ்மக்கள் உட்பட உலகெங்கும் வாழும் மக்களில் மிகப்பெரும்பாலானோர் இன மத மொழி பேதமின்றிக் கொண்டாடும் புத்தாண்டு தினமாக ஜனவரி முதலாம் திகதியை அடையாளம் காட்டுவது கிரகேரியன் கலண்டர். இக்கலண்டர் கிறிஸ்துவுக்குப்பின் 1582இல் போப் கிரகரி என்பவரால் மறுசீரமைப்புச் செய்யப்பட்ட பழைய கிறிஸ்தவக் கலண்டராகும்.

அப்படியானால் கிரகேரியன் கலண்டருக்கு முன்னர் இந்தியாவிலும் இலங்கையிலும் கலண்டர் என்ற ஒன்று இருந்தது கிடையாதா என்ற கேள்வி எழலாம். ஒன்றல்ல பல இருந்தன. கலியுகவருடம், சாலிவாகன சகவருடம், விக்கிரமவருடம், கொல்லவருடம் என்று பல்வேறு கலண்டர்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளன.

ஆண்டு, மாதம், திகதி என்பவற்றுடன் கூடவே நட்சத்திரம், கிழமை, திதி, கரணம், யோகம் என்னும் ஐந்தையும் கணித்துத் தருவதுதான் பஞ்சாங்கம். இவை எல்லாமே கால அளவுகள். சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் கிரகங்கள் என்பவற்றின் நிலைகளை அவதானித்துக் கணிதத்தின் மூலம் பெறப்பட்ட காலக்கணிதமே பஞ்சாங்கம்.

அரசர்கள் போர்களில் தாம் பெற்ற வெற்றிகளையும் கோவில்களுக்கும் தனிப்பட்டோருக்கும் கொடுத்த நிலதானம் மற்றும் பிறகொடைகளையும் ஆண்டு, மாதம், திகதியுடன் கல்லிலும் செப்பிலும் பதிவு செய்ய இந்தப் பஞ்சாங்கங்களே அன்று உதவின. இந்தப் பஞ்சாங்கத்தின் துணை கொண்டுதான் எமது முன்னோரின் வரலாற்றை இன்று நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

பதினான்காம் நூற்றாண்டில் பாண்டியப்பேரரசின் வீழ்ச்சிக்குப்பின்னர் நிலை பெற்ற மதுரை சுல்தான்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைத்த வீர கம்பண உடையார் மதுரையில் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற நாள் குறித்த சாசனம் ஒன்றை இங்கு நோக்குவோம்.

"இராஜகம்பீர ராஜ்ஜியம் கைக்கொண்டு ஸ்திர சிம்மாசனத்தில் பிரித்விராஜ்ஜியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் ஆயிரத்து இருநூற்று எண்பத்தேழின்மேல் செல்லாநின்ற வர்த்தமான விஸ்வாவசு சம்வத் சாரத்து விருச்சிக ஞாயிற்று பூர்வ பக்க சஷ்டியும் அவிட்டமும் பெற்ற புதன்கிழமை நாள்"

இச்சாசனம் விஸ்வாவசு வருடமாகிய சகவருடம் 1287 கார்த்திகை மாதம் வளர்பிறைப் பக்கத்தில் ஆறாம் திதியான சஷ்டியும் அவிட்ட நட்சத்திரமும் சேர்ந்த புதன்கிழமையில் வீர கம்பண உடையார் மதுரையின் சிம்மாசனத்தில் அமர்ந்ததைக் குறிப்பிடுகின்றது. இந்நாள் கிரகேரியன் கலண்டரில் பொது ஆண்டு 1365 நவம்பர் 19 ஆம் திகதியாகும் என்பதைத் தொல்லியல் ஆய்வாளர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வீர கம்பண உடையார் தொடர்பான மற்றுமோர் சாசனத்தில் "கலியுக வருஷம் நாலாயிரத்து நானூற்று எழுபத்து இரண்டாகிய (4472) சகாப்தம் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று (1293) செல்லா நின்ற விரோதிகிருதி வருடம் மிதுன ஞாயிற்று அபரபக்கப் பஞ்சமியும் புதன்கிழமையும் கொண்ட அவிட்டத்து நாள்" குறிக்கப்பட்டுள்ளது. கலியுக வருடம் 4472க்குச் சமமான சாலிவாகன சகவருடம் 1293 ஆகிய விரோகிருதி வருடத்தில் ஆனிமாதத்துத் தேய்பிறைப் பஞ்சமியும் புதன்கிழமையும் அவிட்டநட்சத்திரமும் கூடிய நாள் இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சாசனத்தில் ஒன்றல்ல இரண்டு கலண்டர்கள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றுள் ஒன்று கலியுக ஆண்டு. மற்றையது சாலிவாகன சக ஆண்டு. கலியுக ஆண்டில் இருந்து 3101ஐக் கழித்தால் கிரகேரியன் ஆண்டு வரும். சாலிவாகன சக ஆண்டுடன் 78ஐக்கூட்டினால் கிரகேரியன் ஆண்டுவரும். இதன்படி இந்த சாசனத்தில் கூறப்படும் நாள் கிரகேரியன் கலண்டரில் பொது ஆண்டு 1371 ஜூன்மாதம் 4ஆம் தியதியாகும் என்பதை பேராசிரியர் ஹூல்ச் உறுதிப்படுத்தியுள்ளார்.

இன்று சிறீரங்கம் கோவிலுக்குரிய இணையதளத்தில் (srirangaminfo.com) தரப்பட்டுள்ள காலக்கணிப்பின் துணை கொண்டு, கம்பண உடையாரின் மேற்படி சாசனத்தில் தரப்படுள்ள ஆண்டு, மாதம், திதி நட்சத்திரம், கிழமை என்பவை எவ்வித முரண்பாடும் அற்ற துல்லியமான கணிப்பு என்பதை உறுதிப்படுத்தமுடியும். பண்டைத்தமிழரிடம் கலண்டர் என்று எதுவும் இருக்கவில்லை என்று எவரேனும் கூறமுடியுமா?

கலண்டர் என்று இருக்கும்போது அதில் வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, தியதி மற்றும் கிழமைநாள் என்பன தவறாமல் இடம்பெறவேண்டும். தமிழ்மக்கள் பின்பற்றும் பஞ்சாங்கத்தில் இவையெல்லாம் உண்டு. கிரகேரியன் கலண்டரில் மாதங்களுக்கும் கிழமை நாட்களுக்கும் பெயர் உண்டு. தமிழ்மக்கள் பின்பற்றும் கலண்டர் முறையில் ஆண்டுகளுக்கும் பெயர் உண்டு. அதற்கும் ஒரு காரணம் உண்டு.



சாலிவாகன சகாப்தத்தின் தொடக்க ஆண்டை முதலாவது ஆண்டாகக் கொள்வோர் சிலர். தொடக்க ஆண்டை 0 ஆண்டாகக் கருதி அதற்கு அடுத்த ஆண்டையே முதலாவது ஆண்டாகக் கணக்கில் எடுப்பவர் வேறு சிலர்.

உதாரணமாகத் தொடக்க ஆண்டை முதலாவது ஆண்டாகக் கொள்வோருக்கு வரும் சித்திரையில் (ஏப்ரல் 14, 2021) பிறக்க இருக்கும் ஆண்டு சாலிவாகன சகவருடம் 1944 ஆகும். யாழ்ப்பாணம் இரகுநாதையரின் வாக்கிய பஞ்சாங்கம் அப்படித்தான் கூறுகின்றது. அதே சமயம் தமிழ்நாட்டில் இப்புத்தாண்டு சகவருடம் 1943 ஆகக் கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாணப் பஞ்சாங்கம் நடந்து கொண்டிருக்கும் (current) சக ஆண்டையும் தமிழ்நாட்டு சிறீரங்கம் பஞ்சாங்கம் கடந்து போன (expired) சக ஆண்டையும் குறிக்கின்றன. பண்டைக்காலத்து சாசனங்களிலும் இந்தக்குழப்பம் காணப்படுகின்றது.

சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சக ஆண்டு சென்ற ஆண்டா அல்லது நின்ற ஆண்டா என்பதைத் தீர்மானிப்பதில் வரலாற்று ஆய்வாளர்கள் பெரும் சிக்கலை எதிர்கொள்ளுவதுண்டு. ஒருசில சாசனங்களில் சக ஆண்டுடன் கூடவே ஆண்டின் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கும். சென்ற ஆண்டாயினும் நின்ற ஆண்டாயினும் ஆண்டின் பெயர் மாறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிறக்க இருக்கும் தமிழ்ப் புத்தாண்டை சக ஆண்டு 1943 என்று கணிப்போருக்கும் சக ஆண்டு 1944 என்று கொள்வோருக்கும் இந்த ஆண்டு பிலவ வருடமாகும். அறுபது ஆண்டுகளுக்கு ஒருமுறையே பிலவ வருடம் வரும். சாசனத்தில் சக ஆண்டும் அதன் பெயரும் குறிப்பிடப் பெற்றிருப்பின் எந்தவித சந்தேகத்துக்கும் இடமின்றி ஆண்டினை உறுதிப்படுத்தலாம், வரலாற்று ஆய்வாளர்களுக்கே இதன் அருமை நன்கு புரியும்.

எதற்காக இந்த அறுபது ஆண்டுக் கணக்கு என்றும் சிலர் கேள்வி எழுப்புவதுண்டு. வியாழன் சூரியனை ஒரு முறை சுற்றிவர பூமிக்கணக்கில் 12 வருடங்கள் எடுக்கும். வியாழனில் ஒருமாதம் என்பது பூமிக்கு ஒருவருடமாகும். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சூரியனும் ஒரே நட்சத்திரத்தைக் கடந்து செல்வர். ஐந்து வியாழ வருடங்கள் பூமியில் 60 வருடங்களாகும். இதனை வியாழச்சக்கரம் என்றழைப்பர். ஒரு மனிதனின் சராசரி ஆயுட்காலத்தை இது குறிப்பதாக அக்காலத்தில் கருதப்பட்டது.

அறுபது ஆண்டுப்பெயர்கள் தமிழில் இல்லை என்பது மற்றுமொரு குற்றச்சாட்டு. பன்னிரண்டு மாதங்களின் தமிழ்ப் பெயர்களும்கூட சமஸ்கிருதப் பெயர்களின் தமிழ் வடிவங்களாகும். இவற்றின் தூய தமிழ்ப்பெயர்கள் தமிழ் நிகண்டுகளிலும் காலக்கணித நூல்களிலும் காணப்படுகின்றவாயினும் பொதுவழக்கில் அவற்றைப் பயன்படுத்துவோர் இல்லை.

மாதங்களுக்கு நட்சத்திரங்களின் பெயர்கள் வைக்கப் பெற்றதன் காரணத்தையும் இங்கு விளக்குவது அவசியமாகின்றது. இந்தியாவில் முதன்முதலில் தொடங்கப் பெற்ற காலக்கணிதம் சந்திரனின் கலைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒரு அமாவாசையில் இருந்து அடுத்த அமாவாசை வரை அல்லது ஒரு பௌர்ணமியில் இருந்து அடுத்த பௌர்ணமி வரையிலான காலமே ஒரு மாதம் எனப்பட்டது. வடமொழியில் 'மாச' என்பது சந்திரனையும் மாதத்தையும் குறிக்கும். தமிழிலும்கூட திங்கள் என்பது சந்திரனையும் மாதத்தையும் குறிக்கப் பயன்படுவதை நோக்கலாம். பன்னிரண்டு மாதங்களும் 360 நாட்களும் கொண்ட ஒரு வருடமே முதன்முதலில் உருவாக்கப்பட்டது.

ஒரு தினத்தில் சூரியன் உதிக்கும் வேளையில் எந்த நட்சத்திரம் சந்திரனுக்கு அருகில் காணப்படுமோ அதுவே அன்றைய நாளின் நட்சத்திரமாகும். ஒரு குறிப்பிட்ட மாதத்தில் எந்த நட்சத்திரம் முழுநிலவுக்கு அருகில் காணப்படுகிறதோ அந்த நட்சத்திரத்தின் பெயரே அந்த மாதத்துக்கு வழங்கப்பட்டது. முழுநிலவுக்கு அருகில் சித்திரை நட்சத்திரம் காணப்படும் மாதமே சித்திரை எனப்பட்டது. அவ்வாறே விசாக நட்சத்திரத்தின் அருகில் முழுநிலவு காணப்படும் மாதம் வைகாசி ஆயிற்று. முழுநிலவுக்கு அருகில் கார்த்திகை நட்சத்திரம் காணப்படும் மாதம் கார்த்திகை எனப் பெயர்பெற்றது.

தெலுங்கரும் கன்னடியரும் பின்பற்றும் சந்திரமாதக் கலண்டர் வேறு; தமிழரும் சிங்களரும் மலையாளிகளும் பின்பற்றும் சூரியமாதக் கலண்டர் வேறு. பன்னிரண்டு இராசிகளில் சூரியன் சஞ்சரிப்பதை ஆதாரமாகக்கொண்டு உருவாக்கப்பட்டது சூரியக்கலண்டர். இதற்கிணங்க இக்கலண்டரில் மாதங்களுக்கு மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளின் பெயரே கொடுக்கப்பட்டுள்ளன.

சூரியக் கலண்டரில் வசந்த சமவிராக் காலத்தை (spring equinox) ஒட்டி வரும் மாதம் மேடஞாயிறு (மேடச்சூரியன்) என்று அழைக்கப்பட்டது. இம்மாதத்தைத் தமிழர் 'சித்திரை' என்றே இன்றும் குறிப்பிட்டு வருகின்றனர். எனினும் கேரளத்தில் மேடஞாயிறு என்று குறிப்பிடும் வழக்கம் இன்றும் உள்ளது.

பண்டுதொட்டு ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் மேடராசியே (Aries) விண்வெளிமண்டலத்தில் முதலாவது இராசியாகக் கணிக்கப்பட்டு வந்துள்ளது.

ஐரோப்பிய சோதிடக்கலையின் தந்தை எனக்கருதப்படும் மார்கஸ் மனிலியஸ் என்பார் ஒகஸ்டஸ் சீசரின் (பொ.ஆ. முதலாம் நூற்றாண்டு) சமகாலத்தவர் ஆவார். பன்னிரண்டு இராசிகள் பற்றியும் அந்தந்த இராசிகளில் பிறந்தோரின் பலன்களையும் தமது ASTRONOMICA என்னும் நூலில் இவர் விபரித்துள்ளார். இராசி மண்டலத்தில் மேடமே முதலாவது இராசி என்பதை இவர் பின்வருமாறு வருணிக்கின்றார்.

"வெளிறிய சூரியன் மெல்ல மெல்ல மேலெழுந்து ஆட்டை முன்னிறுத்திச் செல்லும் இராசிகளின் ஊர்வலப்பாதையில் செல்ல முற்படுகையில் அதன் கதிர்கள் பொன்னிறத்தில் ஒளிரும்."

இராசிமண்டலத்தில் ஆட்டை (மேடராசியை) முன்னிலைப்படுத்தும் இக்கருத்து சங்க இலக்கியமான நெடுநல்வாடையிலும் கூறப்படுகிறது.

திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக
விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலை இயஉரோகிணி

என்று வரும் இப்பாடலுக்கு 'விண்வெளியில் வலிமையான கொம்புகளை உடைய ஆடு வழி நடத்திச்செல்லும் இராசிமண்டலத்தில் முரண்படும் சிறப்பு மிக்க சந்திரனோடு இணைந்திருக்கும் உரோகிணி நட்சத்திரம்' என்று பொருள் கூறமுடியும்'.

ஞாயிறு (சூரியன்) பயணிக்கும் பன்னிரண்டு இராசிகளையுடைய விண்வெளி மண்டலத்தில் வட்டத்தில் முதலாவதாகக் கணிக்கப்படும் இராசி மேடராசி என்பதால் சூரியக்கலண்டரில் மேடஞாயிறு (மேடமாதம்) முதலாவது மாதம் ஆகிற்று. தமிழ்ச் சாசனங்களில் 'மேட ஞாயிறு' என்றே இம்மாதம் குறிக்கப்பட்டிருப்பினும் தமிழ் மக்களால் இம்மாதம் 'சித்திரை' என்றே அழைக்கப்படுகின்றது.

சந்திரமாதக் கலண்டரைப் பின்பற்றும் தெலுங்கர் கன்னடியருக்கும் சூரியக் கலண்டரைப்பின்பற்றும் தமிழர், சிங்களருக்கும் புதுவருடப்பு நாளான சித்திரை மாதப்பிறப்பு வெவ்வேறு நாட்களில் வரும் என்பது அனைவரும் அறியவேண்டிய விடயம். கடந்த ஆண்டு தெலுங்கரின் யுகாதி என்னும் சித்திரை வருடப்பிறப்பு 2020 மார்ச் 25ஆம் தியதியிலும் தமிழரின் சித்திரை வருடப்பிறப்பு 2020 ஏப்ரல் 14 ஆம் தியதியும் வந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது. இவ்வருடம் தெலுங்கரின் புத்தாண்டும் தமிழரின் புத்தாண்டும் அடுத்தடுத்த நாளில் வருவது குறிப்பிடத்தக்கது.

சந்திரமாதக் கலண்டரில் பங்குனி மாதத்தில் வரும் அமாவாசையை அடுத்த பிரதமை திதியே சித்திரைமாதத்து முதல் நாளான தெலுங்கரின் 'யுகாதி' எனப்படும் வருடப்பிறப்பு நாளாகும். இந்நாள் கிரகேரியன் கலண்டரில் 2021 ஏப்ரல் 13 ஆம் திகதி வருகின்றது

தமிழ் சிங்கள மக்கள் பின்பற்றும் சூரியக் கலண்டரில் சூரியன் மேடராசிக்குள் செல்லும் (மேஷ சங்கிராந்தி) தினமே சித்திரை முதல் தியதியாகவும் புத்தாண்டு தினமாகவும் அமைகின்றது. இதன்படி தமிழ், சிங்களமக்களின் சித்திரை வருடப்பிறப்பு கிரகேரியன் கலண்டரில் 2021 ஏப்ரல் 14 ஆம் திகதி வருகின்றது.

பலநூறு ஆண்டுகளாக இலங்கைத் தமிழரும் சிங்களரும் மருத்துநீர் வைத்து நீராடிப் புத்தாடை அணிந்து சித்திரைப்புத்தாண்டு கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் ஒன்றல்ல பலவற்றைக் காட்டமுடியும்.

கண்டிமன்னர் ஆட்சிக்காலத்தில் சித்திரைப்புத்தாண்டு தினத்தன்று அரண்மனை மருத்துவர்களால் தயாரிக்கப்பட்ட மருத்துநீர் ஊர்மக்களுக்கு வழங்கப்பட்டமை குறித்துஇற்றைக்கு முன்னூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் கண்டியில் வாழ்ந்த றொபர்ட் நொக்ஸ் (Robert Knox) என்னும் ஆங்கிலேயர் பதிவு செய்துள்ளார்.

இன்று எமக்குக் கிடைக்கப் பெறும் நூல்களில் சித்திரைப்புத்தாண்டு பற்றியும் அந்நாளில் மருத்துநீர் வைத்து முழுகுவது பற்றியும் புத்தாடை அணிவது பற்றியும் விசேட உணவுகள் தயாரித்து உண்பது பற்றியும் விளக்கும் தமிழ்நூல் சரசோதிமாலை யாகும். இந்நூல் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்குமுன் அதாவது கி.பி. 1310 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் தியதி புதன்கிழமை தென்னிலங்கை வேந்தன் பண்டித பராக்கிரமபாகுவின் அரசவையில் அரங்கேற்றம் கண்டது. இதன்மூலம் எழுநூறு ஆண்டுகளுக்கும் மேலாக இந்துத் தமிழ் மக்கள் சித்திரைப்புத்தாண்டு கொண்டாடி வந்துள்ளமை உறுதியாகின்றது. எனினும் சித்திரைப்புத்தாண்டு என்பது காலக்கணிதத்தை அடிப்படையாகக் கொண்டதேயன்றி ஒரு மதத்துடனோ மொழியுடனோ சம்பந்தப்பட்டது அன்று.

முனைவர்
பால. சிவகடாட்சம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளியாக்கம் செய்தல் தொடர்பான பயிற்சிக்காக விண்ணப்பங்களை கோருதல்**

**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் வெளிக்கள தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளியாக்கம் செய்தல் தொடர்பாக ஒருவருடகால பயிற்சிக்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கல்வித் தகைமைகள் | : | கல்வி பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் 4 திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கல்வி பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் பௌதீகவியல் பாடத்துடன் விஞ்ஞானம்/கணிதத் துறையில் அனைத்து பாடங்களிலும் (பொது அறிவு பரீட்சை தவிர்ந்த) சித்திடைந்திருத்தல். |
| பயிற்சிக்கால கொடுப்பனவு | : | பயிற்சி காலத்தில் மாதாந்தம் 12,000/= ரூபாவிற்கான கொடுப்பனவு செலுத்தப்படும். |
| வயது | : | 18 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் |
| பொது | : | தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான ஒளியாக்கம் தொடர்பாக அக்கறை காட்டும் மற்றும் தகைமையுடைய 10 பேர் நேர்முக பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். விண்ணப்பங்கள் 05.04.2021 திகதிக்கு முன்னர் **"ஒளியாக்க பயிற்சி"** என்று குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். |

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**
**சுதந்திர சதுக்கம்**
**கொழும்பு 07**

**தொலைபேசி இலக்கம்** :- **011-2698187**
**இணையத்தளம்** :- **www.rupavahini.lk**

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு வழங்கல்**

பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யக்கூடியதும் இரத்மலான, லும்பினி அவென்யு, 41 ஆம் இலக்கத்திலுள்ள பொறியியல் பீடத்திலிருந்து 500 மீட்டருக்குள் அமைந்துள்ள பொருத்தமான கட்டிடமொன்றை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகமானது தேடுகின்றது.

1. கட்டிட இடப்பரப்பின் விஸ்தீரணம் : ஆகக் குறைந்தது இரு விரிவுரை மண்டபங்களாக பாவிக்கக்கூடியவை (50 மாணவர்கள்) மற்றும் 06 பதவிநிலையினருக்கான அறைகள் (கல்விசாரா பதவி நிலையினருக்கானது)
2. வாடகைத் தன்மை : முழுநேரத்திற்குமானது.
3. உரித்துடமை : ஏக உரித்துடமை அல்லது கூட்டு உரித்துடமை ஏற்றுக் கொள்ளக் கூடியது.
4. பணக்கொடுப்பனவிற்கான பெறுமதி : அரசாங்க பிரதான விலைமதிப்பாளரின் மதிப்பீட்டின் பிரகாரம்.
5. போதுமானளவு மின்சாரம் மற்றும் குழாய் நீர் வழங்கல் அவசியம் தேவை.
6. கட்டிட இடப்பரப்பானது வேலியுடன் அல்லது சுவரினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.
7. வருடாந்த குத்தகை ஒப்பந்த புதுப்பித்தலுக்கு உட்பட்டதாக 3 வருட வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும்.
8. போதுமானளவு சுகாதார வசதிகள் (ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிவறைகளின் எண்ணிக்கையை தனித்தனியாக தயவு செய்து குறிப்பிடவும்)
9. சதுர அடியொன்றிற்கான தொகை.

ஆர்வமுள்ள சாரார் பின்வரும் தகவலை பதிவுத் தபால் மூலம் 2021.04.01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ''பதிவாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொட'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**சமர்ப்பிக்க வேண்டிய தகவல்:**

(i) விலைமனுதாரரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று.
(ii) காணியின் அமைவிடம், முகவரி மற்றும் விலைமதிப்பீட்டு இலக்கம்.
(iii) காணியின் விஸ்தீரணம்: உறுதியின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று மற்றும் உரித்தான காணியின் நிலஅளவை படத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.
(iv) கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம்.
(v) காணியின் தற்போதய பாவனை - வழங்கப்படுவதற்கான ஆக அருகாமையிலுள்ள திகதி.
(vi) தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம்
(vii) பிரதான வீதியிலிருந்து காணியின் வரைபடம் அல்லது கோட்டுப் படம்.

011-3041607 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொறியியல் பீடத்தின் உதவி பதிவாளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில, நுகேகொட.**

## கிராமங்களை வலுப்படுத்தல்: *(13ஆம் பக்கத் தொடர்)*

*தேங்காயின் விலை அதிகரிப்பு காரணமாக தென்னைப் பயிர்ச்செய்கையில் பலரும் ஆர்வம் காட்டுகின்றனர். புதிய தென்னந் தோட்டங்களும் உருவாகிவருவது மகிழ்ச்சி தரும் ஒன்றுதான்.*

*ஒரு கிராமம் தனது கிராமியத் தன்மையை இழந்து நகரமயமாக்கப்படுவதையும் நகர்ப்புற வாழ்க்கைக்குரிய நடை, உடை, பாவனைகள் வாழ்க்கை முறைகளின் செல்வாக்கு அதிகரித்துச் செல்வதையும் ஒன்றாகக் காணமுடிந்தது. காலையில் எழுந்தால் வகைவகையான குருவிகளின் ஓசைகள் அந்திசாயும் நேரம் தென்னைகளில் அடையவரும் கிளிகளின் கீச்சும் இரவில் கத்தும் வண்டுகளின் ஒலியும் ஆந்தையின் அலறலும் என கிராமத்துக்கே உரிய ஒலிகள். இன்னும் அவை கேட்கத்தான் செய்கின்றன. கூடவே இப்போது மயில்களின் அகவலும் சேர்ந்து கேட்பது ஆச்சரியமானது தான். அதைவிட ஆச்சரியம் என்னவென்றால் கடைத்தெருவில் ஒரு செல்லப்பிராணிக் கடை (pet shop) யையும் காணமுடிந்தமைதான். முன்னரெல்லாம் கிளி அல்லது மைனாவைப் பிடித்து வீட்டில் வளர்த்தார்கள். இப்போது வெளிநாட்டுப் பறவைகளை இங்கே இனப்பெருக்கம் செய்து பணம் பார்க்கும் தொழில்களும் வந்துவிட்டதாகக் கேள்விப்பட்டபோது அவற்றை வாங்கும் அளவுக்கு நுகர்வுக் கலாசாரம் ஊடுருவி விட்டதா என்ற வியப்பே எஞ்சியது. முன்னர் கிராமத்தில் இருந்த கடைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகிவிட்டது. வாங்குவோர் இருந்தால் தானே விற்போர் பல்கிப் பெருக முடியும்? ஆரம்பத்தில் அறிமுகமான பழைய வர்த்தகர்களில் ஒருசிலர் அடையாளங் கண்டு அதே சிநேகப் புன்னகையுடன் குசலவிசாரிப்புகள். கடைத்தெருக்களில் கொழும்பில் உள்ள அதே பிரதான வர்த்தக நாமங்கள் டெடிகேடட் ரெடிமேட் புடைவைக்கடைகள் என பலவும் நுகர்வுக் கலாசாரத்தின் பெருக்கத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.*

*கிராமிய விவசாயப் பொருளாதாரம் பலமான ஒரு பொருளாதார அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அங்கிருந்து நிதிகளை நகரங்களுக்கு மாற்றும் கலாசாரம் பெருகிவருவதை வலியோடு நோக்க நேர்ந்தது. விவசாய ஏற்றுமதிக் கைத்தொழில்களோ அல்லது வேறு உற்பத்திக் கைத்தொழில்களோ அங்கு உருவாகி இருப்பதாகத் தெரியவில்லை. பெரிய கட்டடங்கள் உருவாகியுள்ள போதிலும் அவை வாங்கி விற்கும் தொழில்களின் பொருட்டோ அல்லது ஹோட்டல்கள் போன்ற சேவை உருவாக்கத்தின் பொருட்டோ கட்டப்பட்டன வேயன்றி உற்பத்திக் கைத்தொழில்களுக்காக உருவாக்கப்படவில்லை.*

*வணிகப் பெருக்கம் என்பது நுகர்வுக் கலாசாரத்தை அடியொற்றியதாக இருப்பதானது தற்போதையை அரசாங்கத்தின் கிராமங்களை வலுப்படுத்துவதன் ஊடாக பொருளாதார வளர்ச்சியை அடைதல் என்னும் எண்ணக்கருவுக்குப் பெருந்தடையாக அமைவதுடன் தாக்குப்பிடிக்கமுடியாத ஒரு நகரமயமாக்கலுக்கும் இட்டுச் செல்லலாம்.*

*மாறாக பொருளாதார நடவடிக்கைகள் ஏற்றுமதி வணிகத்திற்கு உகந்த உற்பத்திகளை ஊக்குவிப்பதாகவும் நீடித்து நிலைக்கக்கூடிய நுகர்வை மையப்படுத்தியதாகவும் அமைதல் வேண்டும். பூட்டான் போன்ற நாடுகள் பாரிய நகரமயமாக்கலுக்கும் நுகர்வுக் கலாசாரத்திற்கும் உட்பட்டிராத போதிலும் சூழலை மாசுபடுத்தாத பேண்தகு வளர்ச்சியையும் மகிழ்ச்சியான மக்கள் வாழ்க்கையையும் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளதையும் இங்கே நினைவிற் கொள்வது பொருத்தம்.*

*கொழும்புக்கு மீளத்திரும்பும் போது சிலநாட்களுக்கு முன்னர் ஊருக்குச் சென்ற அதே பாதை மிகவும் நீளமாகி விட்டது போலத் தோன்றியது. (தொடரும்)* *இலங்கையில் வர்த்தக நிறுவனங்களின் படிமுறை வளர்ச்சி : 6*

# விலைமனுக்களுக்கான அழைப்பிற்கான திருத்தம்

## அக்குரேகொடயிலுள்ள பாதுகாப்பு தலைமையக இடத்தொகுதியின் 01 ஆம் இலக்க தொகுதியில் தனியுரிமையுடைய கதவுகள், சட்டங்கள் மற்றும் ஹாட்வெயார் ஆகியவற்றை வடிவமைத்தல், இணைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதல்

**CONTRACT No.: DHQC/TIM DOOR 1/2020**

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக சிலுமின, சண்டே ஒப்சேர்வர் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் 2021.02.28ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனுக்களுக்கான அழைப்பிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
   - விலைமனு திறத்தல்/ மூடும் நேரமானது 2021 ஏப்ரல் 5 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
   - விலைமனுக்கள் 2021 ஓகஸ்ட் 02 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   - விலைமனுப்பிணையானது 2021 ஓகஸ்ட் 30ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. முன்னைய அழைப்பிலுள்ள ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதுவித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமை அலுவலகம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து பெற்று 2021 ஏப்ரல் 04ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் அதே முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03.**

**தொலைபேசி:** 0094-11-2439381/ 0094-11-2390719
**தொலைநகல்:** 0094-11-2390720
**மின்னஞ்சல்:** procurement@defence.lk

---

## எல்பிட்டிய பிளாண்டேஷன் பிஎல்சி

# கேள்வி அறிவித்தல்

எத்கந்துர, தெவிதுர பெருந்தோட்டத்திலுள்ள எல்பிட்டிய லைவ்ஸ்டையில் (பிவீடி) எல்டிடீ இல் பின்வரும் தொழிற்சாலை இயந்திராதிகளின் விற்பனைக்காக கேள்விச் சபையினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| No. | Item | Make | Qty. (Nos) |
|---|---|---|---|
| 01. | 12 inch Double side Planer Machine | Wood packer | 1 |
| 02. | 24 inch Double side planer machine | Crown | 1 |
| 03. | 18 inch Double side planer machine | Brook | 1 |
| 04. | 80 Kva Generator | Doman | 1 |
| 05. | Battery operated pallet reach truck 1.8 T | Toyota | 1 |
| 06. | Multi Rip Saw machine | | 1 |
| 07. | Pneumatic X cut saw | UNIGON | 4 |
| 08. | Air Compressor with tank & Dryer | Gardnerdenver | 1 |
| 09. | Dust collectors | | 4 |
| 10. | 3 feet & 4 feet roller tables | | 4 |
| 11. | 25 Hp dust collector | | 1 |
| 12. | Universal tool grinder machine | HO-HI | 1 |
| 13. | Straight knife grinder machine | SAN-JUL | 1 |
| 14. | 3 Ton steam boiler | Thamax | 1 |
| 15. | Bench drill machine | | 5 |
| 16. | Carpentry planer machine | | 1 |
| 17. | Round head sanding machine | | 3 |
| 18. | Double side belt sanding machine | Kurthemann | 1 |
| 19. | Single spindle molding machine | Alcobronz | 2 |
| 20. | Four rollers auto feeders | | 2 |
| 21. | Kilns drying room control panel units | | 4 |
| 22. | Circular saw mill machine 7 feet bench | Alcobronz | 2 |
| 23. | Rip saw mill machine | Alcobronz | 3 |
| 24. | Circular saw sharpening machine | | 1 |

அனைத்து கேள்விகளும் தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் ‘‘தொழிற்சாலை இயந்திராதி அம்சங்களின் விற்பனை’’ என குறிப்பிடப்பட்டு 2021 ஏப்ரல் 09 ஆம் திகதியன்று பி.ப. 4 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பிரதான நிறைவேற்று அலுவலர், எல்பிட்டிய பிளாண்டேஷன் பிஎல்சி 9 ஆம் மாடி, அட்கன் ஸ்பென்ஸ் கோபுரம் -01, இல. 305, வொக்ஷால் தெரு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2021 ஏப்ரல் 09 ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவையும் மீளளிக்கப்படும் வைப்புத்தொகையாக 5,000 ரூபாவையும் செலுத்திய பின்னர் எல்பிட்டிய லைவ்ஸ்டையில் சொலுசன்ஸ் தொழில்சாலை அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2021 ஏப்ரல் 09 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் எல்பிட்டிய லைவ்ஸ்டையில் சொலுஷன்ஸ் (பிவீடி) எல்டிடீ இன் முகாமையாளருடன் (தொலைபேசி: 0773710097) முன்னேற்பாட்டுச் சந்திப்பு மூலமாக வேலை நாட்களில் அனைத்து அம்சங்களும் பரீட்சிக்கப்படலாம்.

விலைமனுக்கள் தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பப்படலாம்.

இருப்பினும், எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்கூறுகளையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை எல்பிட்டிய பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி கொண்டுள்ளது.

**பிரதான நிறைவேற்று அலுவலர்,**
**எல்பிட்டிய பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி,**
**9 ஆம் மாடி, அட்கென் ஸ்பென்ஸ் கோபுரம் 01,**
**305, வொக்ஷோல் தெரு,**
**கொழும்பு-02.**
**தொலைபேசி : 011-4 693000**

BE BETTER INFORMED!
Dinamina Daily News Thinakaran
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT Google play App Store Windows Store
LAKE HOUSE

---

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### மோட்டார் வாகனங்கள்

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

பாடசாலை ஆசிரியருக்கு நன்றாக சமையல் தெரிந்த ஒரு பெண் தேவை. 2535 குடும்பத்தில் ஒருவர் போல் கவனிக்கப்படும். 0779873316, 0769987669. 022216

போட்டன் முழு பொடி அலுமினியம் லொறி 2012 டீசல் டபிள் வீல் 14 1/2 LKXXX உடன் விற்பனைக்கு. 0769989930. 020861

### வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

இரத்மலானை மெலிபன் சந்தியில் காலி வீதியில் இந்தியன் ரெஸ்டோரன்ட் விற்பனைக்கு (கட்டடம் இல்லை) CCTV, AC நவீன சமையல றை நவீன தளபாடங்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. 0770468296 018621

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

வாடகைக்கு, குத்தகைக்கு. தெஹிவளை பேசிங் Gall Rd வியா பார தளம் டைல்ஸ், மலசலகூடம், தரிப்பிடம், Rolor Door முழுமையா ன இடம் காரியா லயத்திற்கு, கம்பியூட்டர் போன், இலெக்ரோ னிக்/ இலெக்ரிகல், பாமசி மோட்டார் ஸ்பை ா பஸ், கொமினிகேசன், கிப்ட்சொப், ஆகியவற்றுக்கும் உடன் வியாபாரம் ஆ ரம்பிக்க உகந்த இடம். வாடகை 55000/ முற்பணம் பேசி த்தீர்மானிக்கலாம். 0777493884, 0 777803900. 022045

### 242 கோழிகள், முட்டைகள்

A .D.N. Dias Farm (நாட்டுக் கோழிக் குஞ்சுகள்) ஒரு வயதுள்ள மிகவும் ஆரோக்கியமான நாட்டுக் கோழிக் குஞ்சுகள். சேவல் குஞ்சுகளை மத்திரம் பெறலாம். போக்குவரத்து ரயில் மூலம். (100 இற்கு மேற்பட்ட ஓடர்கள் மட்டும் ஏற்கப்படும்) ஒரு குஞ்சு 60/ கம்பஹா. 0766876559 020060

### வேலைவாய்ப்பு

### 306 வெற்றிடங்கள் மருத்துவம்

தாதிகள் தேவை. கண்டிக்கு அருகில் வீடு உள்ளவர்களுக்கு முன்னுரிமை. உங்கள் CV ஐ அனுப்பி வையுங்கள். SFC, 319, பேராதனை வீதி, கண்டி. 0812235014, 0761194664. 022150

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

துணிமணி விற்பனை நிலையத்திற்கு (கடை) ஆண்/ பெண் ஊழியர் தேவை . (18 30 வயது) டீ.எம். வனிகசேக்கர அன்ட் சன்ஸ். இல. 45, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொ ழும்பு02. 071 1893059 021456

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கனரக வாகன சாரதிகள் மற்றும் சாரதி உதவியாளர்கள் தேவை. கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தீந்தை போக்குவரத்துச் செய்வதற்காக. 0777 890398 020832

பான் வண்டி சாரதிகள் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. ஒரு நாளைக்கு 1500/ 2000/ வரை கம்பஹா. 077411 8928. 021490

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

எனது வயோதிப தாயாரை பார்த்துக் கொள்வதற்கு கருணையுள்ள பெண் தேவை. மாதாந்த சம்பளம். ரூ. 30,000/ தொடர்பு 071 1167560 020930

ஏக்கல நிவாசிபுர வீட்டில் த ங்கி வேலை செய்வதற்கு திறமையான நேர்மையான பெண் அல்லது தனியாக உள்ள ஒருவர் தேவை. 0703276665, 0767224860. 021912

வீட்டுப் பணிப் பெண்கள், பெண் உதவியாளர்கள் மலைநாட்டிலிருந்து தேவை. வயது 17 முதல் 40 வரை நல்ல சம்பளம், நல்ல பணியாற்றும் வசிக்கும் வசதி கள். அனுபவம் தேவையில்லை. தொடர்புகள். 75/ 1, டப்ளியூ ஏ சில்வா மாவத்தை, வெள்ளவத்தை . தொலைபேசி 0 1 1259 1 169, 075 5 0913 7 9, 0112555410 020766

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

சோடீஸ் வகைகள் தயாரிக்க தெரிந்த பெண்கள் தேவை. (ரோல்ஸ், வடை, மரக்கறி ரொ ட்டி) கம்பஹா. 0777218564, 0774118928. 021492

தெஹிவளையில் உள்ள உணவகசாலைக்கு நன்கு அனுபவம் உள்ள பிரியாணியும் ஏனைய சமையல்கள் தெரிந்த நபர் ஒருவர் தேவை. தொ.0769726188/ 0772338688. 022153

ஹோட்டலில் 6 அறைகளை ஒழுங்கு படுத்துவதற்கு நீச்சல் தடாகத்தை சுத்திகரித்தல் ஹோட்டலை கண்காணிப்பதற்கு ஊழியர் தேவை. (ஆண்/பெண்) 0773520007. 021920

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

மேசன் பாஸ், செட்டலின் பாஸ், வயரின் பாஸ் தே வை. தங்குமிடமுண்டு. உதவியாளர்களும் தேவை. 078 8969403, 0723319372. 021921

### 325 தொழில்துறை பொது

பழைய சோனகத் தெருவில் இரும்புப் பொருட்கள் இறக்குமதி செய்யும் ஸ்தாபனத்திற்கு கணனி அறிவும். கணக்கியல் அறிவும் கொண்ட தரவுகளை பராமரிப்பதற்கும் பெண் தேவை. சம்பளம் அனுபவத்தை பொறுத்து தரப்படும். தொடர்புக்கு 0114349038. 022171

பாணந்துறை தொட்டவத்தையில் இயங்கும் சலூனுக்கு ஆள் தேவை. தங்குமிட வசதி உண்டு. 0774573600, 0779036146. 022169

0718653778 நட்சத்திர ஹோட்டல் இற்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் உணவு இலவசம். (12 மணி நேரம்) சம்பளம் ரூ.1450/, கொழும்பு 07186537 80, 0718379981, 0702513413, அலுவலகம் 071 86 53781, 0763155331. 021914

### சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

கொழும்பு 06, வெள்ளவத்தை, மகளிருக்கான தளபாடங்க ளுடனான அறைக ள் இணைந்த கழிவ றை, சாப்பாட்டறை, சமயலறை, குக்கர். வோஷிங், குளிரூட்டி. 75/ 1, டப்ளியூ ஏ சில்வா மாவத்தை. தொலைபேசி 0112591 1 69, 0755091 3 79, 0777452447 020763

### காணி/தோட்டம்

### 606 வர்த்தக சொத்துக்கள்/ காணிகள்

வியாபாரத்திற்கு உகந்த இடம் ஒன்று விற்பனைக்கு. வத்தளை ஹெந்தல பீச் வீதி, கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் உள்ள பீச் பார்க்கிற்கு ஏற்ற வியாபாரத்திற்கு உகந்த பர்ச்சர்ஸ் 19.5 இடம் விற்பனைக்கு உள்ளது. தொடர்பிற்கு 0773786035. 022167

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொலன்னாவ, சாலமுல்ல, நீருக்குள் மூழ்காத இடத்தி ல் சிறந்த 3 பே ர்ச் காணித்துண்டு விற்பனைக்கு உண்டு. கீழ்க்காணும் இலக்கத்தை அழையுங்கள். 0711654069. 021287

கொழும்பு07, 32, 30, 29, 27 பேர்ச் வீதமும், கொழும்பு03, 53, 24, 6 1/2, 22 பேர்ச் வீத மும் விற்பனைக்கு காணி உண்டு. அழையுங்கள். 0774948952 021364

மால பே SLIT-SITM HOR I ZON இற்கு அரு காமையில் வலிவிட்ட பாதையில் விஜயபாமா வத்தையில் 10 பேர்ச் 3 அறைகள் பான்ரி, ஹோல், ஊ ழியர் அறை, 4 வாகனங்கள் நிறுத்துமிடம் ஒ ரு வரு ம் வசிக்காத புதிய வீடு விற்பனைக்கு LK 240, 0773222571. 015738

ராஜகிரிய ஒபேசேக்கரபுர 07 பேர்ச் சிக்கலற்ற உரித்துரிமை உறுதி 20 அடி வீதியுடன் காணி விற்பனைக்கு. / 05 பேர்ச் முழுமையா ன இரு மாடி வீடு சிக்கலற்ற உறுதி. 20 அ டி வீதி.விற்பனைக்கு. 0774226225, 0725959511. 018969

6.09 பேர்ச், 10 அடி அகலமான பாதையு டன் 2 மாடி வீடு, 5 படுக்கையறை, 2 குளியலறை, வாகன நி றுத்துமிடம் காலி வீதிக்கு 100மீ. வ ங்கிக்கடனுக்கான தெளிவான ஆவணங்கள். தரகர்கள் வேண்டாம். வாடகை விலையிலிருந்து மாதாந்தம் 85, 000/ ஈட்ட மு டியும். 66 மில்லியன் விலை பேசித் தீர்க்கலாம். தொ.பே 0773339709. 020856

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

ராகம மருத்துவக் கல்லூரிக்கு அருகில் வீடு 95/ லட்சம், கந்தான வீடு. 95/ லட்சம் விற்பனைக்கு . 0777781811. 021489

வெள்ளவத்தையில் காணி விற்பனைக்கு. இலக்கம் 145/3, காலி வீதி, வெள்ளவத்தையில் இலங்கை வங்கிக்கு அருகாமை யில் 5.57 பர்ச் அளவிலான சமதரைக் காணி விற்பனைக்கு உண்டு. 20 அடி அகலமான நுழைவு பாதையும் சிக்கலற்ற உறுதியும் கொண்டது. வீடு மற்றும் அனைத்து வித கட்டிடங்களுக்கும் மிகவும் பொருத்தமான இடம். மேலதிக தொடர்புகளுக்கு A.Ameer Ali. 0777636349. 022227

### 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

பயிர்ச்செய்கைக்கு அல்லது விற்பனைக்குப் பொருத்தமான 2 ஏக்கர் குத்தகை அல்லது விற்பனைக்கு. தொடர்பு 0713305375, 0773280937. 021487

### 628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு

மாவனல்லையில் 14.5 பேர்ச்சு அனைத்து வசதிகளுடன் 3 மாடி, (Seperate Units ) வீடு விற்பனை க்கு. 35 மில்லியன். பேசித் தீர்க்கப்படலாம். 0775820546 021605

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

ஆண்களுக்கு அறை, இணைந்த குளியலறையுடன் வாடகைக்குண்டு 3 மாத முற்பணம். இல.121/1 சரணங்கர ரோட், தெஹிவளை. 077749 9 0 38/ 077798 3 9 89/ 0777337032. 022178

கொழு ம்பு 08 வீடு/ அலுவலகம் வாடகை க்கு. இரண்டு படுக்கையறைகள் இணைந்த குளியலறையுடன், மண்டபம், பென்றி மற்றும் சமையலறை முழுமை யாக டைல் செய்யப்பட்டுள்ளது. 071 5 213855, 076525 7 854 69/ 11, கு ருப்பு ரோட், கோ த்த மி வீதிக்கு அப்பால் பொரளை. 020878

நுகேகொட மூன்று அறைகள் தனி மாடி வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு காணி 12 பேர்ச் வாகனங்கள் நிறுத்த முடியு ம். குடியிருப்புக்கு அல்லது வர்த்தகத்திற்கு 0722892726, 076 1367655 021339

மாளிகாவத்தை தே.வீ. தி, 02 அறை, 02 ப ல்கனி, சமை யலறை மண்டபத்துடன் சிறந்த சூழல். உடனடியாக குத்தகைக்கு உண்டு. 076 6 887412. 021771

### 671 வீடு சொத்து தேவை

புத்தளத்தில் 500 ஏக்கர் வெற்றுக்காணி அல்லது புத்தளம் நகரிலிருந்து 30km இற்குள். SMS அல்லது அழையுங்கள். 0773097803. 158, பழைய காலி வீதி, கெ செல்வத்த, பா ணந்துறை. 020436

### 672 வீடு சொத்து வாடகைக்கு/குத்தகைக்கு தேவை

வீடு வாடகைக்கு, குத்தகைக்கு தேவை. தெஹிவளை , நெதிமாலையை அல்லது களுபோவில யில் 03 படுக்கை யறை, 03 குளிய லறை மற்றும் கா ர் நி றுத்துமிடத்துடன் வீடு தேவை. தொடர்பு 075 9 571001, 01152 4 3998. 021764

Repeat Your ad For Better Offers

---

# பாதுகாப்பு அமைச்சு

## அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியில் 03ஆம் தொகுதிக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு

**Contract No: DHQC/DHQC/ITC/03/2020**

### விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாளை மாற்றுதல்

1. மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பில் விலைமனுக்களை முடிவுறுத்தல்/ திறத்தலில் பின்வருமாறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

   (அ) விலைமனுக்கள் வழங்குதல் - 2021 மார்ச் 01 முதல் 2021 ஏப்ரல் 04 வரை
   (ஆ) விலைமனுக்கள் திறக்கும்/முடிவுறுத்தும் திகதி 2021 ஏப்ரல் 05ஆம் திகதி மு. ப. 11.00 மணி

2. விலைமனுக்கள் 2021.08.01ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (விலைமனு திறக்கப்படும் நாள் உட்பட விலைமனுக்கள் திறக்கப்படும்/முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்கள்)
3. விலைமனு பிணை முறியானது 2021.08.29ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (விலைமனு திறக்கப்படும் நாள் உட்பட விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் நாள் முதல் 147 நாட்கள்)
4. ஏனைய அனைத்து விபரங்களில் எவ்வித மாற்றமுமில்லை

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு -03, இலங்கை.**

**தொலைபேசி: 0094 077-3766601, தொலைநகல்: 0094- 011 2390720**

It's what you want
www.adz.lk
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

# பிரதமரின் பங்களாதேஷ் விஜயம்


























# தினகரனின் 89 ஆவது பிறந்த தின நிகழ்வு









## தினகரனில் சேவையாற்றிய பரசுராமனுக்கு கௌரவம்



ஒரு நிறுவனத்தில் தொடர்ந்து பல வருடங்கள் பணியாற்றி அதை ஒரு பெருமையாகக் கருதும் வழக்கம் தற்போது அருகிவரும் கலாசாரம். அடிக்கடி நிறுவனங்களை மாற்றுவதன் மூலம் பதவி உயர்வுகளையும் வருமானத்தையும் குறுகிய காலத்தில் அடையலாம் என்பது புதிய கலாசாரம். எமது லேக்ஹவுஸ் நிறுவனத்தில் மிக நீண்ட காலமாக பணியாற்றியோர் பலர். அவர்களில் ஒருவர் பரசுராமன். இவர் 44 ஆண்டுகளாக லேக்ஹவுஸ் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவிலும் பின்னர் ஆசிரியபீடத்திலும் பணியாற்றியவர். தியதலாவையைச் சேர்ந்த இவர் தன் 18வது வயதில் 1969ம் ஆண்டு லேக்ஹவுசின் உற்பத்திப் பிரிவில் பயிலுநராக பணியில் சேர்ந்தார். அவர் பணியில் சேர்ந்தபோது இந் நிறுவனம் டீ.ஆர்.விஜயவர்தன குடும்பத்துக்கு சொந்தமாக இருந்தது. தான் வேலைக்கு வந்தபோது சம்பளம் 33 ரூபா, அலவன்ஸ் 65 ரூபா என மொத்தம் 98 ரூபா சம்பளம் பெற்றதாகவும் அறைவாடகை ஐந்து ரூபா செலுத்தியதாகவும் கூறுகிறார். 44ஆண்டுகளாக அப்பழுக்கற்ற சேவையாற்றிய இவர் அதன் பின்னர் 2014வரை வாரமஞ்சரி ஆசிரிய பீடத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றார். தற்போது வர்த்தகத்துறையில் சுறுசுறுப்பாக இயங்கிவரும் பரசுராமன், பிரபலமான ஒரு பத்திரிகை நிறுவனத்தில் தன் வாழ்நாளில் பெரும் பகுதியை செலவிடக் கிடைத்ததை ஒரு பேறாகவும் அந்நினைவுகளை பொக்கிஷமாகவும் கருதுகிறார். கடந்த திங்கட்கிழமை 15ஆம் திகதி நடைபெற்ற தினகரனின் 89ஆவது பிறந்த நாள் விழாவின் போது 44 வருடங்களை இப் பத்திரிகை வளர்ச்சிக்காக அர்ப்பணித்த பரசுராமனுக்கு நிறுவனத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. தயாரத்ன பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



# பிரபல நடிகருடன் நடிக்க ஆசைப்படும் மாளவிகா மோகனன்

ரஜினி நடிப்பில் வெளியான பேட்ட படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் நடிகை மாளவிகா மோகனன்.

இப்படத்தை தொடர்ந்து, லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளியான மாஸ்டர் படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடித்து மிகவும் பிரபலமானார்.

தற்போது தனுஷுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

இந்நிலையில், சமூக வலைத்தளத்தில் ரசிகர் ஒருவர், மகேஷ் பாபு மாளவிகா மோகனன் புகைப்படத்தை வைத்து யாரெல்லாம் இந்த காம்பினேஷனை பார்க்க ஆசைப்படுறீங்க என்று கேட்க, அதற்கு முதல் ஆளாக மாளவிகா மோகனன் நான் என்று பதிலளித்து இருக்கிறார். மாளவிகா மோகனின் இந்த பதிலுக்கு ரசிகர்கள் பலரும் வரவேற்பு கொடுத்து வருகிறது.





# பொன்னியின் செல்வன் படத்திலிருந்து விஜய், மகேஷ்பாபு வெளியேற காரணம் இதுதான்..

மணிரத்னம் தற்போது கிட்டத்தட்ட 400 கோடி பட்ஜெட்டுக்கு மேல் பொன்னியின் செல்வன் எனும் படத்தை இரண்டு பாகமாக இயக்கி வருகிறார். இந்த படத்தில் ஜெயம் ரவி, கார்த்தி, ஐஸ்வர்யா ராய், அமிதாப் பச்சன், விக்ரம்பிரபு போன்ற பல முக்கிய நட்சத்திரங்கள் நடித்து வருகின்றனர்.

ஹைதராபாத்தில் பலத்த கட்டுப்பாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் பொன்னியின் செல்வன் படப்பிடிப்பு இறுதிகட்டத்தை எட்டியுள்ளதாம். விரைவில் முதல் பாகத்திற்கான வேலையை முடித்துவிட்டு வருகிற தீபாவளிக்கு படத்தை வெளியிட முடிவு செய்துள்ளனர்.

ஆனால் பல வருடங்களுக்கு முன்பே மணிரத்னம் பொன்னியின் செல்வன் படத்தை தளபதி விஜய் மற்றும் சூப்பர் ஸ்டார் மகேஷ்பாபு ஆகிய இருவரையும் வைத்து உருவாக்க நினைத்தார் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். பேச்சுவார்த்தைகள் முடிந்து இறுதியாக படப்பிடிப்பு செல்லும் தறுவாயில் திடீரென கைவிடப்பட்டது ரசிகர்களுக்கு பேரதிர்ச்சியை கொடுத்தது.

ஆனாலும் அதற்கான காரணம் என்ன என்பதை படக்குழுவினரும் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் எதற்காக பொன்னியின் செல்வன் படத்திலிருந்து விஜய் மற்றும் மகேஷ் பாபு இருவரும் விலகினார்கள் என்ற தகவல் கிடைத்துள்ளது. மணிரத்னம் இருவரிடமும் கதை சொல்லிவிட்டு அடுத்த கட்ட வேலைகளில் இறங்கினாராம். இந்நிலையில் தான் இருவருக்கும் கால்ஷீட் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

விஜய்யின் கால்ஷீட் ஃப்ரீயாக இருந்தால் அந்த பக்கம் மகேஷ்பாபு வேற படத்தில் பிஸியாக இருந்துள்ளார். அதேபோல் மகேஷ்பாபு படப்பிடிப்பு இல்லாமல் இருந்த சமயத்தில் விஜய் வேறு ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருந்தாராம். இருவருக்குமே கொஞ்சம்கூட ஒத்துவராத கால்ஷீட் பிரச்சினையால் தான் படம் கைவிடப்பட்டது.

அதன்பிறகு மணிரத்னம் எவ்வளவு போராடியும் இருவரையும் வைத்து படம் இயக்க முடியவில்லை.

இப்போது 400 கோடி பட்ஜெட்டில் பிரமாண்டமாக படம் இயக்கி வந்தாலும் விஜய் மற்றும் மகேஷ்பாபு இல்லையே என்ற ஒரு சின்ன குறை இன்னமும் மணிரத்னம் மனதில் இருந்து கொண்டு தான் இருக்கிறதாம்.

# ஜகமே தந்திரம் 18+ படமா ?



தனுஷ் நடிப்பில் அடுத்ததாக நேரடியாக நெட்பிளிக்ஸ் தளத்தில் வெளியாக இருக்கும் ஜகமே தந்திரம் படத்தைப் பற்றிய செய்தி ஒன்று இணையதளங்களில் காட்டுத்தீ போல் பரவி வருகிறது. அப்படி இருக்க வாய்ப்பே இல்லை என ரசிகர்கள் ஒரு பக்கம் கருத்துக்களை அள்ளித் தெளித்து வருகின்றனர்.

தனுஷ் மற்றும் கார்த்திக் சுப்புராஜ் கூட்டணியில் முதல் முறையாக உருவான திரைப்படம் ஜகமே தந்திரம். லோக்கல் டான் எப்படி இன்டர்நேஷனல் டான் ஆகிறான் என்ற கதையை அதிரடியாக கூறியுள்ளாராம் கார்த்திக் சுப்புராஜ்.

இந்த கூட்டணி உருவாகும் போதே படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமான நிலையில் கடந்த வருடம் மே 1ஆம் திகதி ஜகமே தந்திரம் படம் தியேட்டர்களில் வெளியாக இருந்தது. ஆனால் சூழ்நிலை சரியில்லாத காரணத்தினால் தள்ளிச் சென்றது. சமீபத்தில் கூட விஜய்யின் மாஸ்டர் படம் தியேட்டரில் வெளியானதால் கண்டிப்பாக ஜகமே தந்திரம் படமும் தியேட்டரில்தான் வெளியாகும் என தனுஷ் தன்னுடைய ரசிகர்களுக்கு நம்பிக்கை கொடுத்திருந்தார். ஆனால் தயாரிப்பாளரின் தில்லுமுல்லு வேலைகள் தனுஷை பெரிய அளவில் கஷ்டப்படுத்தி உள்ளது பின்னர் அப்பட்டமாகத் தெரிந்தது.

இந்நிலையில் விரைவில் நெட்பிளிக்ஸ் தளத்தில் ஜகமே தந்திரம் திரைப்படம் வெளியாக உள்ளது. ஜகமே தந்திரம் முழுக்க முழுக்க 18வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே பார்க்க வேண்டிய படம் என நெட்பிளிக்ஸ் நிறுவனம் தங்களுடைய வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளதால் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

மேலும் தவறான காட்சிகள் இருந்தால் மட்டும் ஏ சர்டிபிகேட் கொடுக்க மாட்டார்கள் எனவும், சண்டைக்காட்சிகளும் ரத்தம் தெறிக்கும் காட்சிகளும் அதிகமாக இருந்தாலும் ஏ சர்டிபிகேட் தான் கொடுப்பார்கள் என்பதையும் ரசிகர்கள் அதிக அளவில் பரப்பி வருகின்றனர்.

என்ன இருந்தாலும் ஜகமே தந்திரம் படம் தாறுமாறாக இருக்கும் என்பதை மட்டும் ரசிகர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

# கேரளா பக்கம் சென்ற காயத்ரி



தமிழில் நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம், ரம்மி, சீதக்காதி, புரியாத புதிர் படங்களில் நடித்த காயத்ரி தற்போது கேரளா பக்கம் சென்றிருக்கிறார்.

காயத்திரி மலையாளத்தில் ரிதிஷ் பாலகிருஷ்ணன் இயக்கத்தில் வெளியாகி, பெரும் வரவேற்பைப் பெற்ற படம் 'ஆண்ட்ராய்டு குஞ்சப்பன்'. இதில் சுராஜ், சௌபின், சூரஜ் உள்ளிட்ட பலர் நடித்தனர். 2019ம் ஆண்டு வெளியான இந்தப் படத்துக்குச் சிறந்த நடிகர், அறிமுக இயக்குநர், கலை இயக்குநர் ஆகிய கேரள மாநில விருதுகள் கிடைத்தன.

இந்தப் படத்தின் தமிழ் ரீமேக்கில் கே.எஸ். ரவிகுமார் நடித்துத் தயாரித்து வருகிறார். 'கூகுள் குட்டப்பன்' எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. இதன் படப்பிடிப்பு தென்காசியைச் சுற்றியுள்ள பகுதிகளில் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் 'ஆண்ட்ராய்டு குஞ்சப்பன்' படத்தின் இயக்குநர் ரதீஷ் பாலகிருஷ்ணன் தனது அடுத்த படத்தை அறிவித்துள்ளார். இதில் குஞ்சாக்கோ போபன் நாயகனாக நடிக்கவுள்ளார். இதில் நாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார் காயத்ரி. மலையாளத்தில் காயத்ரி அறிமுகமாகும் முதல் படமாக இது அமைந்துள்ளது.

தற்போது தமிழில் விஜய் சேதுபதிக்கு நாயகியாக காயத்ரி நடித்துள்ள 'மாமனிதன்' திரைப்படம் விரைவில் வெளியாகவுள்ளது.

சினி மஞ்சரி

# ரசிகர்களை மூழ்கடித்த ஷாலினி பாண்டே!



தெலுங்கு நடிகையாக இருந்தாலும் தமிழில் கொரில்லா, 100% லவ், ஆகிய படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்களின் மனதில் இடம் பிடித்த நடிகை ஷாலினி பாண்டே. இவருடைய க்யூட்டான சிரிப்பாலும், கன்னக்குழி அழகாலும் எக்கச்சக்கமான ரசிகர்கள் மயங்கி கிடக்கின்றனர்.

இருப்பினும் இவருக்கு அந்த அளவிற்கு படவாய்ப்புகள் கிடைக்காவிட்டாலும் தனது முயற்சியை கைவிடாமல் தொடர்ந்து பல படங்களில் சின்ன சின்ன கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

அந்த வரிசையில் தற்போது அனுஷ்கா நடித்துள்ள 'நிசப்தம்' படத்தில் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார் ஷாலினி பாண்டே. இந்த சூழலில் இவருடைய படுகவர்ச்சியான புகைப்படத்தை தனது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு ரசிகர்களை குஷியாகியுள்ளார்.

இந்த போட்டோவில், ஷாலினி பாண்டே கடற்கரையில் அமர்ந்தபடி காற்று வாங்குவது போல், தன்னுடைய முதுகுப்புற அழகை ரசிகர்களுக்கு காண்பித்து கிறங்கடித்துள்ளார். எனவே இவர் சில நாட்களாக இன்ஸ்டாகிராமில் வராமல் இருந்ததால், தற்போது திடீரென்று தனது இந்த புகைப்படத்தை பதிவிட்டு ரசிகர்களுக்கு தரிசனம் கொடுத்துள்ளார். ஆகையால் இந்த போட்டோவானது அவரது ரசிகர்களால் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

# விஜய் சேதுபதி படத்தில் நடிக்கும் 'குக் வித் கோமாளி' பிரபலம்





பொன்ராம் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்க உள்ள புதிய படத்தில் 'குக் வித் கோமாளி' பிரபலம் ஒருவர் நடிக்க உள்ளாராம். விஜய் சேதுபதி சிவகார்த்திகேயன் நடித்த 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்', 'ரஜினி முருகன்', 'சீமராஜா' உள்ளிட்ட படங்களை இயக்கியவர் பொன்ராம். இவர் அடுத்ததாக இயக்கும் படத்தில் நடிகர் விஜய் சேதுபதி ஹீரோவாக நடிக்க உள்ளார். சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு டி இமான் இசையமைக்கிறார்.

பக்கா கொமர்ஷியல் திரைப்படமாக உருவாகும் இதில் நடிகர் விஜய் சேதுபதி பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார்.

இந்நிலையில், சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் 'குக் வித் கோமாளி' நிகழ்ச்சி மூலம் பிரபலமான நடிகர் புகழ், இப்படத்தில் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. இவர் தற்போது ஹரி இயக்கத்தில் அருண் விஜய் நடிக்கும் படத்தில் நடித்து வருகிறார். இதுதவிர சந்தானத்துடனும் ஒரு படத்தில் நடிக்கிறார். இவ்வாறு அடுத்தடுத்து படங்களில் ஒப்பந்தமாகி வரும் புகழ், பிசியான நடிகராக வலம்வருகிறார்.

காஞ்சிரங்குடா வேல்கண்ட சேனை சித்திவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் மற்றும் தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயங்களில் பிரதம குரு பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ மு.கு. சச்சிதானந்த மூர்த்திக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. அங்கு நடைபெற்ற கிரியா கால நிகழ்வுகளை படங்களில் காணலாம்.
ஆரையம்பதி தினகரன் நிருபர்










கொழும்பு ஹைரியா பெண்கள் பாடசாலையின் 140வது வருட பூர்த்தி விழாவை கொண்டாடுவதை முன்னிட்டு பாடசாலையின்விழா இலச்சினையும், கல்லூரியின் இணையத்தள முகவரியும் நேற்று முன்தினம் (19) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

கல்லூரி அதிபர் திருமதி நஷீரா ஹஸனார் தலைமையில் இந்நிகழ்வு கல்லூரியின் ஸம் றிபாய் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கொழும்பு வலய கல்வித் திணைக்களத்தின் கல்விப்பணிப்பாளர் ஜி.என்.சில்வாவும் கௌரவ அதிதிகளாக உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி மும்தாஸ் பேகம் மற்றும் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் ரஞ்ஜித் பிரேமதிலக, பிரதி அதிபர் திருமதி எம்.எம்.ஏ. காதர் ஆகியோருடன் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவிகள், மற்றும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

ஏ.எஸ்.எம்.ஜாவித்

தினகரன் வாரமஞ்சரி
BUDGET adz
It suits your budget

SAMEERA AUTO TRADERS
எம்முடன் இணைவதற்கு வாருங்கள்...!!!
நம்பிக்கை, கறுகறுப்பு மற்றும் அனுபவமுள்ள சேவைக் குழுமின் சேவை...!!!
ஒரே நாளில் லீசிங் வசதிச் சேவை...!!!
BUY WITH CONFIDENCE
FREE 3 SERVICES

HONDA GRACE FACE LIFT 2018 78.50/-
KIA SORENTO PETROL 2011 71.90/-
TOYOTA WIGO - 2017 40.50/-
TOYOTA VITZ - 2018 2 Units Available (Black & Silver) 52.50/-
TOYOTA AQUA - 2015 (02 Units Available) 52.50/-
DAIHATSU MIRA - 2017 35.50/-
MICRO KYRON - 2013 45.50/-
MERCEDES BENZ E200 2005 49.90/-
KIA SORENTO DIESEL - 2011 (02 Units Available) 77.50/-
MAZDA 2 - 2015 54.75/-
KIA PICANTO - 2016 Manual (02 Units Available) 30.90/-
MITSUBISHI OUTLANDER 2014 (02 Units Available) 82.50/-
TOYOTA AXIO WXB - 2018 75.50/-
TOYOTA AXIO G GRADE 2014 54.90/-
TOYOTA RUSH - 2008 54.90/-
NISSAN NV 100 - 2013 28.90/-
SUZUKI WAGON R - 2016 37.90/-
TOYOTA VITZ - 2007 36.90/-
TOYOTA VITZ - 2016 46.90/-
SUZUKI ALTO (JAPAN) 2017 34.25/-
HONDA VEZEL - 2014 61.90/-
TOYOTA YARIS - 2008 45.90/-
MICRO REXTON - 2008 (02 Units Available) 49.75/-
TOYOTA HIACE KDH - 2017 97.50/-
TOYOTA ALLION - 2010 61.90/-

UDAYA - 076 909 56 05 / ASELA - 0776 562 007
Can be Seen @ 121/A Pagoda Road, Nugegoda.
( Close to Ananda Balika College )
100% ACCIDENT FREE... / 100% RUNNING CONDITION... / 100% INTERIOR CONDITION...
SAMEERA AUTO TRADERS

போட்டோ குறும் விளம்பரம்



**Foton** Full Aluminium body Lorry, 2012, Diesel, Double Wheel, 14 1/2 LK - xxxx, Quick for sale |
076 998 99 30 / 072 818 23 38
020855 (ADZ)

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,000/- +VAT
adzsuo@gmail.com

Victorian Guest
- Bandarawela
1st floor
4 Double rooms
8+Persons
Ground floor
4 Triple rooms
12 Persons
Mini Pool
A Cook available
(2km Away from Railway Station and Town) Bandarawela
Weekday
D/ Rooms - 1700/-
Triple Room - 2200/-
077 3 711 196
070 2 536 896
victorianbungalow.lk

Advertise Here
தினகரன் வாரமஞ்சரி
BUDGET adz
11.8cm (Height) x 8cm (Width)
Rs. 2,000/- +VAT
Contacts :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com



# மனித இருப்பின் ஆதாரம் காடுகள்

**மர்லின் மரிக்கார்**

**உலக காடுகள் தினம் இன்று (21.03.2021) ஆகும். அதன் நிமித்தம் இக்கட்டுரை பிரசுமாகின்றது.**

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் மனிதன் முகம் கொடுத்துள்ள பெருஞ் பிரச்சினைகளில் காடுகளின் அழிப்பும் அழிவும், பிரதான இடத்தைப் பிடித்துள் ளன. காடுகளின் முக்கியத்துவம் அவை மனிதன் உள்ளிட்ட உயிரினங்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஆற்றிவரும் பணிகள் தொடர்பில் உரிய தெளிவு இன்மையின் விளைவாகவே இவ்வாறான சவால்களைக் காடுகள் எதிர்கொண்டுள்ளன. ஆனால் காடுகள் அழிவதன் விளைவுகளையும் தாக்கங் களையும் அறிந்து கொள்ளும் எவரும் அதனை அழிக்கவோ சேதப்படுத்தவோ துணை போக மாட்டார்கள்.

இவ்வாறான பின்னணியில் தான் காடுகளின் முக்கியத்துவம் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற் படுத்த வேண்டிய தேவை உலகலாவிய ரீதியில் உணரப்பட்டிருக்கின்றது.

அந்தடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை 2012 முதல் மார்ச் 21 ஆம் திகதியை உலக காடுகள் தினமாக பிர கடனப்படுத்தி இருக்கின்றது. அதன்படி வருடா வருடம் ஒவ்வொரு தொனிப் பொருளின் கீழ் இத்தினம் அனுஷ்டிக் கப்படுகின்றது. அதற்கேற்ப இவ்வருட உலக காடுகள் தினத்தின் தொனிப்பொ ருள் 'வன மறுசீரமைப்பு: மீட்பு மற்றும் நல்வாழ்வுக்கான பாதை' (Forest restoration: a path to recovery and wellbeing) என்பதாகும்.



காடுகளானவை மனிதன் உள்ளிட்ட அனைத்து உயி ரினங்களின் உயிர்வாழ்வுக்குத் தேவையான ஒட் சிசனை வழங்கும் உயிரினங்களின் இருப்புக்கான ஆதா ரமாகும். அத்தோடு மனிதன் அடங்கலான உயிரினங்கள், வாகனங்கள், தொழிற்சாலைகள் வெளியிடுகின்ற காபனீரொட்சைட்டினால் வளிமண்டலத் தின் சமநிலை சீர்கெடுவதைத் தவிர்க்கும் இக்காடுகள் வளி மண்டலத்தில் சேரும் காபனீரொட்சைட்டை உறிஞ்சி சுற்றுசூ ழலைச் சமநிலைப்படுத்தும் மாபெரும் பணியையும் செய்து வருகின்றது. அத்தோடு மழை கிடைக்கப்பெறவும் தண்ணீர் ஆறாகவும் நீரூற்றுகளாக வும் உற்பத்தியாகி மனிதனுக்கும் இதர உயிரினங்களுக்கும் பயனளிக்கவும், வெள்ளப்பெருக்கு, மண்ணரிப்பு என்ப னவற்றைத் தடுக்கவும் பல்லுயிர்களின் இருப்புக்கும் பெருக்கத்திற்கும் ஆதார மாகவும் திகழுகின்றன காடுகள். மேலும் மண், தட்பவெப்பம் மற்றும் சுற்றுசூழலை யும் பாதுகாக்கும் இக்காடுகள் தான் நீர், கடதாசி, புத்தகம், வீடுகள், பாவனைத் தளபாடங்கள், சில மருந்துகளின் உற் பத்தி, விறகு உள்ளிட்ட பலவற்றுக்கும் ஆதாரமாகவும் இருக்கின்றது. அத்தோடு மனிதனுக்கு தேன், பழங்கள், மரக்கறி வகைகள் மற்றும் கீரை வகைகளை உணவாக வழங்கும் இக்கா டுகளை உலகில் 160 கோடி மக்கள் வாழ் வாதாரத்திற்காக நம் பியுள்ளனர் என ஆய்வுகள் தெரி விக்கின்றன.

மேலும் காலநி லையைச் சீரான நிலையில் வைத் துக்கொள்வதில் முக்கிய பங்காற் றும் காடுகள், ஆரம்ப காலங்களில் மனிதனுக் கும் விலங்குகளுக்கும் இருப் பிடமாக இருந்திருக்கின்றது. என்றாலும் நாளடைவில் நாகரிகம் வளரத்தொடங் கியதன் விளைவாக மனிதன் காட்டை அழித்து நிலங்களைப் பிரித்துக்கொண் டான். ஆனாலும் காடுகள் தொடர்ந்தும் வன விலங்குகளின் புகலிடமாகவே நீடித்து வருகின்றது.

அவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் காடுகள், அதிகளவிலான தாவரங்களைக் கொண்ட பிரதேசமாக இருக்கும். புவி மேற்பரப்பில் சுமார் 9.4 வீதம் அல்லது முழு நிலப்பரப்பிலும் சுமார் 30 வீதம் பல்வேறு விதமான தாவரங்களையும், மரஞ்செடி கொடிக ளையும் கொண்டுள்ளது. இக்காடுகளில் சுமார் 60 ஆயிரம் வரையான மரஞ்செடி கொடி, தாவர வகைகள் உள்ளன.

ஒரு நாட்டில் 33 வீதமான காடுகள் இருப்பது தான் அந்நாட்டுக்கு ஆரோக் கியமானதாக இருக்கும். இது உலகலா விய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு பொது விதியாகும். ஆனாலும் தற்போது 30 வீதமான காடுகள் தான் உலகில் காணப்படுகின்றன. ஆனால் ஒரு நாட்டின் முதுகெலும்பு காடு தான் என்பதை மறந்துவிடலாகாது.

இருந்த போதிலும் காடு தொடர்பில் பலவிதமான வரைவிலக்கணங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் உலக உணவு ஸ்தாபனம் முன்வைத்துள்ள வரைவிலக்கணத்தின் படி, குறைந்தது 0.5 ஹெக்டெயர் பரப்பளவில் 5 மீற்றர் களுக்கும் மேற்பட்ட மரங்கள் உள்ளிட்ட பல்வேறு தாவரங்களையும் செடிகளை யும் கொண்ட உயிர்ப்பல்வகைமைப் பிர தேசமே காடுகளாகும்.

அதேநேரம் சட்ட ரீதியில் உயிரினங் களை வேட்டையாடுவதற்காக ஒதுக்கப் பட்டதும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படாததுமான பிரதேசமே காடு எனவும் வரைவிலணக்கம் அளிக்கப்பட்டிருக்கின் றது. இவற்றைவிடவும் வேறு வரைவிலக் கணங்களும் உள்ளன.

காடுகள் மரஞ் செடி, கொடிகளை மாத் திரம் கொண்டவை அல்ல. மாறாக அவை உயிரினங்களின் ஆதாரம். மரஞ் செடி, கொடிகளோடு பறவைகள், விலங்குகள், ஊர்வன, பூச்சிகள், வண்டுகள், புழுக்கள் உள்ளிட்ட பல்வேறு விதமான உயிரினங் களையும் உள்ளடக்கிய உயிர்ப்பல்வகை மைக் கட்டமைப்பாகும்.

இவை காலநிலை, வானிலை நிலை மைகள், அமைவிடம், காணப்படும் தாவ ரங்களின் தன்மை என்பவற்றுக்கு ஏற்ப வெவ்வேறு வகைக் காடுகளாக வகைப்ப டுத்தப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு முக்கியத்துவம் பெற்றி ருந்தும் கூட காடுகள் உலகெங்கிலும் நாளாந்தம் அழிக்கப்படவே செய்கின் றன. காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு மாநாட்டு (UNFCCC) செயலகத்தின் தகவல்களின் படி, காடழிப்பிற்கான பிரதான நேரடி காரணம் விவசாயம் தான். அதிலும் 48 வீதம் வாழ்வாதார விவசாயத்திற்கும், 32 வீதம் வணிக வேளாண்மைக்கும், 14 வீதம் தளபாடங்கள் உள்ளிட்ட வீட்டுத் தேவைகளுக்காகவும், 05 வீதம் எரிபொ ருளுக்காகவும் என்றபடி காடழிப்பு இடம் பெறுகின்றது. அவற்றில் சனத்தொகைப் பெருக்கம், குடியிருப்புக்கள், பாலங்கள், நெடுஞ்சாலைகள், தொழிற்சாலைகள் என்பவற்றை அமைத்தல் முக்கிய இடத் தைப் பெற்றுள்ளன. இவ்வாறு பல்வேறு தேவைகளின் நிமித்தம் காடுகள் அழிக் கப்படுவதோடு காட்டுத்தீ காரணமாகவும் காடுகள் அழிவடைகின்றன. இவ்வாறான காரணங்களினால் தான் பெரும்பாலான நாடுகளில் காடுகளின் அளவு குறைவ டைந்து வருகின்றது.



அந்த வகையில் இலங்கையின் நிலப் பரப்பில் 29.1 வீதக் காடுகள் தான் தற்போது காணப்படுகின்றது. ஆனால் அயன மண்டத்தில் அமைந்துள்ள இலங் கையில் வனாந்திரத்திற்குரிய தாவரங் களும் உயிரினங்களும் பெருமளவில் உள்ளன. அதன் விளைவாக உலகில் சிறந்த உயிர்ப் பல்வகைமையைக் கொண்ட வனாந்திரக் கட்டமைப்பைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை விளங்குகின்றது.

அதேநேரம் உலகில் இயற்கையாக உருவான காடுகளும் மனிதனால் உரு வாக்கப்பட்ட காடுகளும் உள்ளன. இவ்விரு வகைக் காடுகளும் இலங் கையிலும் காணப் படுகின்றன. என் றாலும் இந்நாட்டில் இயற்கைக் காடுகள் அமைந்துள்ள நில வேறுபாடு, அப்பிர தேசங்களின் மழை வீழ்ச்சி, வெப்பநிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வெப்ப வலய ஈர பசுமைக் காடு, மலை நாட்டு காடு, உலர் கலப்பு பசுமைக் காடு, முற்புதர்கள் காடுகள் என அவை வகைப் படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் காடுகள் அழிவடைந்து அருகிச் செல்லும் போது சுற்றுச்சூழல் சமநிலையை இழக்கும். வளிமண்டலத் தில் காபனீரொட்சைட்டின் அளவு அதி கரித்து சுவாசத் தொகுதி தொடர்பான பலவித உபாதைகளுக்கு மனிதன் முகம் கொடுக்க நேரிடும். வனவிலங்குகள் உள் ளிட்ட ஏயை உயிரினங்களும் உணவு, இருப்பிடம் உள்ளிட்ட பலவிதமான சவால் களுக்கு முகம் கொடுக்கும். குறிப்பாக புவி வெப்பமாதல் அதிகரிக்கும். பனிப் பாறைகள் உருகும். அதன் விளைவாக கடல் மட்டம் உயரும். கடலின் மேல் மட்ட வெப்பநிலை அதிகரிக்கும்.

காடுகள் அழிக்கப்படுவதால் வன விலங்குகள் உள்ளிட்ட காட்டுயிர்கள் இருப்பிடங்களையும் உணவையும் இழந்து மனித குடியிருப்பு பிரதேசங்க ளுக்கு வருகை தரும். இதன் விளைவாக மனிதன் வனவிலங்குகள் முரண்பாடு ஏற்படும். இவ்வாறான முரண்பாடு இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் யானைகளால் ஏற்கனவே ஏற்பட்டுள் ளன. இவ்விதமான முரண்பாடுகள் வன விலங்குகளதும் தாவரங்களதும் அழி வுக்கு வழிவகுக்கும்.

ஆகவே உலகில் பாதுகாப்பப்பட வேண்டிய மிக முக்கியத்துவம் மிக்க இயற்கை வளமே காடுகள் என்பது தெளி வாகின்றது. இதனை உணர்ந்து செயற் பட வேண்டும். அதனால் இயற்கைக் காடுகளைப் பாதுகாக்க ஒவ்வொருவரும் ஒத்துழைப்பு நல்குவதோடு புதிதாக மரஞ் செடிகளை நட்டு காடுகளை உருவாக்க வும் பங்களிப்பதும் மிகவும் அவசியம். ஏனெனில் காடுகளின் அழிவு மனிதன் உள்ளிட்ட உயிரினங்களின் இருப்பைக் கேள்விக்கு உள்ளாக்கிவிடும். அதனால் காடுகளைப் பாதுகாப்பதையும் பரவலாக் குவதையும் ஒவ்வொரும் தம் பொறுப்பா கக் கருதி செயற்பட வேண்டும். அப்போது காடுகளுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற் படாது.

# நந்தவனம் பவுண்டேசன் வழங்கிய ஆளுமைப் பெண் விருது விழா






சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஆண்டுதோறு நந்தவனம் பவுண்டேசன் பல் துறைகளில் சாதித்து வரும பெண்ணனகளை கௌரவித்து விருது வழங்கி வருகிறது

2021 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழா 14 / 02/2021 அன்று திருச்சியில் பிர மாண்டமாக நடைபெற்றது.

நந்தவனம் பவுண்சேன். விழித் தெழு பெண்ணே, கனடா சக்தி யோகாலையா பிரவெட் லிமிடெட், அமெரிக்கா, இணைந்து நடத்திய இவ்விழாக்கு நந்தவனம் பவுண்டே சன், தலைவர் நந்தவனம் சந்திரசேக ரன் தலையேற்க செயலர் எம் சாதிக் பாட்சா முன்னிலை வகித்தார் .கும்ப கோணம் தமிழ் பால் நிறுவன இயக் குநர் தியாகராஜன் கண்ணன், அமெ ரிக்கா சக்தி யோகாலையா பிரவேட் லிமிடெட் இயக்குநர் கவிதா இளை யராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாக கலந்து கொண்டு ஆளுமைப் பெண் விருதுகள் வழங்கி சிறப் பித்தனர்

கவிஞர் கவி செல்வா திருச்சி, டாக்டர் ஆபிதா பர்வீன் திருநெல் வேலி, டாக்டர் சீலா தேவி பெங்க ளூர், எஸ்.வித்யா கரூர், வெண்ணிலா (எ) லதா கோவை, து.மார்த்தா காரைக் குடி, டாக்டர் D . தாமரை பள்ளத்தூர், செ.திலகவதி கரூர், சங்கீதா ராமசாமி கள்ளக்குறிச்சி, நித்யா ரங்கராஜன் சென்னை, புஷ்பலதா திருச்சி, நதியா திருச்சி, மணிமேகலை ஈரோடு, டாக்டர் D. இராஜகுமாரி சேலம் ஆசி யோருக்கு ஆளுமைப் பெண் விருது வழங்கப் பட்டது

முன்னதாக நந்தவனம் பவுன்சேன் பொருளா லர் பா.தென்றல் அனைவரையும் வரவேற்க கவிஞர் மணிகண்டன் நிகழ்வை சிறப்பாக தொகுத்து வழங்கினார் நிறைவாக வைத்திய கலாநிதி வேதா யோகநாதன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.




# இருட்டில் வெளிச்சம் தேடும் குருட்டுப் பூனைகள்

கனக்கப் படிச்சதுகள் – இக்
கடுகன் பூனைகள்
இருட்டில் வெளிச்சம் தேடும் இதுகளுக்கு
சூடேது, சுரணையேது ?
எல்லாமே ஒன்றுதான்
மரித்துப் போன மர மண்டைக்குள் உழுத்துப் போன சில ஊத்தைகளை
சமுத்திரமாய் தலையில் சுமந்து நுணிப்புல் மேயும் விசித்திர கில்லாடி கள்...
தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என முழங்கும் தறுதலை முண்டங்கள்
முட்டையில் மயிர் பிடுங்கத் தொடங்கி விட்டன.
இப்போதெல்லாம் படுத்தவனை எப்படியும் எழுப்பலாம்.
ஆனால்
படுத்தவனை போல் பாசாங்கு செய்பவனை
எப்படித்தான் எழுப்புவது ஆமாங்க இப்படித்தான்
இதுகளின்ர கதைகளும்
மண்டை நிறைய மசாலா கொன்ரைணர்களின் கோபுரம் சரிந்து அடிப்ப டைவாத அனர்த்தப் பூகம்பத்தால் சமுகம்
சல்லடையாவதும் புரியாத
இருட்டுக்குள் வெளிச்சம் தேடும் பொல்லாத குருட்டுப் பூனைகள் இவைகள்.
ஏதோ...வானத்தில் இருந்து வீழ்ந்த வைடூரியம் போல, முகமூடியணிந்து முற்றும் தெரிந்த முனிவர்கள் போல ஆழமறியாமல் காலைவிட்டு சேற்றுள் புதைந்த செக்குமாடாய் சமுகத்தை
காட்டிக் கொடுக்க வந்த கடுகன் பூனைகளே! வாருங்கள்
வெளிச்சத்தை விட்டு இருட்டுக்குள் எதனைத் தேடுகிறீர்கள்.
நீங்கள் விழும் குழிக்குள் எங்களையும் வீழ்த்தலாம் என்ற விஸப் பரீட் சையா? அட வேண்டாங்காண்...........
ஓ.......இருட்டுக்குள் வெளிச்சம் தேடும் குருட்டுப் பூனைகளே.
ஒன்றாவோம் எங்கள் அன்னை தாயகத்தின் ஆசீர்வாதத்தோடு......
அதோ........வீசுகிறதே வசந்த மாருதம் அதில் அனைவரும் இரண்டறக் கலந்து இணைந்து, மகிழ்ந்து ஒரே தாய் மடியில்
சமாதானக் காற்றை
சகலரும் சுதந்திரமாய்
சுவாசிப்பதற்க்காக......

**கவிஞர் N.M. அலிக்கான்**
**சாய்ந்தமருது**

# வலம்புரி கவிதா வட்டத்தின் 72 ஆவது கவியரங்கம்



வலம்புரி கவிதா வட்டத்தின் 72 ஆவது பௌர்ணமி கவியரங்கம் 28/03/2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30க்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

கவியரங்கு முன்னாள் தினகரன் வார மஞ்சரி கவிதைப் பூங்கா தயாரிப்பாளர் கவிஞர் ரஷீத் எம். றியாழ் தலைமையில் இடம்பெறும்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் தலைவர் நஜ்முல் ஹுசைன் 0741438447 அல்லது செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் 0777388149 அல்லது பொருளாளர் ஈழ கணேஷ் 0717563646 உடன் தொடர்பு கொள்ளவும். சுகாதார விதிமுறை கள் கட்டாயம் பேணப்படும்.

## மு.புஷ்பராஜன்:

*28ஆம் பக்கத் தொடர்...*

தென்தமிழ் நாட்டுக் கத்தோலிக்க மீனவர்களின் வாழ்வியலைப் பதிவு செய்ய விரும்புவோருக்கு இந்நூல் வழிகாட்டியாக அமையும் தன்மையது| என்று சான்று வழங்குபவர் ஆய்வறிஞர் ஆ.சிவசுப் பிரமணியன்.

**நிலவொளியின்**
**மம்மல் படர்ந்த வீதிகளில்**
**தோளில் சுமந்த**
**மரக்கோலும் வலையுமாய்**
**கடல்முகம் சிலர் விரைய**
**கோவில் நோக்கி**
**அன்னையர் துணையோடு**
**துப்பட்டி சகிதம்**
**பின்செல்லும் கன்னியர்**
**புஷ்பராஜனின் காலை நேரச் சித்திரங்கள்.**

**அந்தியின்**
**மங்கல் அடிவானம்**
**கருமை ததும்பும் கடல்**
**களங்கட்டி வலைக்குள்**
**வயிறுகள் எத்தனையோ..|**
**இது அந்திநேரத்து அவதானம்.**

**வியாகுலமாதா முன்னே**
**வழியும் கண்ணீருடன்**
**வயிறு பசித்திருக்க...**
**தூரக் கச இருட்டில்**
**கடலோடு ஒருவன்**
**கண்விழித்து மாய்கின்றான்**
**இது இரவுநேரத்தின் இதயக்குமுறல்.**

புஷ்பராஜனின் நெஞ்சில் கணமும் பொழுதும் நடமாடும் நெய்தல் நில மாந்தர்கள் இவர்கள். அவர்களது பாடுகளும், ஆசைக ளும், பசிகளும், ஏக்கங்களும் மகிழ்ச்சிகளும் புஷ்பராஜனின் மனோலயத்தில் எப்போதும் எதிரொலிப்பவை. புஷ்பராஜனின் 'மீண்டும் வரும் நாட்கள்|' ஒரு கடலோரச் சிற்றூரின் வாழ்வு ஓட் டத்தை, யுத்த பூமியின் கொதிநிலையை, புலம்பெயர் வாழ்வின் அவலத்தை மூன்று வெவ்வேறு வாழ்வுச் சூழல்களின் பின்னணியில் வெளிப்படுத்தும் அசலான கவிதைகள்.

"மின்னொளி வீசும் தேனீர்க் கடையொன்று மீனவர்க்காய் முழித்திருக்கும்'|,

அதி காலையிலிருந்து, 'சூழவும் உடைபடும் கடைகளின் ஒலியும் வெறிக்கூச்சலும் வேற்றுமொழியும் விண்ணுயர்ந்த தீச்சுவாலையும்|'எழுந்த சூழலிலிருந்து, 'தனிமைக் காற்றோடு அள்ளுண்ட சருகாய்| நிலையற்றுப் பரவும்' புலம்பெயர்வாழ்வுவரை புஷ்பராஜனின் கவிதைகள் நீள்கின்றன. பாப்லோ நெருடா கூறும் 'அகலித்துச் செல்லும் தாயகத்தை' நெஞ்சில் சுமந்து திரியும் கவி புஷ்பராஜன்.

செட்டான வார்த்தைகளும் ஆழ்ந்த ஆத்ம விசாரமுமாய் அவரின் மென்மையான கவிமனத்தின் விகசிப்பை, ஆத்திரமும் ஆவேசமும் கொள்ளும் சூழலிலும் நிதானமாய் , ஆங்கிலம் வழி இலக்கியவாசிப்பின் நீட்சி புஷ்பராஜனின் விமர்சனக் கட்டுரைகளுக்கு புதிய பலத்தைச் சேர்த்திருக்கின்றன. சோவியத் நாவல்களின் மீது அவருக்கு நிறைந்த ஈடுபாடு உண்டு. டால்ஸ்டாய், டாஸ்டாவ் யெஸ்கி, போரிஸ் பஸ்டர்நாக், அன்னா அக்மத்தோவா போன்ற சோவியத் இலக்கிய ஆளுமைகள் அவரிடம் தீர்க்கமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றனர். சோவியத் இலக்கியாசிரியர்கள் ஈழத்துச் சூழலில் நமக்கு மிகவும் பரிச்சயமானவர் களாயிருந்த போதும், லத்தீன் அமெரிக்க இலக்கியங்களுடனான ஈடுபாடு நம்மிடம் அத்துணை இருந்ததில்லை. லத்தீன் அமெரிக்க இலக்கியங்கள் பற்றிய நமது பார்வையை விஸ்தீரணப்படுத்தியவர்களில் ரெஜி சிரிவர்த்தன முதன்மை இடம் வகிக்கிறார். புஷ்பராஜனின் லண்டன் வாழ்வில் லத்தீன் அமெரிக்க இலக்கியத்துடனான பரிச்சயம் சற்று வேகம் கொண்டது எனலாம்.சர்ச்சைக்குள்ளான இலக்கிய ஆளுமைகள் எல்லாம் அவரது வாசிப்பின் பரப்பில் நின்றிருக்கிறார்கள். தஸ்லிமா நஸ்ரின், பஸ்டர்நாக், ஹரோல்ட் பின்ரர், டான் பிரவுன், பிறைடா போன் றோர் குறித்து நுணுக்கமான கட்டுரைகளை புஷ்பராஜன் எழுதியிருக்கிறார்.

தா.இராமலிங்கம், செழியன் ஆகிய கவிஞர்கள் குறித்த புஷ்பராஜனின் கட்டுரைகள் அவரது நுட்பமான கவிநயத்திற்கும் எழுத்து வன்மைக்கும் சாட்சி சொல்வன. லஷ்மி ஹோம்ஸ்ட்ரம், செழியன் ஆகியோரின் இறுதி யாத்திரை பற்றிய அவரின் குறிப்புகள் நெஞ்சை நெகிழ வைப்பன.

கூத்து, நாடகம். நடனம், இசை, ஓவியம் போன்ற கவின்கலைகளிலும் ரசனையும் அவதானிப்பும் கொண்டவர் புஷ்பராஜன். இசைக்குயில் எம்.எஸ். மீது ஆதுரம் மிகக் கொண்டவர். டி .எஸ். ஜோர்ஜ் .எழுதிய எம்.எஸ்.வாழ்க்கை வரலாற்று நூலை வாசித்து எம்.எஸ்.இன் வாழ்வுமீது கவிந்திருந்த துயரச்சாயல் குறித்து புஷ்பராஜன் வெகுவாக வருந்தியிருந்தார்.

கூர்மையான சினிமா ரசனையும் கொண்ட புஷ்பராஜன், தேர்ந்த திரைப்படங்களைத் தேடிப் பார்ப்பவர். திரைப்படங்கள் குறித்த கலந்துரையாடல்களில் தனது ஆழ்ந்த ரசனைக் குறிப்புகளை வெளிப்படுத்துபவர். விம்பம்| நடத்திய உலகக் குறும்படங்களின் தேர்வுகளின்போது, புஷ்பராஜனும் நடுவராக இருந்து, பரிசீலனைக்குக் காத்திரம் தந்திருக்கிறார்.

எது பற்றியும் எழுதப்புகும்போது, ஆறுதலாக, நிதானமாக, நூல்களைத் தேடி, பரபரப்பு இல்லாமல் எழுதும் பண்பு புஷ்பராஜனுடையது. பத்தி எழுத்துகள் அவருக்கு சரிப்பட்டு வராது. வாராவாரம், மாதாந்தம் தொடர் எழுதிக்கொண்டிருக்கும் ஆக்கினைகளுக்கு அவர் ஆட்பட்டுக் கொள்வதில்லை. ஈழத்து நாவல்கள் குறித்து காலம்| இதழில் புஷ்பராஜன் எழுதிவரும் கட்டுரை அவரது விசாலமான தேடலையும், விமர்சன வீச்சையும் வெளிப்படுத்துவதாகும். அவரது ஆறுதலான எழுத்திற்கு, காலம்| இதழின் ஆறுதலான வருகையும் பரஸ்பரம் உதவிக் கொள்கின்றன போலும்!

ஒரு கவிஞன், எழுத்தாளன், விமர்சகன், சுவைஞன் என்பவற்றை எல்லாம் மீறி உயர்ந்த பண்புகளும். உன்னத நெறிகளும் கொண்டவர் புஷ்பராஜன். உறவுகளை மதிப்பவர். நட்பைப் பேணுபவர். நேசம் மிக்கவர். நட்புகளில் விரிசல் வருகிறபோது, நட்பாக இருந்த காலத்து நிகழ்வுகளுக்கு அனர்த்தம் பூசுவதும், திடீர்ப்பொறிதட்டி, பழகிய மனிதர்களின் பண்புநலனைச் சிதைக்க முயல்தல் போன்ற குரோத வெளிப்பாடுகளை புஷ்பராஜனிடம் கிஞ்சித்தும் காண்பதற்கில்லை. 'அவரவர் கருத்துடன், புரிதலுடன் வாழப் பழகுதலே இனிதும் நிறைவும்'| என்று கருதுபவர் புஷ்பராஜன். புத்தக வாசிப்பு என்பது அவருக்கு ஆத்மார்த்தமான உள்நோக்கிய விசாரத்திற்கான திறவுகோல். வெளியில் தன் வாசிப்புப் பட்டியலை விரிப்பதற்கல்ல. மனுக்குலம் மீதான கரிசனை அவரில் எப்போதும் வேரோடிக்கிடப்பது. சத்தியதரிசியாகவோ, புனிதராகவோ அவர் சாதுர்ய வேஷம் காட்டுபவர் அல்ல.புஷ்பராஜனின் வாழ்க்கை நெறிகளின்மீது ஏ.ஜே பெருநிழல் பரப்பியிருக்கிறார். ஏ.ஜே. குறித்த அவரின் கட்டுரை புஷ்பராஜனின் வாழ்க்கை நெறிகள் பற்றி சூசகமாகச் சொல்கிறது.

## சீனாவுக்கு எதிரான குவாட்... 

*(13ஆம் பக்கத் தொடர்)*

நான்காவது சீனாவை நெருக்கடிக்குள்ளாக்குவது போல் அமெரிக்கா ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மீதும் அதிக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறது. ஜோ பைடன் புட்டினை கொலைகாரன் என்று குறிப்பிடும் அளவுக்கு முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதாவது ரஷ்யா ஜோ பைடனுக்கு எதிராக ஜனாதிபதி தேர்தலில் ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டிவருகிறது. அமெரிக்கா தனது புலனாய்வுத் துறையின் பலவீனத்தை மறைப்பதற்கும் போலியான ஜனநாயகப் பண்புகளால் விரக்கியிலுள்ள மக்களது எண்ணங்களை கண்டு கொள்ளாது இருப்பதற்காகவும் பிற நாடுகள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறது. இதுவே அமெரிக்க வல்லரசின் இயல்பாகவுள்ளது. உலகம் முழுவதும் இத்தகைய செய்முறையையே அமெரிக்கா கொண்டிருகிறது.

எனவே குவாட் நாடுகளது அரசியல் பொருளாதார இராணுவ உத்திகளை வெளிப்படுத்தும் காணொளி மகாநாடு சீனாவுக்கு எதிரானதாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தோபசுபிக் பிராந்தியத்தில் இருந்து சீனாவை வெளியேற்றுவதை இலக்காகக் கொண்டே குவாட் கட்டமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது. அதே நேரம் சீனாவும் குவாட் அமைப்பின் நகர்வுகளை கண்காணிப்பதாக குறிப்பிட்டுள்ளது.ஜோ பைடனின் வருகை சீனாவுக்கு எதிரான அணியினரை பலப்படுத்திவருகிறது.

## விலைமனுக்களுக்கான அழைப்பிற்கான திருத்தம்

### அக்குரேகொடயிலுள்ள பாதுகாப்பு தலைமையக இடத்தொகுதியின் 04 ஆம் இலக்க தொகுதியில் தனியுரிமையுடைய கதவுகள், சட்டங்கள் மற்றும் ஹாட்வெயார் ஆகியவற்றை வடிவமைத்தல், இணைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதல்

**CONTRACT No.: DHQC/TIM DOOR 4/2020**

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக சிலுமின, சண்டே ஒப்சேர்வர் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் 2021.02.28 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனுக்களுக்கான அழைப்பிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
    - விலைமனு திறத்தல்/ மூடும் நேரமானது 2021 ஏப்ரல் 6 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
    - விலைமனுக்கள் 2021 ஒகஸ்ட் 03 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
    - விலைமனுப்பிணையானது 2021 ஒகஸ்ட் 31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. முன்னைய அழைப்பிலுள்ள ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதுவித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமை அலுவலகம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து பெற்று 2021 ஏப்ரல் 05 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் அதே முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03.**

**தொலைபேசி:** 0094-11-2439381/ 0094-11-2390719
**தொலைநகல்:** 0094-11-2390720
**மின்னஞ்சல்:** procurement@defence.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பிற்கான திருத்தம்

### அக்குரேகொடயிலுள்ள பாதுகாப்பு தலைமையக இடத்தொகுதியின் 03 ஆம் இலக்க தொகுதியில் தனியுரிமையுடைய கதவுகள், சட்டங்கள் மற்றும் ஹாட்வெயார் ஆகியவற்றை வடிவமைத்தல், இணைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதல்

**CONTRACT No.: DHQC/TIM DOOR 3/2020**

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக சிலுமின, சண்டே ஒப்சேர்வர் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் 2021.02.28ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனுக்களுக்கான அழைப்பிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
    - விலைமனு திறத்தல்/ மூடும் நேரமானது 2021 ஏப்ரல் 6 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
    - விலைமனுக்கள் 2021 ஒகஸ்ட் 03 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
    - விலைமனுப்பிணையானது 2021 ஒகஸ்ட் 31ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. முன்னைய அழைப்பிலுள்ள ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதுவித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமை அலுவலகம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து பெற்று 2021 ஏப்ரல் 05ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் அதே முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03.**

**தொலைபேசி:** 0094-11-2439381/ 0094-11-2390719
**தொலைநகல்:** 0094-11-2390720
**மின்னஞ்சல்:** procurement@defence.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பிற்கான திருத்தம்

### அக்குரேகொடயிலுள்ள பாதுகாப்பு தலைமையக இடத்தொகுதியின் 02 ஆம் இலக்க தொகுதியில் தனியுரிமையுடைய கதவுகள், சட்டங்கள் மற்றும் ஹாட்வெயார் ஆகியவற்றை வடிவமைத்தல், இணைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதல்

**CONTRACT No.: DHQC/TIM DOOR 2/2020**

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக சிலுமின, சண்டே ஒப்சேர்வர் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் 2021.02.28ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனுக்களுக்கான அழைப்பிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
    - விலைமனு திறத்தல்/ மூடும் நேரமானது 2021 ஏப்ரல் 5 ஆம் திகதியன்று மு.ப. 12 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
    - விலைமனுக்கள் 2021 ஜுலை 05 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
    - விலைமனுப்பிணையானது 2021 ஒகஸ்ட் 02ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. முன்னைய அழைப்பிலுள்ள ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதுவித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமை அலுவலகம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து பெற்று 2021 ஏப்ரல் 04ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் அதே முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03.**

**தொலைபேசி:** 0094-11-2439381/ 0094-11-2390719
**தொலைநகல்:** 0094-11-2390720
**மின்னஞ்சல்:** procurement@defence.lk

## பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி

### தரமான வாகனங்களின் ஏல விற்பனை

டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் டிரக்டர் உட்பட 100 வாகனங்கள் 2021 மார்ச் 27 ஆம் திகதி சனிக்கிழமை BMICH இன் "மிஹிலக்க மதுரே" வில் காலை 09.00 மணி தொடக்கம் நடைபெறும்.

நாடு முழுவதையும் உள்ளடக்கிய வகையில் தேர்வு செய்யப்பட்ட 12 கிளைகளில் நேரடியாக ஏல விற்பனையுடன் இணைவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருப்பதோடு, அன்றைய தினத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட கிளைகளுக்கு வருகைதருகின்ற உங்களுக்கு அந்த ஏல விற்பனையில் கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கம்பஹா / குருநாகல் / தம்புள்ளை / மொனராகலை / பண்டாரவளை / மாத்தறை / சிலாபம் / கண்டி / அம்பாறை வவுனியா / அநுராதபுரம் / எம்பிலிபிட்டிய

மார்ச் 24 புதன்கிழமை தொடக்கம் 26 வெள்ளிக்கிழமை வரை பரீட்சித்துப் பார்க்கலாம். காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 வரையான காலத்தில் மாபிம, மாத்தறை, மொனராகலை, அநுராதபுரம், மருதானை மற்றும் கலேவலயில் அமைந்துள்ள வாகனக் கூடங்களில்

மருதானை: 0112 688 026 / மாபிம: 0112 401 031 / கலேவல: 0662 287 355 / அநுராதபுரம்: 0767895144
மாத்தறை: 0413127271 / மொனராகலை: 055-3600585

### அநுராதபுரம் வாகனக் கூடம்

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| | கார் | |
| 300-3XXX | MAZDA | 1993 |
| WP-CAF-6XXX | TATA NANO TW1ST | 2015 |
| | டிரெக்டர் | |
| NW-RG-0XXX | NEW HOLLAND 4710 | 2017 |
| EP-RG-0XXX | TAFE 45DI | 2019 |
| NC-RC-4XXX | MAHINDRA 575 DI | 2011 |
| NW-RD-4XXX | KUBOTA L4508 | 2012 |
| EP-RF-6XXX | POWERTRAC PTEURO 50 | 2017 |
| | வேன் | |
| WP-PD-8XXX | NISSAN CARAVAN | 2007 |

### கலேவல வாகனக் கூடம்

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| | பஸ் | |
| CP-JK-7XXX | ASHOK LEYLAND VIKING, SEAT 42 | 2004 |
| NW-ND-8XXX | NISSAN U-RA530RBN, SEAT 56 | 1995 |
| 062-0XXX | TATA LP1210E/52, SEAT 39 | 1994 |
| CP-NA-5XXX | TATA LPO1510, SEAT 54 | 2006 |
| 063-4XXX | ISUZU LR312J, SEAT 39 | 1990 |
| NP NC-7XXX | LEYLAND VIKING, SEAT 41 | 2005 |
| | கார் மற்றும் கெப் வண்டி | |
| CP-PT-0XXX | MAHINDRA MAXXIMO | 2012 |
| CP-PS-7XXX | MAHINDRA MAXXIMO | 2012 |
| SG-PV-6XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2013 |
| EP-LG-4XXX | ISUZU TFR54HSR | 2007 |
| SG-KA-4XXX | HONDA CIVIC EXI | 2005 |
| | JCB, லொரி மற்றும் முச்சக்கர வண்டி | |
| EP-ZA-1XXX | J.C.B 3CX | 1997 |
| EP-LK-2XXX | TATA LPT2516 | 2012 |
| EP-ABI-6XXX | PIAGGIO APE CITY | 2015 |
| | டிப்பர் வண்டி | |
| CP-LL-1XXX | ISUZU KR-NKR81EAV.KAI DUMP | 2003 |
| NP-LJ-9XXX | LANKA ASHOK LEYLAND TAURUS | 2009 |
| NP-LJ-9XXX | LANKA ASHOK LEYLAND TAURUS 2516 | 2009 |
| NP-LJ-3XXX | LEYLAND COMET TIPPER 912 | 2010 |
| | டிரக்டர் | |
| NC RF-6XXX | SONALIKA DI 50 RX-2WD | 2018 |
| UP-RC-0XXX | TAFE 45DI | 2010 |
| NP-RC-0XXX | MAHINDRA 575DI | 2010 |
| NP RE-1XXX | TAFE 45DI | 2015 |
| | வேன் | |
| 052-2XXX | NISSAN CARAVAN | 1987 |
| 057-3XXX | TOYOTA | 1987 |
| 056-3XXX | TOYOTA HIACE | 1990 |
| CP-NA-8XXX | TOYOTA HIACE COMMUTER | 2010 |

### மாபிம வாகனக் கூடம்

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| | பஸ் | |
| WP-NB-4XXX | FORCE TRAVELLER, SEAT 20 | 2012 |
| CP-NC-4XXX | ASHOK LEYLAND STAG, SEAT 40 | 2014 |
| SG-NA-8XXX | ASHOK LEYLAND VIKING, SEAT 54 | 2010 |
| WP-JK-5XXX | ASHOK LEYLAND VIKING, SEAT 41 | 2004 |
| WP-ND-3XXX | MITSUBISHI TPG-BE640J, SEAT 33 | 2012 |
| 062-8XXX | TOYOTA, SEAT 28 | 1991 |
| SP-ND-1XXX | TOYOTA BB59RZEMQZ5, SEAT 31 | 2006 |
| WP-NB-4XXX | TOYOTA BDG-XZB50, SEAT 29 | 2007 |
| WP-HT-7XXX | ASHOK LEYLAND VIKING, SEAT 48 | 2004 |
| WP-ND-7XXX | TOYOTA BB59RZEMQZ5, SEAT 32 | 2014 |
| | கெப் வண்டி | |
| WP-PX-8XXX | CHANA MICRO LOADER | 2013 |
| WP-PY-9XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2014 |
| NW-PY-5XXX | MAHINDRA MAXXIMO PLUS-VX | 2014 |
| | கிரேன், டிரக் மற்றும் லொரி | |
| WP-ZA-3XXX | KATO KR-45H-3 CRANE | 1988 |
| SP-LF-0XXX | JAC HFC1048K | 2008 |
| WP-LD-1XXX | ATCO KMC1021 | 2005 |
| WP-LH-5XXX | LANKA ASHOK LEYLAND TAURUS 2516 | 2007 |
| SP-LD-9XXX | TATA ACE | 2007 |
| WP-LC-1XXX | YUEJIN NJ1026DSU | 2006 |
| | இயந்திரங்கள் | |
| APIRU16003 | DXD 580 | 2016 |
| | டிப்பர் வண்டி | |
| WP-LN-5XXX | EICHER 10.80.TIPPER | 2015 |
| SP-LM-5XXX | LANKA ASHOK LEYLAND 1616 | 2016 |
| SP-LJ-3XXX | TATA LPK 2516 DUMP TRUCK | 2011 |

### மருதானை வாகனக் கூடம்

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| | கார் | |
| 019-6XXX | FIAT UNO 1.0 IE | 1995 |
| WP-GY-5XXX | SUZUKI ESCUDO | 1999 |
| WP-CAH-6XXX | TOYOTA DAA-ZVW30-PRIUS | 2013 |
| WP-KI-3XXX | CHEVROLET CRUZE | 2005 |
| WP CAG -1XXX | TOYOTA DAA NKE165 AXIO | 2015 |
| WP KK- 4XXX | TOYOTA DBA NZE 141 AXIO | 2007 |
| | முச்சக்கர வண்டி | |
| SG-ABB-1XXX | BAJAJ RE | 2015 |
| SP-QY-5XXX | PIAGGIO APE | 2016 |
| CP-YA-1XXX | TVS KING | 2010 |
| | வேன் | |
| 251-9XXX | NISSAN | 1995 |
| 060-1XXX | NISSAN - | 1980 |
| 054-8XXX | TOYOTA - | 1990 |
| 052-7XXX | TOYOTA HIACE | 1988 |
| WP PA -8XXX | TOYOTA KG-LH 172V | 2001 |

### மாத்தறை வாகனக் கூடம்

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| | பஸ் | |
| SP-ND-9XXX | EICHER SKYLINE 10.75, SEAT 32 | 2018 |
| SP-ND-2XXX | HINO BDG-XZB50M LIESSE II, SEAT 28 | 2008 |
| SP-ND-3XXX | LEYLAND MITR MINI BUS, SEAT 28 | 2017 |
| SP-JH-8XXX | LEYLAND VIKING, SEAT 42 | 2004 |
| SP-HN-4XXX | LEYLAND VIKING, SEAT 41 | 2003 |
| SP-NB-0XXX | LEYLAND VIKING 4 CTI, SEAT 34 | 2011 |
| SP-NC-8XXX | MITSUBISHI BE63E6, SEAT 29 | 2012 |
| WP-NB-8XXX | MITSUBISHI ROSA PDG-BG64DG,S EAT 29 | 2010 |
| SP-NB-4XXX | TATA CITY RIDE LP407, SEAT 24 | 2012 |
| | கெப், டிரக், லொரி மற்றும் முச்சக்கர வண்டி | |
| SP-PT-5XXX | TATA ACE-EX | 2012 |
| NW-LN-5XXX | ISUZU BKG-NPR85AN ELF | 2011 |
| SP-LK-6XXX | JAC HFC 1035KD | 2013 |
| SP-YN-4XXX | BAJAJ RE 205 | 2011 |
| SP-AAA-1XXX | TVS KING | 2012 |

### மொனராகலை வாகனக் கூடம்

| VEHICLE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| | பஸ் | |
| 060-7XXX | ASHOK LEYLAND, SEAT 30 | 1990 |
| SP-NB-3XXX | LANKA ASHOK LEYLAND, SEAT 24 | 2011 |
| SP-NA-0XXX | ASHOK LEYLAND VIKING, SEAT 42 | 2005 |
| | கெப் மற்றும் டோசர் வண்டி | |
| SP-PV-5XXX | PIAGGIO APE MINI | 2012 |
| DOZER | CATERPILLAR D4C XL | 2007 |
| | லொரி மற்றும் டிப்பர் வண்டி | |
| SP-HL-1XXX | ISUZU ELF | 1996 |
| UP-GJ-9XXX | ISUZU ELF | 1997 |
| EP-LB-6XXX | LEYLAND COMET SUPER | 2006 |
| SP-JT-7XXX | LEYLAND COMET SUPER | 2004 |
| SP-GN-1XXX | ASHOK LEYLAND COMET | 2002 |
| | டிரக்டர் | |
| EP-RG-0XXX | FARMTRAC FT_6050 | 2018 |
| EP-RF-9XXX | FARMTRAC FT-6050 | 2018 |
| EP-RF-7XXX | MITSUBISHI MAHINDRA GX3600S | 2018 |

**விற்பனை நிபந்தனைகள்**

- உள் நுழைவு: அரசின் சுகாதார சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் நடத்தப்படும்.
  ஏல விற்பனை திகதியில் முதலில் வருகை தரும் முறைக்கு அமைய அனுமதிச் சீட்டு வழங்கப்படும்.
  கொழும்பின் பிரதான ஏல விற்பனைக்காக உள்நுழையும் கட்டணம் ஒருவருக்கு மீளளிக்கப்படாத 2000 ரூபா அனுமதிச் சீட்டு மற்றும் 10,000 ரூபா என மீளளிக்கப்படும் வைப்புத் தொகை பெறப்படும்.
  வலைப்பின்னல் அடிப்படையிலான ஏல விற்பனைக்கான பதிவு குறித்த கிளைகள் ஊடாக ஏல விற்பனைத் தினத்தில் இடம்பெறும்.
- கொடுப்பனவு: சுத்தியல் வைக்கப்பட்ட உடன் மீளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றைப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் என்பதோடு எஞ்சிய 75% தொகையை 2021 மார்ச் 31 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு முன்னர் இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 08 என்ற முகவரியில் அமைந்துள்ள பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் தலைமை அலுவலகத்தில் செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ளல் வேண்டும்.
- எந்த ஒரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவத்தின் வசமானது.
- ஏல விற்பனையாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

SMART MEDIA

ANA AUCTIONEER
Black Tie Service with True Aloha!

ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com

# Down Syndrome இனால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ‘Eka Se Salakamu’ இயக்கம் அறிமுகம்



இன்று உலக Down Syndrome தினம்

Hemas Outreach Foundation, இலங்கையின் மாற்றுத்திறன் படைத்த சிறுவர்களுக்கான முதலாவது தேசிய நிலையமான AYATI உடன் இணைந்து, இன்று மார்ச் 21 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக Down Syndrome தினத்தை முன்னிட்டு, ‘Eka Se Salakamu’ (அனைவரையும் சமமாக நடத்துவோம்) எனும் சமூக இயக்கத்தை அறிமுகம் செய்துள்ளது. இதனூடாக, Down Syndrome இனால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் குடும்பத்தாருக்கு வலுவூட்டல், அவர்களின் உரிமையை ஏற்றுக் கொள்வதற்கான கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் இன்றைய சமூகத்தில் அவர்களையும் உள்வாங்கக்கூடிய நிலையை ஊக்குவித்தல் போன்றன இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் Down Syndrome தொடர்பில் பல்வேறு தவறான எண்ணக்கருக்கள் மற்றும் புனைக்கதைகள் காணப்படுகின்றன.

இதனால் சமூகத்தில் ஓரங்கட்டப்படல் மற்றும் பின்தள்ளப்படும் நிலைக்கு முகங்கொடுக்கின்றனர். ‘Eka Se Salakamu’ எனும் இயக்கத்தினூடாக “ஆரோக்கியமான வாழ்க்கை” என்பதற்கமைய உள்ளடக்கமான உலகைக் கட்டியெழுப்பும் கொள்கை தூண்டப்படுவதுடன், எந்தவொரு பிள்ளையையும் ஓரங்கட்டாத சமூகமொன்றை ஊக்குவிக்கின்றது. ஹேமாஸின் இந்தப் பிரதான விழுமியம் மற்றும் நோக்கம் என்பதனூடாக, இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு, இவர்கள் எதிர்நோக்கியுள்ள அவப்பெயரை இல்லாமல் செய்வதற்கு உதவியாக அமைந்திருக்கும்.

இந்த இயக்கத்தினூடாக, Down Syndrome உள்ள சிறுவர்கள் மற்றும் குடும்பங்கள் தமது சொந்த அனுபவங்களை சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதற்கான கட்டமைப்பைக் கொண்டிருப்பார்கள். இந்தச் சிறுவர்களின் திறன்களை ஊக்குவித்து வெளிக்கொணர்வதற்கும் இந்தக் கட்டமைப்பு உதவியாக அமைந்திருக்கும். பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போன்றவர்கள் இந்தக் கட்டமைப்புடன் இணைந்து கொண்டு, சமூகத்தில் கண்ணியமான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கும் அவர்கள் எதிர்நோக்கியுள்ள அவப்பெயரை இல்லாமல் செய்வதற்கும், Down Syndrome உடன் தொடர்புடைய புனைக்கதைகளை இல்லாமல் செய்வதற்கும் அழைக்கப்பட்டுள்ளனர். Down Syndrome உள்ள சிறுவர்களுக்கு, உலகளாவிய ரீதியில் சிறந்த உள்ளம்சங்களைக் கொண்ட AYATI Speech & Language Therapeutic பிரிவினூடாக அவர்களின் திறன்கள் கட்டியெழுப்பப்படுவதுடன், சமூகத்தில் ஆக்கபூர்வமான நபர்களாக திகழ்வதற்கு அவர்களுக்கு உதவியாக அமைந்துள்ளது.

களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ், MAS ஹோல்டிங்ஸ், ரொஷான் விஜேராம மையம், இலங்கை இராணுவம், ரொட்டரி மற்றும் இதர நன்கொடை வழங்குநர்கள் இணைந்து நாட்டில் இருந்த இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் AYATI நிலையம் நிறுவப்பட்டுள்ளது. AYATI நிறுவப்பட்ட போது மூன்று இலக்குகளைக் கொண்டிருந்தது – முதலாவது தேசிய சிறப்பு நிலையத்தை நிறுவுவது, மாற்றுத்திறன் தொடர்பான புனைக்கதைகளை இல்லாமல் செய்வது, மற்றும் இலங்கையின் பின்தங்கிய பகுதிகளில் நிலையங்களை நிறுவுவது போன்றன அதில் அடங்கியுள்ளன.

---

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்**

### மருத்துவ பீடத்தின் விருந்தினர் விடுதிக்கு கட்டிடம் ஒன்றை வாடகைக்குப் பெறுவதற்கான விலைமனு

விலைமனு இல.: **GA/2021/02**

மருத்துவ பீடத்தின் விருந்தினர் விடுதிக்காக இரத்தினபுரி, ஹிதல்லான, மருத்துவ பீடம் மற்றும் இரத்தினபுரி, போதனா வைத்தியசாலைக்கு இடையே அமைந்துள்ள, பிரதான வீதியில் இருந்து 1 கி.மீ. தூரத்திற்குள் இருக்கும் கட்டிடம் ஒன்றை ஓர் ஆண்டு காலத்திற்காக வாடகைக்கு பெறுவதற்கு ஆர்வமுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சார்பில் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. குறைந்தபட்சம் 06 அறைகள், 05 குளியலறைகள் (குறைந்தது 02 இணைக்கப்பட்ட குளியலறைகள்), சமையலறைப் பகுதி, உணவுக் கூடப் பகுதி, தொடர்ச்சியான மின்சார மற்றும் நீர் விநியோகம், வேறாக அணுக முடியுமான பாதை, ஒரே உரிமை, குறைந்தது 03 வாகனங்களுக்கான தரிப்பிட வசதி மற்றும் வேலி அல்லது சுவரால் மூடப்பட்ட காணியைக் கொண்ட கட்டிடத்தை உரியவராக விலைமனுதாரர்கள் இருத்தல் வேண்டும்.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி, பலாங்கொடை கிளையின் கணக்கு இலக்கம் 2246976 இற்கு தொகுதி ஒன்றுக்கு 2000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி, எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து 2021 மார்ச் 22 அன்று தொடக்கம் 2021 ஏப்ரல் 19 அன்று வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பிரதிப் பதிவாளர்/ பொது நிர்வாகம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், த.பெட்டி 02, பெலிஹூலோய அல்லது சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மருத்துவ பீடம், த.பெட்டி 01, பத்துஹேன, ஹிதல்லான, இரத்தினபுரி என்ற முகவரியில் இருந்து விலைமனு ஆவணங்களை பெற முடியும். விலைமனுக்கள் ஏற்பது 2021 ஏப்ரல் 20 அன்று பி.ப. 2.00 க்கு முடிவுறும் என்பதோடு பெலிஹூலோய, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக, பதிவாளரின் அலுவலகத்தில் விலைமனு ஏற்பது முடிவுற்ற உடன் அவை திறக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட இரு பிரதிகளான விலைமனுக்களைக் கொண்ட முத்திரை இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “மருத்துவ பீடத்தின் விருந்தினர் விடுதிக்காக கட்டிடம் ஒன்றை வாடகைக்குப் பெறல்” என்று குறிப்பிட்டு 2021 ஏப்ரல் 20 அன்று பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு “தலைவர், பெறுகைக் குழு, பொது நிர்வாகப் பிரிவு, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், த.பெட்டி 02, பெலிஹூலோய” என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

இது தொடர்பில் மேலதிக விபரங்களை வேலை நேரங்களில் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம்/ பிரதிப் பதிவாளரிடம் இருந்து பெற முடியும் (தொ. இல. 045 2280027/ 045 2280009).

பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது என்பதோடு பல்கலைக்கழக அதிகாரிகளிடம் ஆதரவு திரட்டுவது தடுக்கப்பட்டுள்ளது.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**

**AHEAD செயற்றிட்டம்**

Uva Wellassa University

### தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தேசிய வளத்தை மையப்படுத்தி அதற்கான மேலதிக செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதுடன் பட்டப்படிப்பு, நிபுணத்துவம், கூட்டுறவு என்பனவற்றின் புதிய போக்குகளையும் ஏற்படுத்துகின்றது. பல்கலைக்கழக கல்விசார் திட்டங்கள் கவனமாக வடிவமைக்கப்பட்டு தங்கள் தொழில் வழங்குனருக்கு பெறுமதி சேர்க்கும் தேர்ச்சி வாய்ந்த புதிய மாணவர் பரம்பரையை முன்கொணர்கின்றது. தேசிய பல்கலைக்கழகங்களில் தேசியரீதியிலான இப்பாரிய முயற்சியில் நீங்களும் ஓர் அங்கத்தவராகலாம்.

**பெறுகை அறிவித்தல்**

பின்வருவனவற்றை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத்தலைவர் விலைமனுக்களை கோருகின்றார்.

| இல. | விளக்கம் | கேள்வி இலக்கம் | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரு) | மீளளிக்கப்படாத வைப்பிடல் (ரு) | விலைமனு மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01. | இணைந்த விஞ்ஞானங்கள் பீடத்திற்கு தளபாடம் மற்றும் இணைப்புக்களை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல். | UWU/AHEAD/ ELTAELSE /FAS/NCB/ GOODS/FF/16 | 83,000.00 | 3,500.00 | 2021 ஏப்ரல் 9 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| 02. | இணைந்த விஞ்ஞானங்கள் விரிவுரை மண்டபங்களுக்கான நிர்மாணம் - 1 ஆம் கட்டம் | UWU/AHEAD/ RAI/FAS/ NCB/WORKS/01 | 160,000.00 | 3,500.00 | 2021 ஏப்ரல் 9 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு |

2021 ஏப்ரல் 8 ஆம் திகதியன்று பி.ப. 4 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக AHEAD/OTS அலுவலகத்திற்கு ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், அல்லது 82592579 என்ற இலங்கை வங்கியின் கணக்கிலக்கத்திற்கு நேரடியாகவே வைப்புச் செய்த பின்னர் இந்த பணக்கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டை பிரதி பணிப்பாளர் பெறுகைக்கு (AHEAD/OTS) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், எந்தவொரு விலைமனுதாரரினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். http://www.uwu.ac.lk/procurement என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்வோர் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை ரொக்கப் பண பற்றுச்சீட்டு/ பணவரவுத் துண்டின் மூலப்பிரதியுடன் சமர்ப்பிக்கவும். மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலிருந்தும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக 82592579 என்ற கணக்கிலக்கத்திற்கு AHEAD செயற்றிட்டத்தின் பெயரில் பணக்கொடுப்பனவு மேற்கொள்ளலாம். விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

2021 ஏப்ரல் 09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அவைகள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது (ஆண்/பெண்) அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார். கேள்விகள் தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் உரித்தான கேள்வி இலக்கம் எழுதப்பட்டு பதிவுத் தபாலில் “தலைவர், பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

055-3127378 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெறுகைக்கான பிரதி பணிப்பாளரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பல்கலைக்கழக பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**

21.03.2021

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பாதுகாப்பு அமைச்சு**

### அக்குரேகொட பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதியில் 01 ஆம் தொகுதியில் தரைக்கு கருங்கல் பதித்தல், சுவர் உறைப்பூச்சு (Wall Cladding) மற்றும் மளிகைப் பொருட்களுக்கான பலகைப் பெட்டிகளை வழங்கல் மற்றும் நிறுவுதல்

**Contract No.: DHQC/GRANITE 1/2021**

1. பெசேவ நீங்கலாக 408 மில்லியன் இலங்கை ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதும் கீழே விபரிக்கப்பட்டதுமான அக்குரேகொடவில் பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதியில் 01 ஆம் தொகுதியில் தரைக்கு கருங்கல் பதித்தல், சுவர் உறைப்பூச்சு **(Wall Cladding)** மற்றும் மளிகைப் பொருட்களுக்காக பலகைப் பெட்டிகளை வழங்கல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

   ***The work consists of supply and installation of granite flooring, wall cladding and pantry tops including decorative items, counter tops, thresholds, paving, steps of staircases and surfaces of ledges for Block 01 of Defence Headquarters complex at Akuregoda.*** இவ்வேலைகளின் முழுமையான பூர்த்தியாக்கலுக்கான காலம் 231 நாட்காட்டி நாட்களாகும்.

2. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இலங்கையில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவை ஆகக் குறைந்தது 5 வருடங்களுக்கு கொண்டுள்ளவராகவும் தரைக்கு கருங்கல் பதித்தலில் வழங்கல் மற்றும் நிறுவுதலில் தொடர்ச்சியான ஐந்து (5) வருட அனுபவத்தைக் கொண்டுள்ளவராகவுமிருத்தல் வேண்டும்.

   உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கான உற்பத்தியாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வழங்குனர்கள் அல்லது நிறுவலராகவும் விலைமனுதாரர் இருத்தல் வேண்டும். உற்பத்தியாளர் தரஅங்கீகாரம் பெற்றவராகவும் **ISO** 9001 இன் கீழ் பதிவு பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். வழங்குனர் உற்பத்தியாளரின் பதிவு பெற்ற மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவுமிருத்தல் வேண்டும். நிறுவலர் நிறுவுதலில் தகைமையும் விஷேடத்துவமுடையவராகவும் இருப்பதுடன் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள உரிமத்தையும் வேலைகளுக்கான உற்பத்தியாளரின் உத்தரவாதத்தை பெறுவதற்கான தகுதியையுடையவராகவுமிருத்தல் வேண்டும். முன்வைக்கப்படும் கருங்கல் பதித்தல் வேலைகளுக்கான உற்பத்தியாளராக விலைமனுதாரர் இல்லாவிடின், அவர் **ISO** 9001 சான்றிதழைக் கொண்டுள்ள அமைப்பொன்றாகவிருத்தல் வேண்டும்.

   விலைமனுதாரரின் அனுபவம் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய வேலைகளை சான்றுபகரும் ஆவணச்சான்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல் பின்வருவனவற்றை அடக்கும்.
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது ஆகக் குறைந்தது 300 மில்லியன் இலங்கை ரூபாவாக இருத்தல் வேண்டும்.

     100 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாத பெறுமதியில் கருங்கல் பதித்தல் வேலையை வழங்கல் மற்றும் நிறுவுதலில் ஆகக் குறைந்தது வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட ஒரு செயற்றிட்ட அனுபவம். இந்த செயற்றிட்டமானது கடந்த ஐந்து வருடங்களில் பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகள் நீங்கலான ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகையானது இந்த செயற்றிட்டத்திற்கு வழங்கப்படும் எந்தவொரு முற்பணக்கொடுப்பனவு நீங்கலாக 150 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி செயற்றிட்ட, செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை, பணிப்பாளரிடமிருந்து பெற்று 2021 மார்ச் 22 ஆம் திகதியிலிருந்து 2021 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

6. 2021 மார்ச் 22 ஆம் திகதியிலிருந்து 2021 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஐம்பத்து இரண்டாயிரம் இலங்கை ரூபாவை (52,000 இ.ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/5 ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் பெறுகைக்கான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் அல்லது பாதுகாப்பு அமைச்சின் பெயரில் வழங்கப்பட்ட வங்கி வரைவாக இருத்தல் வேண்டும்.

7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் கீழேயுள்ள முகவரியில் 2021 ஏப்ரல் 09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2021 ஓகஸ்ட் 06 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து நாற்பது இலட்சத்து எண்பதினாயிரம் இலங்கை ரூபா பெறுமதிக்கு (4,080,000 இ.ரூபா) வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த விலைமனுப்பிணையானது நிபந்தனையற்றதும் இலகுவாக மாற்றக்கூடிய வகையிலமைந்த உத்தரவாதமாக இருப்பதுடன் 2021 செப்டம்பர் 03 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 147 நாட்களுக்கு) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தலும் வேண்டும்.

10. 2021 மார்ச் 29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதியிலுள்ள பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி தளத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறுவதுடன் தளவிஜயமும் அதே நாளில் விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் 10.30 மணிக்கு நடைபெறும்.

11. இந்த செயற்றிட்டத்தின் அதே தொகுதிக்கு அல்லது வேறேதாவது தொகுதிகளுக்கு பல எண்ணிக்கையான விலைமனுக்களை சமர்ப்பிக்க விரும்பின், விலைமனுதாரரானவர் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழும் தேவைப்படும் தகவுத்திறனை தனித்தனியாக தகைமை / தகுதித்தன்மை ஆகியவற்றை முன்வைத்தல் வேண்டும், இல்லாவிடின், ஒரு விலைமனுவிற்கு மேலதிகமான விலைமனுவை வழங்குவதற்கான தகைமையை இழந்து விடுவார்.

12. விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னராக உரித்தான வேளையில் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் 3 ஆம் சட்டத்தின் கீழான பதிவுச்சான்றிதழை முன்வைக்குமாறு விலைமனுதாரர்கள் தீர்க்கமாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

13. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக் குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக விலைமனுக்களை திறக்கும் வேளையில் பங்கு பெறும் நபரின் பெயர் மற்றும் தேஅஅ/ கடவுச்சீட்டின் இலக்கத்தை கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/ 5, பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதியிடல் அலுவலருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கும்படி அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

07. ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி/முகவரிகள் பின்வருமாறு:

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல.: 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு-03.**
**தொலைபேசி : 0094-011-4209885**
**தொலைநகல் : 0094-011-4209885**
**மின்னஞ்சல் : pmudhqc@gmail.com**

# சிறுவர் உலகம்

- சிங்கம் -

## குறுக்கெழுத்துப் போட்டி இல : 314

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | 09 | 10 |
| 11 | 12 | | | 13 | |
| | | 14 | 15 | 16 | 17 |
| 18 | | 19 | | 20 | |
| 21 | 22 | 23 | 24 | | |

பெயர் ...............................................

வகுப்பு ...............................................

பாடசாலை பெயர் ...............................................

பாடசாலை முகவரி ...............................................

...............................................

............................ ............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) முட்கள் நிறைந்த தாவரம். வரண்ட நிலத்தில் வளரக்கூடிய இசைவாக்கம் கொண்ட தாவரம்.
(4) மாடுகளில் பெண் இனத்தைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(7) உலக மக்களுக்கு உணவு அளிப்பவன்.
(11) தெரு, வீதி, வழி என்றெல்லாம் கூறக்கூடிய சொல். (தலைகீழான சொல்)
(14) கண்களால் பார்த்து ரசிக்கக்கூடிய கலைப் படைப்பு.
(21) குளிர் பிரதேசங்களில் அணியப்படுகின்ற ஆடை. செம்மறியாடுகளின் உரோமங்களால் தயாரிக்கப்படுவது. (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(1) கிழிந்த ஆடையைக் குறிக்கும் சொல்.
(3) செதுக்கல் வேலைக்குப் பயன்படுத்தப்படும் உபகரணம். (தலைகீழான சொல்)
(4) உலகத்துக்கு மற்றொரு சொல் இது.
(5) தன்மை, ஒருமை பெயர்ச்சொல்.
(14) நீர்ப் போக்குவரத்து சாதனம். துடுப்பு இருந்தால்தான் பயணம் செய்ய முடியும்.
(18) மண்பாண்டப் பாத்திரங்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருள்.

**போட்டி இல. 314**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 313

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. தினகரன் 8. காவி 10. கத்தரி 16. மகுடம்
21. கோன் 23. அருவி 26. ஆறு

**மேலிருந்து கீழ்**

1. திங்கள் 3. கடிதம் 5. கான் 9. மனைவி
13. கோடறி 18. குன்று 20. குரு

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 312

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
ராஜேந்திரன் சுவாதி,
தரம் 11, மாத்தளை பாக்கியம் தேசியக்கல்லூரி,
தர்மபால மாவத்தை, மாத்தளை.

**இரண்டாம் பரிசு**
கே. மிதுஷன்,
தரம் 09, ஹைலன்ஸ் மத்திய கல்லூரி,
ஹட்டன்.

**மூன்றாம் பரிசு**
வி. ஜதுஷன்,
தரம் 08, விபுலானந்த மத்திய கல்லூரி,
காரைதீவு.

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஐ. இல்ஸான்,**
தரம் 06, கே/மாவ/ஸாஹிராக் கல்லூரி,
மாவனல்லை.

**2. பி. அதிகன்,**
தரம் 05, பரி தோமாவின் கல்லூரி,
கல்கிசை.

**3. கு. துவாரகன்,**
தரம் 04,
கமு/கார்மேல் பற்றிமா தேசியக் கல்லூரி,
கல்முனை.

**4. பரீரா,**
தரம் 04, ஆமினா மகளிர் தேசியக் கல்லூரி,
மொலந்தபிட்டிய வீதி,
மாத்தளை.

**5. எம்.எச்.எம். ஹூதாபா,**
தரம் 03, பு/ ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை,
மன்னார் வீதி,
புத்தளம்.



குறளமுதம் :

**எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்**
**மாணாசெய் யாமை தலை.**

**தெளிவுரை :** எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும் எவரிடத்திலும் மனத்தால் எண்ணி உண்டாகின்ற துன்பச் செயல்களைச் செய்யாதிருத்தலே சிறந்தது

# உலகில் மிக உயரமாக பறக்கும் பறவை



உலகத்தில் மிக உயரமாக பறக்கக்கூடிய பறவை பார் ஹீதேத் கூசே (Bar Headed Goose) ஆகும் . இது ஆச்சரியப்பட வைக்குமளவுக்கு மிக உயரமாக 10,175 m (33,382 அடி வரையும்) பறக்க வல்லது. இப்பறவையானது வருடத்துக்கு 38 முட்டைகளை இடும். இந்த பார் ஹீதேத் கூசே பறவையால் உலகின் மிக உயரமான மலையான எவரெஸ்ட் சிகரத்தை இலகுவாக 8,848 m (29,028 அடி உயரம்) பறக்க முடியும்.

இதனால் ஒக்சிசன் மிகக்குறைந்த இடத்திலும் சுவாசிக்கவும் அதனுடைய உடல் வெப்பநிலையை இழக்காமல் கட்டுப்படுத்தவும் முடியும். இதனால் ஒரு நாளைக்கு 1000 மைல் தூரத்தை ஜெற் வேகத்தில் பறக்க முடியும். இதனுடைய நீளம் 71–76 செ.மீற்றராகும். இதன் எடை 1.873.2 கிலோ கிராமாகும்.

# இவ்வார சிரிப்பு



**பா.பிரனீஸ்,**
பாலகுமார் - யோகமலர்,
கொழும்பு 15.

# உலக சாதனை புத்தகம் உருவான கதை தெரியுமா?

1951ம் வருடம் ஒரு நாள் மாலைப்பொழுது, அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த 'கின்னஸ் வாட் சாலை' என்ற அமைப்பிற்கு நிர்வாக இயக்குநராக இருந்தவர் 'சர்க்யூ பீவர்'. இவர் வேட்டையாடுவதற்காக ஒரு நதிக் கரையோரம் சென்று கொண்டிருந்தார். அப்போது ஆகாயத்தில் ஒரு நீண்ட கோடுபோல ஏராளமான பறவைகள் பறந்து சென்று கொண்டிருந்தன. அவர், உடனே அவற்றை சுட எண்ணி, குனிந்து தன் கைப்பையில் இருந்த துப்பாக்கியை எடுத்தார்.





எடுத்து நிமிர்ந்தவர் அந்தப் பறவைக்கூட்டம் கண்ணுக்கே தெரியாத தொலைவுக்குச் சென்று விட்டதை அறிந்தார். வியப்பில் உறைந்து போனார். என்ன ஒரு வேகம்! 'கோல்டன் பிளவர்' என்ற பறவையினம் அவை. அப்போதுதான் அவருக்கு ஒரு சிந்தனை பளிச்சிட்டது. ஒருவேளை உலகிலேயே மிகவும் வேகமாகப் பறக்கும் பறவையினம் இவையாகத்தான் இருக்குமோ என்று எண்ணினார். பலரிடம் பல புத்தகங்களிலும் விடை தேடினார். பலன்தான் இல்லை. இது குறித்து நாமே ஒரு புத்தகம் வெளியிட்டால் என்ன என்று யோசித்தார்.

லண்டன் சென்ற அவர், அங்கு அரசாங்கத்திற்காக புள்ளி விவரங்கள் சேகரிக்கும் நோரிஸ் மைக் வைக்ட்டர், ரோஸ் மைக் வைக்ட்டர் என்ற இரட்டைச் சகோதரர்களைச் சந்தித்தார். தனது புதிய புத்தக யோசனையை தெரிவித்தார். அவர்களும் ஒத்துழைப்புதர முன்வந்தனர். மூவரின் உழைப்பில் பிறந்ததுதான் கின்னஸ் புத்தகம். முதல் கின்னஸ் புத்தகம் 1955ம் ஆண்டு ஒகஸ்ட் 27ல் 198 பக்கங்களுடன் அவர்களால் வெளியிடப்பட்டது.

உலகிலேயே மிகவும் பெரியது. மிகவும் சிறியது ஆகிய விவரங்கள் இதில் அடங்கியிருந்தன. மேலும் அவ்வாண்டு வெளியான புத்தகங்களில் அமோக விற்பனையான புத்தகம் என்ற பெருமையும் கின்னஸ் புத்தகத்திற்குக் கிடைத்தது. அன்று தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது சாதனை புரிந்தவர்களைப் பற்றிய செய்திகளோடு புத்தகம் வெளிவந்தது. தொடர்ந்து ஆண்டுதோறும் வெளிவரும் கின்னஸ் புத்தகம் இடையில் 1957, 1959 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் வெளிவரவில்லை.


இதற்கான காரணம் தெரியவில்லை. தனிப்பட்ட நபரின் எந்த ஒரு புதிய சாதனையையும் கின்னஸ் புத்தகத்திற்கு அனுப்பலாம். இதற்கான தகுந்த ஆதாரங்களைக் காட்ட வேண்டும். எப்படி? என பார்ப்போம். சாதனையாளரின் சாதனை பற்றிய பத்திரிகை செய்திகள், பார்வையாளர்களாக இருந்த பொறுப்பானவர்களின் கையெழுத்துத் தொகுப்பு, இவை உண்மைதான் என்று ஒரு பொறுப்பான நிறுவனத்தின் தலைவர் வழங்கும் உறுதிமொழி என

அனைத்தையும் அனுப்ப வேண்டும்.

புதிய சாதனை முந்தைய சாதனையை முறியடிப்பதற்காக இருந்தால் அந்தச் செய்தியும் சாதனையாளர் பற்றிய தகவலும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும். கின்னஸ் புத்தகத்தில் சாதனை நிகழ்ச்சிகளை வெளியிடுவார்களே தவிர, யாரையும் சாதனைபுரியத் தூண்டமாட்டார்கள். கின்னஸ் புத்தகம் பற்றிக் கூட கின்னஸ் புத்தகத்தில் 1974ல் இடம் பெற்றது. அது உலகிலேயே அதிகமாக விற்பனையான புத்தகம் என்ற வரிசையில்தான். முதலில் ஆங்கிலத்தில் மட்டுமே வெளிவந்த புத்தகம் விரைவிலேயே 35 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

**என். வினோமதிவதனி,**
லுனுகலை.

# சிறுவர் சித்திரங்கள்



**யோ. இளம்பரிதி,**
தரம் 03,
றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்,
வத்தளை.




**ம. பரத்ரோஷன்,**
தரம் 01, பிளக்வோட்டர் தமிழ் வித்தியாலயம்,
கினிஹத்தேனை.



**ரவீந்திரன் சபரீசன்,**
மட்/பட்/குருமண்வெளி கனிஷ்ட வித்தியாலயம்,
குருமண்வெளி.



**பாலமோகன் நெவிசாந்,**
மட்/பட்/ குருமண்வெளி கனிஷ்ட வித்தியாலயம்,
குருமண்வெளி.



**ரவீந்திரன் சபரீசன்,**
மட்/பட்/குருமண்வெளி
கனிஷ்ட வித்தியாலயம்,
குருமண்வெளி.

# பாட்டனும் பேரனும்!



குடை பிடித்து நடந்து செல்லும் அப்பப்பா
கூட நானும் சேர்ந்து வாறேன் அப்பப்பா எனக்கு
கடை தெருவை பார்க்க ஆசை அப்பப்பா
கண்ட பொருளைக் கேட்கமாட்டேன் அப்பப்பா.

குறும்புத்தனம் செய்யமாட்டேன் அப்பப்பா
குறுக்கே நானும் ஓட மாட்டேன் அப்பப்பா எனக்கு
சகலதையும் அறிய ஆவல் அப்பப்பா
சற்று என்னை கூட்டிப் போங்கள் அப்பப்பா.

சின்னப்பிள்ளை என்றுசொல்லி அப்பப்பா வீட்டு
சிறையில் பூட்டி வைக்கலாமோ அப்பப்பா நான்
பென்னம் பெரிய ஆளாகி அப்பப்பா
பெரிய துணையாயிருப்பேன் அப்பப்பா.

அங்குமிங்கும் போகாதே சுட்டிப்பையா
அதையிதை நீ செய்யாதே சுட்டிப்பையா என
வளருமெனது ஆற்றலுக்கு தடைகள் போடும்
வரன்முறைகள் மாறவேண்டும் அப்பப்பா.

உகந்தவற்றை நீங்கள் சொன்னால் அப்பப்பா
ஒருபோதும் தட்டமாட்டேன் அப்பப்பா என்
வல்லமைகள் மேன்மையுற அப்பப்பா நீங்கள்
வாய்ப்பளித்து உதவவேண்டும் அப்பப்பா..!

**ஷெல்லிதாசன்**

**மாணவர் கழக அங்கத்துவ இல : 429**



**ம. பரத்ரோஷன்,**
தரம் 01,
பிளக்வோட்டர் தமிழ் வித்தியாலயம்,
கினிஹத்தேனை.

**மாணவர் கழக அங்கத்துவ இல : 430**



**எஸ்.எப். அப்ஸீன்,**
தரம் 05 (ஆங்கிலம்),
கமு/கமு/ அல் ஹிலால் வித்தியாலயம்,
சாய்ந்தமருது.

## மாணவர் கழக அனுமதி

வர்ணப் புகைப்படம்

மாணவர் பெயர் ........................................

பிறந்த திகதி ........................................

வகுப்பு ........................................

பாடசாலை ........................................

........................................

................................................

வகுப்பாசிரியர் கையொப்பம்

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**

# விளையாட்டு




## சபான், சபியா மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டியில் வெற்றி

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் சுப்பர் மற்றும் தேசிய அணிகளில் இடம்பெற்றுள்ள வீர, வீராங்கனைகளின் உடல் தகுதியினை பரிசோதிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட தகுதிகாண் போட்டிகள் கடந்த (17) சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது.

இதில் பெண்களுக்கான 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட ஆசியாவின் கனிஷ்ட அதிவேக வீராங்கனையான அமாஷா டி சில்வா, 7.44 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்து முதலிடத்தைப் பெற்றுக்கெண்டார்.

குறித்த போட்டியில் அமாஷாவுக்கு பலத்த போட்டியைக் கொடுத்த சபியா யாமிக் (7.63 செக்.) இரண்டாமிடத்தையும், மெதானி ஜயமான்ன (7.75 செக்.) மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான 60 மீற்றர் ஓட்டப் போட்டியை 6.67 செக்கன்களில் நிறைவுசெய்த தெற்காசியாவின் அதிவேக வீரரான ஹிமாஷ ஹேஷான் முதலிடத்தைப் பெற்றுக்கொள்ள, சானுக சந்தீப் (6.82 செக்.) இரண்டாமிடத்தையும், மொஹமட் சபான் (6.88 செக்.) மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கையின் முன்னணி ஏழு வீரர்கள் பங்குகொண்ட ஆண்களுக்கான 300 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடத்தை தேசிய சம்பியனான காலிங்க குமாரகே பெற்றுக்கொண்டார். அவர் போட்டித் தூரத்தை 33.20 செக்கன்களில் ஓடிமுடித்தார்.

இந்தப் போட்டியில் அருண தர்ஷன (33.57 செக்.) இரண்டாமிடத்தையும், இசுரு லக்ஷான் (33.72 செக்.) மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான 300 மீற்றர் ஓட்டப் போட்டியில் தனியொருவராகப் பங்குகொண்ட தேசிய சம்பியனான நதீஷா ராமநாயக்க, போட்டித் தூரத்தை 38.76 செக்கன்களில் நிறைவு செய்தார்.

பலத்த போட்டிக்கு மத்தியில் நடைபெற்ற பெண்களுக்கான 600 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடத்தை டில்ஷி குமாரசிங்க (ஒரு நிமி. 30.14 செக்.) பெற்றுக்கொள்ள, நிமாலி நிலயனாஆரச்சி (ஒரு நிமி. 30.73 செக்.) இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டார். இதன் ஆண்கள் பிரிவில் தனியொருவராகப் பங்குகொண்ட ருசிரு சதுரங்க, போட்டியை ஒரு நிமிடம் 20.36 செக்கன்களில் நிறைவுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்கான நீளம் பாய்தலில் மஹேஷ் குமார 6.84 மீற்றர் தூரத்தையும், பெண்கள் பிரிவில் அஞ்சானி புலவன்ச 5.98 மீற்றர் தூரத்தையும் பாய்ந்து தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

பெண்களுக்கான 60 மீற்றர் தடைதாண்டலில் முதலிடத்தை லக்ஷிகா சுகந்தியும் (8.45 செக்.), இரண்டாமிடத்தை இரேஷானி ராஜசிங்கவும் (8.56 செக்.) பெற்றுக்கொண்டனர். பெண்களுக்கான ஈட்டி எறிதலில் தேசிய சம்பியனான நதீகா லக்மாலி, 52.29 மீற்றர் தூரத்தை எறிந்து திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.



### மேற்கியந்திய தீவுகள்–இலங்கை அணிகள் மோதும்

# முதல் டெஸ்ட் போட்டி இன்று

மேற்கியந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி அண்டிகுவாவிலுள்ள விவியன் ரிச்சர்ட் மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்பயணத்தில் ஏற்கனவே நடைபெற்ற ரி/20 தொடர் மற்றும் ஒருநாள் சர்வதேச தொடர்களில் தோல்வியடைந்துள்ள இலங்கை அணி கடந்த வாரம் நடைபெற்ற 2 நாள் பயிற்சி போட்டியில் கூட தனது முதல் இன்னிங்ஸில் 172 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து மிகவும் பின்தங்கிய நிலையில் இன்று தனது முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகளுடன் மோதுகின்றது.

அண்மைக்காலங்களில் எல்லாவகை போட்டியிலும் பின்நிலையிலுள்ள இலங்கை அணி இன்று நடைபெறும் டெஸ்ட் போட்டிக்கு புதுமுக வீரர் பெதும் நிஷங்க அழைக்கப்பட்டுள்ளார். ஒரு நாள் போட்டிகளில் முதல் வரிசை துடுப்பாட்ட வீரராக வந்து திறமைகாட்டிய இவர் டெஸ்ட் போட்டிகளில் பின்வரிசையில் சந்திமாலுடன் இணைந்து ஆட அழைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எமது டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் நடந்து முடிந்த பயிற்சிப்போட்டியில் திறமைகாட்டாவிட்டாலும் இன்று நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் கட்டாயமாக திறமைகாட்ட வேண்டிய நிலையிலுள்ளனர். அப்போதுதான் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இப்போட்டியில் அவ்வணிக்கு சவால் விடுக்க முடியும். குறைந்தது இரு துடுப்பாட்ட வீரர்களாவது அதிக ஓட்டங்களைக் குவிக்க வேண்டும்.

எமது துடுப்பாட்ட வீரர்களின் பலவீனமாகவுள்ளது ஒரு வீரராவது நீண்ட நேரம் நிலைத்து நின்று ஆட முயற்சிக்காமையாகும். எதிரணிக்கு சவாலாக ஒரு இலக்கை வைக்க முடியாமல் போவதும் பின்னடைவுக்கு ஒரு காரணமாகும். டெஸ்ட் போட்டிகளில் வீரர்கள் 40 ஓட்டங்கள் எடுத்தால் அதை அரைச்சதமாக அல்லது சதமாக மாற்றும் ஆற்றல் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தற்போது பல வெற்றிகளைப் பெற்று மனதளவில் வலுவாக இருக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு சவால் விடுக்க முடியாமல் போகும். முக்கியமாக பலவீனப்பட்டுள்ள மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்கள் கவனமாக துடுப்பெடுத்தாடி இலக்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையைக் அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

ஒருநாள் போட்டியில் விளையாடாத லஹிரு திரிமான்ன, தனஞ்சய சில்வா சுழற் பந்துவீச்சாளர் லசித் எம்புல்தெனிய டெஸ்ட் போட்டிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த காலங்களில் விளையாட்டிய போட்டிகளில் திறமையாக விளையாடியுள்ளதால் இவர்களின் வருகை இலங்கை அணிக்கு பலமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் லசித் எம்புல்தெனிய அண்மையில் படுதோல்வியடைந்த இங்கிலாந்து அணியுடனான தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவராவார். எனவே இலங்கை அணி இவரின் பந்து வீச்சை பெரிதும் எதிர்பார்த்து இன்று களமிறங்குகிறது.





மேலும் சுழற்பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் திறமைகாட்டிவரும் வனிது ஹசரங்க, ரொமேஷ் பத்திரன இன்றைய போட்டியில் சேர்த்துக்கொள்வது சந்தேகமே. வேகப்பந்து வீச்சுக்குகந்த மேற்கிந்திய ஆடுகளங்களில் இவ்விரு சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்தவரையில் அண்மையில் ஆசிய நாடான பங்களாதேஷில் நடைபெற்ற இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. இளம் வீரர்களைக் கொண்ட அவ்வணி சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களில் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றி பெற்றிருந்தது. பங்களாதேஷுடன் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் கடினமான இலக்கை துரத்திய அவ்வணியின் அறிமுக இளம் வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றி பெற்றமையானது அவர்களின் மனநிலையை வலுப்பெறச்செய்துள்ளது. எனவே உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக நடைபெறும் இத்தொடர் இலங்கை அணிக்கு கடும் சவாலாக அமையும் என்பது திண்ணம்.

இலங்கை-மேற்கிந்திய தீவுகள் டெஸ்ட் வரலாற்றில் இதுவரை 20 போட்டிகள் நடைபெற்றுள்ளது. இதில் இலங்கை அணி 9 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளதுடன் நான்கு போட்டியில் தோல்வியடைந்துள்ளது. 7 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

இதுவரை இலங்கை அணி ஒரு இன்னிங்ஸில் கூடிய ஓட்டமாக 29-11-2001ஆம் ஆண்டு எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் 627 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மேற்கிந்திய தீவுகள் 2010ம் ஆண்டு காலி மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் 589 ஓட்டங்கள் பெற்றதே அவ்வணி சார்பாக பெற்ற கூடிய ஓட்டங்களாகும். குறைந்த ஓட்டங்களாக 2005ம் ஆண்டு கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் இலங்கை அணி 150 ஓட்டங்களும், 2018ம் ஆண்டு பிரிஜ்டவுனில் மேற்கிந்திய தீவுகள் 93 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததும் பதிவாகியுள்ளது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் குமார் சங்கக்கார 12 போட்டிகளில் 19 இன்னிஸ்களில் 54.34 சராசரியுடன் 918 ஓட்டங்கள் பெற்றதும், 8 போட்டிகளில் 14 இன்னிங்ஸில் 86.54 சராசரியுடன் 1125 ஓட்டங்கள் பெற்றதுமே ஒரு வீரர் பெற்ற கூடிய மொத்த ஓட்டங்களாகும். தனி நபர் கூடிய ஓட்டங்களாக 2004ம் ஆண்டு ஹசான் திலக்கரத்ன எஸ். எஸ். சி மைதானத்தில் பெற்ற 204 ஓட்டங்கள் இலங்கை சார்பாகவும், 2010ம் ஆண்டு காலி மைதானத்தில் கிறிஸ் கெயில் பெற்ற 333 ஓட்டங்கள் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாகவும் பதிவாகியுள்ளது. கூடிய சதங்களாக லாரா 8 போட்டியில் 5 சதங்களும், குமார் சங்கக்கார 12 போட்டியில் 3 சதங்களும் பெற்றுள்ளனர்.

டெஸ்ட் போட்டிகளில் இதுவரை கூடிய விக்கெட்டுகள் கைப்பற்றியோர் வரிசையில் இலங்கை சார்பாக முத்தையா முரளிதரன் 12 போட்டிகளில் 82 விக்கெட்டுகளையும், மேற்கிந்திய தீவுகள் சார்பாக கெமரூன் ரோச் 8 போட்டிகளில் 41 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

ஒரு இன்னிங்ஸில் சிறந்த பந்து வீச்சாக இலங்கை அணி சார்பாக முத்தையா முரளிதரன் 2005 ஆம் ஆண்டு எஸ். எஸ். சி மைதானத்தில் 46 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களையும், மேற்கிந்திய அணி சார்பாக 2018ஆம் ஆண்டு பாபடோஸில் நடைபெற்ற போட்டியொன்றில் கெப்ரியல் 62 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

ஒரு போட்டியில் அதிக விக்கெட்டுகளையும் இலங்கை சார்பாக 2004ம் ஆண்டு அன்டிகுவாவில் நடைபெற்ற போட்டியொன்றில் 191 ஓட்டங்களுக்கு 14 விக்கெட்டுகளையும், மேற்கிந்திய தீவுகள் சார்பாக 2018ம் ஆண்டு பாபடோஸில் நடைபெற்ற போட்டியொன்றில் 121 ஓட்டங்களுக்கு 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.



எம். சுஹைல்...

### உலகக்கிண்ணக் கால்பந்து 2022:

## தகுதிகாண் ஆட்டம் ஒன்றின் விற்றுத் தீர்ந்த நுழைவுச்சீட்டுகள்

நெதர்லாந்தில் உலகக்கிண்ண கால்பந்து 2022க்கான தகுதி ஆட்டம் ஒன்றின் நுழைவுச்சீட்டுகள் வந்த வேகத்தில் விற்றுத் தீர்ந்தன.

நெதர்லாந்துக்கும் லாட்வியாவுக்கும் இடையிலான அந்த ஆட்டத்தின் நுழைவுச் சீட்டுகள் அனைத்தும் அரை மணிநேரத்திற்குள் விற்றுமுடிந்தன என்று தெரிவிக்கப்பட்டது. COVID19 காரணமாக நெதர்லாந்தில் விளையாட்டு அரங்கங்களில் ரசிகர்களுக்கு அனுமதி இல்லை.ஆனால் தற்போது சோதனை முயற்சியாக

அங்கு 5,000 பேருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனால் இரசிகர்கள் நுழைவுச் சீட்டுகளை விரைந்து வாங்கினர்.

சீட்டுகள் விற்றுத் தீர்ந்தது குறித்து அந்நாட்டுக் காற்பந்து சம்மேளனம் மகிழ்ச்சி தெரிவித்தது.ஜோன் Cruijff விளையாட்டு அரங்கில் மார்ச் 27ஆம் திகதி ஆட்டம் இடம் பெறுகிறது. இரசிகர்கள் குழுக்களாகப் பிரித்து பிரித்து அமர்த்தப் படுவார்கள் என்று சம்மேளனம் தெரிவித்தது. ஆட்டத்தைக் காண வரும் இரசிகர்கள் தங்களுக்கு நோய்த்தொற்று இல்லை என்ற சான்றிதழை அரங்கத்தின் நுழைவாயிலில் காட்டவேண்டும், அப்போதுதான் அனுமதி என்று தெரிவிக்கப் பட்டது.



### கொரோனா காரணமாக

## 20 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் தகுதி சுற்று ஒத்திவைப்பு

கொரோனா பரவல் அதிகரிப்பு மற்றும் சில நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள புதிய கட்டுப்பாடுகள் காரணமாக இந்த தகுதி சுற்று ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக ஐ.சி.சி. அறிவித்தது.

7வது 20 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் போட்டி அக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் நடக்கிறது. அதைத் தொடர்ந்து 8வது 20 ஓவர் உலககிண்ண போட்டி அடுத்த ஆண்டு (2022) அவுஸ்திரேலியாவில் நடத்தப்படுகிறது. 2022ம் ஆண்டு உலக கிண்ண போட்டிக்கான ஆசியா ஏ மண்டலத்திற்கான தகுதி சுற்று அடுத்த மாதம் (ஏப்ரல்) 3ம் திகதி முதல் 9ம் திகதி வரை குவைத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இதில் பஹ்ரைன், குவைத், மாலைதீவு, கட்டார், சவுதி அரேபியா ஆகிய அணிகள் பங்கேற்க இருந்தன. கொரோனா பரவல் அதிகரிப்பு மற்றும் சில நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள புதிய கட்டுப்பாடுகள் காரணமாக இந்த தகுதி சுற்று ஒக்டோபர் மாதத்திற்கு தள்ளிவைக்கப்படுவதாக ஐ.சி.சி. அண்மையில் அறிவித்தது.

இதே போல் ஆபிரிக்க மண்டலத்திற்கான தகுதி சுற்று ஏ, பி என்று இரு வகையாக பிரிக்கப்பட்டு தென் ஆபிரிக்காவில் அடுத்த மாதம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த போட்டியும் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திபோடப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# வாழ்வாதாரமா சேதாரமா 171



தமிழ்க் கவி பேசுகின்றார்

களிலும் ஏனைய துறைகளிலும் பெண்கள் வேலைகளை ஆரம்பித்தனர். இன்று எந்த ஒரு துறையிலும் சம அளவிலோ அதற்கும் அதிகமாகவோ பெண்கள் இடம் பெற்றுள்ளார்கள். அநேகமாக உயரதிகாரிகளாக பெண்கள் உள்ளனர். இப்ப நான் தொடங்கிய இடத்துக்கு வருகிறேன்.

வேலை பார்க்கும் பெண்களில் அநேகருக்கு தாம் எதற்காக யாருக்காக வேலை பார்க்கிறோம் என்பது தெரியவில்லை. அதிலும் ஏழை மக்களின் வாழ்வாதார ஓய்வூதிய சமூக நல செயற்பாடுகளில் வேலை செய்பவர்களுக்கு இந்த கஸ்டநிலையில் வருவோரை காணும் போது ஒரு சலிப்பு ஏற்படுகிறது. 'விடிஞ்ச உடன இதுகளின்ர முகத்தில முழிக்க வேண்டிக்கிடக்கு" என்று நினைக்கிறார்களோ என்னவோ. இது ஒரு புறமிருக்க இவர்களால் பாதிக்கப்படுவோர் யாரிடமும் முறைப்பாடு செய்வதில்லை அதற்குரிய அறிவும் அதற்காக செலவிட நேரமும் இவர்களுக்கு கிடையாது. அப்படியே மீறி யாராவது முறைப்பாட்டை செய்து விட்டால் அவர்கள் எந்த அரச உதவிகளையோ நலன்களையோ பெறவே முடியாது. எனவே இவர்களின் அராஜகம் அதிகமாகவே உள்ளது.

அரசாங்கம் மக்களுக்காக பெரும்பதவிகளை உருவாக்கி அதன் கட்டுப்பாட்டுக்கான அதிகாரிகளை யோசித்தேன்' பயணச்செலவு முந்நூறு ரூபாவும் ஒருநாள் வேலையும் அநியாயமாகிப்போச்சே"

இதை ஒரு முறைப்பாடாக நான் கொடுத்தால் நிச்சயம் பழிவாங்க ப்படுவேன். அந்தவகையில் நான் பல தடவைகள் அதிகாரிகளால் பழிவாங்கப் பட்டிருக்கிறேன்.. எனவே மௌனம் சாசுவதமானது. என விட்டுவிடுவோம். மனம் பொறுக்காமல் என் நண்பரிடம் இதை சொன்ன போது அவர் கெக்கட்டம் விட்டுச்சிரித்தார். சிரித்தபின் சொன்னார்

"உனக்குத் தெரியாதா? அதிகாரிகளெல்லாம் ஒரு கோர்வையெண்டு. ஒருவன் பிழையெண்டு இன்னொருவனட்ட சொல்ல ஏலாது. உடனேயே அவன் இஞ்ச போவாட் பண்ணிப்போடுவான். நீயென்ன சினிமா கீரோவே விஜய்மாதிரி அஜித்மாதிரி உதுகளத் திருத்தப்போறியோ கடைசியா நீ இந்த நாட்டின்ர பிரசையே இல்லையெண்டு முடிச்சுப் பொடுவங்கள் கண்டியோ"

உண்மைதான். போர் நடந்த காலத்தில மக்கள் தமக்கு போராளிகளால் ஏற்படுகிற துயரங்கள் பற்றி தலைவருக்கு முறைப்பாட்டை எழுதிப்போடலாம். அதை தலைவர் விசாரித்து நிவாரணம் கொடுப்பார். அல்லது அவர்கள் பக்கம் நியாயம் இல்லையெனில் புரியவைத்து ஏற்றுக் கொள்ள செய்வார். இதில்

# கிட்டாமலேயே போய்விட்ட ஏழைகளின் வாழ்வாதார உதவிகள்

உலகம் தாய்மையின் காலடியில் உருள்கிறது. என்றொரு பழமொழி உண்டு. ஆனால் உலகின் காலடியில்தான் பெண்கள் உருளுகிறார்கள். பெண்களுக்கு என்னதான் கல்வி பதவி பவிசு என்று வந்தாலும் அவர்கள் தமது அடிப்படைப் பண்பகளான போட்டி பொறாமை பெரியோரை மதியாமை என பல பண்புகளையும் கூடவே வளர்த்துக் கொள்கிறார்கள்.

ஆயிரத்து தொளாயிரத்து அறுபதுகளின் ஆரம்பத்தில் எமதூரில் மூன்று பெண்கள் சைக்கிளோட ஆரம்பித்திருந்தார்கள். ஒருத்தி மாணவி. அந்த குடும்பம் கொழும்பிலிருந்து வந்திருந்தது. மற்றவர்களில் ஒருத்தி சங்கக்கடை மனேச்சர். சங்கக்கடைக்கு ஒரு முதல் பெண் மனேச்சரும் அவள்தான். அடுத்தவள் ஒரு கிராம வாசி அவள் பெரிதாக அன்றாடம் வீதிக்கு வரமாட்டாள். முதலிரு பெண்களும் தினசரி வழிப்போக்கர்களால் அதாவது ஆண்பெண் இரு பாலாராலும் காலையிலும் மாலையிலும் காத்திருந்து ரசிக்கப்படும் பெண்களாகும். ஏன் நானே நின்று பார்த்து அங்கலாய்த்திருக்கிறேன். அதற்காக நான் சைக்கிளோடத் தெரியாதவள் என்பதல்ல. நான்தான் எமது நகரத்தின் முதல் சைக்கிளோட்டக்காரி. ஆனால் எனக்கு அப்படி சுதந்திரமாக திரிய அனுமதி இல்லை.

சாலையின் இருபுறமும் மறைந்தும் மறையாமலும் நிறைய பார்வையாளர்கள் இருந்ததால் அவர்கள் சைக்கிளோடும் போது அவர்களது முகம் மிகவும் கடுப்பாக இருக்கும் ஒரு புன்னகை பேச்சு ஊகம் எதவும் இருக்காது பாறைபோல முகம் இறுகி இருக்கும். இளைஞர்களுக்கு அது வருத்தம்தான். மூஞ்சையப்பாரண்டா கடுவன் பூனைமாதிரி வைச்சுக்கொண்டு பொறாள் என்று பேசுவதை கேட்டிருக்கிறேன். அந்தக்காலத்தில் வைத்தியசாலைகளிலும். ஆசிரியத் தொழிலிலும் மட்டுமே பெண்கள் இருப்பார்கள் வவுனியாவுக்கு ஒரு பெண்டாக்டர் முதல்முதலாக ஏழுபதுகளின் தொடக்கத்தில் வந்திருந்தார். வைத்தியசாலைக்கு செல்வோர் அவரிடம் தம்மை காட்டி விட்டு வந்தால் பெருமையாக பேசுவார்கள்.

" சை எவ்வளவு அன்பா கதைக்குது மனிசி. உந்த கதையக்கேட்டாலே வருத்தம் மாறிப்போகும்". என்று பாராட்டப்பட்டார். அப்போதே கச்சேரியும் போட்டே உள்ளது. கடந்த வருடம் நான் எழுதியிருந்தேன் ஒரு பொறுப்பான பதவிகளில் மன்னார் வடமாகாணம் போன்ற இடங்களில் சிங்கள இனத்தவர்கள் கடமையாற்றினார்கள். அவர்களை சந்திக்கும் மக்களை தாமே சந்தித்து கருணையோடும் அர்ப்பணிப்பு மனதோடும் பேசி பிரச்சனைகளை தீர்த்தார்கள் அல்லது அதன் நிலையை புரியவைத்து ஏற்றுக் கொள்ளச் செய்தார்கள். இப்போது நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. ஶ்ரீமான் பொதுஜனம் இப்போது அடிமைகளாகவும் அதிகாரிகள் ஜமீன் காலத்து ஜமீன்தார்களாகவும் மாறிவிட்டனர். பொதுமக்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையே பெரிய திரை விழுந்திருக்கிறது. புதனும் திங்களுமாக இருந்த பொதுமக்கள் சந்திப்பு திங்கள் மட்டுமே என்று மாறிவிட்டது. அந்த திங்கள்தான் இப்போது அதிகாரிகளின் கூட்டம் வைக்கும் நாளாகவும் இருக்கிறது..



ஒரு முக்கிய அலுவலகத்துக்கு ஒரு விடயம் தொடர்பில் சந்தேகம் கேட்கப் போயிருந்தேன். தேநீர் கொடுத்தார்கள். மதிய உணவும் வரும் போல என நினைத்தேன். அவ்வளவு நேரம் காத்திருந்தோம். ஒரு பெண் நீண்டநேரம் காத்திருந்து கடுப்பாகி கதவைத்தள்ளிக் கொண்டு உள்ளே போன சம்பவத்தையும் அந்தளவுக்கு துணிச்சல் இல்லாதவரான ஒரு பெண் இன்னொரு நாள் பார்க்கலாம் என எழுந்து போனதையும் கண்டேன். இதெல்லாம் பெண்கள் நிர்வாகம்தான். பொறுமையோடு இருந்து எனது நேரம் வர நான் போனால் உள்ளே இருந்த அம்மையார் முகத்தில் கடுப்பு கொதிப்பு ரெண்டும் குதித்துக் கொண்டிருந்தது கடுகு போடாமலே படபடவென வெடித்து கிளம்பியது பேச்சு 'சரிசரி மற்றாள்'. என்ற போது நான் வெளியே வந்தேன் வந்தபின்தான் இரண்டாவது நடவடிக்கையே மிக முக்கியமானது. அன்பாக புரிய வைத்தல் என்பது பகைவனையும் இளக வைக்கும். பின்னாளில் தலைவருக்கென தலைமைச் செயலகம் வந்து அதற்கென ஒரு செயலரும் நியமிக்கப்பட்டதும் கடிதங்கள் பெரும்பாலும் செயலகத்திலேயே திறக்கப்பட்டன. திறந்து பார்த்த கடிதங்கள் யாருக்கெதிரான முறைப்பாடோ அவருக்கே அனுப்பப்படும் அப்படி கடிதம் போட்ட ஒருவர் நீதிக்காக காத்திருக்க அவரது எதிராளியான போராளி அவரது வீட்டுக்கே போய் தலைவருக்கு கடிதம் போட்டா நான் பயந்திருவனோ உடன இந்த இடத்தைவிட்டு வேற இடத்துக்கு போ என விரட்டி விட்டான். அது பெரிய பிரச்சனையாக வெடித்தது வேறு விடயம். இன்றுள்ள அரச அலுவலகங்களும் இந்த நீதிப்படிதான் இயங்குகின்றன.

ஒருவர்மீது ஊழல் என்பது நிரூபிக்க தயாராகும்போது அவருக்கு பதவிஉயர்வுடன் வேலை மாற்றம் தயாராகிவிடுகிறது. சாதாரண ஏழைகளின் வாழ்வாதார உதவிகளில்கூட பெருமளவு வழங்கப்படாமலே போய்விட்ட கதை உண்டு பெரும்பாலும் இந்த விடயங்கள் பெண்களை மேலாளர்களாக கொண்டு நடாத்தப்படுவதுதான் விந்தை ஒரு பானைச் சோறும் நஞ்சல்ல. ஆனால் ஒரு துளி விசம் இருக்கிறதே.

# 95 வது அகவையில் கொழும்பு விவேகானந்தா கல்லூரி

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரே தமிழர்கள் கல்வி நடவடிக்கைகளில் மேம்பட வேண்டும் என்ற நோக்கில் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சைவ பாடசாலையாக வரலாற்றில் தன் பெயரை பதித்துக்கொண்ட கொழும்பு விவேகானந்தா கல்லூரி தனது 95 வது அகவையில் மார்ச் 24ம் திகதி தடம் பதிக்கவுள்ளது.

வடகொழும்பில் விவேகானந்தா சபையினரால் 1926 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி நிறுவப்பெற்றதே இந்து பாடசாலைகளில் வயதில் மூத்த பாடசாலையான விவேகானந்தா கல்லூரியாகும். சுவாமி விபுலானந்த அடிகளும் சுவாமி சச்சிதானந்தனும் கலந்து கொண்ட திறப்பு விழாவில் இரண்டு ஆசிரியர்களையும் இருபத்தைந்து மாணவர்களையும் கொண்டு கொழும்பு விவேகானந்தா சபையால் விவேகானந்தா ஆரம்ப பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவின் தலைசிறந்த சமயத் தலைவரான சுவாமி விவேகானந்தர் காலடி தடம் விவேகானந்தா சபையில் பதிந்ததை கௌரவப்படுத்தும் நோக்கில், வீரத்துறவி முக்தியடைந்த ஒன்பதாவது நாள் நிறுவப் பெற்ற விவேகானந்தா சபையால், தமிழர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் விவேகானந்தா ஆரம்ப பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

"ஆகுக. ஆக்குக" என்ற குறிக்கோள் வார்த்தையை கொண்ட கல்லூரி அதற்கான பணியினை ஆற்றி வருகின்றது. மிக தீர்க்கதரிசமான வார்த்தைகளை கொண்ட " வீரமும் கல்வியும் ஞானமும் எழும்புகழ், விளை நிலம் எங்கள் விவேகானந்தா" என ஆரம்பமாகும் பாடசாலை கீதத்தை வித்துவான் பொன்னம்பலம் ஐயா இயற்றினார்.

ஆரம்ப காலகட்டங்களில் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளின்றி செயற்பட்ட விவேகானந்தா பாடசாலை தனது விடாமுயற்சியின் பலனாக வித்தியாலயமாக, மகா வித்தியாலயமாக, கல்லூரியாக தனது முன்னேற்றத்தை நோக்கிய பயணத்தில் வெற்றி நடை போட்டது.

கொழும்பு 13 இல் அமைந்துள்ள பாடசாலையில் ஆண்களும் பெண்களும் இணைந்தே கல்வி பயிலுகின்றனர். ஆரம்பப் பாடசாலையான விவேகானந்தா கல்லூரி, 1953இல் க.பொ.த (சா/த) வகுப்பு வரை தரமுயர்த்தப்பட்டது. 1962ஆம் ஆண்டு பாடசாலையை அரசாங்கம் தனது பொறுப்பின் கீழ் எடுத்துக்கொண்டது. அரசாங்கம் கல்லூரியை பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைவதற்குள், அதாவது 1963இல் மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டு க.பொ.த (உ/த) வகுப்பு வரை மாணவர்கள் கல்வி பயில சந்தர்ப்பம் ஏற்பட்டது.






முன்னாள் அதிபர் அமரர் சு.மகேசன் அதிபராக பணியாற்றிய ஒரு தசாப்த காலத்தில் கல்லூரி பல வளர்ச்சிகளை எட்டியது. அவரது காலகட்டமான 1978 ஆம் ஆண்டு பெண்களுக்கான கீழைத்தேய பாண்ட் வாத்தியக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. இக்குழு அகில உலக இந்து மாநாட்டின் போதும் நேபாள மன்னரின் இலங்கை விஜயத்தின்போதும் பங்கேற்று பாடசாலைக்கு புகழ்சேர்த்தது. 1981 ஆம் ஆண்டு இங்கிலாந்து மகாராணியாரின் இலங்கை விஜயத்தின்போது அவரது வரவேற்பில் கலந்துகொண்ட ஒரேயொரு தமிழ் பாடசாலையாக தனது பெயரை வரலாற்றில் பதித்தது.

கல்லூரியில் இடப்பற்றாக்குறை நிலவியபோதிலும், உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தலைநகர் கொழும்பை நோக்கி வருகை தந்த மாணவர்களுக்கு, அவர்களது கல்வி இடைநடுவே நின்றுவிடக் கூடாது என்ற நோக்கத்தில் அவர்களையும் அரவணைத்து கல்வி கற்பித்த பெருமை விவேகானந்தாவுக்கு உண்டு. கல்லூரிக்கென்று விளையாட்டு மைதானம் இல்லாதபோதிலும், பாடசாலை மாணவர்கள் விளையாட்டுத்துறையில் வெளிப்படுத்துகின்ற ஆற்றல்கள் அளப்பரியவை.

இத்தகைய சிறப்புகளை கொண்ட பாடசாலையில் 1990 ஆண்டு சித்தி விநாயகர் கோயில் நிர்மாணிக்கப்பட்டது. 1996 இல் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு இன்று 2,200 மாணவர்களையும், 103 ஆசிரியர்களையும் கொண்டுள்ள கல்லூரியின் தற்போதைய அதிபராக திருமதி. சந்திரசேகர் ரவிச்சந்திரிக்கா பணியாற்றுகின்றார்.

விவேகானந்தா தேசிய பாடசாலையில் தரம் ஒன்று முதல் உயர்தர வகுப்புக்கள் வரை தமிழ், ஆங்கில மொழி மூலம் கல்வி நடவடிக்கைகள் தற்போது நடைபெறுகின்றன. ஐந்து கட்டடத் தொகுதிகளையும், விநாயகர் கோவிலையும் உள்ளடக்கியுள்ள கல்லூரியில் கணினிக் கூடம், விஞ்ஞான ஆய்வு கூடம், கலைப் பொருட்கள் கூடம், பிரதான மண்டபம் என அனைத்து வசதிகளும் உள்ளன. சாதாரண ஒரு பள்ளிக்கூடமாக ஆரம்பமான விவேகானந்தா கல்வியகம் இன்று இலங்கை திருநாட்டின் தலைசிறந்த தமிழ் கல்லூரிகளில் ஒன்றாக வளர்ந்து பலன் கொடுத்துக் கொண்டிருக்கும் பெரு விருட்சமாக உள்ளது.

சுரேஸ் குமார் பேனா ...
பழைய மாணவன்

# நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

## பணியாரம்



வாசல் மண் எந்நேரமும் சூடாகவே இருக்கும். பெரிய முடாப் பானையில் நெலுவை ஊத்திப் பாகுப் பதமாக ஆகும் வரைக்கும் அகப்பையிலே கிளரி விட்டுக்கிட்டே உம்மா நின்றிருக்கிறார். அதற்கேற்றாறாப்போல் தீனார் மூட்டிக் கொதி நிலையில் அடுப்பு எரியும்,. அவ்விடத்தில் சிறுசிறு குழிகள் தோண்டியிருபார்கள். அதுதான் பணியாரக் குழி. அதற்கு மேலே வெள்ளைச் சாரனை விரித்துவிட்டு அகப்பையால் நெலுவுப் பாகுவை ஊத்திக்கிட்டே வருவார்கள். குழியில் நிறைந்து ஆவி பறந்து சூடு அடங்கும். விடிய விடியப் பணியாரம் சுடுவதால் எறும்பு மொய்க்காமல் சுற்றி மஞ்சள்பொடி தூவி விடுவார்கள். காய்ச்சிய பானையில் ஒட்டியிருக்கின்ற பாகுவை விரலில் தொட்டு நக்குவேன்..

கூட்டம் கூடும் இடங்களிலெல்லாம் பலகாரக் கூடை இருக்கும் என்பது அன்றைய வழக்குச் சொல். பணியாரக் காசிம் அவர் தனது பிறந்த ஊரையும் குடும்பத்தையும் துறந்து இங்கு வாழ்ந்து வருபவர். எல்லாச் சங்கீதக் காரர்களுக்கும் அவர்கள் பிறந்த ஊர்தான் முதல் அடையாளமாக இருப்பதுபோல் இவரின் பெயருக்கு முன்னால் தொழில் வந்துவிட்டது. இவர் குடியிருக்கும் வன்னியனார் வட்டையில் அழகு வண்ணப் பறவைகள் தாவித் தாவித் திரியும். எங்கள் பள்ளி விடுமுறை நாட்களில் அங்கு செல்வது வழக்கம். அவரிடம் எந்நேரமும் செக்கெண்ணைதான் மணக்கும். உலக்கையும் உரலுமாய் ஓங்கி விட்டுக்கொண்டிருப்பார். நாங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டே நிற்போம். எங்களைக் கண்டதும் உலக்கையில் ஒட்டி அடைபோல் சேர்ந்திருக்கும் எள்ளுச் செக்கை வழித்தெடுத்துத் தருவார். ,"சத சத" வென்று எண்ணெய் கருப்பட்டி மணத்தோடு தின்பதற்கு நன்றாக இருக்கும். அப்போது பள்ளிக் கூடம் போகாது சுற்றித் திரியும் பெரிய பையன்களைச் செக்குலக்கை என்று திட்டுவது நினைவில் வந்துபோகும்...

எங்கள் வீட்டில் போடிச் சாப்புக்குள் முடாக்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும். அறுவடைக் காலத்தில் எல்லா முடாக்களும் நிரம்பித் ததும்பும். கீழ் முடாவில் ஆறரை மரைக்கால் அரிசி நிறைத்திருப்பார். அடுத்ததில் துணிமணிகள். ஆக மேலே உம்மா முடாப்புளி காய்ச்சி வைத்திருப்பார். எங்களுக்கும் குவளைகளில் ஊற்றித் தருவார். நாங்கள் குடிக்க மறுத்து விட்டால் "இதன் கருரசத்தைக் குடித்துப் பார்த்தால்தானே தெரியும்.." என்பார்;. "பிள்ளைகள் முகத்தைச் சுளிக்கிறார்கள் என்றால் விளங்க வேண்டுமே.." என்ற கேலிப் புன்னகையோடு வாப்பா அவரையே பார்த்தபடி சொல்லுவார். இன்னொன்றில் நாட்பட நாட்படத் தின்பதற்காகப் பலகாரம் வைக்கப்பட்டிருக்கும். முடாப்பானைப் பணியாரம் ஆறு வருஷத்துக்குக் கூடக் கெடாது. இங்குதான் எனக்கு வேலை இருக்கிறது. உம்மாவை எப்படியாவது தன்வசப்படுத்தி ஐந்தாறைக் கறந்து விடுவேன்..

மருமகள் எப்படி இருக்க வேண்டுமென்றும் மகன் திருமணத்தை எப்படியெல்லாம் விமரிசையாக நடத்த வேண்டும் எனவும் கனவு கண்டு வைத்திருந்ததற்கு அர்த்தமாக முதலில் பலகாரப் பெட்டிதான் பரிமாற்றம் நிகழும். வைக்கோல் பரப்பிப் பாதுகாப்பாக வண்டியில் கொண்டுவந்து சேர்த்த பலகாரங்கள் நெகு நெகுவென்று பிரகாசிக்கும். பதினேழு பட்டுப் பலகாரம் செப்பாகக் கட்ட வேண்டும். ஒரு வரிசை குறைந்து விட்டால் பதறிக் கொண்டு புருஷனிடம் சொல்ல அங்கு மகுறம்தான்...

கொஞ்ச நாள் பலகாரக் கதை கேட்பதில் எனக்கு அலாதிப் பிரியம். பாட்டியிடம் போனால் அவர் வசம் இருக்கும், ஓர் இரவில் பலகாரம் சுடுகின்றநேரம் படலை வழியே ஒரு பேயின் கை நீண்டு வந்தபோது அதில் கொதித்த எண்ணெய்யை ஊற்றிவிட அது "ஆய் ஊய்.." என்று கத்திக் கத்தி ஓடியதாக ஒரே கதையைப் பலமுறை சொல்லி மனதில் பதிய வைத்திருக்கிறார். அவருக்குத் தெரிந்த பணியார வகைகளை வாய்ப்பாடாக்கி அடுக்கு மொழியில் சொல்லுவார். எண்ணெய் பணியாரம், குழல் பணியாரம், பயற்றம் பணியாரம், சீப்புப் பணியாரம், குலுக்கச்சி, வளையல், கற்கண்டு, கொண்டை, கொளுக்கு, அச்சு இதில் சவ்வுப் பணியாரம் இதனைச் சிலர் நேர்ச்சைப் பணியாரம் என்றும் அழைப்பர். ஒரு பின்னேரப் பொழுதில் பன் தட்டொன்றில் வெள்ளைத் துணியால் போர்த்தி மேலே மருதோன்றிப் பூ மற்றும் துளிர் வைத்து உம்மா தந்த கையோடு அல்லசல் வீடுகளுக்குச் சுமந்து போய்க் கொடுப்பேன். எண்ணெய் இல்லாத செம்பட்டை முடியை மறைத்தும் மறைக்காமல் வட்டக் கட்டமாகக் கட்டியிருந்த தோழிகள் தட்டினை வாங்கிக் கொள்ளும்போது நாளைய விளையாட்டைப் பற்றிக் கதைத்துக் கொள்வோம்...

"கிட்ட நெருங்கி உட்காந்திரு கொஞ்சம் ஏமாந்தீங்கன்னாலும் பூனகீன கவ்விக்கிட்டு போயிடும்.." பணியாரத்தை இறக்கி ஓர் ஓலைப் பெட்டியில் போடுகின்றபோது மூத்தம்மா என்னிடம் கேட்டுக் கொள்வார்; பணியாரம் பொரிக்கின்ற சட்டிக்குள் முக்கால் வாசி உயரத்துக்கு எண்ணெய் ஊற்ற வேண்டும்; அப்போதுதான் நன்றாகப் பொங்கி எழும். பணியாரத்தின் அழகே பொங்குவதுதான். அப்படிச் சுடுகின்ற கல் பணியாரம் செங்காந்தள் நிறமாக ஒளிரும். ஒன்றை எடுத்து முழுமையாக உண்டால் இரண்டு நாளைக்குப் பசிக்காது. அதன் மேல் தோல் மிகவும் மெருதுவானது. முதலில் அந்தத் படலத்தை உரித்துச் சாப்பிடும்போது இந்த லெக்கெல்லாம் மணக்கும்., அது பொரியும்போது கேட்கின்ற சிலுசிலுப்புச் சத்தம் இனிமையான ஓர் இசையாகிப் பரவியது. இதைத்தான் என் கிராமத்தவர்கள், "சிலுசிலுப்பை விடப் பலகாரம்தான் முக்கியம்" என்பார்கள்..

நீர் வற்றிய குளத்தில் நிலம் பாளம் பாளமாய் வெடித்திருப்பதுபோல் பனங்காய் பணியாரம் அழகு. காலையில் எழுந்து டயர் செருப்பை மாட்டி "டடப் டடப்" பென்று அடித்துச் சத்தம் வரப் பனம்பழம் பொறுக்கி நீரில் ஊறவிட்டுத் தலை வாருவதுபோல் கையால் கோரிப் பனங்காய் பாணியில் சுட்டெடுக்கும் பலகாரம் வேறு ஒரு மணம்தான்; வாடா என்ற அழைப்புச் சொல்லாகி நடுவில் ஓர் ஓட்டையோடு உள்ளே சின்னச் சின்னத் தும்பு நாவில் உராயும் வண்ணம் இப்போது அழியாமல் எங்காவது அதன் தடம் இருக்குமா என்று தினந் தினமும் தேடிக் கொண்டிருக்கின்றேன்..

வீட்டு வாசலிலிருந்து மரத்தடியில் கிடந்த சாக்குக் கட்டிலில் போர்வை போர்த்தியபடி உட்க்கார்ந்திருக்கும் மூத்தப்பா நாட்டுக் கவியென்றால் மலை உச்சியிலிருந்து குண்டாங் கல்லை உருட்டி விட்டதுபோல் பாடத் தொடங்குவார் பெருநாள் காலங்களில் முறுக்கு, புல்லாடை, சோவி, சீனிமா, தொதல், மஸ்கட் என்று தீன் பண்டங்கள் செய்வார்கள்; நெய் பணியாரம் மணமோ மணம்; மஸ்கட்டின் ஒரு துண்டு அவர் பொக்கு வாய்க்குள் புகுந்ததும்...

"பணியாரம் என்று சொல்லி /இந்தப் பல்லுழுந்த கிழவனுக்கு / அநியாயம் ஆனதுவோ ஆவங்க ஒன்னுதில்ல..." "சோவி முறுக்குச் /சுளகுப் பலகாரம் /ஆவி பிரியுமட்டும் /அவலுங்கா என் ஆகாரம்.." "சோறு கறி தேவையில்லை /என்ட சோத்தும்மா கை பட்டா / ஆறு கறிபோல /அவட அச்சுப் பணியாரம்.." நேத்தோட இருபத்தெட்டு /நேர்ந்து சுட்ட பணியாரம் /காத்தோட மணக்குதுகா /கலந்தர்ர காட்டுக்க.." "குழந்தம்மா கபுரடிக்குக் / கொண்டு போக நினைச்சிருந்த /மொளநெல்லுப் பலகாரம் /மொடாக்குள்ளே கிடக்குதுகா.." "சண்டியனார் சருவுப்புள்ள /சாகு மட்டும் திண்டதுகா/மண்டலமே உண்டதுகா /உண்ட மனம் மகிழும் பணியாரம்.." "புலவரும் பூம்புகாரில் /புறந்தவரும் வாயூறத் / திலகரும் திண்டதுகா தெவிட்டாத பலகாரம்.." இப்படி அவர் தன்னை இழக்கின்றபோது அதற்குள் அங்கு பலரும் கூடிவிடுவர்..

திருமண வைபவங்களில் பந்தல் கால்களில் கட்டப்பட்டிருக்கும் இளநீர் குலை மாப்பிள்ளை வாசலில் மிதிக்கின்றவேளை சடாரென்று வெட்டப்படும். அவர் திணுக்குற்ற பதட்டமுடன் வீட்டுப் படியில் காலெடுத்து வைக்கும்போது பலகாரங்கள் சொரிவார்கள். கூடி நிற்கும் சிறுவர்கள் பெரும் ஆரவாரத்துடன் அவற்றைப் பொறுக்கிக் கொண்டு ஓடுவார்கள்..

திருமணமாகி ஒரு வருஷமாச்சு. காக்கா பொண்டி வாயும் வயிறுமாக இருந்தா கொழுக்கட்ட, காட்டுக் காம்பு மாவு, பலகாரம் பழமென்று கட்டிக்கொண்டு போக உம்மா பிடிவாதமா இருப்பா. அதிலும் பிள்ளைக் கொழுக்கட்ட சுடுவதற்கு மாபெரிய ஆயத்தங்கள் நடக்கும். பச்சரிசு இடித்துக் கொழித்து ஒரு கல்மண்ணும் சேராது பக்குவமாக நீர்த்தி நீர்த்தி மாவைப் பிசைகின்றபோது ஒரு தலைமயிர் கூட விழுந்து விடக் கூடாது என்ற தூய்மை அவரிடம் நிறைந்திருந்தது. போட்ட முக்காடு, வேலை முடியும்வரை சரியாமலே தலையோடு அப்பியிருக்கும். வண்டு கட்டி வெண்ணிறமாய் அவியும். பெரிய கொழுக்கட்டைக்குள் சிறியதாய் ஒன்றைப் பண்ணிப் பிள்ளைக் கொழுக்கட்ட என்ற பெயரில் அதன் வயிற்றின் உள்ளே வைத்துச் சுட்டிருப்பார் அது தாயும் பிள்ளையும்போல் சேர்ந்திருக்கும்.. இப்ப மாதிரி அந்நாளில் கார்கள் அதிகமாக இல்லை; வாப்பா "ஒரு கார் ஏற்பாடு பண்ணட்டுமா.." என்று கேட்டதற்கு "நம்ம மரைக்கார்ர வில்லுக் கரத்தை போது"மென்று உம்மா கராறாகச் சொல்லி விடுவார்; எனது மடியில் இதர பொருட்கள்; கொழுக்கட்டப் பெட்டி மறுபக்கம். அதற்குள் கை நிறைந்த பூணாரங்கள் அணிந்து வில் வண்டிக்குள் உம்மா சிரிப்போடு அமர்ந்திருப்பார். சின்னப்புள்ள மாதிரி வண்டி மறைகின்ற வரையிலும் வாப்பா பார்த்துக்கொண்டு நிற்பார். நான் கையை ஆட்டிக்கிட்டே போவேன். இருட்டாகிப் போனால் அன்று ராத்திரி காக்கா பொண்டி வீட்டில் தங்கித்தான் புறப்படுவோம்.

கடதாசி விலை அதிகரிப்பால்

# நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள உள்ளூர் அலைநெளிவுள்ள கொள்கலன் தொழிற்துறை

சர்வதேச சந்தையில் சகல வகையான கடதாசிகளின் விலைகளும் பெருமளவு அதிகரித்துச் செல்கின்றமையால், இலங்கையின் அலைநெளிவுள்ள கொள்கலன் உற்பத்தித் தொழிற்துறை அதிக நெருக்கடிக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் சர்வதேச சந்தையில் சகல விதமான கடதாசிகளின் விலை அதிகரித்து வரும் நிலையில், உள்நாட்டைச் சேர்ந்த பல அலைநெளிவுள்ள மற்றும் கடதாசிப் பெட்டி உற்பத்தியாளர்கள் வரலாற்றில் இதுவரை எதிர்நோக்கியிராத நெருக்கடி நிறைந்த சூழலுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், விலை அதிகரிப்பு தொடர்ந்தும் அதிகரித்து செல்வதுடன், விரைவில் விலையில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான எவ்வித தோற்றப்பாடுகளையும் அவதானிக்க முடியாமலுள்ளதாக லங்கா அலைநெளிவுள்ள கொள்கலன் உற்பத்தியாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. பல்வேறு மூலங்களின் எதிர்வுகூறல்களின் பிரகாரம், அடுத்து வரும் வாரங்களிலும், *Brown kraftliner* மற்றும் *testliner* அடங்கலான *brown* மீள் சுழற்சிக்குட்படுத்தப்பட்ட தரங்கள் மற்றும் அலைநெளிவுள்ள மத்தியளவு கடதாசிகளின் விலை தொடர்ந்தும் அதிகரிக்கும் என்பது மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களில், உறுதியான விலை இன்மை காரணமாக இலங்கையில் 50 சதவீதத்துக்கும் அதிகமாக விலைகள் அதிகரித்துள்ளதுடன், சம்பந்தப்பட்ட பிரதான பங்காளர்களின் போதியளவு உதவி மற்றும் ஈடுபாடு கிடைக்காவிடின் இந்நிலை மேலும் மோசமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொற்றுப் பரவலுடனான சூழ்நிலையில் கடதாசிக்கு பெருமளவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை மற்றும் சரக்கேற்றல் கட்டணங்கள் பெருமளவு அதிகரித்துள்ளமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆண்டின் முற்பகுதியிலிருந்து சீனாவில் சகல விதமான மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடிய கழிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், உள்நாட்டின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அதிகளவு கேள்வி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, சீனாவின் கடதாசி ஆலைகள் கடதாசி தயாரிப்புக்காக இவ்வளவு காலமும் பயன்படுத்திய மீள்சுழற்சிக்குட்படுத்திய *brown pulp* மற்றும் *unbleached Kraft linerboard* ஆகியவற்றுக்கு பதிலாக *pulp* அல்லது *fiber* மூலத்தை பயன்படுத்தி கடதாசியை தயாரிக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் கொள்கலன்கள் ஏனைய நாடுகளின் தயாரிப்புகளுடன் ஒப்பிடுகையில், உயர் தரம் வாய்ந்தனவாக அமைந்துள்ளன.

# அதிசிறந்த Cloud கணினியியல் விருதுகளை வென்ற FINAP




மென்பொருள் தீர்வுகளை வழங்குவதில் முன்னோடி நிறுவனமான பின்டெக்னொலொஜி ஏஷியா பசுபிக் லங்கா (தனியார்) நிறுவனம் (FINAP) NBQSA 2020 தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விருது வழங்கும் விழாவில் *ECOru*மைய வங்கியியல் மற்றும் நிதித் தீர்வுகளுக்காக வர்த்தகச் சேவைகள் பிரிவின் சிறந்த நிதி மற்றும் கணக்கியல் தீர்வுக்கான தங்கப்பதக்க விருதையும் ஊடூரன கணினியியலின் புத்தாக்கத்துடன் கூடிய அதிசிறந்த தீர்வுக்கான விருதையும் வென்று சாதனை படைத்துள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இவ்விழாவில் இலங்கையின் மென்பொருள் தீர்வுகள் நிறுவனங்களின் அதிசிறந்த உற்பத்திகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. விருது வென்ற சகல நிறுவனங்களும் சர்வதேச மட்டத்திலான போட்டித்தன்மையுடன் கூடிய உயர் தரத்திலான மென்பொருள் தீர்வுகளையும் உற்பத்திகளையும் சமர்ப்பித்திருந்தன.

*ECOru* என்பது சந்தையிலுள்ள உயர் தொழில்நுட்பத்திலான மைய வங்கியியல் கட்டமைப்பாகும். அது திறந்த வங்கியியலில், அளவுருவில், வங்கித் தகவல்களை ஒருங்கிணைப்பதில் மற்றும் ஆய்வுச் சாதனங்களில் இதர போட்டி நிறுவனங்களுடன் பிரிந்து தனித்து நிற்கின்றது.

*ECOru* உயர்தரம் தொடர்பான பொறுப்புடன் கூடியதாக நிகழ்நேரத்தில் காணப்படுகின்ற ஆகச்சிறந்த வங்கியியல் மற்றும் நிதியியல் தீர்வாகும். அது நிதிச்சேவை ஆக்கங்களுக்கு நிலையுறுதியினை வழங்குவதற்கு பெரும் பங்காற்றுகின்றது.

# இலங்கையில் F19 PRO வை அறிமுகப்படுத்தியது OPPO

புதுமையான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் அணியும் சாதனங்களின் முன்னோடியான *OPPO*, தனது அதிநவீன *F* தொடர் சாதனமான *F 19 Pro* கையடக்கத் தொலைபேசியை மார்ச் 15, 2021 அன்று அறிமுகப்படுத்தியது. இக்கையடக்கத் தொலைபேசியின் பல்வேறு புதுமையான மேம்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமது படைப்பாற்றல்கள் கொண்ட கதைகளை சொல்ல சக்திவாய்ந்த கருவியைத் தேடும் படைப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான எல்லையற்ற வீடியோ பதிவு ஆற்றலை இது கொண்டுள்ளது.



இவ்வெளியீட்டு நிகழ்வு, *'F19 PRO STYLISH LAUNCH NIGHT'* (*'F19 PRO* ஸ்டைலான அறிமுக இரவு) எனும் எண்ணக்கருவில் இடம்பெற்றதோடு, *OPPO* ஶ்ரீ லங்காவின் உத்தியோகபூர்வ சமூக வலைத்தள பக்கங்கள் வழியாக நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்தது. நாடு முழுவதிலுமிருந்து சுமார் ஆயிரக் கணக்கான இரசிகர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் பாரிய பங்களிப்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வு, ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றது.

*OPPO* தரக்குறியீட்டின் தூதுவரான, *TheVoice* பயிற்சியாளரும், விருது பெற்ற பாடகருமான உமாரியா சின்ஹவம்ச மற்றும் நடன இயக்குனர் ரமோத் மாலக, தடகள வீரரும், உடற்பயிற்சியாளருமான சூரி மற்றும் பாடகரும், நடிகருமான கயான் குணவர்தன உள்ளிட்ட பல பிரபலங்கள் மற்றும் ஒன்லைன் பிரபலங்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இப்புதிய புரட்சிகர கையடக்கத் தொலைபேசியில் *48MP* பிரதான கெமரா, *8MP* அல்ட்ரா வைட்ஆங்கிள் கெமரா, *2MP* மெக்ரோ கெமரா, *2MP* மொனோ கெமரா ஆகிய 4 கெமராக்களும் இணைந்து உருவாக்கும் குவாட் கெமரா தொகுதியானது, மதிப்பிட முடியாத புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வழங்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

இந்த வசதியின் மூலம் சிறந்த வண்ண ஆழம், உயர் தெளிவை பெற முடிவதோடு, பயனர்கள் விளையாட்டிற்காக எப்போதும் தயாராக இருப்பதை உறுதிப்படுத்துகிறது. இன்ஸ்டாகிராம் செல்பிக்களுக்காக எப்போதும் தயார் நிலையிலுள்ள *32MP* முன்பக்க கெமராவையும் இது கொண்டுள்ளது.

# வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.3பில்லியனை பதிவு செய்துள்ள செலான் வங்கி

மிகுந்த சவால்கள் நிறைந்த சூழ்நிலைகளின் பின்னணியிலும் செலான் வங்கியானது 2020 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் வரிக்குப் பின்னரான இலாபமாக (*PAT*) ரூபா 3 பில்லியனை பதிவு செய்துள்ளது.

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வங்கியின் வட்டி வருமானம் ரூபா 52.3 பில்லியனாக உயர்ந்த மட்டத்தில் காணப்பட்ட அதேநேரத்தில் வட்டிச் செலவுகள் 32.8 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது. இது, 4.6% வருடாந்த அதிகரிப்புடன் ரூபா 19.5 பில்லியனாக பதிவுசெய்யப்பட்ட வங்கியின் தேறிய வட்டி வருமானத்தை (*NII*) பிரதிபலிப்பதாக இது காணப்பட்டது. இவ்வருடத்தில் ரூபா 41.7 பில்லியன் வட்டி வருமானங்களை உழைத்துத் தந்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடரானது தேறிய வட்டி வருமானத்திற்கு பிரதான பங்களிப்பை வழங்கியது. அதேவேளை, திறைசேரி நடவடிக்கைகள் ரூபா 8.5 பில்லியன் வட்டி வருமானத்தை பெற்றுத் தந்தது. வைப்புக்கள் மீதான வட்டிச் செலவுகள் ரூபா 27.8 பில்லியனாக காணப்பட்டது. இதன்மூலம் முன்னைய வருடத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 30.7 பில்லியனில் வீழ்ச்சியொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. வங்கி தனது நிதியிடல் செலவுகளைக் குறைப்பதற்கு, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் மீள்விலையிடப்பட்ட வைப்புக்கள் உதவி புரிந்தன.





2019ஆம் நிதியாண்டில் 4.20% ஆக பதிவு செய்யப்பட்ட வங்கியின் தேறிய வட்டி எல்லை (*NIM*) 2020 இல் 3.95% ஆக குறைவடைந்துள்ளது. வைப்புக்களை விட விரைவான ஒரு வீதத்தில் கடனேடு மீள் விலையிடப்பட்டமையே இதற்குக் காரணமாகும். அத்துடன், குறைந்த கிரய வைப்புக்களில் இருந்து ஏற்பட்ட சாதகமான தாக்கத்தை ஈடுசெய்வதாகவும் இது அமைந்துள்ளது. தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் ரூபா 4.2 பில்லியனில் இருந்து ரூபா 3.7 பில்லியனாக குறைவடைந்து, ஆண்டுக்குஆண்டு அடிப்படையில் 11.89% வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

# கொவிட் 19இலிருந்து பயணிகளைப் பாதுகாக்க விதிமுறைகளை பின்பற்றும் கங்காரு கெப்ஸ்


இலங்கையின் முன்னணி வாடகை வாகன சேவை வழங்குனர்களும் கடந்த 33 ஆண்டுகளாக, இலங்கையின் இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களின் பெரும் நம்பிக்கையையும் பெற்றுள்ள நிறுவனமான கங்காரு கெப்ஸ் பிரைவேட் லிமிட்டட் நிறுவனமானது, கொவிட் 19 பரவலில் இருந்து தனது வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக சில முக்கியமான விதிமுறைகளை அமல்படுத்தியுள்ளது.

சௌனிடைசர் வழங்குவது, தொடுகை அற்ற உடல் வெப்பமானி பயன்பாடு மற்றும் கங்காரு கெப்ஸுடன் பதிவு செய்துள்ள ஒவ்வொரு சாரதிக்கும் முகக் கவசம் வழங்குவது என்பன இவற்றுள் அடங்கும். கங்காரு கெப்ஸின் அனைத்துச் சாரதிகளும் அனைத்து வாடிக்கையாளர்களினது பாதுகாப்பு குறித்து அவதானமாக இருக்குமாறும் சுகாதார வழிமுறைகளை முழுமையாகப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



தமது ஒவ்வொரு பயணத்தின் போதும் வாடிக்கையாளர்களது உடல் வெப்பநிலை அளவிடப்படுவதோடு சௌனிடைசரும் வழங்கப்படும். பயணம் நிறைவடைந்த பின்னர்,வாகனம் சௌனிடைசரால் சுத்தப்படுத்தப்படுவதன் மூலம் அடுத்த பயணத்தின்போது பயணிக்கும் பயணிகளினதும் சாரதியினதும் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. முழுப் பயணத்தின் போதும் சாரதிகள் முகக் கவசம் அணிந்திருக்குமாறும் சுகாதார வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் பாதுகாப்பு விதிமுறைகளும் கங்காரு கெப்ஸ் நிறுவனத்தின் உச்சபட்ச முக்கியத்துவம் பெற்றிருப்பதால், தமது ஆரோக்கியத்தில் கரிசனையுள்ள அனைத்து வாடிக்கையாளர்களையும் தமது பயணத் தேவைகளுக்காக கங்காரு கெப்ஸ் நிறுவனத்தை அணுகுமாறு கங்காரு கெப்ஸ் (0112 588588) நிறுவனத்தின் முகாமைத்துவம் கேட்டுக்கொள்கிறது.

# DPMC இன் புதிய வேலைத்தளம் மாத்தறையில் திறப்பு



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் அண்மையில் *DPMC* மாத்தறை வேலைத்தளத்தை அண்மையில் திறந்து வைத்ததுடன், மேல் மாகாணத்துக்கு வெளியே கம்பனியால் செயற்படுத்தப்படும் முதலாவது வாகன சேவை நிலையமாக இது அமைந்துள்ளது.

மாத்தறை நகரத்துக்கு மிகவும் அண்மையில் காலி வீதி, தலரம்ப, கம்புறுகமுவ என்ற பகுதியில் அமைந்துள்ள இந்த வேலைத்தளத்தின் ஊடாக அனைத்து பஜாஜ், மோட்டார் சைக்கிள்களுக்கான பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மற்றும் அனைத்து ரக வாகனங்களையும் கழுவுதல், விரவான ஆய்வு போன்ற சேவைகள் மேற்கொள்ளப்படும்.

மடபாத்த, பிலியந்தலை ஆகிய பகுதிகளில் *DPMC* இதுபோன்ற வேலைத்தளங்களை செயற்படுத்துகிறது.

புதிய வேலைத்தளம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த *DPMC* இன் பிராந்திய முகாமையாளர் (கள சேவைகள்) திரு.சன்ன ரவணக்க குறிப்பிடுகையில், “பஜாஜ் வாகனங்களுக்கு விற்பனைக்குப் பின்னரான சேவை மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை உயர்ந்த மட்டத்தில் வழங்குவதில் நாம் தொடர்ந்தும் முதலீடு செய்துள்ளோம். தற்பொழுது காணப்படும் இறக்குமதி கட்டுப்பாட்டு சூழ்நிலையில் காணப்படும் வாகனங்களை பராமரிப்பது மற்றும் சேர்விஸ் செய்வது முக்கியமானதாகும். இதனாலேயே எமது உள்ளக நிபுணர்களின் சேவையை எமது சொந்த வேலைத்தளத்தின் ஊடாக நாட்டின் ஏனைய பகுதிக்கும் விஸ்தரித்துள்ளோம். நாடு முழுவதிலும் அமைக்கப்படவிருக்கும் வேலைத்தளத்துக்கு இது முன்னோடியானதாக அமையும் என நம்புகின்றோம்” என்றார்.

இந்த வளாகத்தில் அமைந்துள் பஜாஜ் அசல் உதிரிப்பாக காட்சியறை மற்றும், பதிவு செய்யப்பட்ட வாகனங்களை விற்பனை செய்தல் அல்லது மாற்றீடு செய்வதற்கான ரியசக்வல கிளை என்பவற்றின் ஊடாகவும் வாடிக்கையாளர்கள் சிறந்த சேவையைப் பெறமுடியும்.

# பாதுகாப்பாக வாகனம் செலுத்துவதை கற்றுத்தரும் Stafford Motors , ProRide இன் புதிய முயற்சி



இலங்கையின் முன்னணி ஒட்டோமோட்டிவ் விற்பனையாளரும், ஹொண்டாவின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு பிரதிநிதியுமான *StaffordMotors*, அதன் புத்தாக்க கல்விசார் முயற்சியான *'ProRide Safety Riding Academy'* ஐ 2020 செப்டம்பர் மாத ஆரம்பத்தில், முன்னாள் ஓட்டப் பந்தய ஜாம்பவானான பெரோஸ் ஓமரிற்கு சொந்தமான *ProRide (Pvt) Ltd* நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியாக ஆரம்பித்துள்ளது.

“வாகனம் ஓட்டுவதற்கு கற்றுக்கொள்வது ஒரு புதிதாக ஆரம்பிப்பவருக்கு எளிதான காரியமாக இருக்காது. அனுபவமிக்க பயிற்றுநர்களின் மேற்பார்வை ஆரம்பத்தில் அவசியமானதாகும்.

எங்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட பயிற்றுநர்கள் மற்றும் செயல்முறை விளக்கமானது இந்த பணியை மேம்பட்ட நவீன பயிற்சி நிகழ்ச்சிகளுடன் வழங்குவதுடன், அவை எந்த அளவிலான அனுபவம் கொண்ட அனைத்து ஓட்டுநருக்கும் பொருந்தும்.

வகுப்பறை பயிற்சியானது வீதி சமிக்ஞைகள் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைக் கற்றுக்கொள்ள தேவையான படிப்பினைகளை வழங்கும்” என்று பெரோஸ் உமர் ஆரம்ப விழாவில் தெரிவித்தார்.

இலங்கையில் பாதுகாப்பாக வாகனம் செலுத்துதலை ஊக்குவிக்கும் நோக்கத்தின் கீழ் இந்த திட்டம் தொடங்கப்பட்டதுடன், உயர் தரமான பயிற்சியின் மூலம் சரியான வாகன செலுத்தல் உத்திகளைப் பயன்படுத்தி ஹொண்டா உலகளாவிய பாதுகாப்பு கொள்கையான “அனைவருக்கும் பாதுகாப்பு” ஐப் பின்பற்றி தொடங்கப்பட்டது.

இதன் மூலம், இலங்கையின் இரு சக்கர வாகன ஓட்டுநர்களின் வாகனம் செலுத்தும் தரத்தை உயர்த்துவதில் *'ProRide Safety Riding Academy'* நிறுவப்படுவது முக்கியமானதாக இருப்பதுடன் வீதி பாதுகாப்பு மற்றும் அனைத்து வாகன ஓட்டுநர்களின் மனதிலும் அவர்களின் இளவயதிலேயே பொறுப்பாக வாகனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஏற்படுத்தும். இந்த கல்விசார் முயற்சியானது, உலகளாவிய வர்த்தகநாமமான ஹொண்டாவின் இணைப்பினால் இலங்கையில் இருசக்கர வாகனங்களின் சந்தையில் முன்னணி நிறுவனம் என்ற வகையில் *Stafford*இன் பலத்தாலும், ஓட்டப்பந்தயத்தில் தொலைநோக்கு பார்வை கொண்ட பெரோஸ் ஓமரின் வழிகாட்டல் மற்றும் தேர்ந்த பயிற்சியாளர்களின் நிபுணத்துவம் மற்றும் அவர்கள் ஹொண்டா தாய்லாந்தில் இருந்து பெறப்பட்ட விசேட பயிற்சி ஆகியவற்றின் பலத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது.

# வாரபலன்

21.03.2021 - 27.03.2021



கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

உங்கள் ராசிக்கு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். மார்ச் 25ஆம் திகதி அவர் மீனராசிக்கு செல்கின்றார். அது அவருக்கு நீச வீடாகும். வலிமையிழந்த புதனால் உங்களுக்கு நன்மை கிடைக்க போகின்றது. அவர் நீசம் பெறும் பொழுது, தடைபட்ட காரியங்கள் தானாக நடைபெறும். இடையில் உள்ளவர்களால் ஏற்பட்ட உள்ளவர்களால் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். பகை விலகும். பணிபுரியும் இடத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 24,25

## ரிஷபம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. தன பஞ்சமாதிபதியான புதன் நீசம் பெறுவதால் பணப்பற்றாக்குறை ஏற்படும் . பாகப்பிரிவினை இழுப்பறியாகும். உறவினர்கள் உதாசீனப்படுத்துவர். கடன்சுமை தீர்த்தாலும், புதிய கடன்களும் உருவாகும். கல்விக்காக எடுத்த முயற்சியில் சில தடைகள் ஏற்படும். உடன்பிறப்புக்கள் உங்களை விட்டு விலகுவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் தொல்லை ஏற்படும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 22,23,27

## மிதுனம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. ராசிநாதன் மற்றும் சக ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் நீசம் பெறுவதால், ஆரோக்கியத்தொல்லை அதிகரிக்கும். "குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு மருத்துவ செலவுகளும், மனக்கலக்கமும் ஏற்படுகின்றதே" என்று கவலைப்படுவீர்கள். எந்த ஒரு காரியமும் மற்றவர்களை நம்பிச் செய்ய இயலாது.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 23,24.

## கடகம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். அவர் அங்கு நீசம் பெறுகின்றார்.உங்கள் ராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். விரயாதிபதி நீசம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். விரயத்திற்கு ஏற்ப பணம் வந்துகொண்டே இருக்கும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புக்கள் மாறும். பூர்வீக சொத்துக்களை பங்கிட்டுக் கொள்வதில் இருந்த தடை அகலும். வழக்குகள் சாதகமாகும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 21,26,27

## சிம்மம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச வீடாகும். உங்கள் ராசிக்கு தன லாபாதிபதியாக விளங்கும் புதன் நீசம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தடை வரலாம். சூரியனோடு புதன் சேர்ந்து " புத ஆதித்ய யோகம்" உருவாவதால் அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் தேடிவரும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 22,23

## கன்னி

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச வீடாகும். எனவே கூடுதல் கவனத்தோடு நீங்கள் செயல்பட வேண்டிய நேரம் இது. ராசிநாதன் வலிமையிழக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் தோன்றும். அதிக விரயங்கள் ஏற்படும் யாரையும் நம்பி எதையும் செய்ய இயலாது. குலதெய்வ வழிபாடும், இஷ்ட தெய்வ வழிபாடும் துன்பத்தை விரட்டும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 24,25

## துலாம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச வீடாகும். 12 க்கு அதிபதி நீசம் பெறுவது யோகம் தான். " கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பர். எனவே திட்டமிடாமல் செய்யும் காரியங்களும் வெற்றி பெறும். திடீர் தனவரவு உண்டாகும்.தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவார்கள். உத்தியோகத்தில் மாறுபட்ட சலுகைகள் கிடைக்கும். சம்பள உயர்வு திருப்தி தரும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 21,23,26,27

## விருச்சிகம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச வீடாகும். அஷ்டம லாபாதிபதியானவர் புதன். அஷ்டமாதிபதி நீசம் பெறுவது நன்மை தான். செலவுக்கேற்ப வரவு வந்து கொண்டே இருக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள், உங்களுக்கு பல விதங்களிலும் உதவிகளை செய்வர். தடைபட்ட காரியங்கள் நடந்தேறும் மாமன், மைத்துனர் வழியில் மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 23,24,25

## தனுசு

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச வீடாகும். உங்கள் ராசிக்கு 7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் நீசம் பெறுவது நன்மை தான். கல்யாண வாய்ப்புக்கள் கைகூடலாம். கடமையில் இருந்த தொய்வு அகலும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் இணைவதால், பொருளாதாரநிலை உயரும். "புத ஆதித்யா யோகம் " இருப்பதால் கல்வி முன்னேற்றம் உண்டு. கொடுக்கல்வாங்கல்களில் இருந்த குழப்பங்கள் தீர, முக்கியஸ்தர்களின் ஆலோசனை கைகொடுக்கும்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 26,27

## மகரம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச வீடாகும். உங்கள் ராசிக்கு 6,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் நீசம் பெறும் இந்த நேரத்தில் நல்ல வாய்ப்புக்களும் வரலாம். அதே நேரத்தில் நீசம் பெறும் புதன் 6 க்கு அதிபதியாக இருப்பதால் நீண்ட நாள் நோய்க்கு நிவாரணம் கிடைக்கும். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் வரலாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களால் அதிஷ்ட வாய்ப்புக்கள் வரப்போகின்றது.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 27

## கும்பம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச வீடாகும். உங்கள் ராசிக்கு 5,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். பஞ்சமாதிபதி நீசம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். சொந்தங்களின் மூலம் சில பிரச்சினைகள் வரலாம். முக்கியப் பணி ஒன்றை செய்ய மறந்ததன் விளைவாக முன்னேற்ற தடை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

## மீனம்

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 21

மார்ச் 25 ஆம் திகதி, மீன ராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச வீடாகும். உங்கள் ராசிக்கு 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீசம் பெறுவது யோகம் தான். குறிப்பாக தாய்வழி ஆதரவு உண்டு. குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும், கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பணிபுரியும் இடத்தில மேலதிகாரிகள் உங்களுக்கு வேண்டிய சலுகைகளை கொடுக்க முன்வருவர்.

பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 22,23



# தான்தோன்றிக் கவிராயர் பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராசன்..!



**'தேனாகப் பொன்நிலவு திகழ்கின்ற ஓரிரவில்**
**தெய்வத்துள் தெய்வம், என் தா**
**யானாள் எம் மனைமுற்ற மணல் திருத்தி அன்பொடு தன்**
**அருகணைத் தென் விரலைப் பற்றி**
**'ஆனா' என்றோரெழுத்தை அழித்தழித்தம் மணல் மீது**
**அன்றெழுதப் பயிற்ற, இன்றோ**
**பேனாவைப் பிடித்தெழுதும் உரையெழுத்தும் கவியெழுத்தும்**
**தலையெழுத்தாய்ப் பிழைப்பாய்க் கொண்டேன்**
**நானான போதும் தம் நாளாந்தச் சோற்றுக்கும் ஆடைக்கும்**
**நலிவோர்க்காய்ப் பொருதஎன் வா**
**ளானாளே தமிழ் என்றிங்கன்ப ரெல்லாம் போற்றுகின்ற**
**ஆச்சி உனை முதலில் அடிபணிந்தேன் போற்றி..'**

ஈழத்தில், கிராமங்கள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை இடம்பெற்ற விழாக்களில் ஏராளமான கவியரங்குகளுக்குச் சில்லையூர் செல்வராசன் தலைமை தாங்கியுள்ளார்.

அக்கவியரங்குகளின்போது மேடையில் சில்லையூர் எழுந்து தமிழ் வாழ்த்தாய் தாய் வாழ்த்தாய் மேற்கண்ட பாடலை முதலில் உருகிப் படிப்பார். அவரது கண்கள் கலங்கும். கண்ணீர் ததும்பும். சபையும் அவரோடு சேர்ந்து உருகும் கண் கலங்கும்.

பின்னர் அவருக்கே உரித்தான கணீர் குரல், 'நல்லார் வதிகின்ற யாழ்ப்பாணக் கோடியிலே...' என்று ஓங்கி ஒலிக்கத் தொடங்கும்.



சபை அவர் பின்னாலே போகும். இதனை அன்று கேட்ட, பார்த்த மக்கள், இன்றும் அந்த மக்கள் கவிஞனை கலைஞனை மறந்திருக்கமாட்டார்கள்.

கவியரங்குகளின்போது கவிஞர்களை அறிமுகப்படுத்தும் அவரது பாணி தனித்துவமானது. நகைச்சுவையோடு பொருள் பொதிந்திருக்கும்.

இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சிகளில், இலங்கையிலும் கடல்கடந்து மற்ற நாடுகளிலும் அதிக மக்களால் கேட்கப்பட்டு, பாராட்டுப்பெற்ற நிகழ்ச்சிகளான 'தணியாத தாகம்', 'கோமாளிகள் கும்மாளம்' போன்றவற்றையும், 'அத்தானே.. அத்தானே... ..', 'நல்ல குடும்பம்... ..', 'ஊருக்கொருகிராமியவங்கிவந்ததால்... ..' போன்ற விளம்பரப் பாடல்களையும், 'சின்ன ராணியே... ஓ என் சின்ன ராணியே...' போன்ற துள்ளிசைப் பாடல்களையும், 'கண்மணி ஆடவா...', 'பாதையில் எத்தனை ராதைகள்...' போன்ற சினிமாப் பாடல்களையும் எந்தக் கிராமத்து மக்களும் மறந்திருக்கமாட்டார்கள்.

சில்லையூரின் பன்முகப் பணிகளில், அவரது அரசியல் பாதையை அவர் காலமாகிய பின்னர் எவரும் சரிவரச் சொல்லவில்லை. எனினும் பேராசிரியர் சி. மௌனகுரு ஓரளவு கூறியுள்ளதை ஒலிநாடா ஒன்றில் கேட்க முடிந்தது.

அறுபதுகளின் நடுப்பகுதியில் சர்வதேச ரீதியாகப் பாதிப்பு ஏற்படுத்திய சோவியத் சீனத் தத்துவார்த்த முரண்பாடு காரணமாக இலங்கையிலும் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்டது யாவரும் அறிந்ததே. கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவளித்து வந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் பின்னர் இந்த பிளவு எதிரொலித்தது.

புரட்சிப் பாதையை வலியுறுத்திய, மாஓ பாதையை ஏற்றுக்கொண்ட கட்சி ஆதரவாளர்களான, முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைமைக்குழு உறுப்பினர்களான சில்லையூர் செல்வராசன், கே. டானியல், என். கே. ரகுநாதன், செ. கணேசலிங்கன் போன்றோர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஆற்றல் மிகுந்த பல எழுத்தாளர்கள் இவர்களோடு அணிதிரண்டனர். இளம் படைப்பாளிகளுக்கு இந்தப் பாதையினரே அன்று நம்பிக்கை கொடுப்பவர்களாக மிளிர்ந்தார்கள்..கே. டானியல், சில்லையூர் போன்றோர் மக்கள் செல்வாக்குப் பெற்ற, தனித்துவம் மிக்க படைப்பாளிகளாக மதிக்கப்பட்டனர். இதற்கு அரசியல் அணியும் உறுதுணையாகவிருந்தது.

1966 அக்டோபர் முதல் ஏற்பட்ட 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின்' போராட்ட எழுச்சிக்கு உந்துசக்தியாக இந்தப் படைப்பாளிகள் செயற்பட்டார்கள்.

வடபகுதியெங்கும் அன்று தீண்டாமைக் கொடுமைக்கெதிரான கருத்தரங்குகள் நடைபெற்றன.. இதையொட்டி நடைபெற்ற நிகழ்வுகளில் இடம் பெறும் கவியரங்குகளுக்குச் சில்லையூர் தலைமைதாங்கி எழுச்சியூட்டியதை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.



'தொழிலாளி, தாயகம், வாகை, மக்கள் இலக்கியம்' மற்றும் இலக்கிய சஞ்சிகைகளில் பத்திரிகைகளில் எழுச்சியூட்டும் கவிதைகளை இவர் தொடர்ந்து எழுதினார். புனைபெயரிலும் பல கவிதைகளை அப்போது எழுதியுள்ளார்.

திருமலையில் 'முன்னோடிகள்' இலக்கிய அமைப்பும் மற்றும் சில இலக்கியக் குழுக்களும் ஒன்றிணைந்து நடாத்திய 'புரட்சிகர கலை இலக்கியப் படைப்பாளிகள்' மாநாட்டின் தலைமைக்குழுவில் சில்லையூர் இடம்பெற்று நெறிப்படுத்தினார்.

வடபகுதிக்குச் சில்லையூர் வந்தால் அவரோடு இளங்கவிஞர் குழாமே சுழ்ந்திருக்கும். அவரது அன்புக்குரிய புதுவை இரத்தினதுரை, வி. ரி. இளங்கோவன், நல்லை அமிழ்தன், நந்தினி சேவியர், தேவி பரமலிங்கம், பாசையூர் தேவதாசன், பொன். பொன்ராசா உட்படப் பல கவிஞர்களோடு சில்லையூர் பாட்டும் சர்ச்சையுமாக மகிழ்ந்திருப்பார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஓ) பொதுச்செயலாளர் தோழர் என். சண்முகதாசனோடு சில்லையூர் நெருங்கிப் பழகியவர். கட்சி ஆதரவோடு நடக்கும் கூட்டங்களில் இடம்பெறும் கவியரங்குகளுக்குச் சில்லையூர் தலைமைதாங்கிச் சிறப்பித்தார். கலை இலக்கியக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

மக்கள் எழுத்தாளர் கே. டானியலின் உற்ற தோழர் சில்லையூர் செல்வராசன். தமிழகத்திற்கு மருத்துவ சிகிச்சைக்காகச் செல்லும் பொருட்டு கொழும்பு வந்த டானியலும் நானும் தோழர் சண்முகதாசன் வீட்டில் தங்கியிருந்த பின்னர், தமிழகம் புறப்படுவதற்கு முதல்நாள் (1986 தை 29) இரவு சில்லையூரின் அழைப்பின்பேரில் அவர் வீடு சென்று தங்கினோம்.

காலையில் விமான நிலையம் புறப்படுவதற்கு என 'டாக்சி'யில் ஏறுகையில், 'பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்து வருத்தத்தைக் குணப்படுத்திக்கொண்டு வாங்கோ...' என்று சில்லையூரும் மனைவியும் கூறும்போது, 'வந்து சேர்ந்தாக் கண்டு கொள்ளுங்கோ..' என்று டானியல் கூற, சில்லையூர் கண்கலங்கி திக்கித்து நின்றமை இன்றும் எனக்கு ஞாபகத்திலுண்டு. இது அவர்களின் தோழமை.. நட்பு... பாசம்...

பின்னர் டானியல் திரும்பி வராமலே தஞ்சாவூரில் காலமாகிவிட்டமை அறிந்து சில்லையூர் கவலையில் மூழ்கினார்.

கவிதை, இசைப்பாடல், நாட்டுக் கூத்து, பத்திரிகைத்துறை, விமர்சனம், புனைகதை, ஒலிபரப்பாளர், மேடை வானொலி திரைப்பட, தொலைக்காட்சி எழுத்தாளர், நடிகர், பாடகர், தொடர்புச் சாதன ஆலோசகர், விளம்பரத்துறையாளர் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) எனப் பல்துறையிலும் தனித்துவம் மிக்கவராக மிளிர்ந்தவர் சில்லையூர்.

தமிழ், சிங்களப் படங்களில் மாத்திரமல்ல, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாட்டினர் தயாரித்த ஆங்கிலப் படங்களிலும் அதிக ஊதியம் பெற்று நடித்த ஈழத்தவர் சில்லையூர் தான்..!

அதிக குறுந்திரைப் படங்களைப் பிரதி எழுதித் தயாரித்தவர் இவர். விவசாயம் சம்பந்தமான இவரது 'கமம்' குறும்படம் அன்று பேர்லின் படவிழாவில் பாராட்டுப் பத்திரம் பெற்றது.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் பம்பாய் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இவர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

1988 ல் இந்தியா போபால் நகரில் 'ஆசியக் கவிதை விழா'வில் தமிழ்கூறும் நல்லுலகின் ஒரே தமிழ்ப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

தனது அறிவு ஆற்றலினால் அதிக ஊதியம் பெற்றவர் சில்லையூர். தோழமை நட்பைப் பெரிதும் மதித்தவர். எந்த நேரமும் நண்பர்கள், தோழர்கள் அருகிருந்தால் அவர் மகிழ்ச்சியில் திளைப்பார். அதிக ஊதியம் பெற்றவர் என்றாலும் அவர் விட்டுச் சென்றது விலைமதிக்க முடியாத அவரது படைப்புகள் தான்..!

1933 ம் ஆண்டு சில்லாலையில் பிறந்த சில்லையூர் செல்வராசன் (தான்தோன்றிக் கவிராயர்) அக்டோபர் 1995 ல் கொழும்பில் இயற்கையில் கலந்தார்.

அவரது நண்பர்களால் கொழும்பு கனத்தையில் அவருக்குச் சிலை வைக்கப்பட்டு அவரது கவிதையும் பொறிக்கப்பட்டுள்ளது..

'ஈழத்து தமிழ் நாவல் வளர்ச்சி, தணியாத தாகம் திரைப்படச் சுவடி, ஞானசவுந்தரி (கூத்துப் பிரதித் தொகுப்பு), ஊரடங்கப் பாடல்கள் (கவிதை), ரோமியோ யூலியற், தலைவர்கள் வாழ்க மாதோ (கவிதை), சில்லையூர் செல்வராசன் கவிதைகள் (தொகுதி 1) என்பன இதுவரை வெளிவந்த சில்லையூரின் நூல்களாகும்.. அச்சேறாமல் இன்னும் எத்தனையோ படைப்புகள் அவரிடம் இருந்ததை யான் அறிவேன்.

கௌரவ கலாநிதிப் பட்டம், மக்கள் பணியாளர் மக்கள் எழுத்தாளர் கே. டானியலுக்கு வழங்கப்பட வேண்டும் என முன்னர் யாழ் பல்கலைக்கழக அதிகார வட்டத்திலேயே குரல் எழுப்பப்பட்டதாயினும், அது அமுக்கப்பட்டுவிட்டதாகச் செய்திகள் கசிந்தன. 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு வழங்கப்பட்ட முதுகலைமாணிப் பட்டத்தை அவர் நிராகரித்தமை யாவரும் அறிந்ததே. யார் யாருக்கோ, என்னென்ன தேவைகளுக்காகவோ பட்டங்கள் வழங்கப்படும் இன்றைய உலகில், ஒரு 'பல்கலை வேந்தர்' மக்கள் கலைஞன் சில்லையூர் செல்வராசன் கவனத்துக்குரியவராகத் தென்படாதது வியப்பல்ல.

மக்கள் இதயங்களில் அந்த மகத்தான கவிஞன் கலைஞன் காலங்கடந்தும் நீடு வாழ்வான்..!

வி. ரி. இளங்கோவன்...

# பாடசாலை மாணவிகளுக்கான சுகாதாரத் துவாய்களை வழங்கும் 'தியனிய' திட்டம் நாடெங்கிலும்







பெண்களுக்கு வலுவூட்டும் வகையில் புதிய திட்டமான "தியனிய" அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் சிறுவர் விருத்தி முன்பள்ளிகள் மற்றும் முதன்நிலைக் கல்வி பாடசாலைகள் உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவின் அமைச்சுடன் கைகோர்த்து நாடு முழுவதையும் உள்வாங்கி இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த "தியனிய" திட்டத்தின் பிரதான நோக்கம் சகல பாடசாலை மாணவிகளுக்கும் தமது மாதவிடாய் காலப்பகுதியில் அவசியமாக அமைந்திருக்கும் தூய்மைத் துவாய் தேவையை நிவர்த்தி செய்து கொள்வதற்கு வசதியளிப்பதாக அமைந்துள்ளது. முதற்கட்டமாக 250 பாடசாலைகளை உள்வாங்கி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்பதுடன் அப்பாடசாலைகளுக்கு தூய்மை அலுமாரிகள் வழங்கப்பட்டு அதில் தூய்மைத் துவாய் முகக் கவசங்கள் தொற்றுநீக்கி திரவங்கள் மற்றும் இதர அவசியமான முதலுதவி தயாரிப்புகள் அடங்கியிருக்கும். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு பாடசாலைக்கும் விஜயம் செய்து பெண்கள் மாதவிடாய் காலப்பகுதியில் தூய்மையாக இருக்க வேண்டிய தன் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் முறையாக பயிற்சிகளைப் பெற்ற நிபுணர்களினூடாக முன்னெடுக்கப்பட்டு அதனூடாக இளம் பெண்களுக்கு சிறந்த மாதவிடாய் தூய்மை முறைகளைப் பின்பற்றி அவர்களின் ஒட்டுமொத்த சுகாதாரம் மற்றும் நலனை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்கப்படும். "தியனிய" திட்டத்தில் முக்கிய பங்களிப்பு வழங்கப்படும் என்பதுடன் அரசாங்கத்தின் இலக்கான சகல பாடசாலை மாணவியருக்கும் இலவசமான முறையில் தூய்மை துவாய்களை வழங்கும் திட்டத்துக்கு பங்களிப்பு வழங்கும்.

இந்த "தியனிய" திட்டத்தின் அறிமுக நிகழ்வில் பெண்கள் மற்றும் சிறுவர் விருத்தி முன்பள்ளிகள் மற்றும் முதன்நிலைக் கல்வி பாடசாலைகள் உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா கெப்பிட்டல் மகாராஜா நிறுவனத்தின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுனில் கனோஜியா பெண்கள் மற்றும் சிறுவர் விருத்தி முன்பள்ளிகள் மற்றும் முதன்நிலைக் கல்வி பாடசாலைகள் உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் கே எம் எஸ் டி ஜயசேகர மனித வலு மற்றும் தொழில் வாய்ப்புகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுஷ கோகுல பெர்னான்டோ இலங்கை அரசாங்க மருத்துவ மாதுகளின் சம்மேளனத்தின் தலைவர் தேவிகா கொடிதுவக்கு மற்றும் ICL பிரான்ட்ஸ் பிரைவட் லிமிடெட் சந்தைப்படுத்தல் முகாமையாளர் சேதிகா ராஜபக்ச ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டம் தொடர்பாக பெண்கள் மற்றும் சிறுவர் விருத்தி முன்பள்ளிகள் மற்றும் முதன்நிலைக் கல்வி பாடசாலைகள் உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில் "நாடு முழுவதையும் சேர்ந்த பெண்கள் பாடசாலைகளில் பயிலும் மாணவியருக்கு அவர்களின் மாதவிடாய் தூய்மைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இலவசமாக தூய்மை துவாய்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் "தியனிய" திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2021 சர்வதேச மகளிர் தினத்துடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை காண்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இளம் பெண்களுக்கு போதியளவு அத்தியாவசிய தூய்மை துவாய்களை பெற்றுக் கொள்ள வசதியின்மை காரணமாக பாடசாலைக்கு வருகை தராமல் இருப்பதை அல்லது வாழ்நாளில் முக்கிய வாய்ப்புகளை தவறவிடாமல் இருப்பதை தவிர்க்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்திருக்கும் என நாம் நம்புகின்றோம். இவ்வாறான தூய்மைத் தயாரிப்புகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவதனூடாக அவர்களின் வாழ்க்கையின் சகல அம்சங்களும் மேம்படுத்தப்படும் என்பதுடன் தாம் விரும்பும் விடயங்களில் கவனம் செலுத்துவதற்கான சுதந்திரத்தை அவர்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும்." என்றார்.

கெப்பிட்டல் மகாராஜா நிறுவனத்தின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுனில் கனோஜியா கருத்துத் தெரிவிக்கையில் "சமமான வாய்ப்புகளை வழங்கும் நிறுவனம் எனும் வகையில் பணியிடத்திலும்இசமூகத்திலுமுள்ள பெண்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் நாம் எப்போதும் பங்களிப்புகளை வழங்கியுள்ளோம். Eva கைகோர்த்துள்ள இந்தப் பிந்திய திட்டத்தினூடாக பெண்கள் உரிமைகள் மற்றும் பெண்கள் வலுவூட்டல் ஆகியவற்றில் நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினூடாக குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த இளம் பெண்கள் எதிர்கொள்ளும் தடைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பரிபூரண வழிமுறைகள் பின்பற்றப்படும். பெருமளவு பேசப்படாத விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதனூடாக பெருமளவான பெண்களுக்கு செவிமடுக்கக்கூடியதாக இருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்." என்றார்.

பெண்கள் தூய்மை துவாய் உற்பத்தியில் இலங்கையின் முன்னணி வர்த்தக நாமமான Eva, பெண்களுக்கு வலுவூட்டும் வகையில் இந்தப் புதிய திட்டமான "தியனிய'வை அறிமுகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பி. வீரசிங்கம்

# இலங்கை தமிழ் வானொலிகளின் இன்றைய போக்கு

தெற்காசியாவிலேயே மிகவும் புகழ்பெற்ற வானொலி சேவை இலங்கையில் தான் அன்று இருந்தது. தொலைக்காட்சி ஊடகம் தொடங்கப்படாத காலம் அது. வேறு எந்த கேளிக்கை மோகம் மனதில் படியாத வசந்த காலம் அது. அப்போது தமிழ் ரசிகர்கள் மனங்களில் முழுக்க முழுக்க ஆக்கிரமித்திருந்தது இலங்கை வானொலி ஒன்றுதான்.

குறிப்பாக இலங்கையில் மாத்திரமின்றி தென்தமிழ்நாட்டிலும் இலங்கை வானொலிக்கான ரசிகர்கள் ஏராளம். பொழுது விடிந்தது முதல் பகல் கடந்து, இரவு தூங்கப் போகும் வரை, இலங்கை வானொலியின்; தமிழ்ச்சேவை நிகழ்ச்சியுடன் புத்துணர்ச்சியுடன் ஆரம்பித்த காலங்களும் இருந்தன.

அதன் செய்திகளைக் கேட்டுக் கொண்டே மாணவர்கள் பாடசாலைக்கு தயாரானார்கள். தமிழ்ச்சேவையின் 'பொங்கும் பூம் புனல்' நிகழ்ச்சியில் இனிமையான உள்நாட்டுப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்ட நாட்கள் நினைவை விட்டு நீங்காதவை.

அதாவது காலையில் சுப்ரபாதமாகவும் இரவு தூங்கப்போகும்போது கேட்கும் தாலாட்டாகவும் இருந்தது இலங்கை வானொலிதான். அவர்களது வாழ்க்கையோடு ஒன்றிணைந்து கலந்து வாழ்வின் ஓர் அங்கமாக இருந்தது இலங்கை வானொலி என்பதை மறுக்கவே முடியாது.

எண்ணற்ற மக்களின் தனிமையைப் போக்கும் உற்ற நண்பனாக, அறிவுரை அருளும் ஆசானாக, மகிழ்வூட்டும் பல்வகை நிகழ்ச்சிகளைக் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுக்கும் கலைஞனாக, பன்னாட்டுச் செய்திகளையும், தகவல்களையும், பல்வேறு நிகழ்வுகளையும் உடனுக்குடன் வழங்கும் தெரிவிப்பியல் வல்லுனராக, பல்பொருள்களின் தரத்தையும், திறத்தையும் அறியும் வகையில் எளிய நடையில், இனிய முறையில் எடுத்துச் சொல்லும் பன்முகப் பரிமாணம் மிக்க பல்கலை வித்தகனாக விளங்குவது தான் வானொலி! அதை சரியான முறையில் தனக்கென உரிய பாணியில் வெளிப்படுத்திய பங்கு இலங்கை வானொலியையே(ரேடியோ சிலோன்) சாரும்.

வானொலியின் இன்றியமையாத நோக்கமே மக்களின் மனமகிழ்ச்சிக்கும், உடல் நலத்திற்கும், உள்ள வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும், புத்தெழுச்சிக்கும் பல்வகை நிகழ்ச்சிகளைப் பாங்குடன் வழங்க வேண்டும் என்பது தான். அதேபோல் ஒரு தேசத்தின் குரலாக, நாட்டின் குரலாகச் செயல்படும் ஒப்பற்ற ஊடகமாக இலங்கை வானொலிகள் திகழவேண்டும் என்பது தான் தமிழ் வானொலி இரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.




அரச வானொலிகளில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வானொலி வரலாறு, பின்னரான காலத்தில் தனியார் வானொலிகளும் வரலாற்று களத்தில் இடம்பிடித்திருந்தன.தனியார் வானொலிகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு, 2 தசாப்தங்கள் கடந்துள்ள நிலையிலும், இலங்கையில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலான தமிழ் தனியார் வானொலிகளே காணப்படுகின்றன.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட தனியார் வானொலிகள் பல தங்கள் வர்த்தகத்தை மேம்படுத்துவதே பிரதான நோக்கமாக கொண்டு இன்றளவும் பயணித்து வருகின்றது. ரசிகர்களை கவரும் நோக்கிலான நிகழ்சிகளோ அல்லது சமூகம் சார்ந்த நிகழ்சிகளோ இல்லாமல் வெறும் கேளிக்கை நிகழ்வுகளை மட்டுமே பிரதானமாக கொண்டுள்ளன.

தனியார் வானொலிகள் தங்களுக்குள்ளான வர்த்தக போட்டியை மையமாக கொண்டு இன்று பரிசு என்ற போர்வையில் மக்களுக்கு பணம் கொடுத்து தங்களது வானொலியை கேட்கவைக்கின்றார்கள்.

இலங்கையில் தற்காலத்தில் தனியார் வானொலிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கின்றது இணைய வசதியுடன் ஒரு தொலைபேசி இருந்தால் உடனே ஒரு ஒன்லைன் ரேடியோ உருவாக்கலாம் என்ற வசதி வந்து விட்டது.

எது எப்படியாகினும் எத்தனை வானொலிகள் உருவாகினாலும் மக்களுக்கு சமூகம் சார்ந்த நிகழ்சிகளை வழங்ககூடிய வானொலிக்கான வெற்றிடம் இன்றளவும் காணப்படுகின்றது.

ஒரு காலத்தில் அறிவிப்பாளர்கள் என்றால் சிறந்த குரல்வளம்,சரளமான மொழியாற்றல், படைப்பாற்றல், நகச்சுவை உணர்வு, குரல் கட்டுப்பாடு, மொழி உச்சரிப்பு போன்றனவே பிரதான தகமைகளாக கருதப்பட்டன ஆனால் இன்றைய வானொலி அறிவிப்பாளர்களுக்கான தகுதி ஆங்கிலம் கலந்த தமிழில் பேசுவது, பிறமொழி கலப்புக்களை உச்சரிப்பது,சமூக வலைத்தளங்களில் பதிவுகள் மற்றும் நேரலைகள் செய்வது போன்றனவே இன்றைய அறிவிப்பாளர்களுக்கான பிரதான தகுதிகளாக காணப்படுகின்றன.

மகிழ்வூட்டல், அறிவூட்டல், அறிவுறுத்தல், தெரிவித்தல், விலையாக்கல். ஆகியன வானொலியின் இன்றியமையாத இலக்குகளாகும்.


நீண்ட நேரம் பார்த்தால் கண் வலிக்கும்! பேசினால் வாய் வலிக்கும்! முகர்ந்தால் மூக்கு வலிக்கும்! நடந்தால் கால் வலிக்கும்! எழுதினால் கை வலிக்கும்! ஆனால் எவ்வளவு நேரம் கேட்டாலும், காது வலிக்காது! ஏனெனில் அது வலிமையுடையது. மனிதனின் இரண்டு காதுகளும் இரு வேறு திசைகளை நோக்கி இறைவன் படைத்திருப்பதன் நோக்கமே நல்ல செய்திகளையும், தகவல்களையும், அருளுரைகளையும், இனிய பாடல்களையும், எளிய உரையாடல்களையும் உள்வாங்கி மூளைக் கணினியில் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காகத் தான்!

ஆனால் இன்றைய வானொலிகள் பல பக்கச்சார்பான செய்திகள், மக்களை எரிச்சலூட்டும் நிகழ்சிகள், என்பனவற்றை வழங்குகின்றன அதனைவிடவும் நிகழ்ச்சிகளை விட விளம்பரங்களே இன்று வானொலிகளை அதிகளவு அலங்கரிக்கின்றன.



சிறிமதன்

# மு. புஷ்பராஜன்: குருநகரின் முகவரி



யாழ்ப்பாணத்தில் நான் பழகக் கிடைத்த நண்பர்களில் புஷ்பராஜன் அபூர்வமானவர். அழகான இளைஞனாக அமைதியும் தேடலும் வாசிப்பும் மிக்க இலக்கிய ரசிகனாக புஷ்பராஜனும் நானும் ஏ.ஜே.யுமாக யாழ் ரீகல் தியேட்டருக்கு முன்னால் உள்ள தேநீர்க்கடையில் உரையாடிக் கொண்ட நாட்கள் என் மன அடுக்கில் என்றும் தேங்கிக்கிடப்பவை.

லண்டன் வந்த பிறகும் அந்த நல்ல நண்பரின் இனிய நட்பு நீடித்தது. விமர்சனக்கூட்டங்களில், கலந்துரையாடல்களில், கருத்தரங்குகளில், திரைப்பட நிகழ்வுகளில், ஒன்றுகூடல்களில், கடற்கரைச் சுற்றுலாக்களில், குடும்ப நிகழ்வுகளில் எல்லாம் நண்பராய் நல்ல சகோதரனாய் பழகிய புஷ்பராஜன், லண்டனைவிட்டு, தன் குடும்பத்துடன் இணைந்து வாழ கனடா சென்றபோது, அந்தப் பிரிவினைத் தாங்க முடியாதவன் நான் மட்டுமல்ல, மிகப்பல லண்டன் இலக்கிய நண்பர்களும்தான். இருந்தாலும், கனடாவில் இன்றும் அவருடன் தொலைபேசியில் உரையாடிக்கொள்ள முடிவது திருப்தி தருவது.

மு.நித்தியானந்தன்

புஷ்பராஜன் மென்மையான சுபாவம் கொண்டவர். மாமரத்து நிழலின் கீழ், மருந்துக்கு நிற்கையிலே, அருகில் இருந்த பெர்ணபேத் என்னும் தன் சின்னப்பெரியம்மாவை| நினைவுகூரும் மென்மை அது. மு.தளையசிங்கம், ஏ.ஜே.கனகரட்ன போன்ற ஆளுமைகளின் சிந்தனைகளால், பழக்கத்தால் வார்க்கப்பட்ட மென்மை அது. தன் முடிவுகளில் உறுதியாக இருந்தாலும், கூட்டங்களில் தன் குரலை உயர்த்தாத மென்மை. 'அலை' ஆசிரியர் குழுவில் இருந்தாலும், அலை பற்றி நீட்டி முழக்கி, டமாரம் அடிக்காமல் மௌனமாய் விலகும் மென்மை. அயலவரை, ஊரவரை அணைத் துக்கொள்ளும் மென்மை.

கலகக்காரன் போன்ற லேபிள்களை அவர் குத்திக் கொள்வதில்லை. நாலு பரப்புக்காணியைத் திரும்பத் திரும்ப உழுத கதையாய் மாய்ந்து மாய்ந்து பேட்டி கொடுக்கும் அவஸ்தை அவரிடம் இல்லை. ஆரவார இலக்கியச் சந்தையில், நொய் நொய் என்று ரீங்காரமிடும் ஈக்களின் தொல்லைகளிலிருந்து வெகுதூரம் விலகி இருப்பவர்.

குருநகர் அவரது ரத்த நாளங்களிலும் நரம்புகளிலும் ஊறித் தோய்ந்திருக்கிறது. 'குருநகர்: கடலோரத்தில் ஒரு கல்வாரி ' என்ற தலைப்பில் குருநகர் பற்றிய விவரணப் படத்தை தீபம் தொலைக்காட்சிக்காக நான் தயாரித்தபோது, அவர் மகிழ்வோடு தன் உழைப்பை நல்கியிருந்தார். 'இத்தனை ஆண்டுகள் கழிந்தும் இன்றும் எம் கனவுகளில் உயிர்கொண்டு உலவுவது அந்தப் புழுதி மணலும் உப்புக் காற்று உலவும் நெய்தல் நில கோலங்கள் தான்' என்று குருநகரின் மான்மியம் பாடும் பாணன் அவன்.

தமயந்தி தன் 'ஏழு கடல்கன்னிகள்' கதையிலே சொல்லுவது போல், அவன் கடலின்பொருட்டு கர்வமுடையவன். ' கடல் அதுவே எங்கள் வாழ்வாதாரமும் மகிழ்ச்சியும். அத்தேவதை சினம் கொள்ளும் போதெல்லாம், திசையறியாது அலைந்து, கரையொதுங்காமல் போனவர்கள் ஏராளம். அவள் கோபமுறும் காலங்களில், அச்சம் கரிய இருளாய் ஊர்மீது கவிந்திருக்கும். ஆயினும் எம்மால் அவளை வெறுக்க முடிவதில்லை. தேவதையின் சினம் தணிந்து, தன் மெல்லிய அலைகளால் சிரிக்கும் வரை, வேண்டிக் கொள்வதைத்தவிர, வேறு வழியேதும் எமக்கு இருப்பதில்லை. அவள் சிரிப்பில், எங்கள் வீட்டு முற்றத்தின் வெண்மணலில் பூக்கள் விரியும். அன்றாடங் காய்ச்சிகளின் சமையல் அறைகளிலிருந்து புகை வெளியேறும்' என்று புஷ்பராஜனின் கவிமனம் லயித்துக்கிடப்பதெல்லாம் ஓயாது கடலலைகள் கொஞ்சி விளையாடும் குருநகரில்தான்.

தனது கற்பிதத்தில் உருவாக்கிக் கொண்ட ஒரு நிழல் எதிரியை வீழ்த்துவதற்காக, தன்னை கீழோர் வட்டமாகக் காட்டுவதற்காக தான் சாதாரண கடற்றொழிலாளியின் மகன்| என்று கடலில் பிறந்த குற்றத்திற்கு பாவசங்கீர்த்தனம் கேட்பவனல்ல புஷ்பராஜன்.

'வலை உணங்கு குருமணல்' என்ற புஷ்பராஜனின் நூல், அவரே கூறுவதுபோல, 'எந்தையும் தாயும் அதன்பின் நாமுமாய் மகிழ்ந்து உலாவிய மண்ணையும் அதனை மருவி வழியும் கடலையும் பற்றிய மனப்பதிவுகள்'தான்.

இலங்கையின் இனவரைவியல் துறைக்கு வந்த சேர்ந்திருக்கும் அற்புதமான வரவு இந்நூல்.

ஆய்வு, ஆதாரம், அனுபவம் என்ற தளத்தில் நிர்மாணம் கொண்டிருக்கும் இந்நூலுக்கு இணையாக இன்னு மொரு நூல் குருநகர் குறித்து எழுதுவதற்கு நாம் மிகமிக நீண்ட காலம் காத்திருக்கவேண்டும்.

21ஆம் பக்கம் பார்க்க...

UCSC

## கொழும்பு பல்கலைக்கழக கணனி கல்வி நிறுவனம்

# மாணவர்களின் விடுதியொன்றிற்காக கட்டிடமொன்றை குத்தகை (வாடகை) அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

01. கொழும்பு பல்கலைக்கழக கணனி கல்வி நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக்குழு தலைவரால் மாணவர்களுக்கு விடுதியாக பாவிப்பதற்கு தகைமையான கட்டிடமொன்றை வாடகைக்கு/குத்தகைக்கு பெறுவதற்கு கட்டிட உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கட்டிட உரிமையாளர்களுக்கு கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள சிக்கலற்ற உரிமையுள்ள கட்டிடங்களுக்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். குத்தகை கால எல்லை 02 வருடமாகும்.

   i. கொழும்பு பல்கலைக்கழக கணனி கல்வி நிறுவனத்தின் 35-50 மாணவர்களுக்கு தங்குவதற்கு தகைமையான கட்டிடமாக இருத்தல் வேண்டும். மாணவர்களுக்கான அறைகளுக்கு மேலதிகமாக விடுதி கண்காணிப்பாளர்களுக்கான இரண்டு அறைகளும் மற்றும் சமையலறையும் கொண்டிருப்பதுடன் நாளாந்தம் கல்வி விடயங்களுக்கான இட வசதிகளும் இருத்தல் வேண்டும்.

   ii. கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து 10-15 கி.மீ மேற்படாத தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

   iii. கொழும்பு பல்கலைக்கழக கணனி கல்வி நிறுவனத்திற்கு நேரடியாக செல்லக்கூடிய பஸ் பாதை வசதிகளுடன் கட்டிடங்களுக்கான முன்னுரிமை அளிக்கப்படும்.

   iv. போதுமான நீர், மின்சாரம், துப்புரவேற்பாட்டு வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   v. கட்டிடம் அமைந்துள்ள வளாகத்தை சுற்றி மதில் மற்றும் வாயிற்கதவு இருப்பதுடன், பாதுகாப்பான சூழலில் அமைந்திருத்தல் வேண்டும்.

   vi. விடுதி வளாகத்திற்கான தெளிவான மற்றும் சிக்கலற்ற நுழைவு வழி இருத்தல் வேண்டும்.

   vii. கழிவு நீர் மற்றும் திண்மக் கழிவுகளை அகற்றக்கூடிய அமைப்புக்கள் முறையான செயற்பாட்டு மட்டத்தில் மற்றும் முறையான கொள்ளளவு வசதிகளுடன் இருத்தல் வேண்டும்.

   viii. கட்டிடம் சுத்தமான மற்றும் முறையாகத் தயாரிக்கப்பட்ட வீட்டுத் தோட்டமொன்றில் அமைந்திருத்தல் வேண்டும்.

   ix. நாளாந்தம் குப்பைகளை அகற்றக்கூடிய முறைமைமொன்று இருத்தல் வேண்டும்.

03. தேசிய போட்டி விலைமனுக்கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படும்.

04. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கட்டிட உரிமையாளர்கள் மீளளிக்கப்படாத ரூ.1000/- வைப்பை கொழும்பு பல்கலைக்கழக கணனி கல்வி நிறுவனத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து, விலைமனுக்கள் கோரும் குறித்த ஆவணங்களை கொழும்பு பல்கலைக்கழக கணனி நிறுவனத்தில், கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவில் இருந்து 2021.03.21 முதல் 2021.04.08 முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

   முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இரு பிரதிகளுடன் 2021.04.09 பிற்பகல் 2.00இற்கு முன் கிடைக்குமாறு பிரதிப்பதிவாளர், கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழக கணனி கல்வி நிறுவனம், இல.35, ரீட் மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு கொண்டு வந்து அப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களை உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “மாணவர்களின் விடுதி ஒன்றிற்காக கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் - 2021” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2021.04.09ஆம் திகதி பிற்பகல் 2.00இற்கு உதவிப் பதிவாளரினால் கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவில் திறக்கப்படுவதுடன் அதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களை அழைத்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

   தொ.பே இல. 0112589123, 0112581245 (நீடிப்பு : 8995)

**பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானமாகும்.**
**தலைவர்/பெறுகைக்குழு,**
**கொழும்பு பல்கலைக்கழக கணனி கல்வி நிறுவனம்**
**இல-35 ரீட் மாவத்தை,**
**கொழும்பு 07**


# ஒப்பந்தம் (டெண்டர்) ஊடாக வாகன விற்பனை

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
Company No. PB 917 PQ

| வாகன இல. | வகை மற்றும் மாதிரி | விபரம் | யார்ட் |
|---|---|---|---|
| **மோட்டார் கார்** | | | |
| WP CAJ-3xxx | SUZUKI ALTO LXI 800 - MOTOR CAR | 2015, 976.00CC, PETROL, INDIA, SILKY SLIVER | A |
| CP CAZ-8xxx | DAIHATSU DBA- LA350S MIRA ES - MOTOR CAR | 2017, 650.00CC, PETROL, JAPAN, MAROON | A |
| EP KU-3xxx | MICRO PANDA LC 1.0 - MOTOR CAR | 2012, 998.00CC, PETROL, SRI LANKA, BROWN BLACK | D |
| WP-CAX-6xxx | SUZUKI DAA-MH55S WAGON R - MOTOR CAR | 2017, 650.00CC, PETROL-ELECTRIC, JAPAN, PEARL WHITE | A |
| SP KD-5xxx | TOYOTA TA-NZE121- MOTOR CAR | 2002, 1490.00CC, PETROL, JAPAN, WHITE | A |
| WP-CAS-9xxx | DATSUN REDI GO - MOTOR CAR | 2016, 799.00CC, PETROL, INDIA, GRAY | A |
| **டுவெல் பேப்பர்ஸ்** | | | |
| WP PH 9xxx | NISSAN EBD-DR64V - DUAL PURPOSE | 2015, 650.00CC, PETROL, JAPAN, WHITE | A |
| WP DAD - 4xxx | MAHINDRA S M T PLUS MDI - DUAL PURPOSE | 2015, 2523.00CC, DIESEL, INDIA, BLACK | B |
| SP HK-7xxx | TOYOTA HIACE - DUAL PURPOSE | 1998, 2770.00CC, DIESEL, JAPAN, WHITE | B |
| WP PY-3xxx | MAHINDRA MAXXIMO PLUS - DUAL PURPOSE | 2014, 909.00CC, DIESEL, INDIA, WHITE | B |
| **முச்சக்கர வண்டி** | | | |
| SP ABI - 7xxx | BAJAJ RE - THREE WHEELER | 2015, 198.00CC, PETROL, INDIA, NEPTUNE BLUE | B |
| SG AAV - 2xxx | BAJAJ RE - THREE WHEELER | 2014, 198.88CC, PETROL, INDIA, ECO GREEN | A |
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| WP BGX-0xxx | DEMAK TROPICA - MOTOR CYCLE | 2018, 100.00CC, PETROL, MALAYSIA, WHITE | A |
| WP BGO - 3xxx | DEMAK DTM - MOTOR CYCLE | 2017, 150.00CC, PETROL, MALAYSIA, BLACK | A |
| **மோட்டார் லொறி** | | | |
| NW NA-1xxx | TATA LP 1510 - MOTOR COACH | 2005, 5675.00CC, DIESEL, INDIA, IVORY BLUE | B |
| 63-2xxx | MERCEDES BENZ MB 140 D 2 9 - MOTOR COACH | 1999,2874.00CC,DIESEL,KOREA,GRANDGREEN GRET | B |
| 60-9xxx | TOYOTA HIACE - MOTOR COACH | 1978,1600.00CC,DIESEL,JAPAN,GREEN & WHITE | B |
| SP NB - 5xxx | LANKA ASHOK LEYLAND - MOTOR COACH | 2012,6540.00CC,DIESEL,INDIA,WHITE | B |

**மேலே குறிப்பிட்ட வாகனங்களை பரிசீலிக்கும் இடம்:**

**முற்றம் "A"**
இல. 01, ஸ்ரீ மஹா விஹார வீதி, பாமன்கட, தெஹிவளை.
(ஸ்ரீ மஹா விஹாரயின் உள்ளே)
விசாரணை: **0117 209 358**
சுரன்ஜித் - **076 324 1184**
ஜெராட் **076 065 1294**

**முற்றம் "B"**
இல. 344, ஸ்ரீ மாங்கலவத்த, மம்பே, பிலியந்தல.
சுரன்ஜித் **0763 241 184**
ஜெராட் **0760 651 294**

**முற்றம் "D"**
இல. 516, பிரிவென சந்தி, குருநாகல வீதி, தம்புள்ளை.
அமில - **077 272 9646**
ஜெராட் **0760 651 294**

ஒப்பந்த பத்திரங்களின் மீள செலுத்தப்படாத கட்டணமான ரூ. 400/- ஐ செலுத்தி ஒப்பந்த விண்ணப்பத்தை வாகன முற்றத்திலிருந்து பெறலாம். பூரணப்படுத்தப்படாத அல்லது தவறான வடிவத்தில் இருக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**2021 மார்ச் 21 (ஞாயிறு) முதல் மார்ச் 25ம் திகதி (வியாழன்) வரை**
**மு.ப. 8.30-பி.ப. 5.00 வரை (இரு தினங்களும் உட்பட)**

**2021 மார்ச் 25ம் திகதி பி.ப. 5.00 மணிக்கு டெண்டர் மூடப்படும்**

**விசாரணைகள்:** தலைமை - மீள்பெறுகை,
**சியபத்த பினான்ஸ் பீஎல்சீ,**
சயுரு செவன, இல. 46/12, நவம் மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி: **011 7 605 605** நீட்சி. **1104**

எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி ஏலவிற்பனையிலிருந்து விலக்கி கொள்ள கம்பனிக்கு உரிமையுண்டு



Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams



**தீவு முழுவதும் முகவர்கள் - தேவை**
ஏற்றுமதி தரமான சுகாதாரமான முகமூடிகளை நாங்கள் தயாரிக்கிறோம்.
**அதன் விநியோகத்திற்காக, தீவு முழுவதும் எங்களுக்கு முகவர்கள் தேவை.**
**மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவும்:**
**074- 14 355 79**
விற்பனை மேலாளர்,
பிஏஎம் ஹெல்த்கேர் (பிரைவேட்) லிமிடெட் ஹோமகம
மின்னஞ்சல்: marketing@thermosl.com


கல்வி அமைச்சு

## இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIAT)

SLIATE

# பதவி வெற்றிடங்கள்

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திலுள்ள பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட நிகழ்நிலை (online) விண்ணப்பங்களை 2021-04-21ஆம் திகதி அல்லது அதற்கு முன் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். தயவு செய்து விண்ணப்பத்தில் விருப்பத்தெரிவு இடங்களைக் (ஆகக் குறைந்தது 03) குறிப்பிடவும். (நிறுவனத்தின் சேவைத் தேவைப்பாட்டுடன் ஆட்சேர்ப்பிற்கான இடங்கள் மாறுபடலாம்)

01) செயல்முறை விளக்கமளிப்பவர் **(Demonstrator) –** (27 வெற்றிடங்கள்)

| | பாடப் பரப்பு | அமைவிடங்கள் |
|---|---|---|
| A | வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் தொழில்நுட்ப உற்பத்தி (02 வெற்றிடங்கள்) | கம்பஹா - 02 |
| B | உணவு தொழில்நுட்பம் (02 வெற்றிடங்கள்) | கம்பஹா - 02 |
| C | விவசாயம் (01 வெற்றிடம்) | கம்பஹா - 01 |
| D | இயந்திரப் பொறியியலாளர் (01 வெற்றிடம்) | காலி - 01 |
| E | மின்சாரப் பொறியியலாளர் (03 வெற்றிடங்கள்) | கொழும்பு - 02<br>யாழ்ப்பாணம் - 01 |
| F | சிவில் பொறியிலாளர் (02 வெற்றிடங்கள்) | யாழ்ப்பாணம் - 02 |
| G | அளவுக் கணிப்பீட்டாளர் (01 வெற்றிடம்) | காலி - 01 |
| H | தகவல் தொழில்நுட்பம் (15 வெற்றிடங்கள்) | இரத்தினபுரி - 01<br>மட்டக்களப்பு - 01<br>காலி - 02<br>அனுராதபுரம் - 02<br>மன்னார் - 01<br>தங்காலை - 01<br>வவுனியா - 01<br>பதுளை - 02<br>தெஹிவளை - 01<br>அம்பாறை - 01<br>தலைமையகம் - 02 |

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

1) HNDயின் பொறியியல், தகவல் தொழில்நுட்பம், விவசாயம் அல்லது அதற்குச் சமமான NVQ 7ஆம் நிலைக்குக் குறையாத தகைமை

மற்றும்

2) ஆங்கிலத்தில் விளங்கப்படுத்தும் ஆற்றல்

சம்பள அளவு - MA 4-2016 – 37970 -10x755 – 15x930 – 5x1135 – 65145

குறிப்பு: இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

02) ஆசிரியர் **(Tutor)** (02 வெற்றிடங்கள்)

| பாடப் பரப்பு | அமைவிடங்கள் |
|---|---|
| ஆங்கில ஆசிரியர் (02 வெற்றிடங்கள்) | தங்காலை - 01<br>இரத்தினபுரி - 01 |

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை

மற்றும்

2) 3 வருட கால கற்பித்தல் பின் தகைமை அனுபவம்

சம்பள அளவு - MA 5-3-2016 – ரூபா 46375 – 10x1135 – 20x1240 - 82525

குறிப்பு: இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

03) நூலக உதவியாளர் **(Library Assistant)** (02 வெற்றிடங்கள்)

| பாடப் பரப்பு | அமைவிடங்கள் |
|---|---|
| நூலக உதவியாளர் (03 வெற்றிடங்கள்) | வவுனியா - 01<br>சம்மாந்துறை - 01<br>யாழ்ப்பாணம் - 01 |

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்திலிருந்து பெற்றுக்கொண்ட நூலக விஞ்ஞானப் பட்டம்

அல்லது

2) நூலக விஞ்ஞானத்தில் டிப்ளோமா மற்றும் உயர்கல்வி நிறுவன நூலகத்தில் 3 வருட சேவை அனுபவம்.

சம்பள அளவு - MA 3-2016 – ரூபா 32200 – 10x445 – 11x660 – 10x730 – 5x750 - 54960

குறிப்பு: இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**சேவை நிபந்தனைகள்:**

(1) தெரிவு செய்யப்படும் அபேட்சகரால் அவரது உழைப்பின் 10% தொகையை ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் 15% பங்களிப்பு செய்யப்படும் மற்றும் 3% தொகை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) பங்களிப்புச் செய்யப்படும்.

(2) அனைத்து பிரிவுகளுக்குமான வயதெல்லை 45 வயதுக்கு கீழ் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் பொது/அரச துறையில் நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு ஏற்புடையதல்ல.

(3) அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிகள் சட்ட நிறுவனங்களில் சேவையாற்றுபவர்கள் தங்களது அசல் விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைமையின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) தெரிவு செய்யப்படும் அரச திணைக்களங்களில் ஓய்வூதியம் பெறக்கூடிய பதவி வகிப்பவர்கள் அவர்களது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக விடுவிப்பைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் சேவையாற்றும் போது அவர்களுக்கு ஓய்வூதிய உரிமை கிடைக்காது.

(5) குறும்பட்டியலிடப்பட்ட அபேட்சர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது விண்ணப்பத்தின் மூலப் பிரதியுடன் சான்றிதழ்களில் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.**
**இல. 320,**
**T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு 10.**

# ஆடிப்பூசை

பசறையூர்
**ஏ.எஸ். பாலச்சந்திரன்**

ஆடிமாதத் தேர்த்திருவிழாவினால் அந்தத் தோட்டமே களைகட்டியிருந்தது. லயக் காம்பிராக்களின் முன்னால் வாழைமரம் கட்டப்பட்டு மாவிலைத் தோரணங்கள் போடப்பட்டு மிக அழகாக காட்சி தந்தது. கோயிலிலிருந்து ஒலிபெருக்கியில் பக்திப்பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் ஒரே பக்தி மயம். ஆண்கள் வேட்டி சட்டையோடும், பெண்கள் வர்ண வர்ண பட்டுச்சேலைகளோடும், விடலைப் பெண்கள் தாவணியோடும் ஆனந்தமாக அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்தனர். தோட்டப் பகுதியில் என்னதான் வறுமை நிலை திகழ்ந்தாலும் இந்தத் தொழிலாளர்கள் ஆடிப்பூசை எனப்படும் இந்த ஆடிமாதத் திருவிழாவை மிகவும் சிறப்பாக நடத்தி விடுவார்கள். ஒவ்வொரு தொழிலாளர்களின் ஒருநாள் சம்பளமாவது அல்லது இரண்டு நாள் சம்பளமாவது இதற்காக ஒதுக்கப்படும். அத்தோடு இந்த தோட்டத்தில் பிறந்து, வளர்ந்து வெளிநாடுகளிலும் தொழில் புரிவோரும் தங்களால் முடிந்த உதவிகளை செய்வது வழக்கம். அது மட்டுமல்ல தோட்டத்துக்கு பக்கத்தில் உள்ள நகருக்கும் சென்று அங்குள்ள கடைமுதலாளிமார், தனவந்தர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரிடம் நன்கொடை வசூலும் செய்வார்கள். இந்தத் திருவிழா நான்கு ஐந்து நாட்களாக நடைபெறும். முதல் நாளில் கம்பம் ஊன்றி திருவிழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

தோட்டத்துரையைத் தான் பிரதான அமைப்பாளராக நியமிப்பார்கள். அவரை முறைப்படி கௌரவத்துடன் மேளதாளத்தோடு அவருடைய பங்களாவில் இருந்து அழைத்து வரும் காட்சி பெரியதொரு அமைச்சரை அழைத்து வருவது போன்று அற்புதமாக இருக்கும். அதேபோல் அந்தத் தோட்டத்தில் கடமை புரியும் பெரிய கிளாக்கர், பெரிய கணக்கப்பிள்ளை, தலைமைத் தொழிற்சாலை உத்தியோகத்தர் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் கொடுத்து திருவிழாவுக்கு அழைத்து வருவார்கள். கொடியேற்றம், தீமிதிப்பு, அன்னதானம், ரதபவனி, நீர்வெட்டு என்ற நிகழ்வுகளையெல்லாம் நிகழ்த்துவார்கள். இறுதியில் முருகப்பெருமானை தேரில் வைத்து தோட்டத்தை சுற்றி வருவார்கள்.

அதே போன்று முருகப்பெருமான் தேரில் இன்று வலம் வரும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள இரண்டு உள்ளங்கள் காத்திருந்தன.

முத்தையன் இதே தோட்டத்தில் பிறந்து வளர்ந்து இங்கேயே ஒரு தொழிலாளியாக இருந்து வருபவன். வாட்டசாட்டமான இளைஞன். அவனைக் கண்டால் எந்தப் பெண்ணும் ஒரு கணம் ஏறெடுத்து பார்ப்பாள். அந்தளவுக்கு ஓர் வசீகரத் தோற்றம் அவனிடம் இருந்தது. அதனால் என்னவோ கற்பகம் அவன் மேல் காதல் கொண்டாள். அவளும் அழகானவள் தான். வட்டமுகம், வடிவான நீண்ட கார்கூந்தல், மாநிறம், மாதுளை முத்துக்கள் போன்ற பற்கள், யாரையுமே கவர்ந்து இழுக்கும் வசீகரத் தோற்றம். மாடசாமி புஸ்பவனம் தம்பதிகளின் ஒரே ஆசைப்புதல்வி.

மாடசாமியும் புஸ்பவனமும் இதே தேயிலைத் தோட்டத்தில் தொழில் புரியும் கூலித் தொழிலாளர்கள். கூலி ஆட்களாக வேலை செய்தாலும் தமது மகள் கற்பகத்தை படிக்க வைத்தார்கள். "எங்க புள்ள... எங்கள போல மழையிலையும், பனியிலையும், அட்டைக்கடியிலும் கஸ்டப்படாம நல்லா படிச்சி ஒரு நல்ல உத்தியோகத்துக்காவது போகணும்" என்று ஆசைப்பட்டார்கள். ஆனால் அந்த ஆசை நிராசையாகப் போய் விடும் என்று அவர்கள் கனவிலும் கூட நினைத்துப் பார்க்கவில்லை. விதி யாரைத்தான் விட்டது! கற்பகம் படிப்பில் கவனத்தை செலுத்தாமல் முத்தையனின் பின்னால் சுற்றிச் சுற்றித் திரிந்து அவனைக் காதலித்தாள். முதலில் விருப்பமில்லாமல் இருந்தவன் பின்பு அவனும் அவள் காதலை ஏற்றுக் கொண்டான்.

கற்பகத்தின் குடும்பம் பன்னிரெண்டு காம்பரா லயத்தில் வாழ்ந்தாலும் முத்தையனின் குடும்பம் "குவாட்டர்ஸ்" எனப்படும் தனி வீட்டில் குடியிருந்தது. மாடசாமி கூலித் தொழிலாளியாக இருந்தாலும் முத்தையனின் தந்தை முனியாண்டி காவல்காரராக தொழில் புரிந்தார். அதைவிட மாடசாமியின் குலத்தை விட முனியாண்டி சற்று உயர் குலத்தைச் சேர்ந்தவர். மற்றும் இன்னோரன்ன விடயங்களில் முத்தையனின் குடும்பம் சற்று உயர்வாகவே காணப்பட்டது. முத்தையன் தான் சம்பாதிக்கின்ற பணத்தில் பாதியை கற்பகத்துக்காக செலவிட்டான். பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகைகள் வந்தால் கற்பகம் கேட்கின்ற டிசைன்களில் உடைகள் வாங்கிக் கொடுப்பான். அவளின் சில்லறை செலவுகளுக்காக பணமும் கொடுப்பான். காதல் எப்போதுமே குடத்து விளக்காய் இருப்பதில்லையே. காற்றுத் தீயாய்த் தானே பரவும். முத்தையன் கற்பகம் இருவரின் காதல் விவகாரம் தோட்டம் முழுவதும் பரவி இரு வீட்டாருக்கும் தெரிய வந்தது. இருபக்கமும் கடுமையான எதிர்ப்பு. காரணம் சாதிப் பிரச்சினை. எப்படியுமே ஒத்துப்போகாத ஒரு நிலைமை. இருந்தாலும் இவர்கள் இருவரும் சளைக்கவில்லை. யார் தடுத்தாலும் எது தடுத்தாலும் எங்களுக்கு அது ஆட்சேபணை இல்லை. எங்கள் காதலை எப்படியும் ஜெயித்துக் காட்டுவோம் என்று கங்கணம் கட்டினார்கள். இரு வீட்டாரின் ஒத்துழைப்பு கிடைக்காததால் திருட்டுத்தனமாக திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார்கள். அதற்கு இந்த ஆடிப்பூசை திருவிழாவை பயன்படுத்திக்கொள்ள தீர்மானித்தார்கள்.



திருமுருகன் வள்ளி தெய்வானையோடு திருத்தேரிலே பவனி வந்து கொண்டிருந்தார். பக்த அடியார்கள் கூட்டம் கூட்டமாய் அரோகரா போட்ட வண்ணம் குழுமி நின்றார்கள். தேர் மேட்டு லயத்தை நோக்கி வரும் போது இரவு ஒன்பது மணியையும் தாண்டி விட்டிருந்தது. ஒலிபெருக்கியில் "அழகென்ற சொல்லுக்கு முருகா" என்ற பக்திப் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அதே போல் மேளதாள இசையுடன் நாதஸ்வர ஓசையும் ஒலித்துக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. தேருக்கு மாவிளக்கு. பூசை கொடுப்பதற்காக சில பெண்கள் அர்ச்சனை தட்டோடு காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களோடு கற்பகமும் நின்று கொண்டிருந்தாள். அவள் கண்கள் முத்தையனைத் தேடின. முத்தையனும் அவளைப் பார்த்து ஏதோ சைகை செய்தான். உடனே அந்தக் கூட்டத்திலிருந்து விலகிய கற்பகம், மெதுவாக முத்தையனின் பக்கம் வந்தாள். எல்லோர் கண்களும் தேரில் பவனி வரும் திரு முருகனைப் பார்த்த வண்ணம் இருந்தன. . யாரும் இவர்களை கண்டு கொள்ளவில்லை.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, எல்லோர் கண்களிலும் மண்ணைத்தூவி விட்டது போல் இந்த காதல் ஜோடி ஓட்டமும் நடையுமாக வேறு பக்கமாக நடையைக் கட்ட ஆரம்பித்தது. தேர்பவனி ஊர்வலம் மீண்டும் கோயிலுக்குத் திரும்பும் போது மறுநாள் பொழுதும் புலர்ந்திருந்தது. எல்லோருக்கும் ஒரே அலுப்பு. அத்தோடு விடிய விடிய தூக்கம் இல்லாமல் கண் விழித்திருந்தால் எல்லோருக்கும் கஷ்டமாக இருந்தது. ஆகவே எல்லோரும் விரைவாக தத்தமது வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

மாடசாமியும் வீடு திரும்பினான். ஒரு ஓரமாக புஸ்பவனம் உறங்கிக் கொண்டு இருந்தாள். கற்பகத்தைக் காணவில்லையே. சிலவேளை தோழிகளோடு கோவிலில் இருப்பாளாக்கும் என்று எண்ணிக்கொண்டே ஒரு பாயை விரித்துப் போட்டு அவனும் உறங்க முற்பட்டான். ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே அவன் உறங்கி இருப்பான். அவன் உறக்கத்தை புஸ்பவனம் கலைத்தாள். "என்னங்க... என்னங்க... நம்ம மக இன்னும் வீட்டுக்கு வரலிங்க..." என்றாள். பதற்றத்தோடு, "சும்மா கெடபுள்ள... கூட்டாளிகளோட கோயிலுல இருப்பாளா இருக்கும்... கொஞ்சம் பேசாம தூங்க விடு புள்ள" என்று மறுபக்கம் சுருண்டு படுத்துக் கொண்டான். ஆனால் புஸ்பவனத்துக்கு கையும் ஓடவில்லை... காலும் ஓடவில்லை. கதவைத் திறந்துக் கொண்டு கோடிப்பக்கம் ஓடினாள் . அதே போல் முத்தையன் வீட்டிலும் அவன் வீடு திரும்பாததால் அங்கும் ஒரே குழப்பமாக இருந்தது. அதற்கிடையில் முத்தையன் கற்பகத்தைக் கூட்டிக் கொண்டு களவாக ஓடியதை அந்த நடுநிசி நேரத்திலும் யாரோ ஒரு சிலர் கண்டதாகவும் கதை அடிபட்டது. சற்று நேரத்தில் இந்தக் கதை முழு தோட்டத்திலும் அப்பட்டமாக பரவிக் கிடந்தது.

கோடிப்பக்கம் போன புஸ்பவனமும் விடயத்தைத் தெரிந்து கொண்டு தலையிலும் நெஞ்சிலும் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்தவளாக ஓடி வந்தாள். அவள் போட்ட சத்தத்தில் மாடசாமி கண்விழித்து தட்டுத் தடுமாறியவாறு எழுந்தான்.

இருவருக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. அதற்கிடையில் சிலர் மாடசாமியைத் தேடி வந்தார்கள். "கற்பகத்தை கூட்டிக் கொண்டு முத்தையன் மாரியம்மா கோவில் பக்கம் போனதாகவும்... விடயத்தை தெரிந்து கொண்ட முனியாண்டியும் அவன் மூத்த மகன் சுப்புவும் கவ்வாத்துக் கத்தியை எடுத்துக் கொண்டு இருவரையும் கண்டதுண்டமாக வெட்டாமல் விடமாட்டோம் என்று ஆத்திரத்தோடு ஓடோடிப் போவதாகவும்" கூறினார்கள்.

"ஐயோ... மாரியம்மா... என் மகளைக் காப்பாத்து" என்று புஸ்பவனம் புலம்பிக் கொண்டே மாடசாமியுடன் மாரியம்மன் கோவில் பக்கம் ஓடினார்கள். பக்கத்து வீட்டார், இனபந்துக்கள் எல்லோருமே ஓடினார்கள்.

அதற்கிடையில் முத்தையன் ஒரு மஞ்சக் கயிற்றில் மஞ்சள் துண்டொன்றை முடிச்சிட்டு அதை கற்பகத்தின் கழுத்தில் கட்டிவிட்டான். மாரியம்மன் சிலையிலிருந்த பூமாலையையும் எடுத்து அதையும் அவள் கழுத்தில் போட்டு குங்குமத் திலகமும் இட்டிருந்தான். வந்தவர்கள் எல்லோரும் ஆச்சரியத்தோடு குழுமி நின்றார்கள். "ஏம் புள்ளைய வெட்டடாதீங்கப்பா... அதுக்கு பதிலா என்னை வெட்டடுங்க" என்று மாடசாமியும் "இல்லைப்பா அவர விட்டுட்டு என்ன வெட்டிடுங்க... பொம்பளப்புள்ளைய சரியா வளர்க்கத் தெரியாத பொட்டச்சி என்னைய கூரு போட்டுடுங்க" என்று புஸ்பவனமும் முன்னே வந்து நின்றார்கள்.

அதற்கிடையில் குழுமி நின்றவர்கள் முனியாண்டியையும் சுப்புவையும் வளைத்துப் பிடித்தார்கள் "கவ்வாத்து கத்தியை ஒரு பக்கம் வீசிட்டு புள்ளைங்கள ஆசீர்வதிங்கப்பா... அதை விட்டுட்டு வெட்டுறேன் கொத்துறேன்னு நிக்கிறீங்க" என்றார்கள் சிலர். அதற்கிடையில் தோட்டத் தலைவரும் வந்தார். "சரி நடந்தது நடந்து போச்சி... ரெண்டு வீட்டாரும் சேர்ந்து புள்ளைங்கள கூட்டிக்கிட்டு வாங்க... இந்த நல்ல நாளுல முருகன் சந்நிதானத்துல இவங்க கலியாணத்தை நடத்துவோம்..." என்றார் தலைவர். அதற்கு மேல் யாரும் அங்கு எதையும் பேசவில்லை. ஆடிப் பூசையோடு முத்தையன் கற்பகம் இருவரின் திருமணமும் நடந்தது. "எல்லாம் முருகன் செயல்" என்று மாடசாமி முருகப் பெருமானை கைகூப்பி வணங்கிக் கொண்டான். அந்த நேரம் பார்த்து "உலகங்கள் யாவும் உன் அரசாங்கமே ... ஒவ்வொன்றும் நீ செய்யும் அதிகாரமே..." என்ற பக்திப்பாடல் கோவிலிருந்து அட்சதையாக ஒலிபெருக்கியில் ஒலித்தது.

இருவரின் திருமணமும் முடிந்திருந்தாலும் இன்னுமொரு பிரச்சினை பூகம்பமாக வெடித்தது. மணமக்களை யார் வீட்டுக்கு அழைத்துச் செல்வது என்பது தான் அடுத்த பிரச்சினையாக இருந்தது.

"மாடசாமி.. ஓம்மகள் என்மகனை கலியாணம் செஞ்சதால நீ எனக்கு சொந்தக்காரனா ஆகிடாது... என்னைப் பொறுத்தவரையில் ஏம்மகன் செத்துட்டான். என் வீட்டுப் பக்கம் இனி அவன் வரப்படாது. உன் வீட்டுக்கே கூட்டிக்கிட்டு போயிடு" என்று முனியாண்டி சொல்ல, சுப்புவும் அதை ஆமோதித்தான். மாடசாமி ஒரு கணம் அதிர்ந்து போனான். "என்னப்பா இது நியாயம்! அதுதான் கலியாணமே முடிஞ்சிட்டதே. நீயும் பொண்ணு மாப்புளைய ஆசீர்வாதமும் பண்ணிட்டியே... இன்னும் என்ன என்று ஒரு பெரியவர் கூற "இங்க யாரும் எதையும் பேசக் கூடாது... நான் சொன்னா சொன்னது தான்.... அவுங்க அவுங்க வேலைய பார்த்துக்கிட்டு போங்க..." என்றவாறு முனியாண்டியும், சுப்புவும் விர்ரென்று அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டார்கள். மாடசாமிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. மரம் போல் நின்றான். "அவுங்க போனா போகட்டும் மாடசாமி.. அப்படி என்ன வீராப்பு வேண்டி கெடக்கு... நீ இவங்கள உன் வீட்டுக்கு சந்தோசமாக கூட்டிக்கிட்டுப் போ... யாரப்பா அங்க... அந்த மேளக்காரர வரச்சொல்லு" என்று தலைவர் ஆணையிட, மேள தாளத்தோடு மணமக்கள் மாடசாமியின் வீட்டுக்கு கூட்டிச் செல்லப்பட்டார்கள்.

காலம் தன்பாட்டில் ஓடி வருடம் ஒன்றையும் தாண்டியது. கற்பகம் தாய்மைப் பேற்றையும் அடைந்திருந்தாள். மாடசாமியின் வீட்டில் வசதிகள் குறைவாக இருப்பதாலும், கற்பகம் புள்ளத்தாச்சி என்பதாலும் தலைவரிடம் கூறி அவர்களுக்கென்றொரு வீட்டையும் வாங்கிக் கொடுத்தான் மாடசாமி. முத்தையனின் குடும்பத்தார் அவனைக் காணும் போதெல்லாம் கண்டும் காணாதது போல் ஒதுங்கிப் போய் விடுவார்கள்.

"சாதி..... அப்படி என்ன மேல்சாதி கீழ்சாதி! எல்லாம் மனுசங்க தானே... வெட்டிப் பார்த்தா எல்லா ரெத்தமும் சிவப்பாத்தானே இருக்கும்" என்று முத்தையன் தனக்குத் தானே சொல்லிக் கொள்வான். மாடசாமியும் புஸ்பவனமும் மகள் மீதும் மருமகன் மீதும் அளவற்ற அன்பு வைத்திருந்தார்கள்.

குழந்தை நல்ல முறையில் பிரசவமாக வேண்டும் என்று தோட்டத்து முருகன் கோயிலில் புஸ்பவனம் நேர்த்திக்கடனும் வைத்தாள்.

தனது மருமகள் புள்ளத்தாச்சியாக இருக்கும் செய்தி முத்தையனின் வீட்டாருக்கும் தெரிய வந்தது. முனியாண்டி இன்னும் கூட அதே கர்வத்தோடுஇருந்தாலும்அவனுடையமனைவிகனகவள்ளிக்கு மருமகளைப் பார்க்க ஆவலாகஇருந்தது.

இப்படித்தான் தோட்டப் பகுதிகளில் எல்லோரும் இறை நம்பிக்கையும் பக்தியும் அதிகமாக வைத்திருப்பார்கள். ஏதாவது தமக்கு நல்லது நடக்க வேண்டுமென்றால் ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு காணிக்கை கட்டி நேர்த்திக்கடன் போடுவார்கள்.

மாதங்கள் பல உருண்டோடி கற்பகம் பிரசவிக்கும் நாளும் வந்தது. அவள் ஒரு அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்திருந்தாள். மாடசாமியும் புஸ்பவனமும் நெகிழ்ந்து போனார்கள். முருகப் பெருமானை நினைந்து வேண்டிக் கொண்டார்கள். "முருகா..." இந்த முறை ஆடிப் பூசைக்கு உன் சந்நிதானத்துக்கு வந்து என் பேரனுக்கு மொட்டை அடிக்கிறேன்" என்று இருவரும் வேண்டிக் கொண்டார்கள். அதேபோல் விடயத்தை தெரிந்து கொண்ட முத்தையனின் அன்னை கனகவள்ளியும் கணவனுக்குத் தெரியாமல் முருகன் கோயிலுக்குப் போய் கற்பூரம் ஏந்தி வணங்கினாள்.

இந்த வருட ஆடித்திருவிழாவும் வழமை போல மிகவும் சிறப்பாக தொடங்கியது. அனைத்து அம்சங்களும் களைகட்டியது. மாடசாமி நேர்ந்து கொண்டது போல முருகன் சந்நிதானத்துக்குப் போய் தனது பேரப்பிள்ளையின் முடியை வெட்டி நேர்த்திக்கடனை நிறைவு செய்தான். ஆடிப் பூசையில் கலந்து கொள்வதற்காக கோவிலுக்கு வந்திருந்த முத்தையனின் குடும்பத்தினரும் இந்தக் காட்சியைக் கண்டார்கள்.

கனகவள்ளி ஓடிவந்து பேரனைத் தூக்கி உச்சி மோந்தாள். முனியாண்டியும் கூடவே வந்திருந்தான். அவனுக்கும் பேரப் பிள்ளையை காண ஆசையாக இருந்தது. இருந்தாலும் யாராவது ஏதாவது சொல்லி விடுவார்களோ என்ற அச்சமும் அவனுள் குடிகொண்டிருந்தது. "மாடசாமி மன்னிச்சிடுப்பா" என்று முனியாண்டி மாடசாமியின் கைகளைப் பற்றினான்.

"சரி சரி... அதெல்லாம் விடுப்பா.. "எல்லாம் முருகன் செயல்" என்றான் மாடசாமி. இரு குடும்பத்தினரும் ஒன்றிணைந்தார்கள். "இந்த வருட ஆடிப்பூசையை நாம் எல்லோரும் ஒண்ணா சேர்ந்தே கொண்டாடுவோம்... வாங்க எல்லாரும் ஒண்ணா உட்கார்ந்து அன்னதானம் சாப்பிடுவோம்" என்று முத்தையனின் அண்ணன் சுப்பு எல்லோரையும் அழைத்தான். முத்தையனும் கற்பகமும் பெரியோர்களின் கால்களில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்கள். கனகவள்ளி பேரனைத் தூக்கிக் கொண்டு கோவிலைச் சுற்றி சுற்றி வந்தாள். "முருகா.. எங்க எல்லோரையும் காப்பாத்து" என்று முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள். முருகன் கோவிலின் முன்றலில் வாழை இலை பரிமாற்றப்பட்டு எல்லோருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. கற்பகத்துக்கு பழைய நினைவு வந்தது. அவள் முத்தையனை ஒரு இடி இடித்தாள். அவனும் அதை புரிந்துக் கொண்டு கூச்சப் பட்டான். அப்போது கோவிலில் உள்ள ஒலி பெருக்கியில் "உலகங்கள் யாவும் உன் அரசாங்கமே" என்ற அதே பக்திப் பாடல் ஒலிக்கத் தொடங்கியது.

---

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல : 36



திரு/திருமதி/செல்வி ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................................
..............................................
..............................................

.............................. ..............................
திகதி கையொப்பம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 36

### கேள்விகள்

**இடமிருந்து வலம்**

1. மின்னலுடன் இணைந்தது. பேரொலி என்றும் சொல்லலாம்.
4. தந்தை.
6. பாடல்
7. மரத்தோணி திரும்பி நிற்கிறது.
8. உறுதியான காட்டு மரம். (குழம்பியுள்ளது)
10. செருப்பு.
11. காட்டு மிருகம்.
12. ஒருவரின் பொறுப்பில் இருப்பது அல்லது இணைவது.
16. பிழை இல்லாத நிலை.
17. வியப்பு.
18. ஒலி. (திரும்பியுள்ளது)
19. கல்யாணம் குழம்பி விட்டது.

**மேலிருந்து கீழ்**

1. சமகாலத்தில் இதன் பாவனை அவசியமாகிவிட்டது.
2. குழந்தை. (குழம்பியுள்ளது)
3. பழம்.
4. இதுவும் ஓர் உலோகம்.
5. பெண்கள் அணிந்துள்ள சேலையின் ஒருபகுதி.
7. வழி மேல் நோக்கிப் போகிறது.
9. உடம்பு.
13. வரலாறாக அமைந்திருப்பது.
14. உணவு.
15. இனிப்பான தாவரம். (குழம்பியுள்ளது)
17. வேலையால் ஏற்படும் களைப்பு.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 35

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஒற்றுமை 2. சங்கு 4. பசை 5. கபடம் 9. தவம் 11. கர்வம் 12. அம்பு 13. பவனம் 14. ஆபரணம் 19. குடம் 20. தாழ்மை 21. கும்பல்

**மேலிருந்து கீழ்**

1. ஒட்டகம் 2. சபதம் 3. குறும்பு 6. ஆர்வம் 7. கவனம் 8. பம்பரம் 19. அவல் 15. படகு 16. குணம் 17. குயில் 18. சதா

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 34

### பரிசுபெறுவோர்

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| **செ. தமயந்தி**, 357, பொதுஜய மாவத்தை, அங்குலானை,மொறட்டுவை. | **திருமதி சிவசுந்தரம்,** இல. 198, கோவிலடி, மஸ்கெலியா. | **எம்.எஸ்.எம். சுஹைர்,** 306/12, அலாப்டீன் மாவத்தை, மிரிஸ்வத்தை, பலாங்கொடை. |

### பாராட்டு பெறுவோர்

**1. ஜி. அந்தனி,** 6/134, வைத்தியசாலை வீதி, சொறிக்கல்முனை, வந்தாறுமூலை.

**2. கோபிநாத் ஜெரிஸ்,** 209/2, மார்க்கண்டு வீதி, பாண்டிருப்பு, கல்முனை.

**3. ஹம்தா இர்பான்,** 58/2, மரிக்கார் மாவத்தை, ஹிங்குலோயா, மாவனெல்லை.

**4. எஸ்.எச்.எம். ஜிப்ரி,** 155/32, மொஹிதீன் மஸ்ஜித், மருதானை, கொழும்பு 10.

**5. சின்னையா செல்வராஜ்,** 91/1, பிரதான வீதி, கொழும்பு 11.




## கசப்பு–1

கடந்த மாதத்தில், பல வருட இடைவெளிக்குப் பிறகு நானும் நடிப்பாற்றல் மிக்கக் கலைஞர் ஒருவரும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் விஜயம். புதிதாக நியமனம் பெற்றுள்ள முஸ்லிம் சேவை உதவிப் பணிப்பாளரையும் நாடகத் தயாரிப்பாளரையும் சந்திக்கப் போனோம். சென்றது சொந்த வேலைகளுக்கன்று.

அறுபது ஆண்டுகளுக்கு முன் ஒப்பற்ற நாடகக் கலைஞராக முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒருவர் பிரகாசித்தார். **சீ.பி.எம். காஸிம்** என்றால் பெரிய பிரபலம். வெண்கலக் குரலார். 1994லில் முஸ்லிம் திணைக்களம் வழி, **'லியாவுல் ஃபன்னான்'** (கலைச்சுடர்) அரச உயர் விருது பெற்றவர்.

இந்தக் கலைஞரின் இப்போதைய நிலை:

மிக உடல் நலிவுற்று, பல மாதங்கள் படுக்கையிலேயே வெண்கலக் குரல் கரைந்து சன்னமான பேச்சு. விரல்கள் நடுக்கம். நினைவாற்றலும் குறைவு. வயதோ எண்பது தாண்டி விட்டது.

இந்தத் துர்ப்பாக்கியவான் ஓஹோ என்று கலைத்துறையில் பிரகாசித்த காலத்தில், முஸ்லிம் சேவையில் போதிய நாடகப்பிரதிகள் இல்லாத குறையையும் தீர்த்து வைத்தவர். அவரே நாடகப்பிரதிகள் எழுதியுள்ளார். ஆனால் நடிக்காமல் பிற கலைஞர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கியுமுள்ளார்.

இத்தகைய பின்னணியில் நானும், என்னுடன் இணைந்து வந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் வானொலி நாடக அனுபவம் உள்ள கலைஞரும் ஒரு திட்டம் தீட்டினோம்.

★ ஒரு மனிதரை, அவர் வாழும் பொழுதே வாழ்த்தாமலும் போற்றாமலும் அவர் உடல் நலிந்து நோயுற்றிருக்கும் காலத்தில் நலம் வேண்டி பிரார்த்தனைகள் புரியாமலும் இருக்கும் இந்தக் காலத்தில் ஒரு மூத்த கலைஞரை, முஸ்லிம் நிகழ்ச்சி நாடகங்களை அறுபது ஆண்டுகளுக்கு முன் புகழ் பூக்க வைத்தவரை நினைத்து, அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டுள்ளதற்கு, இறைகிருபை வேண்டி, அன்னார் 59 ஆண்டுகளுக்கு முன், 1962 ஜன. 12 முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான **"அவன் சிரித்தான், அவள் அழுதாள்"** நாடகத்தைப் புதுப் பொலிவுடன் இன்றையக் கலைஞர்களைக் கொண்டு ஒலிக்கச் செய்தால் என்ன, அதனால் இளைய தலைமுறை நேயர்களுக்கும் ஒரு பழையவர் அறிமுகம் கிடைக்குமே! இப்படியான எங்கள் திட்டத்தை சந்திக்கச் சென்ற உதவிப் பணிப்பாளரிடமும் தயாரிப்பாளரிடமும் விவரித்தோம். சாதகமான பதிலே! ஆனால், நாங்கள் அவசரம் காட்டியது போல் அவர்கள் காட்டவில்லை, "இந்த மாதம் (பெப்ரவரி) இயலாது. அடுத்த மாதம் மூன்றாம் நாலாம் கிழமை பார்ப்போம் என்றார்கள். பெரிய ஏமாற்றம். எங்கள் அவசரம் ஏன் என்றால் இன்றோ நாளையோ என்று படைத்தவனிடமே மீளக் காத்திருக்கும் ஒரு கலைஞர் எம் மத்தியில் இருக்கும் சமயத்திலேயே அவர் நாடகத்தை ஒலிபரப்புச் செய்து விட வேண்டும் என்பது! எந்த விதமான விவாதங்களும் புரியாமல் தலையாட்டிவிட்டுத் திரும்பினோம்.அப்புறம் மூன்று கிழமைகள் காற்றாய்ப் பறந்தன. இம்மாதத் (மார்ச்) தொடக்கத்தில் உதவிப்பணிப்பாளர் எனக்குத் தொ.பே.யில் தெரிவித்த தகவல் அதிர்ச்சி அடையச் செய்தது." மிஸ்டர் காஸீமின் பிரதி முஸ்லிம் நிகழ்ச்சி ஒலிபரப்புக்குப் பொருத்தமற்றது. ஏழைப் பெண்ணை பணக்கார வாலிபன் மணம் புரிய மறுப்பது என்று ஒரு கதை. பணக்காரப் பெண் ஒருத்தி ஏழை மணமகனைத் தேர்ந்தெடுக்க தகப்பன் தடை என்று இன்னொரு கதை. நாடகம் முழுதும் ஒரே காதல்! வருந்துகிறேன். ஒலிபரப்புக்குத் தகுதியில்லை!"

நான், எருமை மட்டுக்கு ஒப்பாக, "அப்படியா சரி, எனத் தொடர்பைத் துண்டித்தேன். நம்புங்கள் நான் விவாதம் புரியவேயில்லை. இதற்குப் பிறகு கடந்த 11ஆம் திகதி முஸ்லிம் நிகழ்ச்சி நாடகத் தயாரிப்பாளரது தொ.பே.! இது எதிர்பாராதது." மானா நாநா, நாடகத்தை 16ஆம் திகதி ஒலிபரப்பத் தீர்மானித்து விட்டேன். ஒலிப்பதிவு 13ல். தயவு செய்து பிரதியை டைப் செய்து, எட்டுப்பிரதிகள் வழங்குங்கள்!"இது நிலையமே செய்ய வேண்டிய பொறுப்பு. இருந்தும் மறுபேச்சின்றி சம்மதித்தேன்.காரணம் – உதவிப் பணிப்பாளர் முடிவும், தயாரிப்பாளர் முடிவும் எதிரெதிர். இந்த நிலையில், எப்படியோ 'வேளாண்மை விளைந்து வீடு தோறும் வானொலி மூலம் போனால் சரி, கேட்பவர்கள் கலைஞரின் நல வாழ்வுக்குக் கையேந்துவார்களே!

"எங்களுக்குத் தட்டெழுத்துச் செய்ததிலும் பிரதிகள் எட்டு எடுத்ததிலும் மூவாயிரம் செலவு! 'நம்ம நண்பர் சீ.பீ, எம். காசிம் கலைஞருக்குத் தானே' என நாங்கள் பொருட்படுத்தவில்லை!

13.03.2021 சனி அன்று ஒலிப்பதிவு சிறப்பாக நடந்தது. அனுபவ கலைஞர்களும் சிகரம் தொட்டார்கள் நடிப்பில். தயாரிப்பும் மிகவும் நேர்த்தி,

இதில் முக்கியம், இரு மூத்த பெண் கலைஞர்களும், ஓர் ஆண் மூத்த கலைஞரும் மிகவும் சிரமத்தில் நிலையம் வந்ததும் நடித்ததும், யாரும் எந்தச் சன்மானமும் பெற்றுக் கொள்ளவில்லை. நாடகத்தில் பங்கெடுத்தவர்கள், கலைஞர் எம். எஸ். அப்துல் லத்தீப் வழங்கிய நண்பகல் விருந்துண்டு விடைபெற்றார்கள்.

அந்த 16ஆம் திகதி (செவ்வாய்) நாடகம் ஒலிபரப்பாகும் நாளை, நான் உட்பட பலரும் எதிர்பார்த்துக் காத்திருக்க இடி விழுந்தது இடி!

நாடகம் ஒலிபரப்பாகவில்லை! இல்லை!! இல்லை!

அதற்கு மாற்று நிகழ்ச்சியாக, கிட்டத்தட்ட நினைவேந்தல் போல் ஒருவரைப் பற்றியது ஒலிபரப்பானது. அதைப் **"பாரம்பரியம்"** என்று அறிவிப்புச் செய்தார்கள்.

யாருக்கு என்றால் கலைஞர் காஸிமின் காலத்திலேயே அவருக்கும் என் போன்றோருக்கும் உற்ற நண்பனாகத் திகழ்ந்து வானொலி, மேடை நாடகத்துறையில் எழுத்தாளராக ஜொலித்து பற்பல ஆண்டுகளுக்கு முன்பே ஆண்டவன் அழைப்பை ஏற்றுச் சென்று விட்ட "ஒரு மனிதரின்" வானொலிப் பாரம்பரியம் பேசப்பட்டது அரைமணி நேரம்!

இது எப்படி இருக்கு?

முன்னுரிமை யாருக்கு அளிப்பது?



பிரபல அறிவிப்பாளர், வானொலி மேடைக் கலைஞர் திருமதி விசாலம் ஹமீத், கலைஞர் சீ.பீ.எம். காஸிம் இருவரும் 60 ஆண்டுகளுக்கு முன் மேடைகளில் பிரகாசித்தவர்கள்.இருவரும் உடல்நலம் குன்றியவர்களாக உள்ளனர். அவர்கள் நலம் வாழப் பிரார்த்திப்போம்.



இன்றோ நாளையோ என இறைவன் அழைப்புக்குக் காத்திருக்கும் ஒருவருக்கா? அல்லது எப்போதோ மரணித்தவரின் பாரம்பரியம் பேசுவதற்காக?

அதுவும் அன்றைய 16, செவ்வாய், அவரது நினைவு தினமும் அன்று.

நம் தமிழ்ப் பேசும் சமூகம் இரண்டும் யாரையும் வாழும்பொழுதே வாழ்த்து மகிழ மனம் ஒப்பாதது என்பது நூற்றுக்கு மேலேயே சரியானது.

## இனிப்பு

புதுச்சேரி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பாண்டிச் சேரி என்று முன்னொரு காலத்தில் அழைத்தார்கள். "MADRAS TO PONDICHERRY' என்றும் ஒரு தமிழ்ப்படம் வந்தது.

'சென்னை' என்று யாருக்கும் தெரிந்த ஊரிலிருந்து சில மணித்துளிகள் இந்நகரம்.

ஆங்கிலேயர் இலங்கையையும் சென்னையையும் ஆண்ட போது இந்தப் பாண்டிச்சேரியாகிய புதுச்சேரி பிரெஞ்சு அரசு கைவசம் இருந்தது. அதை அவர்கள் தங்களது பிரெஞ்சுக் காலனி' என்றே அழைத்தார்கள். நல்ல போக்குவரத்துப் பாதைகள் நவீன அமைப்பு!

ஆனால் தமிழக அரசு கைவைக்க முடியாது. அது தனி! ஆட்சியும் அப்படி!

தமிழ் இலக்கிய மகா சூராதி சூரர் ஒருவருக்கும் புகலிடம் (தஞ்சம்) கொடுத்த இடம்! நம் நெஞ்சில் நிறைந்திருக்கும் 'முண்டாசுக் கவிஞன்' பாரதியார்.

ஆங்கில ஏகாதிபத்திய அடாவடிகளுக்கு அகப்படாமல் இங்கே சில காலம் வாழ்ந்தார். **'பாரதி தாசன்' சுப்புரத்தினம்** புதுச்சேரியே! இன்னும் நெருங்கி நாம் கள ஆய்வு செய்தால், பற்பல ஆண்டுகள் "இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம்" மூலம் இலங்கைக்கும் ஒரு பாலம் அமைத்த **பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர்,** அவர்தம் அருந்துணைவியார் இங்கே "காரைக் கால்" என்ற அதி நவீனத் துறைமுகப்பட்டினத் திலேயே

மேலும், முஸ்லிம் சமூகமும் கிழக்கிலங்கை போல் பிட்டும் தேங்காய்ப் பூவுமாக ஹிந்து, கிறிஸ்துவப் பெருமக்களும் ஒன்றித்து!

இத்தனையும் ஏன் விவரிக்கிறேன் என்றால், **"முகம்மது கௌஸ்"** என்கிற பாண்டிச்சேரி (புதுச்சேரி) மனிதர் ஒருவர், முருகன் கோயில் ஒன்று கட்டிக் கொடுத்திருக்கிறார்!

என்ன திடுக்? ஏன் திகைப்பு! இன்றையத் தமிழ்நாடு, இன்றைய இலங்கைக்கு இப்போதையக் கால ஓட்டத்திற்கு இதெல்லாம் தேவை!

இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் யூதர்களின் கைகோர்த்து, பள்ளிவாயிலும் வரவேற்று இருக்கை கொடுத்த இறைத் தூதர் நபிகள் நாயகம் (ஸல்) வழியில் இந்த முகம்மது கௌஸ்!

புதுச் சேரி தொடருந்து (ரயில்) நிலையம் விட்டு வெளியில் வருகிறவர்கள் **ஸ்ரீ கௌசிக பாலசுப்பிரமணியர்** திருக்கோயில் தரிசிப்பார்கள். வள்ளி தெய்வானை, கௌசிக பாலசுப்பிரமண்யர் ஆகியோர் வருகிற எம்மதத்தின்ரையும் வரவேற்பர். கோயில் கட்டும் பணிகளை 1970லில் தொடங்கி – 1977லில் முடித்தார் கௌஸ். அப்பொழுது கும்பாபிஷேகம் நடந்த சமயம், கோயிலை நிர்மாணித்தவரின் பெயருடன் இணைத்து ஸ்ரீ கௌசிக பாலசுப்பிரமணய சுவாமி எனப் பெயர் சூட்டினார்கள்.

2002ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாகக் கும்பாபிஷேகம் நடந்தது. அப்பொழுதும் முகம்மது கௌஸை யாரும் மறக்கவில்லை. தூரத் தள்ளவில்லை!

மூன்றாம் முறையாக 2018 ஜுன் மாதத்தில் கும்பாபிஷேகம் நடந்த சமயம் கௌஸ் பெயர் மீண்டும் வழங்கியது.

இனத் துவேசங்களை இல்லாமலாக்கும் ஒரு முயற்சிதான்! முகம்மது கௌஸ் செய்திருப்பது! இதற்கு "மார்க்க சாயங்களை, மதப்பூச்சுகளை" பூசி யாரும் முகம் சுளித்துக் கொள்ளக் கூடாது.

இது இன்றைய காலத்தின் கட்டாயம்!

நல்லிணக்கம் எங்கும் எதிலும் தேவை!

**ஓர் அடிக்குறிப்பு:**

**கேரளக் கரையோரம் மலையாளப் பிரதேசத்தில் 'மலப்புறம்' பகுதியில் இது போன்ற பல நிகழ்வுகள்! அறபுநாடுகளில் வாழ்கின்ற அப்பகுதி முஸ்லிம் இளைஞர்கள் கோயில் புனருத்தாரணம் செய்து கொடுக்க,**

**இந்துக்கள் பதிலுக்கு கோயில் வளாகத்தில் இஃப்தார் நோன்பு துறப்பு நிகழ்ச்சி இங்கே அப்படியொரு காலம் ஏற்படுமா?**




ஐயோ....!

சுகுமாரன் பிடிவாதம் பிடிப்பதைப் பார்த்ததும்,

மலர்விழிக்கு அச்சமாக இருந்தது.

அமைச்சர் அங்கே வரும்போது,

சுகுமாரன் அங்கே நின்றிருந்தால்,

அது பெரிய பிரச்சினையாகிவிடும் என்பது அவளுக்குத் தெரியும்.

இதனால்,

அங்கிருந்து எப்படியாவது அவனை அனுப்பியாக வேண்டும்.

"இதபாருங்க... சுகுமாரன்...அடம் பிடிக்காம போங்க... நாளைக்கி நாங்க சந்திப்போம்... நான் முன்னால போறேன்..." என்று சொல்லியபடியே,

முன்னால் நடந்தால் மலர்விழி

நடந்து செல்லும் அவளை

வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சுகுமாரன்.

மறுநாள்,

காலையில் வேலைக்குச் செல்லும்போது,

வழக்கமாக சந்திக்கும் பஸ்சில் சுகுமாரன் இருக்கவில்லை.

மதியம் சாப்பாட்டு வேளையிலாவது அவன் வந்து தன்னை சந்திப்பான் என்று எதிர்பார்த்தாள் மலர்விழி

ஆனாலும்,

அவன் வரவில்லை

இன்று அவன் வேலைக்கு வந்திருக்க மாட்டானே என்று கூட அவளுக்குத்தோன்றியது.

ஆனாலும்,

மற்றைய நாட்களில்,

அப்படி வராவிட்டால்,

முதல் நாளே அவளுக்கு

போன்பண்ணி சொல்லிவிடுவான்.

அப்படி அவன் அறிவிக்கவில்லை.

அதற்குக் காரணம்,

நேற்று மாலை நடை பெற்ற சம்பவம் தான் என்று அவளுக்குத் தோன்றியது!

அந்த காரணத்துக்காகத்தான் அவன் தன்னை அலட்சியப் படுத்துகிறான் என்பதும் அவளுக்குப் புரிந்தது.

அன்று மாலை,

வழமையை விட சற்றுத் தாமதமாகித்தான் அலுவலகத்தில் இருந்து வெளியேறினாள் மலர்விழி.

பஸ்தரிப்பு நிலையத்தில்,

சுகுமாரன் நிற்பதை தூரத்தில் வரும் போதே அவள் பார்த்து விட்டாள்.

அவனைப் பார்த்ததும்,

அவள் உள்ளத்தில் ஒரு வித மகிழ்ச்சி ஏற்பட்டது,

இதழ்களில் புன்னகையைத் தவழவிட்டபடியே,

அவனை நோக்கி நடந்து வந்தாள்.

ஆனால்,

வழக்கமாகவே அவளைக் கண்டதும்,

அவன் முகத்தில் அரும்பும் அந்த புன்சிரிப்பு,

இன்று மாயமாய் மறைந்திருந்தது.

"நான் நினைச்சேன் இன்னிக்கு நீங்க ஒபீசுக்கு வரல் லேன்னு... எப்ப வந்தீங்க....?" அதே புன்னகையுடன் கேட்டாள் மலர்விழி.

"நான் வரும் போது கொஞ்சம் லேட்டாகிட்டுது... ம்... எங்ககிட்ட பஜிரோ....இன்ட கூலர் எல்லாம் இல்லியே....!" அவன் வார்த்தைகளில்,

கிண்டல்,

கிசுகிசுத்தது.

அவன் இப்படிச் சொன்னதும்,

மலர்விழியின் முகத்தில் இருந்த புன்னகை மறைந்தது.

அவள் வதனத்தில் மழை மேகம்.

அடுத்து,

இருவருக்கும் இடையில்,

மௌனம் பேசியது!

தன்னைப் பற்றி,

சுகுமாரன் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறான் என்பது,

மலர் விழிக்குப் புரிந்து விட்டது.

உடனடியாகவே அதைப் போக்கியாக வேண்டும்.

இருக்கிறமாதிரி உங்க மீது அந்த ஆள் உயிரா இருந்தா.... உங்கள திருமணம் செய்திருக்கணும். அவருக்கு நீங்க ஒன்னும் முக்கியமில்ல.... அவருடைய பெண்கள் லிஸ்ட்டில் நீங்களும் ஒருவர். இன்னும் சொன்னால் பத்தோடு பதினொன்னு... அவ்வளவுதான் உங்களோட முட்டாள்தனத்த அவர் நல்ல பயன்படுத்திறார்...!"

அவன் இப்படிச் சொன்னதும்,

மலர்விழியின் விழிகள்,

மழைத்துளிகளுக்கு,

சவால் விட ஆரம்பித்தன

கைக்குட்டைய எடுத்து,

விழிகளில் ஒற்றிக் கொண்டாள்.

பிறகு,

விம்மி வந்த அழுகையை அடக்கிக்கொள்வதற்கு மிகவும் சிரமப்பட்டாள்.

இதைப் பார்த்ததும்,

# பெண் புத்தி பின்புத்தி என்பதில் இருக்குதா உண்மை இதனால் யாருக்கு ஏற்படப் போகிறது நன்மை?



சுகுமாரன் பரபரப்படைந்தான்.

"இங்க... அழாதீங்க மலர்... போறவாற வங்க எல்லாம் எங்களையே பார்த்துட்டுப் போறாங்க....!"

அவள் தோள் தொட்டு சொன்ன சுகுமாரன்,

பஸ்தரிப்பு நிலையத்தில் சற்றுத் தள்ளி அழைத்துச் சென்றான்.

"நான் பேசியதில் உங்க மனம் கஸ்டப்பட்டிருந்தா என்னைய மன்னிச்சிடுங்க மலர்... உங்க மனச நோகடிக்கிறதுக்காக நான் இப்படி சொல்லல்ல... அவர் உங்களய திருமணம் செய்யிறதா இருந்தா.. உங்களுக்கு ஒரு நல்ல வாழ்வு கெடைக்கிறதா இருந்தா நான் ரொம்பவும் சந்தோஷப்படுவேன் மலர்... அதுக்கு என்ன காரணம் தெரியுமா... நான் உங்களைய ரொம்பவும் நேசிக்கிறேன்... அதனால் நீங்க கஷ்டப்பட்டா என்னால அத தாங்கிக்க முடியாது...!"

விடைபெறும் நேரத்தில் அவன் சொன்ன வார்த்தைகள்,

பசுமரத்தில் அறைந்த ஆணி போல்,

அவள் ஆழ்மனதில் அப்படியே, பதிந்து விட்டது.

இதன்பிறகு,

தன்னையும் அறியாமல்,

தன் இதயம்,

கொஞ்சம் கொஞ்சம் அவன் பக்கம் சாய்வதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

இதனால்,

மலர் விழி கொஞ்சம் பரபரப்படைந்தாள்.

ஒவ்வொரு பெண்ணுடைய வாழ்விலும்,

தான் பெண்மையின் பூரிப்பை அடைந்த பிறகு,

காதலியாக,

மனைவியாக,

தாயாக ஆகவேண்டும் என்ற ஆசை இருக்கத்தானே செய்யும்.

அந்த ஆசையின் காரணமாக சுகுமாரனின் பக்கம் சாய்ந்து செல்லும் தனது மன உணர்வுகளை அடக்கிக் கொள்வதற்காக மிகவும் சிரமப்பட்டாள் மலர்விழி

இப்போது என்ன செய்ய வேண்டும் என்று கூட புரியாமல்,

அவள் தவிக்க ஆரம்பித்து விட்டாள்.

சுகுமாரனின் விருப்பத்தை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல்,

முற்றாகவே வெறுத்து ஒதுக்கவும் முடியாமல்,

திரிசங்கு சொர்க்கத்தில்,

திண்டாடி நின்றாள்

இதுவரைகாலமும்,

எவரையும் ஏமாற்றிப் பழக்கமில்லாத மலர்விழி,

தன்மீது அன்பு, செலுத்தும் அமைச்சரை ஏமாற்ற விரும்பவில்லை.

தன் காதலனை கோபப்படுத்தவும் அவள் விருப்பவில்லை.

இப்போ தெல்லாம்,

ஏதாவது பொருட்களை வாங்கச் செல்வதானாலும்,

மலர்விழியுடன் கூடவே சுகுமாரனும் செல்வான்.

மலர்விழிக்கு வேண்டிய சில உடைகளைக் கூட அவன் தான் தெரிவு செய்வான்,

அவள் அணியும் காலணிகளைக் கூட அவன் தான் தெரிவு செய்து கொடுத்தான்.

இந்த மாதிரி சில சம்பவங்களினால்,

சுகுமாரனுடனான மலர் விழியின் நெருக்கம்,

கொஞ்சம் கொஞ்சமாக இறுக்கமாக ஆரம்பித்தது.

இன்னும் ஒரு பெண்ணின் சட்ட பூர்வமான கணவனாக இருக்கும் தனது காதலனுடன்,

இப்படிச் சுதந்திரமாக எங்கும் செல்லமுடியாது என்பதையும் உணர்ந்திருந்தாள்.

சுகயீன முற்றிருந்த தனது தோழி ஒருத்தியின் வீட்டிற்குச் செல்லவேண்டிய ஒருநாளில்

மலர்விழி அதற்குத்தயாரான போது,

சுகுமாரனும் அவளுடன் செல்வதற்கு முடிவு செய்தான்.

தனது அலுவலகத்தில் வேலை செய்யும் அந்தத் தோழி இருந்த இடம் பத்தரமுல்ல,

இருவரும் அங்கே போய்,

அவளைப் பார்த்து விட்டு,

நாடாளுமன்றம் செல்லும் பாதைவழியாக திரும்பி வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் வந்த பாதை வழியாக இரண்டொரு வாகனங்கள் மாத்திரமே சென்று கொண்டிருந்தன.

ஜனநடமாட்டம் அவ்வளவாக இல்லை.

இருவருமே,

மிகவும் நெருக்கமாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

தனது வலது கைக்குள்,

மலர்விழியின் இடதுகையை புதைத்துக் கொண்டு,

ஊர்ந்து கொண்டிருந்தான் சுகுமாரன்.

நாடாளுமன்றத்தைக் காட்டி.

அவன், என்னவோ சொன்னபோது,

அதைக் கேட்டு ரசித்துச் சிரித்தாள் மலர் விழி.

தங்களை மறந்தபடியே இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள்.

அதே நேரம்,

விரைந்து சென்ற ஒரு பெஜிரோஜீப்,

முன்னால் சென்று நின்று,

மெல்ல பின்னால் வந்தது,

பிறகு,

அவர்களின் அருகில் வந்து நின்றது.

சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டு சென்ற இருவரும்,

தங்கள் அருகில் ஜீப் ஒன்று வந்து நின்றதும்.

நின்று,

நிமிர்ந்து பார்த்தார்கள்.

ஜீப்பைப் பார்த்ததும்,

மலர் விழிக்கு மயக்கம் வருவதைப்போலிருந்தது,

படாரென்று,

சுகுமாரனின் கைக்குள் புதைத்திருந்த தனதுகையை,

இழுத்துக் கொண்டாள்,

அது,

அமைச்சரின்,

ஜீப்.

(தொடரும்)




# யாவரும் கேளீர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 33

**தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்**

***('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்|)***

### மலையக இலக்கியத்திற்கு வளம்சேர்த்த புலோலியூர் க. சதாசிவம்



பிரபல எழுத்தாளரான புலோலியூர் க. சதாசிவம் அவர்களின் ஜனன மாதமாகிய மார்ச் மாதத்தில் அவரது நினைவுகளை மீட்பதாக இப்பத்தி அமைகிறது.

சதாசிவம் 20 03.19.42இல் புலோலியைச் சேர்ந்த புற்றளையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியைப் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்திலும், புலோலி வேலாயுதம் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பெற்றவர். பின்னர் கொழும்பு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவராகப் பயிற்சி பெற்றவர்.

1961ஆம் ஆண்டு 'மரகதம்' என்ற சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற அவரது 'புது வாழ்வு' என்ற சிறுகதையே அவர் எழுதிய முதற் கதை. அக்கதையை எழுதியபோது அவருக்கு வயது பத்தொன்பது.

1964ஆம் ஆண்டில் மலையகப் பகுதியில் வைத்தியராகக் கடமையேற்ற சதாசிவம், அம்மக்களில் ஒருவனாக வாழ்ந்து, அவர்களது வாழ்க்கையை ஆழமாகவும் நுணுக்கமாகவும் நோக்கி இலக்கியம் படைத்தார்.

1972ஆம் ஆண்டில் நாவலர் சபை நடத்திய சிறுகதைப் போட்டியில் சதாசிவத்தின் 'ஒருநாட் பேர்' என்ற சிறுகதை முதற்பரிசு பெற்றது. இக்கதை மலையக மக்களின் வாழ்வியலைப் பின்னணியாகக் கொண்டது. சதாசிவம் வேறும் பல மலையகக் கதைகளைப் படைத்துள்ளார். அச்சிறுகதைகள் அடங்கிய தொகுதி 1995ஆம் ஆண்டில் 'ஒருநாட் பேர்' என்ற மகுடத்தில் வெளியாகியது. இத்தொகுதி மலையகத்தில் பிறக்காத பிறமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரால் வெளியிடப்பட்ட முதலாவது மலையகச் சிறுகதைத் தொகுதி என்ற பெருமையைப் பெற்றது.

சதாசிவம் எழுதிய முதலாவது நாவல் 'நாணயம்'. 1980இல் வெளிவந்த இந்நாவல் வடமராட்சி வாழ்க்கையின் சில அம்சங்களைப் படம்பிடித்துக் காட்டுகின்ற பிரதேசப் பண்பு வாய்ந்த நாவலாகும். இந்த நாவலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது.

1983இல் 'மூட்டத்தினுள்ளே' என்ற மலையக நாவலை எழுதினார். இந்நாவல் வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் மலையகப் பிராந்தியப் பரிசு நாவலாக வெளிவந்தது. அத்தோடு அவ்வாண்டில் வெளிவந்த சிறந்த நாவலுக்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக் கொண்டது.

'ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது' 'புதியபரிமாணம்' 'அக்கா ஏன் அழுகிறாய்? (2006) என்பன சதாசிவத்தின் ஏனைய சிறுகதைத் தொகுதிகளாகும்.

அவரது மனைவி இலட்சுமிப்பிள்ளை ஓர் ஆசிரியை. மகன் கலையழகன் ஒரு டாக்டர். மகள் கலைவாணி ஒரு விஞ்ஞானப் பட்டதாரி.

சதாசிவம் 2002ஆம் ஆண்டிலே ஞானம் சஞ்சிகையின் இணையாசிரியராக இணைந்து கொண்டார். ஞானம் சஞ்சிகையின் வளர்ச்சியில் அவரது பங்களிப்பு முக்கியமானது. ஞானம் சஞ்சிகையில் சிறுகதை வளர்ச்சிக்கென போட்டிகளை ஆரம்பித்து பொறுப்பேற்று நடத்திவந்தார்.

சதாசிவத்தின் இலக்கியப் பணிகளைப் பாராட்டி பல நிறுவனங்கள் அவரைக் கௌரவித்திருக்கின்றன. 'இலக்கிய வித்தகர்' 'இலக்கியச் செம்மல்' என்பன அவற்றுட் சிலவாகும். மல்லிகை தனது 1991 நவம்பர் இதழ் அட்டையில் அவரது படத்தைப் பொறித்துக் கௌரவித்தது.

புலோலியூர் க. சதாசிவம்14.09.2004இல் அமரரானார்.

### கோகிலா மகேந்திரனின் அறிவியல் கதைகள்



ஈழத்தின் புகழ்பூத்த பெண் எழுத்தாளர்களில் ஒருவராக விளங்கும் கோகிலா மகேந்திரனின் அறிவியல் கதைகள் என்ற சிறுவர்க்கான நூல் பார்வைக்குக் கிடைத்தது. கோகிலா மகேந்திரன், சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம், நாடகம், ஆகிய துறைகளோடு பேச்சாளர், உளவளத்துறை சீர்மியர், எனப் பல்துறை ஆளுமை மிக்கவர். ஏற்கனவே இவர் இருபத்திரண்டுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சிறுவருக்கான அறிவியல் கதைகள் என்ற இந்த நூல் 5ஆம், 6ஆம், 7 ஆம் தர




மாணவர்களை இலக்கு வாசகர்களாகக் கொண்டு எழுதப்பட்டது. இந்த நூலில் ஆறு கதைகள் அடங்கியுள்ளன. நான்யார்? என்ற கேள்வியுடன் தனது சுயசரிதையைக் கூறுகிறது டைனோசர். நரி யொன்று நரிமடல் என்ற அடையாளத்துடன் கடிதம் எழுதுகிறது. கொட்டை வெட்டிப்பறவை சொண்டுப்பயணம் செய்கிறது. டொல்பின் மாசற்றார் கேண்மை எனப் பேசுகிறது. சிறுமி ஒருத்திக்குப் பேட்டி வழங்குகிறது முருகைக் கல்லார். பஞ்சவர்ணக்கிளி கிள்ளைமொழி பேசுகிறது. கோகிலா மகேந்திரன் விஞ்ஞான ஆசிரியராகவும் உளவள ஆலோசகராகவும் பணியாற்றியவர். அவர் பெற்ற அனுபங்கள் இந்த நூலை எழுதுவதற்கு நிறையவே பயன்பட்டிருப்பதை நூலை வாசிப்பவர்கள் அறிந்துகொள்வர். நிறைய விஞ்ஞானத் தகவல்களும் அறிவியல் உண்மைகளும் கதையோடு கதையாகப் பின்னிப் பிணைந்துள்ளன. சிறுவர்களின் உளநலம் கருதி எழுதப்பட்ட இந்நூலில் விடயங்களுக்கிடையே பாரம்பரிய மொழிவழக்குகள், பழமொழிகள், கோட்பாடுகள் என்பன ஊடுபாவாக உள்ளடக்கப்பட்டுள்ளமை நூலாசிரியரின் திறமைக்கு சான்று பகர்கிறது. சிறுவர் இலக்கியத்தில் சித்திரங்களின் பங்கு முக்கியமானது. இந்த நூலுக்கான சித்திரங்களை நூலாசிரியரின் பேர்த்தி நயனபாஷினி வரைந்திருக்கிறார். கருவிலே திருவுடைய சிறுமி அவர் என்பதை அவர் வரைந்த சித்திரங்கள் வெளிப்படுத்துகின்றன. வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் அவர்கள் இந்நூலுக்குச் சிறப்பான அணிந்துரை வழங்கியுள்ளார். கண்ணைக்கவரும் வகையில் வழுவழுப்பான ஆர்ட் தாளில் வெளிவந்திருக்கும் இந்நூல் தெல்லிப்பழை சோலைக்குயில் அவைக்காற்று வெளியீடாக வெளிவந்துள்ளது. சிறந்ததும் பயன்மிக்கதுமான இந்த நூலைத்தந்த கோகிலா மகேந்திரனுக்கு எமது பாராட்டுக்கள்.

### கனடாவின் தமிழ்த் தேசிய கீதத்தை இயற்றிய ஈழக்கவிஞர்

1980களில் ஈழப்போர் காரணமாக பெருந்தொகையானோர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். இருப்பினும் அக்காலப்பகுதிக்கு முன்னரே ஈழத்தமிழர் சிலர் கனடாவில் குடியேறியிருக்கிறார்கள். இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்றபின் 1956இல் இலங்கையில் ஏற்பட்ட பலதரப்பட்ட அரசியல் பொருளாதார நிலைமைகள் காரணமாக தாய்நாட்டைவிட்டு வெளியேறி அந்நிய நாடுகளில் தமிழர்கள் குடியேறி யிருக்கிறார்கள். சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டம், பாராளுமன்ற உறுப்பினருக்கு இருந்த கோட்டாமுறை மற்றும் கல்வி தொழில்வாய்ப்பு என்பன 1980க்கு முன்னர் ஈழத்தமிழர்கள் தமது நாட்டைவிட்டு வெளியேறி பிறநாடுகளில் குடியேறுவதற்கு காரணமாயிற்று.

கனடா சுதந்திர ஜனநாயக சமஷ்டி முறையிலான அரசியலமைப்புக் கொண்ட நாடாக விளங்குகின்ற போதும் அது இன்றும் பிரித்தானிய செல்வாக்குக்கு உட்பட்டதாக விளங்குகிறது. இன்றும் பொதுநலவாய நாடுகளின் கூட்டில் அங்கம் வகிக்கிறது. அதன் இன்றைய அரசமைப்பில்கூட பிரித்தானிய அரசிக்குப் பெயரளவில் தலைமையிடம் கொடுக்கப்படுகிறது. ராணியின் பிரதிநிதியாக ஆளுநரும் நியமிக்கப்படுகிறார்

1868இல் கனடாவின் முதலாவது பிறந்ததினம் கொண்டாடப் பட்டது. 1965இல் கனடாவின் தேசியக்கொடி பிரகடனப் படுத்தப்பட்டது. சிவப்பு, வெள்ளை நிறங்களையும் மேப்பிள் இலையையும் கொண்டமைந்த தேசியக் கொடியை எலிசபெத் மகாராணியார் கனடாவின் தேசியக் கொடியாகப் பிரகடனப்படுத்தினார். 1969ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இருமொழிகளும் கனடாவின் ஆட்சிமொழிகளாகப் பிரகடனஞ் செய்யப்பட்டன.. கனடாவின் தேசியகீதமாக 'O Canada Our home and Native Land" எனத்தொடங்கும் பாடல் 1981இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கனடா நாட்டின் 150ஆவது சுதந்திர தினம் 2017 ஜூலை 1ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அவ்வேளையில் தமிழ்மொழி உட்பட மொத்தம் 12 மொழிகளில் கனடா தேசியகீதம் வெளியிடப்பட்டது. அதுவரை ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் மட்டுமே இருந்த கனடா தேசியகீதம், தற்போது நாடுதழுவிய நிலையில் அதிக அளவில் பயன்படுத்தப்படும் மற்றும் பேசப்படும் தமிழ் உள்ளிட்ட 12 மொழிகளில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்மொழியில் கனடா தேசியகீதத்தை ஆக்கியவர் புலம்பெயர் ஈழத்தமிழரான கவிஞர் கந்தவனம் என்பது எமக்குப் பெருமை தருவது.



அவரது தமிழ் மொழிபெயர்ப்பு பின்வருமாறு அமைந்துள்ளது:

***ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ***
***உந்தன் மைந்தர்கள் உண்மை தேசபக்தர்கள்***
***நேரிய வடக்காய் வலுவய் இயல்பாய் நீ***
***எழில் கண்டு உவப்போம் எங்கும் உள்ள நாம்***
***ஓ கனடா! நின்னைப்போற்றி அணிவகுத்தோம்***
***எம் நிலப்புகழை சுதந்திரத்தை என்றும் இறைவன் காத்திடுக!***
***ஓ கனடா! நின்னைப்போற்றி அணிவகுத்தோம்***
***ஓ கனடா! நின்னைப்போற்றி அணிவகுத்தோம்***

**(இனி அடுத்த இதழில்)**



# படித்ததும் பகர்வதும் 37





**சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### ஆசிரியர்களை கௌரவிப்போம்!

ஒவ்வொருவரது வாழ்விலும் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக திகழ்பவர்கள் ஆசிரியர்கள் மனிதனை மனிதனாக மனிதப் புனிதனாக பார் போற்றும் உயர்ந்தோனாக மாற்றுவதற்கு அடிப்படையாக அமைவோர்களில் முக்கியமானவர்கள் ஆசிரியர்கள் என்றால் மிகையல்ல.

நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வை சீராக்கி கொள்ளவும் நமக்கென ஒரு இலட்சியத்தை உருவாக்கி செயல்படவும் அவ் இலட்சியத்தை நோக்கி சரியான பாதையில் பயணிப்பதற்கும் ஆசிரியர்களே துணை நிற்கின்றார்கள். சிறுவர்களாக இருந்தாலும் வளர்ந்த பெரியவர்களாக இருந்தாலும் அவரவர்களுக்கு பிடித்தமான, முன்மாதிரியான, வழிகாட்டியான ஆசிரியர்கள் ஒருவரோ, இருவரோ, ஒருசிலரோ, பலரோ இருக்கவே செய்வர். அத்தகையவர்களை ஒவ்வொருவரும் தம் வாழ்வில் மறந்துவிடவே கூடாது. எம்மால் ஆனா நன்மைகளை அவர்களுக்கு செய்ய தயங்கக் கூடாது. அத்தகையவர்களை தேடிப்பிடித்து உதவி செய்ய முயற்சி செய்தல் வேண்டும்.


வாழ்வில் உயர்ந்த அந்தஸ்துக்களை, பதவிகளை, அடைவுகளை, எட்டிப்பிடிக்க உதவும் ஏணிகளாகவும், சிக்கல்கள் நிறைந்த வாழ்வெனும் ஆற்றைக் கடக்க உதவும் தோணிகளாகவும் ஆசிரியர்கள்தாம் சிறப்பிடம் பெறுகின்றார்கள்.

விதையாக இருக்கும் நம்மை மரமாக்கி மற்றவருக்கு நிழலாக மாற்றுபவர்கள். ஆசிரியர்கள். மூடிக்கிடக்கும் நம் மனதில் இலட்சியம் எனும் சுடர் ஒளியை ஏற்றி நம்மை அறிஞராக, கவிஞராக, மருத்துவராக, காவலராக, தாய்நாட்டை பாதுகாக்கும், இராணுவ வீரனாக உருவாக்கும் நல்வழிகாட்டிகள்.

"நான் உயிரோடு இருப்பதற்கு என் தந்தைக்கு கடமைபட்டிருக்கிறேன். நான் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்கு கடமைபட்டிருக்கிறேன்." என்பது மாவீரன் அலக்ஸ்ஸாண்டர் பகர்ந்த பொன்மொழி

இவற்றை நன்கு சிந்தித்து எமக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்கவும், அவர்களை கௌரவிக்கவும் உறுதிகொள்வோம்.

## நெஞ்சுக்கு நீதி




## நீத்தார் நினைவு

### கலாபூஷணம், தாஜுல் அத்தீப், செய்யிது ஹஸன் மௌலானா



இலங்கையின் மூத்த இலக்கியவாதி; அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளின் முன்னோடி, பிரபல தமிழறிஞர், ஓய்வுபெற்ற ஆசிரியர் என பல்வேறு புகழ்பூத்த ஆளுமைகளுக்கு சொந்தக்காரரான கலாபூஷணம் தாஜுல் அத்தீப் அல்ஹாஜ். எஸ்.ஏ.ஆர்.எம். செய்யிது ஹஸன் மௌலானா அவர்கள் கடந்த வாரம் காலமானார்கள்.

அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளுக்கான ஆரம்ப கர்த்தாவாக முதல் மாநாடுக்கான விழாவை, அதன் பிரதான அமைப்பாளராக இருந்து, தான் பிறந்த ஊரான மருதமுனையில், 1960ம் ஆண்டு சிறப்புற நடாத்தி வெற்றி கண்டவராக இலக்கிய உலகில் இவரது நாமம் அழிக்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளது.


கவிதைகள், இலக்கிய கட்டுரைகள் போன்ற பலவற்றை எழுதிப் புகழ்பெற்ற இவர், இஸ்லாமிய தமிழ் இலக்கிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவதிலும் சிறப்பிடம் பெற்றார். அரபுத் தமிழ் கவிதைகளின் யாப்பமைதி, இஸ்லாமும் தமிழும் இலக்கிய சங்கமம், இறைவனும் பிரபஞ்சமும் (மொழிபெயர்ப்பு) போன்ற நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

1993ம் வருடம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் "தாஜுல் அத்தீப்" என்னும் பட்டம் வழங்கியும், அகில உலக இஸ்லாமிய தமிழிலக்கிய ஆறாவது மாநாடு தமிழ்நாட்டில் நடைபெற்றபோது கலைஞர் மு. கருணாநிதியால் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி, நினைவுச் சின்னம் பாராட்டுப் பத்திரம் வழங்கியும், இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் "இஸ்லாமிய இலக்கியக் காவலர்" பட்டம் வழங்கியும், இலங்கை அரசாங்கத்தினால் கலாபூஷணம் பட்டம் வழங்கியும் இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். கம்பன் கழகம் 2015ம் ஆண்டு கொழும்பில் ஏற்பாடு செய்த கம்பன் விழாவில் பாராட்டும், அறக்கட்டளை விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் அவர்களின் மாணவராகவும், பல பிரபலங்களின் ஆசிரியாராகவும் திகழ்ந்த, கிழக்கின் இலக்கிய முதுசங்களில் ஒருவரான செய்யிது ஹஸன் மௌலானா அவர்களுக்கு அல்லாஹ் தனது மேலான சுவனத்தை வழங்கியருள்வானாக!

## புது வரவு

### வெட்டவெளியில கொட்டிக் கிடக்குது



பாடசாலையில் படிக்கும் போதே மாணவர்கள் புத்தகங்கள் வெளியிடுவது மிக அரிதாகவே இடம்பெறுகிறது. இந்த வரிசையில் கொழும்பு 12. அல் ஹிக்மா கல்லூரி மாணவன் ஏ. எம். எம். அனஸ் எழுதிய "வெட்டவெளியில கொட்டிக் கிடக்குது" என்ற கவிதை நூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இவர் வகவம் எனும் வலம்புரி கவிதா வட்ட மாதாந்த கவியரங்கில் தவறாது கவி பாடும் மாணவக் கவிஞன்.

தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதி, கலாபூஷணம் கலைவாதி கலீல் இவரைப்பற்றி "இந்த பிஞ்சுக் கவிஞன் வழமையாகவே வலம்புரி கவிதா வட்டத்தின் பௌர்ணமி மேடைகளில், தமிழ்வாடை வீசும் வண்ணம் கவிதைகள் பாடிவரும் வலம்புரி கவிஞன் தான். வகவத்தின் தொட்டிலில் தாலாட்டி வளர்க்கப்படும் குட்டிக் கவிஞன் இவன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

'சத்திய எழுத்தாளர்' கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி, "இவருக்கு கவிதை கை வந்த கலையாக மாறி வருகிறது. துாண்டினால் துலங்கக்கூடியவர் இவர் என்பது எனது கணிப்பீடு." என்கிறார். "இவன் கவிதைகள் வாசிக்க மட்டுமல்ல, உள்ளே சென்று வசிக்கவே வழி விடும் வாசமானவை." எனப்பாராட்டுகிறார் இவரது ஆசிரியை எம். என்.எப். மர்ஜான்.

"வெட்டவெளியில கொட்டிக் கிடக்குது" கவிதை நூலை வாங்கி இவ் இளம் கவிஞனின் வளர்ச்சிக்கு உதவுவது இதனை வாசிப்போரின் பொறுப்பாகும்.

நூலாசிரியர்: ஏ. எம். எம். அனஸ், வெளியீடு: கொழும்பு 12. அல் ஹிக்மா கல்லூரியின் ஹிக்மத் பதிப்பகம்., பக்கங்கள்: 20+57, உள்ளடக்கம்: 40 சிறு கவிதைகள். விலை : ரூபா. 270/=.

## சிந்தனை செய் மனமே

### வயதானவர்கள் முட்டாள்கள் அல்ல



ஒரு பெண் தன் தந்தையுடன் பேசிக்கொண்டிருக்கும் போது, அவளைக் காண அவளது தோழன் வருகிறான். உடனே அந்த பெண் அவனிடம் "நீ பாமுக் எழுதிய 'அப்பா வீட்டில் இருக்கிறார்,' என்ற ஆங்கில நாவலை வாங்க வந்தாயா?" என்று கேட்டாள். உடனே அவன் அந்த பெண்ணிடம், "நான் ஹூம்ஸ் எழுதிய, 'நான் எங்கே காத்திருப்பது உனக்காக' என்ற ஆங்கில நாவலை வாங்க வந்தேன்" என்றான். உடன் அந்தப் பெண், "அந்த புத்தகம் இல்லை, எனவே நீ என்னிடம் உள்ள கிரிஷ் எழுதிய "மா மரத்துக்கடியில் காத்திரு' என்ற புத்தகத்தை பெற்றுக்கொள்". என்றாள்.

உடனே அவன் அந்த பெண்ணிடம், "நாளை பள்ளிக்கு வரும்போது 'ஐந்து நிமிடத்தில் உன்னை அழைக்கின்றேன்' என்ற ரிடெய்ல் மேனேஜ் மென்ட் புத்தகத்தை கொண்டு வா" என்றான். உடனே அந்த பெண் அவனிடம், "பகத் எழுதிய 'நான் உன் நம்பிக்கையை காப்பாற்றுவேன்' என்ற புத்தகத்தையும் கொண்டு வருகிறேன்." என்றாள்.

அப்போது அந்த பெண்ணின் தந்தை அவளிடம், "இவன் இவ்வளவு புத்தகத்தை படிப்பானா?" என்று கேட்கிறார். அதற்கு அந்த பெண், "ஆமாம் அப்பா, அவன் மிகவும் அறிவும், புத்தியும் மிகுந்தவன்." என்று கூறினாள். உடனே பெண்ணின் தந்தை சொன்னார், "நீ அவனுக்கு ராபின் ஷர்மா எழுதிய 'வயதானவர்கள் முட்டாள் இல்லை.' என்ற புத்தகத்தையும் மறக்காமல் கொடு." என்றார்!"

## வாசித்ததில் வசீகரித்தது

என்னைக் கவர்ந்த, கவிஞர் வாலியின் 'தன்னிலை விளக்க கவிதை' இது. நிச்சயம் உங்களையும் வசீகரிக்கும் என் நம்புகிறேன்.

### முட்டையிடும் பெட்டைக்கோழி!



இங்கே நான்
வண்ணமொழிப் பிள்ளைக்குக்
தாலாட்டும் தாய்;

அங்கே நான்
விட்டெறியும் எலும்புக்கு
வாலாட்டும் நாய்!

எந்தப் பா சினிமாவில்
எடுபடுமோ? விலைபெறுமோ?
அந்தப்பா எழுதுகிறேன்;
என் தப்பா? நீர் சொல்லும்!

மோனை முகம் பார்த்து
முழங்கிட நான் முயற்சித்தால்
பானை முகம் பார்த்தென்
பத்தினியாள் பசித்திருப்பாள்

கட்டுக்குள் அகப்படாமல்
கற்பனைச் சிறகடிக்கும்
சிட்டுக்கள் நீங்கள்;
சிறியேன் அப்படியா?

மெட்டுக்குள் கருத்தரித்து
மெல்லவே இடுப்புநோகத்
துட்டுக்குத் தகுந்தவாறு
முட்டையிடும் பெட்டைக்கோழி!

**கவிஞர் வாலி**

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2021 மார்ச் 21 ஞாயிற்றுக்கிழமை
ரெஜினா

# ஒலிம்பிக்கிலும் அமெரிக்காவின் விடாப்பிடி

ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப விழாக்கள் படு கோலாகலமாக இருக்கும். ஒவ்வொரு நாட்டு வீரர்களும் அணிவகுத்துச் செல்வது தனி அழகு. இதன்போது ஒவ்வொரு நாடும் போட்டியை நடத்தும் நாட்டு அதிகாரிகள் இருக்கும் இடத்தை அடையும்போது தமது தேசியக் கொடியை சற்று தாழ்த்தி மரியாதை செலுத்தும். இது காலாகாலமாக நிகழ்ந்துவரும் சம்பிரதாயம். ஆனால், அமெரிக்கா எங்கே சம்பிரதாயத்தை மதித்தது. அமெரிக்கா எப்போதுமே தனது கொடியை உயர்த்திக் கொண்டே தான் அணிவகுப்பில் பங்குகொள்ளும். இது தெரியாமல் சில அரசியல் விமர்சகர்கள் அரசியல் வியாக்கியானங்கள் கூட சொல்வதுண்டு. ஆனால் எந்த ஒரு நபருக்காவும் விடயத்திற்காகவும் தேசிய கொடியை தாழ்த்துவதை 1940களிலேயே அமெரிக்கா சட்டவிரோதமாக்கிவிட்டது.



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# லினன்ட் பாஷா இல்லை என்றால் பிரமிட்டுகள் இல்லை

நைல் நதியில் அணை கட்டுவதற்கு திட்டமிடப்பட்டபோது பேசாமல் பிரமட்டுகளை அகற்றிவிடும்படி எகிப்து அரசு உத்தரவு போட்டது. அப்போது எகிப்தின் தலைமை பொறியியலாளராக இருந்த லினன்ட் பாஷாவுக்கு இந்த திட்டம் பிடிக்கவில்லை. அதற்காக திட்டத்தை நிராகரித்தால் அரச குற்றமாகி பதவி பறிபோகும். வரும் புதிய பொறியியலாளர் திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுப்பார். எனவே, அவர் தந்திரமாக ஒரு வேலை செய்தார். பிரமிட்டை அகற்றும் வேலை செலவு மிக்கது என்று போலியாக கணக்குக் காட்டினார். அரசும் பயந்து திட்டத்தை கைவிட்டது.





# ‘மௌஸ்’ என்று பெயர் வைத்தவர் யார்?

அமெரிக்க பொறியியலாளர் டக்லஸ் எங்கல்பேர்ட் 1970இல் தனது கண்டுபிடிப்புக்கு காப்புரிமை பெற்றுக்கொண்டார். சின்னதாக ஒரு மரப்பலகை பெட்டியில் கீழே உலோக சக்கரம் பூட்டியிருந்தது. பின்னால் அதனை கம்பி ஒன்று இணைத்திருந்தது.

பார்க்க விசித்திரமாக இருந்த அந்த பொருளுக்கு அவர் வைத்த பெயர், ஒரு காட்சி அமைப்புக்கான எக்ஸ் வை நிலை காட்டி இந்த குட்டி பொருளுக்கு இத்தனை பெரிய பெயர் கொண்டு அழைப்பது சிரமமாக இருந்தது. எங்கல்பேர்ட்டின் குழுவினர் அழைப்பதற்கு இலகுவாக இதனை வண்டு என்று அறிமுகப்படுத்தினார்கள். கணனித் திரையில் அம்புக்குறி அங்கும் இங்கும் செல்வது வண்டு பறப்பது போல் இருப்பதால் இந்தப் பெயர் பொருத்தமாக இருக்கும் என்று அவர்கள் நம்பினார்கள்.

ஆனால் அந்த பொருளை பார்த்தால் பின்னால் வாலொன்று இருக்க எலி போல இருந்தது. எனவே எல்லோரும் மௌஸ் என்று அழைக்கவானார்கள். அதற்காக முதலில் மௌஸ் என்ற பெயரை வைத்தவர் யார் என்பதை தேடிப்பிடிப்பது கடினம்.




# உலகுக்கு தெரியாத ஒரு நாடு



கிழக்கு ஐரோப்பிய நாடான மோல்டோவாவில் பிரிந்து போன ஒரு பிரதேசம் இருக்கிறது. அதற்கு பெயர் ட்ரான்ஸ்னிஸ்ட்ரியா. டனிஸ்டர் நதிக்கும் உக்ரைன் நாட்டு எல்லைக்கும் இடையிலான அந்த குறுகிய நிலப் பகுதிக்கு சொந்தமான நாணயம், ஜனாதிபதி, அரசாங்கம், எல்லைகள் என்று எல்லாமே இருக்கின்றன. அங்கிருக்கும் மக்கள் கூட தாம் மோல்டோவா நாட்டவர்கள் அல்ல என்று அடித்துச் சொல்கிறார்கள். ஆனால் பாருங்கள் இந்த உலகுக்கு பரீச்சயம் இல்லாத நாட்டை ரஷ்யாவை தவிர உலகில் வேறு எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை.

# இப்படியும் ஒரு நாடா?



லிச்சன்ஸ்டைன் உலகில் மிகச் சிறிய நாடுகளில் ஒன்று. சரியாக சொல்வதென்றால் உலகின் ஆறாவது மிகச்சிறிய நாடு. சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்திரிய நாடுகளுக்கு இடையில் இருக்கும் இந்த குட்டி நாடு வெறுமனே 62 சதுர மைல்கள் பரப்பளவு கொண்டது. ஒரு தடவை சுவிட்சர்லாந்து தெரியாத்தனமாக இந்த நாட்டை ஆக்கிரமிக்க அறிவுறுத்தலுக்கு பின் சுவிஸ் இராணுவம் வெளியேறிய சுவாரஸ்யமான வரலாறு எல்லாம் உண்டு. என்றாலும் லிச்சன்ஸ்டைனின் சிறப்பம்சம் என்னவென்றால் உலகில் குற்றச்செயல்கள் குறைந்த நாடுகளில் இது ஒன்று. 37,000 மக்கள் தொகை கொண்ட இந்த நாட்டில் சராசரியாக மக்கள் தமது வீடுகளைக் கூட பூட்டிச் செல்வதில்லையாம். இங்கே கடைசியாக கொலை ஒன்று இடம்பெற்று 20 ஆண்டுகள் கடந்து விட்டன.



# நீரின்றி அமையாது உலகு

## நாளை உலக நீர் தினம்



**நீரின்றி அமையாது உலகு எனும் வள்ளுவனின் கருத்து நீரின் அவசியத்தை சுருக்கமாக விபரிக்கின்றது. ஏனெனில் புவியின் ஒவ்வொரு உயிரினமும் நீரைச்சார்ந்தே நிலைபெற்றுள்ளன. அதுமட்டுமல்லாது மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீர் அவன் உயிர் வாழ அத்தியவசியமான ஒன்றாக காணப்படுகின்றது.**

அந்த வகையில் புவியில் வெறும் 29 % நிலப்பரப்பாக காணப்பட மீதி 71% நீர்ப்பரப்பை கொண்டே சூழ்ந்தமைந்துள்ளது. இம்மொத்த நீரளவில் 97.5 சதவீதம் உப்பு நீராகும். எஞ்சியிருக்கும் 2.5% நீரே தூய்மையான நன்னீராகும். இது பனிக்கட்டி,நிலத்தடி நீர் நதி, குளம் என்ற ரீதியில் மேற்பரப்பு நீர்நிலைகளாக அமையப்பெற்றுள்ளன. இதிலிருந்தே நீரின் மூலமான தேவைகளை மனிதன் பூர்த்தி செய்து கொள்கின்றான் . இக்குறுகியதும் அரியதுமான நீர் வளம் இன்று இயற்கை மற்றும் மானிட செயற்பாட்டால் அதன் தூய்மையை இழந்து வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை தொடருமானால் புவிக் கோளத்தில் உயிரினங்களின் இருப்போ சாத்தியமாகாது. ஆகவே இந்நிலையானது மாற்றப்பட வேண்டும்; ஈடுசெய்ய முடியாத பெறுமதிமிக்க வளமானது பாதுகாக்கப்பட வேண்டும்; அதன் பெறுமதியை உணர்ந்து ஒவ்வொரு தனிமனிதனும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் இல்லாவிடின் முழு உலகமும் பல சவால்களை வருங் காலங்களில் எதிர்கொள்ள வேண்டிவரும். அந்த வகையில் நீரின் மதிப்பின் அறியாமையே இன்று உலகளவில் 2.2 பில்லியன் மக்கள் சுத்தமான நீரைப் பெற முடியாதளவுக்கு அது தரமிழந்துபோயுள்ளது. அதுமட்டுமில்லாது 2040 ஆம் ஆண்டில் நீரின் தேவையானது 50 சதவீதமாக அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே எதிர்காலத்தில் நீரானது ஒரு சவாலாக அமையும் எனவும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

எனவேதான் இவ்வாறானவற்றிலிருந்து எம்மையும் சூழலையும் மீட்டெடுப்பதற்காக நீர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு வருடமும் ஐக்கியநாடுகள் சபையின் கீழ் நீர் தொடர்பான விழிப்புணர்வு தினமாக உலக நீர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது 1922 ஆம் ஆண்டு ரியோடி ஜெனிரோவில் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான மாநாடு இடம்பெற்ற போது ஐக்கிய நாடுளின் பொதுச் சபையினால் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 22 ஆம் திகதி உலக நீர் தினமாக அறிவிக்கப்பட்டது . இத்தினமானது நீரின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டக்கூடிய ஒவ்வொருவிதமான தொனிப்பொருளில் 1993 இலிருந்து சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. இதன்மூலம் நீர்வள பாதுகாப்பை வலுப்படுத்தி நாளுக்கு நாள் அதிகரிக்கும் நீர் பற்றாக்குறை பிரச்சினையை தீர்ப்பது என்பதே பிரதானமான நோக்கமாகும். அதற்கிணங்க மக்களுக்கு மத்தியில் விரிவான பிரச்சாரங்களை ஏற்படுத்தி நீர் வளம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது . அதன்படி 2021ஆம் ஆண்டிற்கான நீர் தினத்தின் தொனிப் பொருளானது "நீரை மதிப்பிடுதல்(valuing water)"என்பதாகும் .அதாவது நீரில் மக்கள் வைத்திருக்கும் சுற்றுச்சூழல், சமூக மற்றும் கலாச்சார மதிப்பை உள்ளடக்கி நிற்கின்றது. இன்றைய உலகில் நீரின் மதிப்பானது அதன் விலையை விட உயர்ந்தது எனலாம் ஏனெனில் நீரின் தேவையானது பரந்துபட்ட ஒரு தளத்தைக் கொண்டிருப்பதன் காரணமாக சமூக மற்றும் பொருளாதார முக்கியத்துவமுடையதாக இருக்கின்றது. வீட்டு தேவை,உணவு, கலாச்சாரம், சுகாதாரம் கல்வி, பொருளாதாரம் மற்றும் இயற்கை சூழலின் ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு மகத்தான ஒரு பங்களிப்பினை கொண்டுள்ளது. ஆகவே நீரின் மதிப்பு அதன் உண்மை பற்றிய விரிவான புரிதல் இல்லாமல் இவ் ஈடுசெய்யமுடியாத வளத்தை எங்களால் பாதுகாக்க முடியாது.

சுவை மணம் என எக் குணங்களும் அற்ற இயற்கை வளங்கலுள் அரியதுமான நீரானது ஒரு மனிதன் உயிர்வாழ மிகவும் அத்தியவசியமான ஒன்றாகிறது. ஏனெனில் ஒரு மனிதன் உணவு இல்லாமல் கூட ஒரு மாதம் வரை வாழ்ந்து விடலாம் ஆனால் நீர் இன்றி மூன்று தொடக்கம் ஐந்து நாட்களுக்கு மேல் உயிர் வாழ முடியாது. ஆகவே நீரின் இல்லாமை நாளை நம்மையும் இவ்வுலகத்தில் இல்லாமற்போகச் செய்யலாம். அதுபோல மனித நாகரிகங்கள் நதிக்கரை நீர்நிலைகளை அடுத்தே செழுமையாக இருந்ததாக வரலாற்று வழி அறியப்படுகின்றது. அதனால் ஆதி காலம் தொட்டே மனிதகுலத்தின் நிலைப்பேற்றிற்கு நீரின் தேவை பிரதானமாக இருந்து வந்தது என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது. நீரானது அடிப்படைத் தேவைகள் மட்டுமன்றி இன்று தேசிய ரீதியிலும் ஒரு பாரிய பங்களிப்பை வழங்குகின்றது. ஏனெனில் விவசாயத்தை பொருளாதாரமாக கொண்ட நாடுகளில் விவசாயத்திற்கு பெருமளவிலான பங்கினை வழங்குவதோடு, இலங்கை போன்ற தீவுகளாக காணப்படும் நாடுகளில் கரையோர நீர்நிலைகள் சுற்றுலாத் துறையின் மூலம் அந்நிய செலாவணியை நாட்டிற்கு ஈட்டியும் கொடுக்கின்றன அதுபோல, நீர்மின் உற்பத்தி, போக்குவரத்து எனவும் அதன் பங்களிப்பு பரந்துபட்டதாக காணப்படுகின்றது.

மனித உடலின் சீரான தொழிற்பாட்டுக்கு கூட நீரானது அத்தியாவசியமாகும்.மனித உடல் எடையில் 60−75% நீர் உள்ளது. உணவு சமிபாடு, உடல் வெப்பநிலை சீராக்கல், சிறுநீர் தொகுதியின் சீரான இயக்கம் என்பவற்றிற்கு இன்றியமையாத ஒன்றாக நீர் காணப்படுகின்றது. எனவே உடலில் நீரானது குறைவடையும் போது உடலின் சீரான செயற்பாடு சீர்குலைந்து நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாகின்றன. ஆகவே நீர் உயிர் காக்கும் அருமருந்தாக காணப்படுகின்றது. சுற்றுப்புறச் சூழலில் வானிலை காலநிலையில் சீராக்குதல்,ஒளித்தொகுப்பு மற்றும் சுவாச முறைகள் போன்ற சூழல் சமநிலை செயற்பாடுகளும் நீரை கொண்டு இயங்குகின்றன. எனவே மனித சுகாதாரத்திற்கும் மனிதனை சூழவுள்ள சூழலின் நிலைப்பேற்றிற்கும் நீர் இன்றியமையாது என்பதை மறுக்கமுடியாது.

இவ்வாறு எண்ணற்ற மதிப்புகளைக் கொண்ட இவ்வகை வளமானது மனிதன் சூழலை நேசித்து வாழும்போது அது அவ்வாறே பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இன்றைய காலங்களில் நீர் வளம் கிடைக்காத இடங்களை காட்டிலும் இருக்கும் இடங்களில் மனித தொழில்நுட்பத்தின் முன்னேற்றமும் தேவையும் மிகைத்து காணப்படுவதால் அது பயனற்ற வகையில் வீணடிக்கப்படுகிறது.இதனாலேயே குடிநீர் பற்றாக்குறை, காலநிலை மற்றும் அதனோடு இணைந்த சவால்கள் போன்ற கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு பிரதான பங்காளி மனிதனே ஆவான். இன்று விவசாய மற்றும் கைத்தொழில் கழிவுகள் என்பன ஆறு,குளங்கள், நதிகள், சமுத்திரம் என்ற நீர் நிலைகளில் கலக்கப்படுகின்றன.வளரும் நாடுகளில் 90 சதவீதமான கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் உள்ளூர் நிலைகளில் விடப்படுகின்றன.இதன் மூலம் நீரானது தன் தரத்தை இழந்து மனிதனுக்குப் பயன்படாத நீராக மாற்றமடைகின்றது.இதனாலேயே நீரின் தேவை இன்று அதிகமாகியுள்ளதுடன் மூன்றாவது உலக யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அது குடிநீருக்காக கூட காணப்படலாம் என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது .எனவே நீரை பேணி பாதுகாக்காவிடின் வெறுமனே இவ்வெதிர்வு கூறல்கள் நாளை வரலாறுகளாக கூட ஆகலாம். ஏனெனில் நீரின் மாசுபாடு மற்றும் மாசின் மூலமான சுகாதாரமின்மை என்பது பயங்கரமான ஒரு நெருக்கடியைத் தோற்றுவிக்ககூடியதாகும். எனவே தான் நீரை பாதுகாப்பதிலும் பாதிப்பதிலும் மனிதனின் பங்கு அளப்பரியது என்று கூறுவதும் மிகையாகாது.

ஆகவே நீரின் மாசுபாட்டிற்கும் தரமிழப்பிற்கும் மனிதன் காரணமாவதில் இருந்து அதனை பேணிப் பாதுகாக்க கூடிய ஒருவனாக அவன் மாற வேண்டும்;தன்னையும் தன் சூழலையும் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வை தன்னுள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்; நீரின் மதிப்புகள் தெரியாத அறியாமை எனும் உலகில் இருந்து அவன் வெளிவந்து அதன் மதிப்புகள் தேவைகள் உணர்ந்து செயற்படுவது சூழலின் அங்கி என்ற வகையில் அவனது தலையாய கடமையாகும்.

**பாத்திமா பர்வின்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

# பிறந்த நாள் வாழ்த்து

உங்கள் அபிமான செந்தூரம் இதழில் உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை பிரசுரிக்க தீர்மானித்திருக்கிறோம். குழந்தைகளின் அழகிய நிழற்படம் ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தால் களமமைத்துக் கொடுக்க தயாராக இருக்கிறோம். குழந்தையின் முழுப் பெயர், பெற்றோரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.



அனுப்ப வேண்டிய முகவரி:

**பிறந்தநாள் வாழ்த்து, செந்தூரம், தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல. 834, கொழும்பு.**
**Senthooramtkn@gmail.com**

செந்தூரம் பிறந்த நாள் [illegible] செல்வங்களின் படங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கோ 0714901181 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ அனுப்பலாம்.

ஹிதாபத்
முதலாவது பிரந்த நாள்
அஜ்மல்கான்
பொத்துவில்



*ஒரு சொல் பேச்சிலே*
*உள்ளம் கனியவைத்து*
*கள்ளமில்லா சிரிப்பினிலே*
*உள்ளம் நெகிழவைக்கும்*
*மழலை அதன் சிரிப்பினிலே*
*உலகம் கண்டேன்!!!*

ஏ.எச் பாத்திமா
சபீஹா ஸம்றாத்
நிந்தவூர்



# பாம்பேய் மனிதன் ஏன் கல்லானான்?



பாம்பேய் (Pompeii) மக்கள் என்பவர்கள் யார்?ஏன் அவர்கள் கல்லாக மாறினார்கள்? என்பவை பற்றி இப்பதிவில் தெளிவாக பார்க்கலாம் வாருங்கள்.

வரலாறு பாடப் புத்தகத்தில் நாம் மொகஞ்சதாரோ அல்லது சிந்து சமவெளி நாகரிகம் பற்றி படித்திருப்போம். இந்நகரம் மண்ணில் புதையுண்டு அழிந்து போன ஒரு நகர நாகரிகம் என்பது நாம் அறிந்ததே.... ஏறத்தாழ இதேபோன்று தான் பாம்பேய்நகரமும் வரலாற்றில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு புதைந்துபோய் அழிந்து போனது.......

அப்பொழுதைய ரோம் பேரரசின் ஆளுகைக்கு உட்பட்ட நகரம் தான் பாம்பேய். தற்போதைய இத்தாலி நாட்டின் கட்டுப்பாட்டில் காட்சி தளமாக உள்ளது.

இத்தாலியில் உள்ள நேப்பிள்ஸ் வளைகுடா கடற்கரையின் அருகில் ஒரு மிகப்பெரிய மலை உள்ளது..... அது ஒரு சாதாரண மலை அல்ல பல ஆபத்துக்களை நிகழ்த்திய எரிமலை..... அந்த எரிமலையின் பெயர் வெசுவியஸ் மலை(Mount Vesuvius).

2000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த வெசுவியஸ் எரிமலையை ஒட்டி பல நகரங்கள் இருந்துள்ளது....அதில் குறிப்பிடத்தக்க பெருநகரங்களாக பாம்பேய் (Pompeii) நகரமும், ஹெர்குலேனியம்(Herculaneum) நகரமும் ஆகும்.... இங்கே பல நகரங்கள் உருவானதற்கு முக்கிய காரணம் நேப்பிள்ஸ் (Naples) கடற்கரையே.... ஆதலால் இக்கடற்கரையை ஒட்டி அப்போதைய கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கையை பற்றி சரியாக தெரியவில்லை.. இருப்பினும் பாம்பேய்நகரில் மட்டும் ஏறத்தாழ 25000 பேர் வாழ்ந்திருப்பார்கள் என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்....இந்த நேப்பிள்ஸ் கடற்கரையை ஒட்டி வாழ்ந்த நகரத்தார் உணவகம், கலைநிகழ்ச்சி கூடம், துறைமுகம், விளையாட்டு அரங்கம், பொதுக்கழிப்பிடம் என்று கட்டட அமைப்பிலும், நாகரிக வளர்ச்சியிலும் செல்வ செழிப்பாக





புகழ்பெற்றிருந்தார்கள் என்று வரலாற்று ஆய்வாளர்கள் தங்களது ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறாக எப்பவும் பரப்பரப்பாக இருந்து கொண்டிருந்த நேப்பிள்ஸ் கடற்கரையை ஒட்டி வாழ்ந்த நகரவாசிகள், அந்த கடற்கரையை ஒட்டியுள்ள, முதலிலே குறிப்பிட்ட வெசுவியஸ் எரிமலையால் ஏற்படும் ஆபத்தை உணரவில்லை.....ஏனெனில் வெசுவியஸ் எரிமலை அப்பொழுதைய காலகட்டத்தில் அதாவது கி.மு 79 க்கு முன்பு 40க்கும் மேற்பட்ட முறை அவ்வப்போது புகையை கக்கிய வண்ணம் இருந்தது..... இந்த எரிமலையை ஒட்டி வசிக்கின்ற மக்கள் இதையெல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாததற்கு முக்கிய காரணம்...., அறிவியல் வளராத கால கட்டம் என்பதால் அந்த எரிமலையை கடவுளுக்கு நிகராக அம்மக்கள் நினைத்தனர். கடைசியில் தான் தெரிந்தது அந்த எரிமலை கடவுள் அல்ல தங்களின் உயிரை பறிக்க வந்த எமன் என்று.......

கி.மு 79 ஆம் ஆண்டு ஒரு நாள் வழக்கம் போல் பாம்பேய் மக்களுக்கு அன்றைய விடியல் விடிந்தது, ஆனால் அந்த விடியல் தான் இவர்களுக்கு கடைசி விடியலும் கூட. காலை 8 மணி இருக்கும் பெரும் சப்தத்துடன் வெசுவியஸ் எரிமலை புகையை கக்கியது. அந்த எரிமலையை ஒட்டி உள்ள மக்களின் அலட்சியப்போக்கால் இது "ஏதோ கடவுளின் திருவிளையாடல்" என்று நினைத்து கொண்டு தங்களது பணிகளை வழக்கம்



போல் தொடர்ந்த வண்ணம் இருந்தனர். பறவைகள் அனைத்தும் வானில் வட்டமிட்டு எச்சரிக்கை விடுகின்றது....

நண்பகல் 1 மணி இருக்கும்...கொஞ்சமாக வந்த புகை பெரும் சப்தத்துடன் கரும் புகையாக மாறி அதிக அளவில் வெளியேறுகிறது. தற்போது மக்களுக்கு பயம் ஏற்பட்டு பரப்பரப்புடன் தப்பிக்க முற்படுகின்றனர். கொஞ்சம் கொஞ்சமாக புகை ஏரிமலையை ஒட்டியுள்ள பாம்பேய்போன்ற நகரங்களுக்கு பரவவும் செய்தது. எரிமலை வெடித்து நெருப்பு பிழம்புடன், எரி கற்களையும் மழையாக வாரி இறைக்கின்றது. தப்பிக்க நினைத்த மக்கள் எரிமலையில் இருந்து வெளியிடப்பட்ட $CO_2$ கலந்த புகையால் ஆங்காங்கே முடங்குகின்றனர்.

நண்பகல் 3 மணி இருக்கும்... தற்போது அந்த நகரம் முழுவதும், அழுகுரலும், கூச்சலுமாக இருக்கிறது. எல்லா இடமும் எரிகற்கலும், புகையும், சாம்பலுமாய் காட்சி அளிக்கிறது. $CO_2$ வாயுவால் மக்கள் சுவாசிக்கவே சிரமப்படுகின்றனர்.... எரிமலை சீற்றம் அதிகரித்து அங்குள்ள மக்கள் ஒவ்வொருவராக இறக்கவும் செய்கின்றனர். எரிகற்கலால் அங்குள்ள மாடமாளிகைகள் அனைத்தும் தரைமட்டமாகிறது....

மாலை 5 மணி இருக்கும்....ஒட்டு மொத்த பாம்பேய் நகரமும், எரிமலை சீற்றத்தால் நரகமாக காட்சியளிக்கிறது. நகரவாசிகள் அனைவரும் இறக்கின்றனர். அந்த இரவு விடிவதற்குள் ஒட்டுமொத்த பாமெ்பெயி நகரமும் எரிமலை சாம்பலால் மூடப்படுகிறது.

(தொடரும்)






என் கணவருக்கு
நான்தான் சார் உலகமே

அதான் உலகம் எப்ப
அழியும்ன்னு அடிக்கடி
எல்லாரையும்
கேட்டுக்கிட்டிருக்காரா?

மனைவி : தூக்கத்தில் ஏன் சிரிக்கிறீங்க..?
கணவன் : கனவுல அனுஷ்கா வந்தா..!
மனைவி : அப்புறம் ஏன் கத்துனீங்க.?
கணவன் :
நடுவுல நீ வந்துட்டா....



# சிரீ...சிரீ...தரும் மகிழ்ச்சி








கணவன் : சொரி டார்லிங் இன்னிக்கி வீட்டுக்கு வரமுடியாது போல
மனைவி : ஏன்
கணவன் : கார்ல எனனோ ஸ்டீயரிங், அக்ஸலரேட்டர், க்ளட்ச், ப்ரேக் எல்லாத்தையும் திருடிட்டுப் போயிட்டான்.
மனைவி : தண்ணியடிச்சிருக்கியா
கணவன் : கொஞ்சம் லைட்டா அடிச்சிருக்கேன்
மனைவி : முதேவி முதல்ல பின் சீட்டிலேருந்து முன் சீட்ல போய் உட்கார்ந்து காரை எடுத்திட்டு வீட்டுக்கு வந்து தொலை.

ஒரு கால் உடைந்த ஒருத்தன்
ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகுறான்.
பக்கத்து பெட்ல உள்ளவனுக்கு
இரண்டு கால்லயும் பேண்டேஜ்.
பாவமாக பார்த்து எண்ணி கொண்டான்
ஒருவேளை அவருக்கு ரெண்டு
பொண்டாட்டி- ஆ இருக்கும் என்று.



அம்மா: வாஸ்கோடகாமா யாருன்னு தெரியுமா ?
மகன்: தெரியாது
அம்மா: முதல்ல படிப்பில் கவனம் செலுத்து...
மகன்: பரிமளா ஆன்ட்டி யாருன்னு தெரியுமா...
அம்மா: தெரியாது
மகன்: முதல்ல உன் புருஷன் மேல கவனம் செலுத்து...!








மழை வந்ததும் கவிதை
வந்தால் அவன் கவிஞன்.
அதுவே காயப்போட்ட துணி
ஞாபகத்திற்கு வந்தால்
அவன் தான் குடும்பஸ்தன்.

ஆண்கள் மது அருந்திய பின் தேவையில்லாததை யெல்லாம் பேசிக்கொண்டே இருப்பார்கள். அதிகமாக உணர்ச்சி வசப்படுவார்கள். மிக மோசமாக வண்டி ஓட்டுவார்கள். சிந்திப்பதையே நிறுத்தி விடுவார்கள் காரணம் இல்'லாமல் சண்டைக்கு வருவார்கள்.... ஆனால் பெண்களோ! மது அருந்தாமலேயே இவை அனைத்தையும் செய்யும் திறன் பெற்றவர்கள்....





நிருபர் : உங்க வருங்காலக் கணவர் எப்படி இருக்கணும்னு நினைக்கிறீங்க?
நடிகை : நிகழ்காலக் கணவரை விட நல்லவரா இருக்கணும்னு தான்.

# நாடகம், கவிதை, அபிநயம், எழுத்து என பலதுறைகளில் பிரகாசிக்கும் சாய்ந்தமருது என்.எம். அலிக்கான்

**நாடகம், கவிதை, அபிநயம், எழுத்து என பலதுறைகளில் பிரகாசிக்கும் சாய்ந்தமருது என்.எம். அலிக்கான் கடந்துவந்த பாதைகள் தொடர்பில் இவ்வார செந்தூரம் இதழுக்காக அவருடனான நேர்காணல்.**



**● உங்களது பூர்வீகம் (பிறப்பிடம்), உங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் குறிப்பிடுங்கள்?**

சாய்ந்தமருது முதலாம் பிரிவில் சாரதியாக இருந்த அஹமட் லெப்பை நஸ்ருதீனுக்கும் உதுமாங்கண்டு செமிலத்தும்மாவுக்கும் பிறந்த பத்து பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளையாக 1959 மேமாதம் 05ம் திகதி சாய்ந்தமருதில் பிறந்தேன். என்னுடைய ஆரம்பக்கல்வியை கமு / அல் அமான் வித்தியாலயத்தில் கற்று (இப்போதைய மஹ்முத் மகளிர் கல்லூரி) இடைநிலை கல்வியை சாய்ந்தமருது ஸாஹிரா தேசிய பாடசாலையில் வர்த்தக பிரிவில் தொடர்ந்தேன். என்னுடைய 22 வயதில் சுகாதார துறை ஊழியராக இருந்த சாய்ந்தமருதை சேர்ந்த முஹம்மது அபுபக்கர் ஜூல்ஹானிசா அவர்களை திருமணம் செய்து இப்போது இரண்டு ஆண்பிள்ளைகளும், ஒரு பெண்பிள்ளையுடனும் வாழ்ந்துவருகிறேன்.

**● தொழில் நிலைகள் பற்றி :**

அதன் பின்னர் கடந்த 1980.09.01ம் திகதி தொடக்கம் சுகாதார திணைக்களத்தில் பணியாளர் நியமனம் பெற்று அம்பாறை ஆதார வைத்தியசாலை, மூவங்கள மத்திய மருந்தகம், அம்பாறை மாவட்ட சுகாதார அத்தியட்சகர் காரியாலயம், கல்முனை ஆதார வைத்தியசாலை, சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை, கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகியவற்றில் சுகாதார பணியாளராக கடமையாற்றினேன். அதனை தொடர்ந்து தொலைபேசி இயக்குனராக 1998 முதல் அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடமையாற்றி 2019.05.05 அன்று, 39 வருடகால சுகாதாரத்துறை பணியிலிருந்து என்னுடைய 60வது வயதில் ஓய்வு பெற்றேன். தொடர்ந்தும் ஓய்வுக்கு பின்னரும் கல்முனை பிரதேச தனியார் வைத்தியசாலை ஒன்றில் ஒன்றரை வருடமாக பணியாற்றி இப்போது முழுநேரமாக ஓய்வில் இருப்பதுடன் கலைத்துறைக்கு என்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றி வருகிறேன்.

**● கலை அனுபவம் தொடர்பில் கூறுங்கள்**

பாடசாலை காலத்தில் பேச்சு,கவிதை போட்டிகளில் கலந்துகொண்டு நிறைய பரிசில்களை பெற்றுள்ளேன். நாடறிந்த கலைஞர் கலைச்சுடர் மறைந்த சக்காப் மௌலானாவின் பாசறையில் அவரது மாணவராக இருந்து நாடகத்துறையில் நிறைய பயிற்சிகளை பெற்றுக்கொண்டு மாவட்ட, மாகாண, தேசிய ரீதியிலான நாடக போட்டிகளில் பங்குபெற்றி பரிசில்களை பெற்றுள்ளேன். கடந்த 2004 இல் உலகை உலுக்கிய சுனாமியில் முற்றாக பாதிக்கப்பட்டு என்னுடைய வீடு தரைமட்டமாகி போனதால் எனது பொக்கிஷமாக வைத்திருந்த சகல ஆவணங்களும் கடலில் அள்ளுண்டு போனது. மிகுதியாக இருந்த கனவுகளை தூக்கிக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கிறேன். நான் கடந்த 40 வருட கால சுகாதார துறையில் பணியாற்றிய போது வைத்தியசாலைகளில் நடைபெறும் கலைஇலக்கிய விழாக்கள், வைத்தியர்கள், தாதியர்களின் பிரியாவிடை நிகழ்வுகள், வைத்தியசாலையில் நடைபெறும் விசேட வைபகங்களில் கலந்துகொண்டு கவிபடித்தல், பாடுதல், அபிநயம் செய்தல், நாடகம் நடித்தல், ஒளிஒலி செய்தல் என என்னுடைய கலை அனுபவத்தை நிறையவே பெற்றுக்கொண்டேன்.

**● நீங்கள் பெற்ற கௌரவங்கள், விருதுகள் தொடர்பில் கூறுங்கள்.**

நான் நீதியமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக 2002 ம் ஆண்டில் நியமிக்கப்பட்டேன். என்னுடைய கவிதை ஆற்றலை கௌரவித்து "கவியுக நாயகன்" எனும் விருதை 2012 இல் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வழங்கி கௌரவித்தது. அதைப்போல அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் 2018 இல் "சாமஸ்ரீ" பட்டமும், விருதும் வழங்கப்பட்டதுடன் லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் நிறுவனத்தினால் 2018 ஏப்ரலில் 'கலைச்சுடர்" விருதும், அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவினால் 'அபிநய நாயகர்" விருதும் 2020 இல் மருதம் கலைக்கூடலினால் "பல்துறை கலைஞர் விருதும்", இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத்தினால் "சமூகதீபம், சமூகஜோதி, சமூகச்சுடர், கலைமுத்து, கலைதீபம்" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் 2020 இல் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தியினால் "கலைஞர் சுவதம் விருதும்', 2019 இல் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையினால் சிறந்த கவிஞருக்குரிய பாராட்டும் பெற்றேன். கலாச்சார அலுவல்கள் திணைக்கள அனுசரணையில் சாய்ந்தமருது கலாச்சார பிரிவினரால் நடத்தப்பட்ட கவியரங்கில் கலந்துகொண்டு பாராட்டு சான்றிதழை பெற்றுள்ளேன். மருதம் கலைக்கூடலினால் நடத்தப்பட்ட நீத்தார் நினைவுகள் நிகழ்வில் கலைச்சுடர் மறைந்த கலைஞர் சக்காப் மௌலானா தொடர்பில் நான் படித்த கவிதையை பாராட்டி சிறந்த "கவிஞருக்கான விருதும்" பெற்றுள்ளேன். அஹமட் அலி வைத்தியசாலை, அரச வைத்தியசாலைகள், சுகாதார திணைக்கள கலை நிகழ்வுகளில் கலந்துகொண்டு கலை நிகழ்வுகளில் பங்குபற்றியமைக்கான சிறப்பு சான்றிதழ் பலதையும் பெற்றுள்ளேன்.

**● நீங்கள் அங்கம் வகிக்கும் பொது அமைப்புக்கள் தொடர்பில் கூறுங்கள்.**

கிழக்கு மாகாணத்தை தளமாக கொண்டு இயங்கும் மருதம் கலைக்கூடலின் பிரதித்தலைவராக இருந்து வருவதுடன் அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் அம்பாறை மாவட்ட கலை, கலாச்சார சமூக மேம்பாட்டு பிரிவின் இணைப்பாளராகவும், லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் அமைப்பில் உறுப்பினராகவும் உள்ளேன்.

**● நீங்கள் கலையின் பக்கம் நாட்டம் கொள்ள காரணம் என்ன? உங்களுக்கு இந்த கலை பக்கத்தை அறிமுகம் செய்தவர்கள் யார் ?**

பேச்சுக்களுக்கு இருக்கும் கவர்ச்சியை விட சமூகத்தின் பிரச்சினைகளை நாடக வடிவில் கொண்டுவந்தால் கவர்ச்சி அதிகமாக இருக்கும் என்பதால் நாடகத்துறையை தேர்ந்தெடுத்தேன். என்னுடைய நடை, உடை பாவனையில் ஒரு கலைநயம் இருப்பதாக வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளும், வைத்தியசாலையின் சக உத்தியோகத்தர்களும் அடிக்கடி கூறி வந்ததுடன் அதற்கான வாய்ப்புக்களும் வைத்தியசாலையில் பணியாற்றியபோது கிடைத்தது. அத்துடன் ஓய்வான நேரங்களில் கவிதைகளை எழுத ஆரம்பித்து அதனை என்னுடைய மனைவியிடம் காட்டுவேன். அவர் அதனை வாசித்துவிட்டு அழகாக இருக்கிறது என என்னை ஊக்கப்படுத்தினார். எனது கலை பயணத்தின் முதல் ரசிகையாக இருந்து என்னை தட்டிக்கொடுத்த பெருமை













அவரையே சாரும். நீண்ட பயணங்களை இந்த கலைத்துறைக்காக நான் பயணித்துள்ளேன். அப்போதெல்லாம் எனக்கு ஊக்கமளித்து என்னை உயர்த்திய பெருமை எனது துணைவியாரையே சாரும்.

எனது ஓய்வு காலங்களில் நான் கவிதை எழுதுவது, பாடல் பாடுவது என பல பொழுதுபோக்குகளை கொண்டிருந்த போது மருதம் கலைக்கூடலின் அங்கத்துவம் கிடைத்தது. அவர்களின் மேடைகளில் கவிதை வாசிப்பதில் ஆரம்பித்த என்னுடைய பயணம் பின்னாட்களில் பாடுவது, அபிநயம் செய்வது என மேலோங்கி இன்று கல்முனை பிரதேசத்தில் சிறந்த கலைஞராக என்னை அடையாளப்படுத்த உதவியுள்ளது. இவ் வேளையில் அந்த அமைப்பின் தலைவர் கலைஞர் அஸ்வான் மௌலானா அடங்கிய சகல மருதம் கலைக்கூடல் உறவுகளுக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

என்னுடைய அபிநயம், கவிதை, பாடல்களை கேட்க பலரும் வீடுதேடி வந்து ரசித்துவிட்டு செல்வார்கள். அதன் மூலமாக நான் நிறைய நண்பர்களை சம்பாதித்துள்ளேன். கலைத்துறையில் மட்டும் என்னை மட்டுப்படுத்தி கொள்ளாது பொதுஅமைப்புகளுடன் இணைந்து பல சமூக நல திட்டங்களையும் செய்து வருகிறேன்.

என்னுடைய பணிகளை ஊக்கப்படுத்தும் விதமாக தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையதளங்கள், சமூக வலைத்தளங்களில் என்னுடைய ஆக்கங்களும், என்னைப்பற்றிய செய்திகளும் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனக்கும் ஊடகங்களுக்குமான உறவை உருவாக்கிய என்னுடைய நெருங்கிய சகோதரர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா இஸ்ஸதீன் மற்றும் பிரபல ஊடகவியலாளர் தம்பி நூருல் ஹுதா உமர் ஆகியோருக்கும் எனது திறமைகளை சரியாக அடையாளம் கண்டு என்னை இந்த கலை உலகுக்கு விரலை புடித்து அழைத்துவந்த கிழக்கு

> **என்னுடைய அபிநயம், கவிதை, பாடல்களை கேட்க பலரும் வீடுதேடி வந்து ரசித்துவிட்டு செல்வார்கள். அதன் மூலமாக நான் நிறைய நண்பர்களை சம்பாதித்துள்ளேன். கலைத்துறையில் மட்டும் என்னை மட்டுப்படுத்தி கொள்ளாது பொதுஅமைப்புகளுடன் இணைந்து பல சமூக நல திட்டங்களையும் செய்து வருகிறேன்.**



மாகாண கலாச்சார திணைக்கள உயரதிகாரி ஏ.எல்.தௌபீக் என்னுடைய பயணத்தில் வழிகாட்டியாக இருந்த கலாபூஷணம் கே.எம்.ஏ. அஸீஸ் ஆகியோருக்கும் இந்த நேரத்தில் நன்றிகளை தெரிவிக்க விரும்புகிறேன்.

**● சமகாலத்தில் உள்ள கலைஞர்கள் பற்றியும் கலைகள் பற்றியும் உங்கள் பார்வை என்ன?**

நாடகம் என்பது மக்களுக்கு ஒரு செய்தியை இலகுவில் மனதில் பதிய செய்யும் ஊடகம். இப்போதைய காலகட்டத்தில் மேடைநாடகங்கள் மிகவும் குறைந்துவிட்டது. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு சிறியளவிலானோரே இலங்கையில் நாடகக்கலையை உயிரோட்டமாக வைத்திருப்பவர்களாக இருக்கிறார்கள். அது போலதான் எழுத்தும். ஒரு எழுத்தாளனின் பேனாமுனை வாள்முனையை விட கூரானது.

சுதந்திர போராட்டங்கள் முதல் ஆட்சி மாற்றங்கள் வரை எழுத்தாளர்களின் பங்களிப்பு மிக அதிகமாக செல்வாக்கு செலுத்தியுள்ளதை நாம் எமது கண்களினாலும் கடந்த கால வரலாறுகளிலும் காண்கிறோம். இப்படியான செல்வாக்கு மிக்க துறையான இந்த கலைத்துறையில் அதிக நாட்டம் கொண்டு இருப்பவர்கள் பெரும்பாலும் பணவசதி இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களின் மதிப்பை குறைத்துக்கொள்ள விரும்பமாட்டார்கள். இப்படியாக கலை தொண்டாட்டும் கலைஞர்களை அரசு மாதாந்த ஊக்கத்தொகைகளை வழங்கி ஊக்கப்படுத்த முன்வர வேண்டும் என்பதுடன் கலைஞர்கள் மரணித்த பின்னர் அவர்களை நினைத்து பார்ப்பதை விட அவர்கள் உயிருடன் இருக்கும் போதே அவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிலைக்கு எமது மக்கள் மாற வேண்டும்.

**● உங்களின் எதிர்கால திட்டங்கள் என்ன?**

எனது கலைவாழ்வின் முக்கிய பணியாக என்னுடைய நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளை தொகுத்து "நெஞ்சில் பூத்த நெருப்பு" எனும் பெயரில் கவிதைத்தொகுப்பு நூலை விரைவில் வெளியிட உள்ளேன். அதற்கான வேலைகளை வெளியீட்டாளர்களான மருதம் கலைகூடலும், அல் மீஸான் பௌண்டசனும் இணைந்து முடுக்கி விட்டுள்ளார்கள். இவ்வருடத்தின் நடுப்பகுதியில் பிரமாண்டமாக வெளியிட தீர்மானித்துள்ளேன். அதுமட்டுமின்றி எனது கலைப்பயணத்தின் வீடியோக்களை தொகுத்தும் ஒரு இறுவெட்டை வெளியிட உள்ளேன் என்றார்.





# அனுராதா ஸ்ரீராமின் கணவர்



தமிழில் வெளியான பாம்பே படத்தில் முதன் முதலில் பின்னணியில் பாடல் பாட துவங்கியவர் அனுராதா ஸ்ரீராம்.

இதன்பின் பல முன்னணி நட்சத்திரங்களின் படங்களில், பாடி பல சூப்பர் ஹிட் பாடல்களை கொடுத்துள்ளார்.

மேலும் தற்போது விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் நடுவராக பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில் பின்னணி பாடகி அனுராதா ஸ்ரீராமின் கணவர் ஸ்ரீராம் பரசுராமனின் புகைப்படம் முதல் முறையாக வெளியாகியுள்ளது.

# குட்டை பாவாடையில் ஜெனிலியா

பாய்ஸ்,சச்சின்,சந்தோஷ் சுப்ரமணியம் போன்ற திரைப்படங்களில் நடித்து பிரபலமான நடிகை ஜெனிலியாவின் கிளாமர் புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் தற்போது டிரெண்டாகி வருகிறது.



சினிமாவிற்கு நடிக்க வரும் புதுமுகங்கள் தான் ஹாட் போட்டோ சூட் நடத்தி இன்ஸ்டகிராமில் தங்களது புகைப்படங்களை பதிவேற்றுகிறார்கள் என்று பார்த்தால், சில மார்க்கெட் இழந்த நாயகிகளும் அவர்களுக்கு போட்டியாக களத்தில் குதித்துள்ளனர். 2003 ம் ஆண்டு ஷங்கர் இயக்கத்தில் வெளியான 'போய்ஸ்' படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார் ஜெனிலியா. தமிழில் விஜய்யுடன் சச்சின், வேலாயுதம் படங்கள், பரத் உடன் சென்னை காதல், ஜெயம் ரவியுடன் சந்தோஷம் சுப்ரமணியம், தனுஷ் உடன் உத்தமபுத்திரன் உள்ளிட்ட பல படங்களில் நடித்து தமிழ் ரசிகர்களின் பேவரைட் லிஸ்டில் இருப்பவர்.

தமிழ், இந்தி, கன்னட மொழிகளில் நடித்த இவர், தெலுங்கு திரையுலகில் பிசியான முன்னணி நடிகையாக திகழ்ந்தார். சினிமா மார்க்கெட் உச்சத்தில் இருந்த போதே ரித்தேஷ் தேஷ்முக்கை காதலித்து திருமணம் செய்து கொண்டு, சினிமாவில் இருந்து விலகி இருந்தார் ஜெனிலியா.இந்நிலையில் சமீபத்தில் இந்தி படம் ஒன்றில் நடித்ததன் மூலம் மீண்டும் சினிமாவில் நடிக்க வந்துள்ளார். மகளிர் தினந்தன்று முறிந்த கையோடு வீடியோ ஒன்றை வெளியிட்டு பரபரப்பை கூட்டியிருந்தார ஜெனிலியா.

தனது குழந்தைகளுக்காக ஸ்கேட்டிங் பயிற்சி எடுத்துக் கொண்ட போது, தவறி விழுந்ததில் ஏற்பட்ட முறிவு இது என்று அவர் விளக்கம் கொடுத்த பின்னரே சாந்தமானர்கள் அவரின் ரசிகர்கள். அந்த வீடியோவில் 'நீங்கள் பறப்பதற்கு முன்பு சில நேரங்களில் நீங்கள் விழ நேரிடும்', வெற்றி பெறும் காலம் வரை தொடர்ந்து முயற்சி செய்வேன் எனும் கேப்சனோட தனது மகளிர் தின வாழ்த்தை தெரிவித்திருந்தார் ஜெனிலியா.

இந்நிலையில் முறிந்த கையுடன், கணவர் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து 'மாஸ்டர்' திரைப்படத்தின் 'வாத்தி கம்மிங்' பாடலுக்கு நடனம் ஆடி, அந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டார். அவர் நினைத்ததை போலவே வீடியோவும் வைரலாகி, தற்போது அனைவராலும் பேசப்பட்டு கொண்டிருக்கிறார் ஜெனிலியா.

இந்த பரபரப்பை தக்க வைப்பதற்காக ஒரு ஹாட் போட்டோ சூட் நடத்தி, அந்த போட்டோக்களையும் தனது இன்ஸ்டகிராம் பக்கத்தில் பதிவிட்டு ரசிகர்களை கிறங்கடித்துள்ளார் ஜெனிலியா. குட்டை பாவாடையில் தொடை தெரிய குதுகலமாக நிற்கும் ஜெனிலியாவின் போட்டோவிற்கு ஹார்ட்டின்களை பறக்க விடுகின்றனர் ரசிகர்கள். சினிமாவில் மீண்டும் ஒரு ரவுண்டு வருவதற்கே ஜெனிலியாவின் இந்த ஹாட் போட்டோ சூட் என்றும் சிலர் கிசுகிசுக்கின்றனர்.

# புளிய மரத்தில் தொங்கிய கார்த்தி



நடிகர் கார்த்தி இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையில் விருப்பம் உள்ளவர். இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் கருத்துக்களையும் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு வருகிறார். செங்கல்பட்டு அருகே விவசாய நிலங்களை நேரில் பார்த்து காளையை ஏரில் பூட்டி உழுத புகைப்படங்களை வெளியிட்டார். ‘நமது ஆணி வேரான விவசாயத்தை அனைவரும் காப்போம். விவசாயிகளை சந்தித்த அனுபவம் மூலம் இயற்கையான காற்று, கால்நடை, கோழி ஆகிய அனைத்தும் கண்முன் வந்து செல்கின்றன’ என்றார். இந்த நிலையில் தற்போது புளியமரத்தில் ஏறி கிளைகளை பிடித்தபடி தலைகீழாக கார்த்தி தொங்கும் புகைப்படத்தை தனது ‘இன்ஸ்டாகிராம்’ பக்கத்தில் வெளியிட்டு உள்ளார். அதில் ‘நான் சிறிய வயதில் புளியமரம் ஏறி விளையாடியது நினைவுக்கு வந்தது. இப்போது மீண்டும் எனது சொந்த கிராமத்தில் புளியமரம் ஏறி இருக்கிறேன்’ என்ற பதிவையும் பகிர்ந்துள்ளார். இந்த புகைப்படம் வலைத்தளத்தில் வைரலாகிறது. கார்த்தி நடித்துள்ள சுல்தான் படம் விரைவில் திரைக்கு வர உள்ளது. மணிரத்னம் இயக்கும் பொன்னியின் செல்வன் படத்திலும் நடித்து வருகிறார்.


# சினிமாவில் நடிக்க தயாரா?

தமிழ் திரையுலகில் 1980 மற்றும் 90களில் முன்னணி கதாநாயகியாக வலம் வந்த கவுதமி தற்போது அரசியலில் ஈடுபட்டு வருகிறார். அவர் அளித்த பேட்டி வருமாறு:

''நான் சினிமாவுக்கு வருவேன் என்றோ அரசியலில் ஈடுபடுவேன் என்றோ நினைத்து பார்க்கவில்லை. ஆந்திராவில் பிறந்த நான் எம்.பி.ஏ படிக்க வேண்டும் என்ற ஆசையோடு இருந்தேன். ஆனால் குரு சிஷ்யன் படத்தில் நடித்த பிறகு திரும்பி பார்க்கவே நேரம் இல்லை. வருடத்துக்கு 15 படங்கள் வரை நடித்தேன். ஏழரை வருடங்களில் 120 படங்களில் நடித்து விட்டேன். அது பெரிய சாதனை. சினிமாவால் வாழ்க்கையில் சில விஷயங்களை இழக்கிறோம் என்று தோன்றியது. அதன்பிறகு சினிமாவை விட்டு விலக முடிவு செய்தேன். திருமணம் ஆகி 3 ஆண்டுகளில் அந்த உறவு அறுந்து போனது. ஆனாலும் எனது வாழ்க்கையில் நான் தனிமையாக இல்லை. எனக்குள்ளேயே நான் இருக்கிறேன். எந்த விஷயம் ஆனாலும் எனது மகளிடம் மனம் விட்டு பேசுகிறேன். எனது கடந்த காலம், நிகழ்காலம் எல்லாம் அவளுக்கு தெரியும். எனது மகள் சுப்புலட்சுமிக்கு சினிமாவில் நடிக்க ஆர்வம் இல்லை. கேமராவுக்கு பின்னால் இருக்கத்தான் அவளுக்கு பிடிக்கிறது. சினிமாவில் நடிக்க வேண்டும் என்றாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. எல்லாம் அவளுடைய விருப்பம்தான்.. இத்தனை காலம் சினிமாவில் நடிக்காமல் இருந்ததற்கு எனது மகள்தான் காரணம். இப்போது அவள் செட்டிலாகி விட்டதால் இனிமேல் சினிமாவில் நடிக்க நான் தயாராக இருக்கிறேன்.''



# ஷிவானியின் அப்பா



பிக்பொஸ் 4வது சீசனில் மிகவும் இளம் வயது பெண்ணாக கலந்து கொண்டவர் ஷிவானி. இதில் விளையாட்டில் கொஞ்சம் கவனமாகவே விளையாடினார்.

ஆனால் சில நேரங்களில் அவர் வந்த நோக்கத்தை மறந்து வேறொரு விஷயத்தில் மும்முரம் காட்டியதாக அவரது தாயார் பிக்பொஸ் வீட்டிற்குள் வந்து மிரட்டியதை நாம் யாராலும் மறக்கவே முடியாது.

ஷிவானி எப்போதும் இன்ஸ்டா பக்கத்தில் அவரது அம்மாவுடன் சேர்ந்து எடுத்த புகைப்படங்களை பதிவிடுவார். அப்படி ஒரு நாள் அவரது தந்தையின் புகைப்படத்தையும் இன்ஸ்டா ஸ்டோரியில் பதிவு செய்திருக்கிறார்.








சக தன்னார்வலர்களுடன் ரம்யா (நடுவில் இருப்பவர்)

# பாலு மகேந்திராவுக்கு ஓர் உணர்வுபூர்வ அர்ப்பணம்!

**தமிழ் சினிமாவைத் தரமுயர்த்தியதில் பாலு மகேந்திராவுக்கும் அவருடைய மாணவர்களுக்கும் தனித்த பங்குண்டு. அப்படிப்பட்டவர் பிறந்து, வளர்ந்த தாய்மண்ணில், அவரது படைப்பாளுமையை நிரந்தரமாக நினைவுகூரும் வகையில் ஓர் அரிய செயலைச் செய்திருக்கிறார்கள் வட இலங்கையில் சினிமாவை நேசிக்கும் இளைஞர்கள் சிலர். சினிமாவுக்கான நூலகம் ஒன்றைத் தொடங்க முடிவுசெய்த அவர்கள், அதற்கு பாலு மகேந்திராவின் பெயரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு உணர்வுபூர்வமாக அர்ப்பணம் செய்துள்ளனர்.**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பில் பிறந்தவர் பாலுமகேந்திரா. இளவயதில், இலங்கையில், சிங்களத் திரையுலகில் தொழில்நுட்பக் கலைஞராகப் பணியாற்றியுள்ளார். அதற்குப் பிறகுதான் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்து, புனே திரைப்படக் கல்லூரியில் முறைப்படி சினிமா பயின்று, தென்னிந்தியாவின் தலைசிறந்த திரை ஆளுமைகளில் ஒருவராக உயர்ந்தார்.

பாலு மகேந்திராவின் ஏழாம் நினைவு நாள் நெருங்கிவரும் நிலையில், கடந்த ஆண்டு டிசம்பரில் கிளிநொச்சியில் 'பாலு மகேந்திரா நூலகம்' தொடங்கப்பட்டது. ஈரானியத் திரைப்பட இயக்குநர் மஜீத் மஜிதி, சிங்கள சினிமாவின் தலைசிறந்த திரைப்பட இயக்குநர்களில் ஒருவரான பிரசன்ன விதானகே, இந்தியாவிலிருந்து இயக்குநர் இமயம் பாரதிராஜா, இலங்கையின் மூத்த நாடக ஆளுமை மௌனகுரு சின்னையா ஆகியோர் இந்த நூலகத்தின் இணையவழித் தொடக்கவிழாவில் பங்கேற்றனர். பாலு மகேந்திரா குறித்த தமது கருத்துக்களையும் நினைவுகளையும் அப்போது பகிர்ந்துகொண்டனர்.

### நூலகத்துக்கு வித்திட்ட பட்டறை

'பட்டறை' என்னும் பெயரில் நடத்தப்பட்டத் திரைப்பட பயிற்சிப் பட்டறைதான் இப்படி ஒரு நூலகம் தொடங்கப்படுவதற்கான தொடக்கப் புள்ளியாக அமைந்தது. பாலு மகேந்திரா சென்னையில் நடத்திவந்த திரைப்படப் பயிற்சிப் பள்ளிக்கு 'பட்டறை' என்றுதான் பெயரிட்டிருந்தார் என்பது சுவாரஸ்யப்பொருத்தம்.

2020 மே மாதத்தில் கரோனா பெருந் தொற்று உச்சத்திலிருந்த நிலையில், இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் இதற்காக ஒன்றிணைந்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணையோடு திரைப்படத் துறையைச் சேர்ந்த தொழில்நுட்பக் கலைஞர்கள், நடிகர்கள் ஆகியோருடன் இணையவழிக் காணொலி உரையாடல் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர். இலங்கையிலிருந்து பலர், தமிழகத்திலிருந்து சிலர் என 600க்குமேற்பட்டோர் இந்த உரையாடல் நிகழ்வுகளில் பங்கேற்றனர். நடிகர்கள் நாசர், விஜய் சேதுபதி, இயக்குநர்கள் பாலாஜி சக்திவேல், நளன் குமாரசாமி, சிங்கள இயக்குநர் பிரசன்ன விதானகே, இலங்கையில் பிறந்து கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இயக்குநர்கள் லெனின்.எம்.சிவம், ரஞ்சித் ஜோசப், இசையமைப்பாளர் ஜிப்ரான், ஆடை வடிவமைப்பாளர் பூர்ணிமா ராமசாமி ஆகியோர் இதில் பங்கேற்று உரையாற்றினர்.


### இழப்புகளுக்கு நடுவில் ஒரு நூலகம்

நான்கு மாதங்கள் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற இளைஞர்களுக்கு ஒரு பாடம் கிடைத்தது. "திரைப்படங்களைப் பார்ப்பதன் மூலம் திரைப்பட இயக்குநராகிவிட முடியாது. ஒளிப்பதிவாளராவதற்குக் கையில் கேமரா வைத்திருப்பது மட்டும் போதாது. ஓரிடத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட நூலகத்துடன் கூடிய கல்வி, உரையாடலின் மூலமாகவே சினிமா குறித்த அறிவை, பயிற்சியைப் பெறவும் அதைத் தொடர்ந்து வளப்படுத்திக்கொள்ளவும் முடியும். அதைச் செய்வதற்கான வளங்கள் எங்களிடம் இல்லை என்பதை உணர்ந்தபோதுதான் இப்படி ஒரு நூலகத்தைத் தொடங்கும் யோசனை பிறந்தது" என்கிறார் பாலு மகேந்திரா நூலகத்தின் தலைவர் ரம்யா டெரோன்.

முள்ளிவாய்க்கால் யுத்தம் நடந்த 2009 வரை தமிழர்கள் அதிகமாக வசித்துவந்த வடக்கு மாகாணம், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகத் தலைநகராக அறியப்பட்டது. போருக்குப் பிந்தைய சூழலில் அங்கு வாழும் மக்கள் தமது பொருளா தாரத்தையும் வாழ்வாதாரத்தையும் மீட்டெடுக்கப் பாடுபட்டு வருகிறார்கள்.

இன்னொரு பக்கம் போரால் காணாமல் ஆக்கப்பட்டோரின் ஆறா ரணங்களும் அதற்காக எஞ்சியிருக்கும் மக்களின் தொடர் போராட்டமும் நடந்தபடியேதான் இருக்கின்றன. தலைநகர் கொழும்பிலிருந்து வடக்கு மாகாணத்துக்குச் செல்லும் முக்கிய நெடுஞ்சாலை போர் நினைவுச் சின்னங்களால் சூழப்பட்டுள்ளது. இந்த நெடுஞ்சாலைக்கு அப்பால் உள்ள கிராமங்களில் போர் விட்டுச் சென்ற இழப்புகளைத் தாங்கியபடி தமிழர்கள் வாழ்ந்துவருகிறார்கள். அங்கே கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான பழைய கட்டிடம் ஒன்றின் முதல் தளத்தில்தான் பாலு மகேந்திரா நூலகம் தொடங்கப்பட்டுள்ளது.





"இந்த நூலகத்துக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தபோது அது மட்டக்களப்பில் பிறந்து வளர்ந்த பாலு மகேந்திரா சாரை கௌரவப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று முடிவெடுத்தோம். தன்னுடைய அபாரத் தொழில்நுட்ப வல்லமையின் மூலம், தென்னிந்திய சினிமாவில் அவர் நிகழ்த்தியுள்ள சாதனைகள் சாதாரணமானவை அல்ல" என்கிறார் மென்பொருள் பொறியாளரான ரம்யா. அவரும் இந்தக் குழுவில் உள்ள மற்ற இளைஞர்களும் தன்னார்வலர்களாக நேரம் ஒதுக்கி இந்த நூலகத்தை நிர்வகிக்கின்றனர்.

### இலங்கை முழுமைக்கும்...

புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள பாலு மகேந்திரா நூலகத்தில், அதற்குள் 10,000 நூல்களும் டிவிடிக்களும் சேகரிக்கப் பட்டுவிட்டன. இவை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தமிழகத்திலும் உள்ள எழுத்தாளர்கள், திரைப்பட இயக்குநர்கள் பங்களித்தவை. பாலு மகேந்திரா குடும்பத்தினரும் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை நல்கியுள்ளனர். இந்த நூலகக் குழுவினர் இலங்கைத் தீவின் பல்வேறு பகுதிகளில் தடம்பதிக்கத் திட்டமிட்டுவருகின்றனர். வடக்கு, கிழக்கு மாவட்டங்களுடன் நின்றுவிடாமல் வடக்கில் வாழும் இஸ்லாமியர்கள், கிழக்கு மாகாணத்தில் வசிக்கும், வாசிப்பும் கலையார்வமும் மிக்க சிங்கள இளைஞர்கள், மலையகத் தமிழர்கள் என பல்வேறு சமூகப் பிரிவினரை தம்முடன் இணைத்துக்கொண்டு பயணிக்க விரும்புகின்றனர்.

"இலங்கைத் தீவில் ஒரு தனித்துவம் மிக்க தமிழ் சினிமா பண்பாட்டை வளர்த்தெடுக்க விரும்புகிறோம். அதேநேரம் வடக்கு, கிழக்கு மட்டுமல்லாமல் இலங்கையின் மற்ற பகுதிகளின் கதைகளையும் எங்கள் திரைப்படங்கள் பேச வேண்டும் என்று நினைக்கிறோம். வருங்காலத்தில் கிராமப்புறங்களுக்கு சினிமா வளங்களைக் கொண்டுசெல்வதற்கான நடமாடும் நூலகங்களை உருவாக்க இந்தக் குழு திட்டமிட்டுள்ளது" எங்கள் நடமாடும் நூலகங்கள் வழியே கிராமங்களில் கிளாசிக் திரைப்படங்களைத் திரையிடுவோம்.

அதேபோல், இந்த நூலகத்தின் வழியாகப் பெண்கள் திரைப்படத் தொழில்நுட்பத்தைப் பயில்வதற்கான வாய்ப்பைப் பெற வேண்டும் என்பதிலும் கவனமாக இருக்கிறோம்." என்கிறார் ரம்யா. தன் திரைப்படங்களில் பல மறக்க முடியாத ஆளுமை மிக்க பெண் கதாபாத்திரங்களைப் படைத்தளித்த பாலு மகேந்திரா இதனால் நிச்சயம் மகிழ்ந்திருப்பார்.

# செல்ஃபி உலா


வெரோனிக்கா வத்தளை


இமெல்டா கொட்டாஞ்சேனை


சாரா ஷாலினி வத்தளை


சந்திரமோகன் வத்தளை


பாரதி கொட்டாஞ்சேனை


சிவராஜா திருகோணமலை


தினகரனின் செந்தூரம் இதழின் செல்பிஉலா பக்கத்தில் உங்களது செல்பிக்களும் இடம்பெற விரும்பினால் selfiulla@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு படத்தையும் விபரங்களையும் அனுப்பி வையுங்கள். செல்பிக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.


ஷர்மிலா கொட்டாஞ்சேனை


நிரோஷினி


சாரிக் அமீன் மடவள பசார்

## எல்பர்ட் ஐன்ஸ்டைன்
### சார்பியல் கோட்பாடு








## நிறம் தீட்டுங்கள்



## சரியான விடையை எழுதுங்கள்




## அடுத்துவரும் எண்களை எழுதுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# சமூக சேவை செய்வதென்பது ஒரு சுகமான சுமை

## மனிதாபிமானத்தின் தோழர்கள் சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகர் அப்துல் அஸீஸ்

**பெயருக்கும் புகழுக்குமாக சமூக சேவைகள் செய்பவர்களைப் போன்றே ஒருகை கொடுப்பதை மறுகைக்கு தெரியாதவாறு சேவை செய்பவர்களும் சமூகத்தில் இருக்கவே செய்கின்றனர். ஒரு இனத்திற்கு மாத்திரம் சேவையாற்றும் நபர்களை போன்று இன,மதம் பாராது பொது நோக்கத்துடன் பணியாற்றும் நபர்கள் விரல்விட்டு எண்ணும் அளவு குறைவாகவே உள்ளனர்.**





' மனிதாபிமானத்தின் தோழர்கள் ' எனும் அமைப்பை உருவாக்கி சகல இனங்களையும் இணைத்து சமூக சேயையாற்றி வரும் ஒருவரை நான் ரொம்ப பிஸி பகுதிக்காக சந்தித்தேன். அவர் கிண்ணியா ஈச்சந்தீவை சேர்ந்த எஸ்.ஏ. அப்துல் அஸீஸ். சவுதி அரேபியாவுக்காக இலங்கை தூதரகத்தில் உதவிக் கணக்காளராக பணிபுரிந்தவாறு பல ஆண்டுகளாக சமூக சேவையாற்றி வருகிறார் அஸீஸ்.



**கேள்வி:** உங்களை சமூக சேவைகள் செய்ய வேண்டும் என்று தூண்டிய விசேட காரணங்கள் யாவை?

**பதில் :** சமூக சேவை செய்வதென்பது ஒரு சுகமான சுமையாகும். படைத்த இறைவன் என்னைப் போன்று பலரைப் படைத்திருக்கிறான். சிலருக்கு எல்லையற்ற ஆற்றலைக் கொடுத்திருக்கிறான். சிலர் தமக்குக் கிடைத்த ஆற்றல்களை வளர்த்திருக்கிறார்கள். பலர் தங்கள் குடும்பத்திற்காக என்று சுயநலப் போக்கில் மட்டும் வாழ்கின்றனர். விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் வித்தியாசம் கிடையாது. எத்தனையோ பேர் துன்பத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.
பொதுவாக எல்லாம் எல்லோரும் செய்கின்ற வேலைதான்.
உண்பது, உறங்குவது, திருமணம் முடிப்பது, பிள்ளை குட்டிகளைப் பெற்றெடுப்பது. ஒரு நாயும் ஒரு மனிதனும் இதனைத்தான் செய்கின்றன. துன்பப்படுபவர்களின் கஷ்டங்களை முடியுமான அளவு ஓரளவேணும் தீர்த்து வைக்க வேண்டும் என்பதுதான் சமூக சேவை செய்யத் தூண்டிய முக்கியமான அம்சம். எமக்கு இறைவனின் உதவி, அருள் வேண்டுமாயின் மனிதனுக்கு உதவி செய்வது கட்டாயக் கடமையாகிறது.

**கேள்வி:** எப்போது, எந்த வயதிலிருந்து இவ்வகையான சமூக சேவைகளைச் செய்ய ஆரம்பித்தீர்கள்?

**பதில் :** பதினாறு வயதிலிருந்து பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. படிக்கின்ற காலம் அது. நண்பர்களுக்கு பாடங்கள் விளங்காத போது அவர்களுக்கு விளங்கப்படுத்துவது எனது பணியாக அமைந்தது. கற்றுக்கொடுத்தல் கூட ஒரு சமூக சேவைதான். பணத்தை மாத்திரம் தான் கொடுக்க வேண்டும் என்பதல்ல. ஒரு மனிதனுக்கு ஆறுதல் கூறுவது அவனது துன்பங்களைத் துடைக்க முனைவது எல்லாமே சமூக சேவைப் பணிதான்.
கணிதப் பாடம் அறவே விளங்காத சக வகுப்பு நண்பர்களுக்கு மற்றும் உயர் தரத்தில் கற்றோருக்கு கற்றுக் கொடுப்பதில் இன்பம் கண்டேன். பின்னர் ஜாமியா நளீமியா கலா பீடத்துக்குள் நுழைந்தபோது அரபு மொழியைக் கற்கின்ற வகுப்பில் பலர் அதனை விளங்கக் கஷ்டப்படுகின்றனர். இவ்விடத்தில் நண்பர்களுக்கு கற்றுக் கொடுத்தல் மற்றும் எனது கீழ் வகுப்பு மாணவ சகோதரர்களுக்கு கற்றுக் கொடுத்தல் என்பதை எனது பழக்கமாக்கிக் கொண்டேன். ஒட்டுமொத்தத்தில் கற்றுக்கொடுப்பது என்பது எனது தீராத வேட்கையாக சிறுவயது முதல் இருந்து வந்தது.





**கேள்வி:** ' மனிதாபிமானத்தின் தோழர்கள் ' என்ற அமைப்புப் பற்றியும் கொஞ்சம் சொல்லலாமே?

**பதில் :** சமூக சேவை என்பது தான் சார்ந்த இனத்துக்கு மட்டும் செய்ய வேண்டுமென்று அனேகமானோர் நினைக்கின்றனர். மனிதாபிமான உதவிகள் மனிதர்களுக்குச் செய்ய வேண்டும் என்பது எனது மாற்ற முடியாத உறுதியான கருத்து. இக்கருத்தை அல்குர்ஆனும் நபியவர்களின் வாழ்க்கையும் தந்தது. எனவேதான் மனிதாபிமானத்தின் தோழர்கள் என்ற கருத்தைக் கொண்ட அமைப்பை உருவாக்கினேன்.
இது இனம், மொழி கடந்த அமைப்பு. இதனுடைய போசகராக சிங்கப்பூரில் வசிக்கும் பஸால் ஜிப்ரி , உறுப்பினராக திருமலை மாவட்ட ஆயர் நொயெல் இமானுவேலும் இருக்கின்றார்கள். இவ்வமைப்பின் ஆலோசகர்களாக மொரவாவ பிரதேசத்தின் தவிசாளர் மற்றும் அங்கு காணப்படும் விகாரையின் பொறுப்பாளர் பொல்ஹேன்கொட உபரத்ன நாஹிமியும், சமூக சேவையாளர் இனம் மதம் கடந்து சிந்திக்கின்ற மிகப் பிரபலம் வாய்ந்த வைத்திய கலாநிதி ஹேமச்சந்திரனும், எனக்கு கணிதப் பாடம் கற்றுத் தந்த மிகவும் ஆற்றல் நிறைந்த ஓய்வு பெற்ற அதிபர் அப்துல் அஹமதும் கடமை புரிகின்றனர்.

**கேள்வி:** சமூக சேவைகள் செய்வதில் எவ்வகையான மனநிறைவை அடைந்து கொள்கின்றீர்கள்?

**பதில் :** எமது சிந்தனையை மற்றும் எமது உதவிகளை மற்றவர்கள் பெற்றிருக்கிறார்கள், அவர்கள் சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்று பார்க்கின்றபோது அடைகின்ற ஆனந்தம் இதுதான். அது ஒரு பேரின்பம் என்பதை உணர முடிகின்றது.
எனது வயிறு நிரம்புவது போன்று எல்லா மனிதர்களது வயிறும் நிரம்ப வேண்டும். நான் தூங்குவது போன்று எல்லோரும் நிம்மதியாகத் தூங்க வேண்டும் என்று நினைக்கின்ற சமூக சேவைப் பணி ஓர் அலாதியான இன்பம். இதில் ஏற்படுகின்ற எத்தனையோ தடைகளையும் சவால்களையும் தாண்டுகின்ற போது அடைகின்ற உவகையை வார்த்தைகளால் சொல்ல முடியாது.
நன்மைகள் செய்வதற்குப் பதிலாகக் கிடைப்பது கழுத்து முடியும்வரை மாலை அல்ல, ஏச்சுப் பேச்சுக்களும்தான். கழுத்தை முறிக்கும் அளவு விமர்சனங்கள் கழுத்தில் மாலைகளாக விழுந்தாலும் அதில் கிடைக்கின்ற இன்பம் வர்ணிக்க முடியாதவை. எனவேதான் சமூக சேவை ஒரு சுகமான சுமை என்ற உணர்வோடு நாம் உலா வருகின்றோம்.

**கேள்வி:** எவ்வகையான சமூகப் பணிகளைச் செய்து வருகின்றீர்கள்? யார் யாருக்கெல்லாம் உங்கள் அமைப்பினூடாக உதவிகள் வழங்கப்படுகின்றன?

**பதில் :** எல்லா வகையான பணிகளையும் செய்வதற்கு முயற்சி செய்கின்றோம். ஏழை மாணவர்களுக்கு கல்விக்காக உதவுதல் என்பதைப் பிரதானமாகக் கொண்டு ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் என்ற அடிப்படையில் எமது நிதிப் பங்களிப்புக்களைச் செய்து வருகின்றோம்.
எது மிகப்பெரும் தேவையோ அவற்றைச் செய்வதற்கு முடியுமான அளவு முக்கியத்துவம் வழங்குகின்றோம். கிணறு கட்டிக் கொடுத்தல் என்பதை பெரிதாக அலட்டிக் கொள்ள மாட்டோம். மலசலகூட வசதிகள் மிகக் கட்டாயமானது. எனவே இத்தகைய பணிகளை செய்வதற்கு முன்னுரிமை வழங்குகின்றோம். பள்ளிவாயல்கள் கட்டுதல் என்பதைவிட புனர் நிர்மாணம் செய்வது சாலச் சிறந்தது என்ற கருத்தில் பல வேலைத் திட்டங்களை செய்கின்றோம்.
வறியவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து வாழ்வாதாரத்தை உயர்த்துவது என்பது மற்றுமொரு சேவை. தண்ணீர் இணைப்பு, மின்சார இணைப்பு என்பதும் நிலையான பெரிய தர்மம் என்று கருதி இவ்வாறான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றோம். கல்வி ஒரு மனிதன் பெறுகின்ற மாபெரும் சொத்து என்பதை நினைவில் கொண்டு சமூக சேவையின் ஊடாக சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பது இவ்வமைப்பின் பிரதான பணிகளுள் ஒன்று. திடீர் அனர்த்தம் அவ்வப்போது ஏற்படும் போது களத்தில் நின்று பணிபுரியும் அமைப்பாக எமது அமைப்பு திகழும்.

**கேள்வி:** பல்வேறு வகையான பொறுப்புக்களுக்கு மத்தியில் சமூகப் பணிகள் செய்வது சிரமம் என்று நினைக்கவில்லையா?

**பதில் :** ஒரு போதும் அப்படிக் கருதவில்லை. சிரமத்தையும் சுமைகளையும் தாங்கிய உள்ளங்கள் சிரமங்கள் இல்லாமல் வாழவே முடியாது. சிரமம்தான் வாழ்வின் அடிப்படை. கஷ்டத்தோடு தான் இலகு இருக்கிறது. துன்பத்தோடுதான் இன்பம் இருக்கிறது. தூசு படாத வாழ்க்கையும் குளிரூட்டப்பட்ட வாகனங்களும் பஞ்சனை மெத்தைகள் என்று வாழாத எமக்கு, சிரமங்கள் கஷ்டங்கள் ஒன்றும் பிரச்சனை இல்லை. சிரமங்கள் தாண்டி மனித மனங்களில் வாழத் துடிக்கின்றோம். இதுதான் இன்பமான வாழ்க்கை என்று கருதுகின்றோம்.

**கேள்வி:** .எதிர்காலத்தில் எப்படியெல்லாம் உங்களது சமூகப் பணிகளை விஸ்தரிக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்கள்?

**பதில் :** நாம் இப்பொழுது எமது மாவட்டத்தை மையமாக வைத்து பொதுவாக பணிகளைச் செய்து வருகின்றோம். தேசிய ரீதியிலும் ஓரளவு சில பணிகளைச் செய்து வருகின்றோம். எதிர்காலத்தில் முழு இலங்கை நாட்டுக்கும் குறிப்பாகவும் துன்பப்படுகின்ற மானிட வர்க்கத்திற்கு உலகளாவிய ரீதியில் பணியாற்ற வேண்டும் என்பதுதான் எங்களின் ஒரே அவா.

வெலிகம **ரிம்ஸா முஹம்மத்**

# கம்பீர தோற்றத்தைத் தரும் கவுன்கள்..!





நவநாகரீக ஆடைகளை விரும்பி அணியும் பெண்கள் தற்போது கவுன்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றனர். தற்காலத்து பெண்கள் அதிகம் கவுன் அணிவதையே விரும்புகின்றனர்.

அலுவலகத்திற்கும் செல்லும் பெண்கள் அதிகம் கவுன்களை அணிகின்றனர். மேலும் பொர்மல் மாலைநேர நிகழ்வுகளுக்கு அணிய ஏற்ற கச்சிதமான ஆடையாக கவுன் திகழ்கிறது.

அது பெரிய சிவப்பு கம்பள நிகழ்ச்சிகளாக ஆயினும், மாலைநேர மகிழ்ச்சி கொண்டாட்ட நிகழ்வுகளாயினும், விஐபிகளின் இரவு விருந்து என்றபோதும், திருமண வரவேற்பு போன்றவையாயினும் கவுன் தான் கௌரவம் மிகுந்த ஆடையாக விரும்பி அணிந்து செல்கின்றனர். ஆடி பாடும் இரவு கேளிக்கை விருந்து முதல் கருத்துறு பார்ட்டிகள் வரை பெண்களை அழகுடன் மிளர வைப்பதிலும், கம்பீரமாய் காட்சி படுத்துவதிலும் கவுன்தான் முதலிடம் பிடிக்கின்றன.





நம் நாட்டு ஆடை வடிவமைப்பாளர்கள் ஆங்கிலேயே பாணி கவுன் ஆடைவடிவமைப்புடன் நம் பாணியையும் இணைந்தவாறு வடிவமைக்கின்றனர். இதனால் நம் நாட்டு பெண்கள் கவுனை விரும்ப தொடங்கினர். தற்போது டிசைனர் மற்றும் நீளமான அதிக விரிப்புகள் கொண்ட கவுன்கள் வண்ணமயமாய் உருவாக்கி தரப்படுகின்றன. எனவே அனைத்து தரப்பு பெண்களும் தங்கள் ரசனைகளுக்கு ஏற்ற கவுன்களை தேர்ந்தெடுத்து அணிந்து வருகின்றனர். மேல் நாட்டு பெண்களை போல நம் நாட்டு பெண்களும் தமக்கு விருப்பமான ஆடைகளின் வடிவமைப்புகளை பார்வையிட்டு தற்போது ஒன்லைன் சொபின் மூலம் பெற்றுக்கொள்கின்றனர்.

**பூ வேலைப்பாடு கவுன்கள் :**

நீண்ட கவுன் அமைப்பில் கீழ் விரிந்த பகுதியில் மட்டும் அதிக பட்ச மலர்கள் வண்ணமயமாய் பூத்திருப்பது போன்ற கவுன்களும் தற்கால பெஷன்களாக காணப்படுகின்றன.. மேல் சட்டை பகுதியின் இருபுறம் மட்டும் அழகிய பூ அமைப்பு டிசைன் செய்யப்பட்டுள்ளது. பிங்க், பச்சை, நீல நிற பின்னணி முழு ஆடை அமைப்பில் கவுன் கீழ் பகுதியில் அதிக மலர்களுகம், மேற்பகுதி உயர உயர பூக்கள் குறைவது போன்றும் வடிவமைப்புகள் உள்ளன. இதில் கருத்து வடிவமைப்பு என்பது வட்டவடிவம், சைனீஸ் கொலர், போட் நெக் போன்ற பல வடிவங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.



**விழாகளுக்கு அணிய ஏற்ற எம்பிராய்டரி கவுன்கள் :**

தற்கால பெண்கள் விரும்பி அணியும் எம்பிராய்டரி வேலைப்பாடு செய்யப்பட்ட கவுன்கள் கிடைக்கின்றன. இவை அடர்த்தியான ஒற்றை நிற பின்னணியில் கீழ் பகுதி விரிப்புகளில் தங்க சரிகையில் எம்பிராய்டரி செய்யப்பட்டுள்ளன. பட்டு துணியில் தயாராகும் கவுன்கள் தற்கால பெஷனாக மாறிவிட்டன. அவை பண்டிகை விழாக்களில் அணிய கூடியவாறு உள்ளன. இடுப்பு பகுதி வரை இறுக்கி பிடித்தவாறும் பின் சரிவாய் குறைவான விரிப்புகள் உள்ளவாறும் கச்சிதமாக எம்பிராய்டரி கவுன்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**கை அமைப்பில் மாறுபட்ட கவுன்கள் :**

கவுன் ஆடையின் கை அமைப்புகள் நீளமாய், முக்கால், அரைவாசிக் கை, ஸ்யில் லெஸ் என்றவாறு மாறுபட்ட அமைப்புடன் உள்ளன. அவர் அவர்களுக்கு ஏற்ற வடிவமைப்பில் கவுன்கள் இருக்கின்றனர்.

அது போல் கவுனுடன் இணைந்த முழு கை ஆடை என்பதில் வேறுபட்ட வண்ண வேலைப்பாடு அழகுற உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது முழு கவுன் அமைப்பும் ஒரு ஒற்றை நிறத்திலும் கழுத்துடன் இணைந்த கை அமைப்பு பூ மற்றும் கணித வடிவங்கள் பிரிண்ட் (அ) இரட்டை துணி வெளிபாடு கொண்டவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன.

தற்கால இளம் பெண்கள் அதிகம் கவுன் அணிவதையே தனது விருப்பமாக ஏற்றுக்கொள்கின்றனர்.

## சுவையான முட்டை காளான் குழம்பு

**தேவையான பொருட்கள் :**

- ★ காளான் கால் கிலோ
- ★ முட்டை 6
- ★ பெரிய வெங்காயம் 2
- ★ காய்ந்த மிளகாய் 4
- ★ கொத்தமல்லி 1 தேக்கரண்டி
- ★ சீரகம் அரை தேக்கரண்டி
- ★ இஞ்சி, பூண்டு விழுது 1 மேசைக்கரண்டி
- ★ மஞ்சள் தூள் சிறிதளவு
- ★ மிளகு தூள் சிறிதளவு
- ★ மிளகாய் தூள் – தேவைக்கேற்ப
- ★ துருவிய தேங்காய் சிறிதளவு
- எண்ணெய், உப்பு – தேவைக்கேற்ப

**செய்முறை:**

காளானை நன்றாக கழுவி பொடியாக நறுக்கி கொள்ளவும்.

முட்டைகளை வேக வைத்து துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

வெங்காயத்தை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

சிறு தீயில் வாணலியை வைத்து மிளகாய், சீரகம், கொத்தமல்லி, தேங்காய் துருவல் ஆகியவற்றை லேசாக வறுத்துக்கொள்ளவும். அதனுடன் வெங்காயத்தை சேர்த்து மிக்சியில் விழுதாக அரைத்துக்கொள்ளவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி அது சூடானதும் இஞ்சி, பூண்டு விழுது போட்டு கிளறிவிடவும்.

பின்னர் அதனுடன் காளான்களை போட்டு வதக்கவும்.

அதனுடன் மஞ்சள் தூள், மிளகாய் தூள், மிளகு தூள் ஆகியவற்றையும் தூவி கிளறிவிடவும்.

பின்னர் அரைத்து வைத்துள்ள மசாலா கலவையை கொட்டி வதக்கவும். அதனுடன் தேவையான அளவு தண்ணீரும், உப்பும் சேர்த்து கொதிக்கவிடவும். கொதிக்க தொடங்கியதும் வேகவைத்த முட்டையை உதிரியாக்கி போட்டு கிளறிவிடவும். மசாலா வாசம் நீங்கி குழம்பு பதத்துக்கு வந்ததும் இறக்கி ருசிக்கலாம்.





# சினிமா பாடல்களின் சிருங்காரம்

கவிஞர் கண்ணதாசன் எட்டாம் வகுப்புவரைதான் படித்தார். அதற்குமேல் படிக்க வசதி இல்லை. ஒரு தொழிற்சாலையில் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். வாரம் ஐந்து ரூபாய் சம்பளம்.

இந்தத் தொகை கண்ணதாசனின் செலவுகளுக்குப் போதுமானதாக இருந்தது. ஆனால் அவருக்கு இந்த வேலை பிடிக்கவில்லை. 'இதில் திருப்தி அடைந்துவிட்டால் என் வளர்ச்சி தடைபட்டுவிடும்' என்று நினைத்தார்.

அப்போதே அவருக்குக் கவிதை எழுதுவதில் பெரிய ஆர்வம். 40 பக்க நோட்டு ஒன்று வாங்கினார். அலுவலக ரெஜிஸ்டருக்குள் அதை மறைத்துவைத்துத் தினந்தோறும் புதுப்புதுக் கவிதைகளை எழுதினார்.

ஒருநாள், அவருடைய சக ஊழியரான பத்மநாபன் என்பவர் இதைப் பார்த்துவிட்டார். 'இந்த ஆசை உனக்கு வேண்டாம். கவிதை சோறு போடாது' என்று கண்டித்தார்.

இதனால் சலனமடைந்த கண்ணதாசன், கதை எழுத முயற்சி செய்தார். பத்திரிகைகளில் இடம் தேடினார். இன்னும் ஏதேதோ முயற்சிகள்.

அதன்பிறகு, அவர் மீண்டும் கவிதைக்குத் திரும்பினார். அதுதான் அவருக்குச் சோறு போட்டது!

*******

கண்ணதாசன் எழுதியவை சுமார் 3000 பாடல்கள், அவற்றில் 2500+மட்டுமே தொகுப்பாக வந்துள்ளன, மீதியைத் தேடும் பணி நடைபெறுவதாகத் தெரியவில்லை.

உலக இலக்கியங்களில் மேகம் தொடங்கி மனம்வரை எதையெதையோ தூது விட்டிருக்கிறார்கள், டென்னிஸ்(?) பந்தைக் காதலுக்குத் தூது விட்டது கண்ணதாசன்மட்டும்தான் :

'பறக்கும், பந்து பறக்கும், அது பறந்தோடு வரும் தூது' என்று வரும் அந்தப் பாடலில் பலருக்கும் மிகவும் பிடித்த வரிகள் இவை:

ஓடும், உனை நாடும், எனை
உன் சொந்தம் என்று கூறும்,
திரும்பும், எனை நெருங்கும், உந்தன்
பதில் கொண்டு வந்து போடும்

நாலே வரியில் தூது இலக்கணம் முழுவதையும் கச்சிதமாகத் தந்துவிட்டார்!

****

'அவள் ஒரு தொடர்கதையில் ஒரு காட்சி, தன் காதலனைத் தங்கைக்கு விட்டுத்தருகிறாள் அக்கா, அவர்களுடைய திருமணம் நடைபெறுகிறது, பின் வளைகாப்பும்.

அந்த வளைகாப்பு நிகழ்ச்சியில் அக்கா பாடும் பாட்டு, பல்லவியில் சமர்த்தாக ஒரு சின்ன எதுகை விளையாட்டோடு பாடலை ஆரம்பிக்கிறார் கண்ணதாசன்:

ஆடுமடி தொட்டில் இனி, ஐந்து
திங்கள் போனால்,
அழகு மலர் அன்னை என ஆனாள்,
ஆதரித்தாள் தென்மதுரை மீனாள்!

இது ஒரு பெரிய விஷயமா என்று நினைப்பவர்கள் சரணம்வரை பொறுத்திருக்கவேண்டும், இந்தக் காட்சியின் மொத்தப் பின்னணியையும் கச்சிதமாக மூன்றே வரிகளில், உரிய Cultural Referenceஉடன் சொல்லிவிடுகிறார்:

ஐயனுடன் கோயில் கொண்டாள்
திருமகளாம் தங்கை,
அடிவாரம்தனில் இருந்தாள் அலமேலு
மங்கை, அவள்
அன்புமட்டும் போதுமென்று
நின்றுவிட்டாள் அங்கே!

****

'மனம் படைத்தேன் உன்னை நினைப்பதற்கு' என முருகனின் காதலி பாடும் காட்சி, சட்டென வைணவத்துக்குத் தாவி ஆண்டாளைத் துணைக்கழைக்கிறார் கண்ணதாசன்.

மத்தளம், மேளம் முரசொலிக்க,
வரிசங்கம் நின்றங்கே ஒலி
இசைக்க,
கைத்தலம் நான் பற்ற கனவு
கண்டேன், அந்தக்
கனவுகள் நனவாக உறவு
தந்தாய்!
செவ்வேள் என நீ
பெயர் கொண்டாய்,
சொல் வேல்
கொண்டு
நீ தமிழ்
வென்றாய்,
கைவேல் கொண்டு நீ பகை வென்றாய்,
இரு
கண் வேல் கொண்டு நீ எனை
வென்றாய்!

இத்துணை எளிமையாக, கச்சிதமாக, கலாசாரப் பின்னணியோடு எழுத இந்தக் 'கவிஞர்' எங்கேயும் பயிற்சி எடுக்கவில்லை என்பதுதான் விசேஷம், நம் பாக்கியம்!

'மனம் படைத்தேன் உன்னை நினைப்பதற்கு' என முருகனின் காதலி பாடும் காட்சி, சட்டென வைணவத்துக்குத் தாவி ஆண்டாளைத் துணைக்கழைக்கிறார் கண்ணதாசன். மத்தளம், மேளம் முரசொலிக்க, வரிசங்கம் நின்றங்கே ஒலி இசைக்க, கைத்தலம் நான் பற்ற கனவு கண்டேன், அந்தக் கனவுகள் நனவாக உறவு தந்தாய்!

****

நினைத்ததை முடிப்பவன்' படத்தில் எம்ஜியாருக்கு ஒரு பாட்டு, கண்ணதாசன் எழுதினாராம்.

அவர் எழுதிய வரிகள்:

நான் பொறந்த சீமையிலே
நாலு கோடிப் பேருங்க!
நாலு கோடிப் பேரிலே
நானும் ஒரு ஆளுங்க!

இவை லேசாக கம்பனைப் பின்பற்றிய வரிகள், சீதையைச் சந்தித்த அனுமன், 'எங்க படை ரொம்பப் பெரிசு, அதுல நான் சும்மா ஒருத்தன், அவ்ளோதான்' என்பார்.

ஆனால் இந்த வரிகள் எம்ஜியாருக்குப் பிடிக்கவில்லையாம். காரணம்?

'நான் ஆயிரத்தில் ஒருவன்னு சொன்னா பெருமை, ஆனா நாலு கோடில நானும் ஒருத்தன்னு சொன்னா பெருமையே இல்லையே!'

அதன்பிறகு, புது மெட்டு போடப்பட்டு மருதகாசி எழுதினார், 'கண்ணை நம்பாதே, உன்னை ஏமாற்றும்.'

பல வருடங்கள் கழித்து வேறொரு பாடலில், 'ஆறரைக் கோடிப் பேர்களில் நானும் ஒருவன்' என்ற அர்த்தத்தில் வாலி எழுதினார், இந்தப் புது ஹீரோ ஆட்சேபிக்கவில்லை.

****

'நான் மாந்தோப்பில் நின்றிருந்தேன்' 1965ல் வாலி எழுதிய பாடல், 'ரொம்ப ஆபாசம்' என்று பலத்த கண்டனத்துக்குள்ளானது

'நான் தண்ணீர்ப் பந்தலில்
நின்றிருந்தேன், அவள் தாகம்
என்றுசொன்னாள், நான் தன்னந்தனியே
நின்றிருந்தேன், அவள் மோகம்
என்றுசொன்னாள்.'

2 வருஷம் கழித்து, 1967ல் 'கந்தன் கருணை' என்று ஒரு படம் வருகிறது, அதில் கண்ணதாசன் கிட்டத்தட்ட இதே வரிகளை எழுதுகிறார், முருகன், வள்ளிக்கு.

தள்ளாட உடல் தள்ளாட ஒரு பழுத்த
கிழவன் வருவான், அவன்
தளர்ந்து போன முதுமை கண்டு தங்க
இடம் தருவாய்,
'பசி எடுக்குது தேனும் தினையும்
பருகவேண்டும்' என்பான், நீ
பருகத் தந்தால், 'தாகம் தீர்ந்து மோகம்
வந்தது' என்பான்.

அதே வரிகள்தாம், பெண்ணுக்குப் பதில் ஆண், அதுவும் உம்மாச்சி யாரும் ஆபாசம் என்று சொல்லவில்லை.





தமிழகத்தின் மெகா தொலைக்காட்சி நிறுவனம் மாண்புறு மகளிர் ஏழு பேரை தெரிவு செய்து இவ்வருட மகளிர் தின விழாவில் கௌரவித்தது. கௌரவிக்கப்பட்டோர் நினைவுச் சின்னங்களுடன் படத்தில் காணப்படுகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.